
# பொன்விழாமலர்



1944 - 1994




## வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி

# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

# பொன் விழா மலர்

## 1944 – 1994

கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை

- திருக்குறள் -

# கல்லூரி கீதம்

பல்லவி

வட இந்து மங்கையர் கல்லூரி
வாழிய வாழி நீடூழி (வட)

அனுபல்லவி

ஆழி இறைவன் அருள்நிதம் பாடி
பாழ்வினை யகலப் பரிவுடன் பயிலும் (வட)

சரணம்

ஈழநன் னாடாம் எங்கள் பொன்னாட்டில்
திருவளர்ந் தோங்கிடும் பருத்தித் துறையாம்
தாழ்விலாத் தலத்தில் தவநெறிச் சங்கம்
தமிழ்மகள் மாண்புறத் தரணியி லருளிய (வட)

செந்தமிழ் முதலாஞ் சிறந்த நற்கலையும்
சிந்தையை யேற்றும் நந்திரு மறையும்
எந்தத் துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி
தந்திடும் தர்மம் தனதெனச் சாற்றும் (வட)

மங்கையர் பண்பும் இங்குநாம் பயின்று
நங்குலம் தழைக்க நாடும் செழிக்கப்
பொங்கிடு மன்பும் மங்கிடா வீரமும்
எங்கணும் சேவைகள் செய்திட வளரும் (வட)

பன்னரும் பெருமைசேர் பரந்தநல் விண்ணே
பரிதியும் மதியு மின்றேல் இருட்புண்ணே
அன்பெனும் நிலவைப் பொழிபவள் பெண்ணே
இன்பக் கதிரொளி காட்டிடுங் கண்ணே
நன்மணி விளக்கே மாற்றுயர் பொன்னே
மன்னுயிர் சேவையே தன்னுயிரென்னும் (வட)

# பொன் விழாச் சபையினர் - 1994

தலைவர்: திருமதி. லோ. குமாரசாமி

செயலர்: திரு. மா. நடராசசுந்தரம்

பொருளர்: திருமதி. ஞா. அரியரத்தினம்

## செயற்குழு

திரு. ச. சிவராஜசிங்கம்
திரு. P. இராசதுரை
திரு. J. தேவசகாயம்
திரு. இரா. பஞ்சலிங்கம்
திரு. வி.கி. தங்கவேல்
திரு. ஆ சிவபாலகிருஷ்ணன்
திரு. பொ. பாலச்சந்திரன்
திரு. வ. தணிகாசலம்
திரு. வே. ராஜநாதன்
திரு. ச. யாதவானந்தன்
திரு அ. மதியாபரணக்குருக்கள்
திரு. K சிவசுப்பிரமணியம்
திரு. த. சந்திரதாஸ்
திரு. வி. இளங்கோ
திரு. ஜெயம்சபாபதி
திரு. V. S. சித்திரவடிவேல்
திரு. சி. குலசிங்கம்
திரு. மு. சந்திரலிங்கம்
திருமதி. பா. தம்பையா
திருமதி. ச. மகேந்திரன்
திருமதி. ச. இந்திரராஜா
திருமதி. சா. மகாதேவன்
திருமதி. S. பாக்கியலக்ஷ்மி
திருமதி. த. பாலசுந்தரம்
திருமதி. ரா. சாந்தகுமாரன்
திருமதி. V. சிறிஸ்கந்தராஜா
திருமதி. செ. ஜெகநாதன்
திருமதி. P. சிவசுப்பிரமணியம்
திருமதி. P. தங்கராசா
திருமதி. P. சிவயோகலிங்கம்
திருமதி. ஜெ. குலசிங்கம்
திருமதி. சு. சிவகுருநாதன்
திருமதி S. தியாகராசா
திருமதி. ஞானச்சந்திரன்
செல்வி. M. சிவகடாச்சம்
செல்வி. தி. வசந்தமலர்
செல்வி. அ. கனகரத்தினம்
திருமதி. நவமணி சண்முகநாதன்
திருமதி. பா. ஞானக்குமரன்

## நிதிக் குழு

திரு. ச. சிவராஜசிங்கம் (தலைவர்)
திரு. சோ. கணேஸ்
திரு. பொ. இராசதுரை
திரு. சு. தங்கநவமணிநாதன்
திருமதி. சி. சிதம்பரநாதன்
திருமதி . சா. மகாதேவன்
திருமதி. செ. பாலேந்திரன்

## விளம்பரக் குழு

திரு. செ. கந்தசாமி (தலைவர்)
திரு. இரா. பஞ்சலிங்கம்
திரு. சி. தில்லைநாதன்
திரு. M. ஜெகதேவன்
திருமதி. சி. விநாயகநாதன்
திருமதி. தவமணி பாலசுந்தரம்

## மலர்க் குழு

திருமதி. லோ. குமாரசாமி (தலைவர்)
திரு. மா. நடராஜசுந்தரம்
திரு. இ. பஞ்சலிங்கம்
திரு. பா. ரகுநாதன்
திரு. ச. சிவராஜசிங்கம்
செல்வி. அ. கனகரத்தினம்
திருமதி. தி. கணபதிப்பிள்ளை

## கட்டுரைப் போட்டிக் குழு

திருமதி. லோ. குமாரசாமி
திரு. மா. நடராஜசுந்தரம்
திரு. ச. சிவராஜசிங்கம்
திரு. இரா. பஞ்சலிங்கம்
திரு. செ. கந்தசாமி
செல்வி. அ. கனகரத்தினம்
திருமதி. தவமணி பாலசுந்தரம்

# எண்ணமும் வண்ணமும்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா மலர் உங்கள் அன்புக்கரங்களில் தவழ்கின்றது. இதழ்விட்டு இன்பச்சிரிப்பினை இனிமையுடன் உதிர்க்கின்றது பொன்விழா என்பது ஐம்பது ஆண்டுகளைக் குறிப்பது. ஆனாலும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்துமதத்தின் இனிய தத்துவங்களை உணர்த்தி அதன்படி மாணவச் செல்வங்களை வழிநடத்திடும் ஒரு வளம் மிக்க கல்லூரியின் வண்ணமிகு பொன்விழா மலரிது. இதழ்கள் கொண்டு இழைக்கப்பட்ட வெறும் மலரல்ல இது எண்ணற்ற இதயங்களின் இனியநாதமும் கண்ணொத்த கவின்பெறு கலைகளும் வேண்டி மங்கையர் நலம் நாடி அறிவினைத்தேடி பண்பாடிய அற்புத மலரிது. இதழ்கள் விரிந்திட்ட மலர்ந்திடும் மலர் வாடிடும் ஆனால் இதயத்தால் எழுதப்பட்ட இந்தமலர் வாடாமலர். வண்ணமலர் வடமராட்சி இந்துமகளிரின் எண்ணமலர். இது உங்கள் கரங்களில் தவழ்வதுகண்டு ஆனந்தம் கொண்டு நானடையும் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை.

சரித்திரம் வரலாறு ஆவதும் வரலாறு சரித்திரம் ஆவதும் உலக நியதி ஆனால் இம்மலரானது வரலாற்றையும் சரித்திரத்தையும் இணைத்து அழிவில்லாக் காவியமாக திகழும் என்பதில் எனக்கு எந்தவித ஐயமும் இல்லை. ஐம்பதில் நாம் கண்ட வளர்ச்சி ஐநூற்றின் வளர்ச்சியாக இருப்பதாக பலர் கூறக்கேட்டு மகிழாத உள்ளங்களே இல்லை. என் நெஞ்சுக்குள்ளும் கொஞ்சும் மகிழ்ச்சி. பெண்மைக்கு இலக்கணம் வகுத்த இந்துமதத்தின் ஆணிவேரிலே ஆரம்பமாகும் அன்புதான் இந்தமலரின் மணத்திற்கு உயரிய வாசனையைத் தருகின்றது என்பதை மகிழ்வுடனும் மனநிறைவுடனும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் எல்லையில்லா மகிழ்ச்சி. பெண்மைக்கு நாணமும் அன்புக்கு அடக்கமும் உண்மைக்கு உயர்வும் போதிக்கப்படும் ஒருகல்லூரியின் ஒப்பற்ற பொன்விழா மலரில் நீங்கள் புகுந்து இன்பத்தில் நனைந்து மகிழ்ச்சியில் குளிர்ந்து பெருமையில் உயர்ந்து நிற்கும் அன்புக் காட்சியினைக் கண்டு என் நெஞ்சு நிமிர்கிறது. பக்கங்களைப் புரட்டும் போது சொர்க்கங்களைக் காணலாம். சொர்க்கங்களைக் காணும்போது தமிழமுதத்தினையும் பருகலாம். ஏனென்றால் இது வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா மலர். இது நறுமணம் வீசிடும் மலர் மாத்திரமல்ல. குணத்திலும் குன்றேறி நின்றிடும் மலர். பொங்கிவரும் பொன்விழாக்களின் குறிஞ்சிமலர்.

உள்ளே ஆசிச்செய்தியுடன் ஆரம்பமாகும் இந்த மலர் பல்கலைக் கழக வித்தகர்களின் ஆய்வுக் கட்டுரைகளையும் பல்சுவை ஆக்கங்களையும் கொண்டுள்ளது. ஆசிரியைகளின் அழகு மிகு ஆக்கங்களுடன் கவின்பெறு கவிதைகளும் அடங்கியுள்ளது. மாணவச் செல்வங்களின் மாணிக்கப் பரலொத்த மாற்றுக் குறையாத போற்றற்தகு ஆக்கங்கள் கொஞ்சும் தமிழிலும் கெஞ்சும் ஆங்கிலத்திலும் காணலாம். நெஞ்சம் கவர்ந்திருக்க பஞ்சம் தமிழுக்கு இல்லையெனக்கூறி மிஞ்சும் அழகிற்கு தமிழெனப் பெயர் சூட்டி ஆராத்திஎடுக்கும் அற்புதம் இம்மலரில் உண்டு.

என் பேனாவில் உதிப்பது சமர்ப்பணமோ அன்றி நுழைவாயிலோ அல்ல இது எனது நெஞ்சத்து நினைவலைகள். அதனுள்ளே அற்புதக்கோயில் அதுதான் வடமராட்சி மகளிர் கல்லூரியின் கலைக்கூடம்.

இந்தக் கல்லூரித்தாய் உருவாக்கிய நல்முத்துக்களை வாழ்த்துகின்ற அதேவேளை இந்தக் கல்லூரித்தாயிடம் கல்வி பயிலும் மாணவ மாணிக்கங்களை உள்ளத்தால் வாழ்த்தி உன்னதமாக வளர்ந்திடுக. உயர்ந்திடுக எனப் போற்றுகின்றேன்.

இக்கல்லூரியின் வளர்ச்சிக்கு, உயர்ச்சிக்கு உதவ சகலரும் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்க வேண்டியவனாக நான் இருக்கின்றேன். ஏனென்றால் இன்னும் பலப்பல பணிகள் இங்கு நிறைவேற்பட வேண்டியதாக உள்ளது. பாடசாலை அபிவிருத்திச்சபையின் அளப்பறிய சேவை இப்பாடசாலையை பலவிதத்தில் உயர்த்தியுள்ளது என்பதனை மறுக்கவோ, மறக்கவோ முடியாத ஒன்றாகும். இம்மலரின் மணம் திக்கெட்டும் வீசப்போகின்றது. இக்கல்லூரியின் புகழ் உலகெங்கும் பரவப்போகின்றது. இதுகண்டு நீங்கள் அனைவரும் உவகை கொள்ளப் போகிறீர்கள் என்பது மட்டும் உண்மை. இதனைஅடைய சகலரின் முயற்சியும் தேவை என்பதனை மட்டும் நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

கல்வியின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இக்கல்லூரி ஒழுக்கத்தில் இமயமாகவும் திகழ்கின்றது என்பது எத்துணை மகிழ்ச்சியான செய்தி. இந்த நிலை தொடர வேண்டும் அதன் மூலம் கல்லூரித்தாய் மகிழ்ச்சியின் எல்லையைத் தொடவேண்டும்

ஐந்துகரத்தனின் ஆசியுடனும் வெள்ளைத்தாமரையில் வீற்றிருக்கும் கள்ளமில்லா கலைத்தாயின் கருணையோடும், அதிபர், ஆசிரியர், ஊழியர்கள் அனைவரது மனநிறைவோடும் மாணவச் செல்வங்களின் ஊக்கத்தோடும் அபிவிருத்திச் சபை அங்கத்தவர்களின் அளப்பரிய ஆர்வத்தோடும், பழைய மாணவர் சங்கத்தின் பசுமையான நினைவுகளோடும் உருவாகிய இந்த அற்புத மலரை தொப்பிளாவத்தை ஞானவைரவரின் துணையோடு வடஇந்துத்தாயிடம் ஒப்படைக்கின்றேன். இது எங்கள் வரலாற்றுப்பெட்டகம் சரித்திரத்தின் காப்பறை இதைக் காப்பதும் அதன் புகழைப் பார்ப்பதும் உங்கள்உரிமை. ஒழுக்கத்தின் உறைவிடம், உணர்விடம் வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி என்பது என்றும் நிலைக்கட்டும்.

மா. நடராசசுந்தரம்
இதழாசிரியர்.

## எங்கள் அதிபர்



### திருமதி. லோகநாயகி குமாரசுவாமி B. A. Dip - in - Ed.

1953 — 1983 — ஆசிரியர்

1984 — 1989 — உப அதிபர்

1990 — 1994 — அதிபர்

1991 — 1993 — கொத்தணி அதிபர்

# ஆசிச் செய்தி

[illegible]டரமாட்சியில் 50 ஆண்டுகள் வடஇந்து மகளிர் கல்லூரி கல்விப் பணியை சீரிய முறையில் செயலில் காட்டியுள்ளது. பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் 08-01-1970ம் ஆண்டு அக்காலத்து இக்கல்லூரியின் அதிபர் திருமதி. காயத்திரி கணேசன் தலைமையில் நடைபெற்றது. இங்கு குறிப்பிடத்தக்கது

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ நூற்றாண்டில் இக் கல்லூரியின் பொன் விழா அமையப் பெறுவது தெய்வ சங்கல்பமாகும். "கல்வியின் இலட்சியம் விஷயங்களைப் பற்றி ஞானத்தைச் சேகரம்செய்வதன்று, மன ஒருமையே கல்வியின் அடிப்படையான இலட்சியம் என்பது எனது முடிவு. நான் மறுபடியும் கல்வி கற்பதாக இருந்தால் விஷயங்களைப் பற்றிப் படிக்கவே மாட்டேன். மன ஒருமையையும், மனத்தை எந்த இடத்திற்கும், எக்கணத்திலும் செலுத்தும் சக்தியையும் அபிவிருத்தி செய்வேன் அதற்கு மேல் அவ்வுயர்ந்த சக்தியாகிய ஆயுதத்தைக் கொண்டு நான் விரும்பிய விஷயங்களை எளிதில் அறிந்து கொள்ள முடியும்"

நாம் என்றும் போற்றி வழிபடும் தெய்வமான அன்னை ஸ்ரீசாரதாதேவி இக்கல்லூரியின் வளர்ச்சியில் பங்கு கொண்ட யாவர்க்கும் தனது பெருங் கருணையை அள்ளிவழங்கி, எதிர்காலத்திலும் இக்கல்லூரியிலிருந்து படித்துச் செல்லும் மாணவிகள் உலகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாக இலங்க வேண்டும் என்று அன்னையிடம் மனதார வேண்டுகின்றேன்.

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.
01 06-94

சுவாமி சித்ரூபானந்தா

# வாழ்த்துச் செய்தி

யா / வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி சைவச் சிறப்பைப் பேணிக் காக்க ஐம்பது வருடங்களுக்கு முன்பு தாபிக்கப்பட்டது. இதற்குச் சான்றாக இப்பாடசாலையில் உள்ள நடராஜப் பெருமானின் திருவுருவமும் திருமன்றமும் இன்றும் காட்சியளிக்கிறது. வடமராட்சி மண்ணிற் தாபிக்கப்பட்ட இக்கலைக் கல்லூரி நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்து புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. இதற்குக் காரணமானவர்கள் இப்பாடசாலையின் அதிபர்களும், சேவைமனப்பான்மை கொண்ட ஆசிரியர்களும், பற்று மிக்க பழைய மாணவிகளும் பெற்றோர்களும் என்பது வெள்ளிடை மலை. இந்த வகையில் இப்பாடசாலையின் பாரம்பரியத்தைப் பேணிவந்த அதிபர்களின் அடியொற்றி வந்த தற்போதைய அதிபர் திருமதி. லோகநாயகி குமாரசாமியும் அவருடன் சேர்ந்து உழைக்கும் ஆசிரியர்களும் பெருகூட்டமுனைந்து நிற்பதைக் கண்டு கல்வியுலகம் பெருமைப்படுகிறது

இப்பாடசாலை மாணவிகளின் கலை, கலாச்சார, கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகள் பருத்தித்துறைக் கல்விக் கோட்டத்திற்குப் பெருமை தேடித் தந்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இக் கலைக்கோயில் பன்னெடுங்காலம் எமது சமுதாயத்திற்கு கல்வித் தொண்டாற்றி அரும்பெரும் சாதனைகளைப் படைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் குதூகலமடைகிறேன்.

பருத்தித்துறை.
1994-07-15

வே. தி. செல்வரத்தினம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
பருத்தித்துறைக் கோட்டம்

## ஆசியுரை

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி தனது ஐம்பதாவது ஆண்டுச் சேவையை நிறைவேற்றுகிறது அதன் பொருட்டு மலர் ஒன்றையும் வெளியிடுகிறது. இந்நிகழ்வுகள் நமக்கு பெருமையையும் மகிழ்ச்சியையும் தருகின்றன. கால வெள்ளத்தில் 50 ஆண்டு ஒரு சிறு திவலையாகும். ஆனால் ஒரு தாபனத்தைப் பொறுத்த வரையில் 50 ஆண்டுச் சேவை போற்றற்குரியதாகும்.

'கல்வி மனிதனுக்கும் சமூகத்திற்கும் இடையே நடைபெறும் உரையாடல்' டூயின் ஒரு கருத்து இது. எங்கள் சமுதாயத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் பலவற்றுக்கு முகம் கொடுத்து பாடசாலைக் கல்வியை தளராது வளர்த்த பெருமை இப்பள்ளிக்குண்டு வட இந்து மகளிர் கல்லூரி தனது சமூகம் பல சிக்கல்களுக்குள்ளாகிய போது அயராது செயற்பட்டுள்ளது பாடசாலை சேத முற்ற வேளையிலும் உறுதியுடன் இயங்கியுள்ளது. இத் தாபனத்தின் அதிபர். ஆசிரியர் சேவை நோக்கும் ஐக்கியப் போக்கும் இவற்றுக்கு ஆதாரம். பல சிறந்த ஆசிரியர்களையும், நல்ல அதிபர்களையும் தோற்றுவித்துள்ளது பெருமைக்குரியது.

மாணவர் அடைய வேண்டிய எல்லைக்கு அவர்களை இட்டுச் செல்லும் பொறுப்பு பள்ளிப் பாடவிதானத்திற்குரியது இது பிளேத்தோவின் கூற்று. தனியே நூற் கல்வியோடு நிற்காது மாணவர் ஒவ்வொருவரின் கவர்ச்சி, ஈடுபாடு, ஆற்றல் அறிந்து அவற்றை வளர்ப்பதே முக்கியமானது கலைத் துறையிலும் சரி, விளையாட்டுத்துறையிலும் சரி இப்பள்ளி ஏனையவற்றுடன் சரி நிகராக நிற்கிறது. சில நிகழ்ச்சிகளில் முதல் நிலைக்கும் வந்துள்ளது. ஈடுபாடு கொண்ட பல ஆசிரியர் இங்குண்டு. பண்பான மாணவர்களும் உண்டு. இவை இதன் நற் சொத்தாகும். நாம் பெருமைப்படக்கூடியதாகும்.

இக்கல்லூரி மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

க. கந்தசாமி
கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம் வலயம் 2.

MESSAGE FROM
HIS LORDSHIP HON' BLE JUSTICE

S. Anandacoomaraswamy LL, M ( Col. )

At the request of Mrs. L. Kumarasamy, the principal of Vadamaradchy Hindu Girl's College, Point Pedro, I have great pleasure in sending this message on the occasion of the Golden Jubilee celebration of the College, which was founded fifty years ago by the great benefactors and educationists of that era.

I had the privilege of being in the midst of the past pupils of the college, when the Colombo Branch of the past pupils were celebrating this same function as a forerunner of the past pupils, with whom the present pupils together with the principal and Staff and other well - wishers are celebrating the fiftieth birthday of the college in the very place in which she was born. But we are only sad that due to the prevailing situation in the war torn North we are deprived of the opportunity to be present in their midst on such a happy occasion of this nature. It is not unusual that the closest are sometimes deprived of such a privilege having regared to the society in which we live

The prime Founders to the College Mr. Karthigesu and Dr. Sabapathy felt the need for Hindu religious and cultural education for our Hindu Girls and that was achieved by laying the foundation of this College fifty years ago. Despite several handicaps like lack of sufficient funds, the conflict over the take-over of schools and the present war like operations in the North and lack of proper and basic facilities the college had progressed very well producing not only good Hindu housewives but also eminent women in public life. Even the founders and other well - wishers who gave moral and financial support would not have even dreamt that within such a short time the College could have had her own contribution to the society in producing eminent personalities to be of sevice to their fellow human - beings,

Credit goes not only to the Founders and well - wishers who made this institution but also to the Principals, Staff and students both past and present and also to the local Hindu population whose benevolence, magnanimity and encouragement contributed in no small measure to the well - being and upliftment of th College. The enthusiasim to uplift the College is very much reflected when one sees the manner in which the Golden Jubilee Celebrations were organised and conducted by the Colombo Branch of the Past Pupils Association, who felt that it was their pride and privilege to be a past pupil of Vadamaradchy Hindu Cirls 'College.

It is said that the three R--Reading. WRiting and ARithmetic are essential for any school education and if the fourth R -Religion is missing it will lead to the fifth R -Rascaldom

Vadamaradchy Hindu Girls' College satisfies this requirement by imparting good and sound religious education in a strictly hindu environment and atmosphere.

Occasions of this nature are essential to remind all of us that our ancestors too had contributed to our well - being and that we should not only carry forward their aims and objectives but also in addition improve on what they have done to the society.

In conclusion I wish to congratulate all those on their achievements and also wish them well for the future too, for a better performance in all walks of life thus bringing further colours to the College.

**S. Anandacoomaraswamy**

## ஆசிச் செய்தி

யா / வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி அதன் பொன்விழாவை 1994 ம் ஆண்டு கொண்டாவிருப்பதை அறிந்து மட்டிலா மகிழ்ச்சி அடைகிறேன்.

பெண் கல்வி பற்றிய பாரதியாரின் முழக்கத்தைச் செயலுருவாக்கிச் சைவத்தமிழ்ப் பெண்களுக்கெனக் கல்லூரி நிறுவிய பெரியார் சேர். பொன். இராமநாதன் அவர்களின் அடிச்சுவட்டில் யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் சிவநெறிச் செம்மல்களால் ஆரம்பிக்கப் பெற்ற இந்துமகளிர் பாடசாலைகளுள் வடமராட்சி இந்துக்கல்வி அபிவிருத்தி சபையால் நிறுவப்பட்ட வடமராட்சி இந்துமகளிர் கல்லூரியும் ஒன்று.

மெய்யறிவு காணும் கல்வியறிவைப் புகட்டும் கல்விச்சாலைகள் தெய்வாம்சம் பொருந்தியவை. மண்ணுக்கு மணம் சேர்ப்பவை இந்தவகையில் இன்று வடமராட்சி மங்கையின் நெற்றித்திலகமெனத் திகழும் இக்கல்லூரி 1944 ம் ஆண்டு ஜுலை மாதம் 03ம் திகதி தாபிதமாகி ஐம்பதாண்டு காலமாகப் பல்துறைசால் செம்மை மாதர் அநேகரைப புறந்தந்து அறிவொளி பரப்பி நிற்கின்றமை பெருமைக்குரியதே

கல்லுாரியின் பிரகாசத்தில் மலரும் பொன்விழா மலருக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு கல்லூரி தனது பாரம்பரிய கட்டுக்கோப்பினைத் தொடர்ந்தும் பேணிச் சைவத்தமிழ் மகளிரின் உன்னத வாழ்வுக்கு வழிசமைக்க அருளுமாறு எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்

கல்வித்திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
1994-09-14

செல்வி. தீ. பெரியதம்பி
கல்விப்பணிப்பாளர்.
யாழ்ப்பாணம் – வலயம் 1

# வித்திட்டவர்கள் பற்றி........

இந்துப் பாரம்பரியங்களையும் இந்துப் பெண்களின் கலாச்சார விழுமியங்களையும் மேம்படச் செய்ய வேண்டுமென்ற தீர்க்கதரிசனம் மிக்க பெரு நோக்கில் இக்கல்லூரிக்கு வித்திட்டவர்கள் பற்றி நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சமெல்லாம் நிறைகின்றது.

இக்கல்லூரிக்கு வித்திட்டவர்கள் கல்விக்கு சொத்திட்டவர்கள் மட்டு மல்ல மகளிர் பெருமைக்கு சத்திட்டவர்களும் கூட. ஆகவே இந்தப் பொன்விழாவிற்குவித்திட்டவர்களும் அவர்களே என்பது வரலாற்று உண்மை ஆகும்.

கல்விக்கு அரசியாம் கலைமகளை பூஜித்து அவளது கலைக் கூடமாக வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியை உருவாக்கிய அந்த சிற்பிகள் சீர்திருத்தவாதிகள் சிந்தனையாளர்கள் போற்றுதலுக்கும் ஏற்றுதலுக்கும் உரியவர்களே

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி என்று ஒரு மகளிர் கல்லூரி தோன்றியிராவிட்டால் ................ எண்ணிப் பார்க்க முடியவில்லை .... ......... பெண்மையையும் இந்துப் பாரம்பரியங்களையும் இத்தனை பெரிய அளவிற்கு உயர்த்தியும் வளர்த்தும் இருக்க வேறொரு ஸ்தாபனத்தால் முடிந்திருக்குமா சிந்தித்துப் பார்த்தால் அப்போது புரியும் 1944 ல் சிந்தித்துச் செயலாற்றி சந்தித்த தடைகளை நீக்கி இக் கல்லூரிக்கு வித்திட்ட அப்பெரியவர்களின் பெருமையும் அருமையும் மகிமையும்

வித்திட்ட அந்த வித்தகர்கள் விளைத்ததோ கல்விப்பயிரை அது தழைத்ததோ ஆல்போல் செழித்து இந்து மகளிர் மேம்பாடு கலாச்சாரம பாரம்பரியம் என அது முகிழ்விட்டு முளைத்தது. சளைத்திடவில்லை அன்றி இழைத்திடவுமில்லை அந்த உத்தமர்கள் பணி

இக்கல்லூரியை நிறுவியவர்கள் பதினொரு பேர். கற்றவர்கள், அறிவில் ஏற்றம் பெற்றவர்கள், லக்ஷ்மி கடாட்சம் பெற்றவர்கள் என அவர்கள் போற்றப் பட்டனர்.

1. முருகப்பர் கார்த்திகேசு
2. நமசிவாயம்பிள்ளை சிவஞானசுந்தரம்
3. முருகப்பர் ஈஸ்வரபாதம்
4. வேலப்பர் சோமசுந்தரம்
5. நாகப்பர் ஆழ்வாப்பிள்ளை இராசரத்தினம்
6. முருகப்பர் ஆழ்வாப்பிள்ளை தங்கராசா
7. ஆழ்வாப்பிள்ளை சிவக்கொழுந்து
8. ஆழ்வாப்பிள்ளை நடராஜசுந்தரம்
9. புண்ணியர் வீரகத்திப்பிள்ளைசேனாதிராஜா
10. வேலாயுதம் முருகேசபிள்ளை
11. பொன்னையா நவரத்தினம்

இக் கல்லூரி 03 – 07 - 1944 இல் திருவாளர் மு. கார்த்திகேசு அவர்களுடைய இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது. பதினொருபேர் கொண்ட அதிகார சபைக்கு திரு. மு. கார்த்திகேசு அவர்களே தலைவரானார். பாடசாலை அதிபராகவும் அவரே செயற்பட்டார் 01 - 10 – 1946 இல் இக்கல்லூரி கல்வித் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது.

வைத்திய கலாநிதி க சபாபதி அவர்களின் எண்ணத்திலே 1930-ம் ஆண்டிலேயே இப்படியொரு கல்லூரி இந்துப் பெண்களுக்காக உருவாக வேண்டுமென்ற எண்ணம் கருப்பெற்றமை இங்கு குறிப்பிட வேண்டியதொன்று. அந் நாளில் அவரது பெரும் முயற்சிகள் கைகூடவில்லை. ஆயினும் அன்னாரது அற்புத எண்ணம் அவரது காலத்திலேயே நிறைவு பெற்றது அவருக்கு அளப்பரிய மகிழ்ச்சியைக் கொடுத்தது. இக் கல்லூரியைத் தனது பொற்கரங்களால் ஆரம்பித்து வைத்த பெருமை திரு. க. சபாபதி ஐயா அவர்களுக்கே உரியது. அவரது எண்ணத்தில் உதித்தது மற்றவர்களின் கைவண்ணத்தில் உருவாகி வளர்ந்து, பொலிந்து, சிறந்து, நிமிர்ந்து இன்று உயர்ந்து நிற்கின்றது.

திரு. S. S. சரவணமுத்து அவர்கள் இப் பாடசாலையைக் கட்டுவதில் அளப்பரிய பங்காற்றினார். ரூபா 5000/- நன்கொடையாக அளித்தார். கல்லூரி மண்டபத்திற்கான அடிக்கல்லையும் அவரே நாட்டினார். அன்னாரது அயராத உழைப்பு இன்று இக்கல்லூரி நிலைத்து நிமிர்ந்து நிற்க உதவுகின்றது.

திரு. V. K. சிவப்பிரகாசம் அவர்கள் ஒரு வகுப்பறையைக் கட்டுவித்துத் தந்து பாடசாலையின் வளர்ச்சியைத் துரிதப்படுத்தினார்.

திரு. V. நல்லையா அவர்கள் மேலும் ஒரு வகுப்பறையைக் கட்டுவித்துத் தந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு மென்மேலும் மெருகூட்டினார்,

திரு. க. சிதம்பரப்பிள்ளை, திரு. வே. பொன்னையா, திரு. கா. பத்மநாதன் ஆகியோர் பாடசாலைக் கட்டிட நிதிக்கு பெருந்தொகைப் பணத்தை சேர்த்துக் கொடுத்ததை மறந்திடின் நன்றி மறந்த பாவம் நம்மைச் சேரும்.

இப் பாடசாலை நிறுவும் எண்ணக் கருவைத் தன் சிந்தையில் சுமந்த பெருமகனார் திரு க, சபாபதி அவர்களின் மருமகன் திரு. ப நவரத்தினராஜா (தற்போது ஜனாதிபதி சட்டத்தரணி) அவர்கள் விஞ்ஞான கூடத்தின் ஒரு பகுதியைக் கட்டுவித்தார் என்பதும் போற்றப்படவேண்டிய தொன்றாகும்.

திருமதி. கந்தையா சிவபாக்கியம் அவர்கள் 03 பரப்புக் காணியை நன்கொடையாகத் தந்துதவியதை நாம் மறந்துவிட முடியுமா. அந்த 03 பரப்புக் காணியில் முகிழ்விட்ட கட்டிடத்தில் கல்வி கற்று இன்று உலகெங்கும் சைவமணம் பரப்பும் இந்து மகளிர் பெருமையை நினைக்கும் போதெல்லாம் அந்த அம்மையாரை நாம் நினைத்தே ஆகவேண்டும். அதுவே நன்றிக்கு வித்து. பெண்மைக்கும் இந்து பாரம்பரியங்களுக்கும் சத்து எமது விலை மதிப்பற்ற சொத்து.

திரு M. A. தங்கராஜா அவர்கள் ஆற்றிய பணியினை எடுத்துரைக்காமல் இருப்பது எப்படி. அவரது அயராத முயற்சிக்கு ஈடு இணை ஏது. தனது சொந்தக் காணியையே இலவசமாகத் தந்து இக் கல்லூரியை வளர்த்த பெருமகனார் அவர். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற காலத்தில் துணிந்து செயலாற்றிய செயல்வீரர் அவர், அவரைப் போற்றுவோம் நினைவில் ஏற்றுவோம்.'

ஈற்றில் திரு. மு. அ. பொன்னையா அவர்களை நினைத்துப் பார்க்கையில் நெஞ்சமெல்லாம் நிறைகின்றது. அன்னாரது சேவையை நினைக்க நினைக்க மகிழ்ச்சி பெருகுகின்றது அவர் கட்டித் தந்த திருமன்றம் ஒன்று போதும் உலகு உள்ளவரையும் அவர் பெயர் அது கூறும். பாடசாலையின் வரலாற்றில் அவரது பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது. காலத்தின் கட்டாயம் மட்டுமல்ல சரித்திரத்தின் முக்கியத்துவமும் கூட.


வித்திட்டவர்களை நினைத்தோம் ..... — ..... பெருமை அடைந்தோம், இது போதுமா? இல்லவே இல்லை அவர் தம் கல்விப்பணி தொடர வேண்டும். அதன் மூலம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் தரம் உயர வேண்டும் புகழ் வளர வேண்டும் அதுவே வித்திட்ட அந்த அன்பு மனிதர்களுக்கு நாம் செய்யும் நன்றிக் கடன்

விண்ணில் இருந்து அவர்கள் வாழ்த்த மண்ணில் தொடர்வோம் நாம் அந்தப் பணியை.

வளரட்டும், செழிக்கட்டும், பரவட்டும், உயரட்டும், சிறக்கட்டும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் புகழ்.

சம்பந்தர் சிவராஜலிங்கம்

கார்த்திகேசர் வீதி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.



திருமன்ற ஸ்தாபகர் திருA.பொன்னையா



ஸ்தாபகர் Dr .C. சபாபதி



ஸ்தாபகர் திருM.கார்த்திகேசு



சி.வாசுகி (306புள்ளிBio1993)



ந. துளசிநந்தினி (306புள்ளிBio1993)



க.சறோஜினி (303புள்ளிArts1990)



மு.பவானி (310புள்ளிCom1990)



பொ. சுகந்தி (315 புள்ளி Maths 1986)







# * வட இந்து மகளிர் கல்லூரி பற்றி *
# * ஒரு வரலாற்று நோக்கு *

* * * * * * * * * * * * * * * *

கலை மகளும் நில மகளும் நின்று மகிழ்ந்திட
புலோலியிலே புகழ் பூத்த இந்து மகள்
காலம் ஐம்பது ஆண்டு கழித்திட
கலைக் கோயிலை துதி செய்வோம்

இவ்வாண்டு எமது கல்லூரி வாழ்வில் பொன்னால் பொறிக்கப்பட வேண்டிய காலப் பகுதியாகும். வடகோடியின் மூலையில் புகழ் பரப்பி அறிவொளி பரப்பி நிமிர்ந்து நிற்கிறாள் எமது அன்னை வட இந்து மகளிர் கல்லூரி எனப் பெயர் கொண்டு சைவமும் தமிழும் தழைத்தோங்க காட்சியளிக்கின்றாள் கல்விமான்களின் நல்லெண்ணங்கள் ஈடேறி பெண்கள் சமுதாயத்தை எழுச்சியடையச் செய்த கருவூலம் அவள் சிறந்த இலட்சியக் கனவை நனவாக்கி பொன்விழாக் கோலம் பூண்டு நிற்கிறாள் கம்பீரமாக காட்சியளிக்கும் எமது கல்லூரி அன்னையை துதி செய்து மகிழ்ந்து பாடுவோம். அவள் வரலாற்றில் சந்தித்து அவளுக்கு பெருமை சூட்டிய அறிவாளிகளையும், அதிபர்களையும், மாணவர்களையும் பாராட்டி வளர்ச்சிக்கு வித்திட்டவர்களை நன்றிப் பெருக்குடன் நினைவுகூருவோம்.

*கல்லூரியின் வரலாற்றுப் பின்னணி*

ஈழத்தின் சிகரமான யாழ்ப்பாணத்தின் முடிமணியாக சிறப்புற மிளிர்கிறது வடமராட்சி, அப்பகுதியிலே கல்வி முதலாக சான்றாண்மை ஈறாக இனிது அமையப்பெற்ற மேலைப் புலோலியில் அமைந்துள்ளது வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. பெண்கள் சமுதாயத்தின் விடிவை நோக்கி எழுப்பிய பாரதியின் நாத முரசும் பருத்தி நகரின் இந்துப் பெண்கள் கல்லூரியின் அத்திவாரத்தின் தொடக்கமாக அமைந்தது. பெண்கள் கல்வியை கருத்தாகக் கொண்டு இந்து சமயப் பண்பாட்டினையும் கலாசாரத்தினையும் வளர்த்தெடுக்கும் கவசமாக விளங்க வேண்டும் என்பது அக்கால அறிஞர்கள் குழாத்தின் பெரு விருப்பமாக இருந்தது மேலைப் புலோலியில் சைவ ஆண்கள் பாடசாலை தோன்றி கல்வியை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையில் பெண்கள் வீடுகளில் இருந்து வாழ்வை உயர்த்திக் கொள்வதற்காக அவ்வூர் அறிஞர்களின் எண்ணத்தில் வட இந்து மகளிர் முளை கொண்டனர்?

"பட்டங்கள் பெறவும், சட்டங்கள் செய்யவும் பாரினில் பெண்கள் நடந்து வந்தோம்" என்ற பாரதியின் கருத்தைக் கொண்ட கற்றார் கல்விக் கழகம் மேலைப் புலோலியை நடு மையமாகக் கொண்டு நாற்புறமும் நன்மையடைய வேண்டும் எனக் கருதி வட இந்து மகளிர் கல்லூரிக்கான அடிக் கல்லை 1944ம் ஆண்டு ஆனி மாதம் அனுஷநட்சத்திர நன்னாளில் நாட்டினார்.

அந்நியர் ஆதிக்கத்தின் அடிமை வெறியினால் சுதேச மதம் சோழிந்தது. சிதறி தடுமாறியது. அந்த மாய வலையில் அகப்பட்டு மதம் மாறி கிறிஸ்தவ மதத்தினை நாடிச் சென்ற வடமராட்சி வாழ் பெரு மக்கள் இந்துமத வழிபாடும் கலாச்சாரமும் அழிந்து போகாமல் தடுக்கும் எண்ணம் கொண்டனர். பழைமையில் நாட்டமும் புதுமையில் ஆர்வமும் கொண்டு இந்துமதப் பண்பாட்டினை ஒரு ஸ்தாபனத்தின் ஊடாகவே வளர்க்க முடியும் என்ற எண்ணத்தினால் வடஇந்து மகளிர் கல்லூரி உருவாக்கப்பட்டது,

திருவாளர் கார்த்திகேசு அப்பா என்பவரின் வீட்டில் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பம் செய்யப்பட்டது. இவரது வீடு கல்வளவு காரணமாக அறைகளுக்கு முன் பகுதியில் அமைந்த விறாந்தையில் வகுப்புகள் ஆரம்பமாகியது தரையில் உட்கார்ந்து படிக்க வேண்டிய நிலைமை அப்போதிருந்தது. தற்போது இருக்கும் பாடசாலை வளவில் இருந்து சிறிது தூரத்திற்கு அப்பால் சிறு ஒழுங்கை முகப்பில் வீடு அமைந்திருந்தது. திருவாளர் கார்த்திகேசு அவர்கள் பட்டப்படிப்பை மேற்கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் ஆவர். அவர் அறிவும் ஆற்றலும் கூர்ந்த நுண்ணறிவும் கொண்ட அறிவாளி. கடல் போல் வியாபித்திருந்த அவரது அறிவினால் அவர் தன்னையும் தனது உடமைகளையும் இப் பாடசாலைக்காக அர்ப்பணித்தார். அவரது எண்ணக்கருவில் உருவாகிய இந்து மகள் கொடி கட்டிப் பறந்து புகழ் பரப்புவதை இன்றும் காணலாம். இவர் பார்வைக்கு காந்தித் தாத்தாவைப் போல இருப்பார் அமைதி, அடக்கம், கூரிய பார்வை வழுக்கல் நிறைந்த தலையும் அழகிய வெண்நிறத் தோற்றமும் நாலு முழ வேட்டியுடனும் ஊன்றிய கோலுடனும் பாடசாலை வளவைச் சுற்றிச் சுற்றி பவனி வருவார், இவரின் கைராசியில் உருவாகிய

இப் பாடசாலையின் கடந்த காலம் ஐம்பது ஆண்டுகள் என்பதில் பெருமை கொள்கிறோம். பெண்கள் தாயாகி அமுதினை ஊட்டும் பொழுது இந்து கலாசார பண்பாட்டினையும் ஒழுக்க சீலத்தினையும் ஊட்ட முடியும் என்பது உணரப்பட்டது அதனால் இரத்தத்துடன் கலந்த இந்து கலாசாரம் அழிவுப் பாதையில நின்றும் உயர்வடைய வேண்டும் என்பது அப்பகுதி மக்கள், அறிஞர், முதியோரின் அவாவாக அமைந்தது. இதன் காரணமாக அப்பகுதி மக்களால் கொடுக்கப்பட்ட சன்மானம் இல்லாத உழைப்பு நன்கொடை தன்னலமற்ற சேவை என்பன கல்லூரியின் வளர்ச்சிப் பாதைக்கு பேருதவியாக அமைந்தது. சமகால சகாப்தத்தில் இதன் வளர்ச்சியில் ஏனைய நிறுவனங்களின் பாதிப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள அதிபர்கள், ஆசிரியர்கள் சேவையின் விடாமுயற்சியும் பூரண பொலிவினைக் கொள்ள காரணமாகின.

## எங்கள் கல்லூரி ஸ்தாபகர்கள்

சைவ சமயம் வளர்ந்தோங்கிய புலோலியம்பதியிலே இந்துச் சூழலிலே பெண்களுக்கான உயர்தர கல்லூரி ஒன்று அமைய வேண்டும் என்று பெற்றோர்கள் பெரியோர்கள் அவாவுற்றனர். இந்த அவசியத்தை உணர்ந்த வடமராட்சியில் வாழ்ந்த கற்றோர் ஒன்று கூடி இக் கல்லூரி ஸ்தாபிப்பதற்கான முயற்சியில் இறங்கினர் முதன்முதலாக திருவாளர் கார்த்திகேசு அவர்களின் முயற்சியால் அவரது இல்லத்திலே இப் பாடசாலை உதயமானது சைவ வித்தியா விருத்தி சபையினர் என்ற ஒரு சபையை உருவாக்கி அதன் மூலம் பாடசாலையை வழி நடத்த முன் வந்தனர். அவ்வாறு அமைந்த சபையின் முக்கிய மூலஉறுப்பினர்கள் வருமாறு.

1) திரு. எம். கார்த்திகேசு
2) திரு. வீ. முருகேசம்பிள்ளை
3) திரு. எம். ஈஸ்வரபாதம்
4) திரு எஸ். எஸ். சரவணமுத்து
5) திரு. ஏ. வேலுப்பிள்ளை
6) திரு. எம். ஏ. தங்கராசா
7) திரு. வி. ரி. எஸ். சிவகுருநாதன
8) திரு பி நவரட்ணம்
9) திரு சி. சபாபதி
10 திரு. கே. சதாசிவம்

அவ்வுறுப்பினர்களில் திரு. எம். கார்த்திகேசு, திரு எஸ். எஸ், சரவணமுத்து, திரு எம். எ. தங்கராசா போன்ற பெரியவர்களினால் தனிப்பட்ட சொந்தக் காணிகள் இப்பாடசாலைக்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. பாடசாலை வரலாற்றில் வடமராட்சி வாழ்மக்கள் எடுத்துக் கொண்ட பங்கினையும், தன்னலமற்ற தியாகங்களையும் பெறுமதிமிக்க நன்கொடைகளையும் அள்ளி அள்ளித் தயங்காது கொடுத்ததன் விளைவாக இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளைப் போல் தரமிக்க பாடசாலையாக உயர்த்தப்பட்டது.

பாடசாலை வளவின் பெரும்பகுதி நிலம் புலோலி மக்களின் அன்பளிப்பாலும் கட்டடங்களின பெரும்பகுதியும் வடமராட்சி மக்கள் மனமுவந்து அளித்த நன்கொடையாலும் திருவாளர் கார்த்திகேசு அவர்கள் இல்லத்திலிருந்து தற்போதைய இடத்திற்கு 1945 ம் ஆண்டு மாற்றப்பட்டது.

இரு வகுப்பறைகளைக் கொண்ட ஓலையினால் வேயப்பட்ட கொட்டிலில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. சலுகைகள், வசதிகள், விடுதி வசதிகள் உள்ள மெதடிஸ்த பெண்கள் கல்லூரியின் எதிர்த் தாக்குதலுக்கு இடையில் இப்பாடசாலையை வளர்த்து எடுக்கும் பணி தொடர்ந்தது.

## தன்னலமற்ற சேவைகளும் நன்கொடைகளும்

பாடசாலையின் பிரதான மண்டபம் திருவாளர் சரவணமுத்து அவர்களால் இதற்கான அத்திவாரம் 31.08-1944 ல் இடப்பட்டது. திருவாளர் எஸ். எஸ். சரவணமுத்து அவர்களின் பெரு முயற்சியாலும் அயராத கண்காணிப்பாலும் இம்மண்டபம் உருவாகியது. அவரது முகாமைத்துவத்தின் கீழ் உருவாகிய இம்மண்டபம் 1000 பாடசாலை மாணவர்களை உள்ளடக்கும் விஸ்திர அமைப்புக் கொண்டது. பணம் படைத்தவர்கள் பேருதவியினால் இம்மண்டபம் மேடை அமைப்புடன் விளங்குகின்றது. வடமராட்சிப் பாடசாலை சார்பாகவோ அன்றி பொதுமக்கள் சார்பாகவோ நடைபெறும் கலை, கலாச்சார நிகழ்ச்சி நடைபெற உகந்த இடமாக விளங்குகின்றது. ஆயிரக்கணக்கான மாணவர்களை உள்ளடக்கும் இம்மண்டபம் அன்றைய கல்வி மந்திரியாக இருந்த சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதனை நினைவுபடுத்தும் வகையில் மண்டப வாசலில் கட்டப்பட்டு இருக்கும் நடுகல்லிலே பொறிக்கப்பட்டுள்ளது தாராள குணம் கொண்ட பெரியோர்களின் நன்கொடையால் மண்டபம் பாடசாலை மையமாக அமைந்து இருப்பதைக் காணலாம்.

பாடசாலை கல்வி வளர்ச்சி காரணமாக கட்டிடங்கள் விஸ்தரிக்க வேண்டியிருந்தது. தற்போதைய நிர்வாகக் கட்டிடமாக அமைந்துள்ள இருபெரிய அறைகளும் அதனோடு இணைந்த வகுப்பறைக் கட்டிடமும் டாக்டர் எஸ் சுப்பிரமணியம், திரு. எஸ். இரத்தினசிங்கம், வி. கே. சிவப்பிரகாசம், திரு. வி. நல்லையா என்பவர்களாலும் கட்டிக் கொடுக்கப்பட்டது. பாடசாலை வரலாற்றில் புதிய திருப்பமாக திருமன்றம் என்ற விடுதியை கட்டியமை குறிப்பிடத்தக்கது மாணவர்கள் தங்கியிருந்து கல்வியைக் கற்பதற்கு வசதி ஏற்படுத்தும் நோக்கமாக இம்மன்றம் கட்டப்பட்டது

இதற்கு முன்பு அண்மையில் உள்ள வீடுகளின் விடுதிக்காக வாடகைக்கு எடுத்து மாணவர்களை தங்க வைத்தனர். திருமன்றம் 1951ல் அத்திவாரம் இடப்பட்டு 1953ல் கட்டி முடிக்கப்பட்டது. 60 மாணவர்களையும் 10 இற்கு உட்பட்ட ஆசிரியர்களையும் கொண்ட படுக்கை அமைப்புக் கொண்ட விடுதியாக அமைந்தது. அக்காலத்தில் 37000 ரூபாவில் கட்டி முடிப்பதாக போடப்பட்ட திட்டம் அதனையும் தாண்டிச் சென்றதாக இதை அமைத்தவர் கூறினார். இவ் விடுதியானது புலோலியை இருப்பிடமாகக் கொண்ட திரு பொன்னையா என்பவரினால் நன்கொடையாகக் கட்டப்பட்டது. பல்கலைக் கழக படிப்பிற்குச் சென்ற அவரது மகன் அகால மரணம் அடைந்தமையால் அவரது ஞாபகார்த்தமாகவும் அவரது படிப்பிற்கென ஒதுக்கி வைக்கப்பட்ட பணத்தால் அவரது மனம் ஆறுதல் அடையவும் மகன் திருநாவுக்கரசரின் ஆத்மா சாந்தி அடையவும் எழுப்பிய கலையாலயம்தான் திருமன்றம் இறந்து போனாலும் அவரின் நினைவாக திருமன்ற வாசலில் திருநாவுக்கரசர் திருவுருவமும் அவரது மகனின் நிழற் படமும் காட்சியளித்துக் கொண்டிருப்பதை இன்றும் காணலாம். மகனுக்கு நினைவாலயம் எழுப்பிய தந்தை திரு. பொன்னையா என்பவர் காவிஉடை தரித்து சித்தம் கலங்காத தூய நினைவோடு உலகப் பற்றுக்களைத் துறந்து ஒரு ரிஷி போல காட்சி தந்தார்.

அவர் ஓரிரு வருடங்களுக்கு முன்தான் இறைபதியை அடைந்தார். 1954ல் மலேசியா பென்சன் எடுக்கும் வடமராட்சி உத்தியோகத்தர் குழு தாவரவியல் ஆய்வுகூடமும், பௌதிகவியல் ஆய்வு கூடமும் கட்டிக் கொடுத்தனர். அதற்கான உபகரணங்கள், தளபாட வசதிகள், இருக்கை வசதிகள், அலுமாரிகள் என்பன அவர்களால் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து சமகாலத்திலேயே இரசாயனவியல் ஆய்வுகூடம் டாக்டர் சபாபதிப்பிள்ளை அவர்களால் அத்திவாரம் இடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதனை அவரது மகன் பூர்த்தியாக்கி திருப்திகரமான உபகரண, தளபாட அமைப்புகளுடன் பாடசாலைக்கு நன்கொடையாக அளித்தார். பாடசாலை வரலாற்றில் வடமராட்சி வாழ் மக்கள் எடுத்துக் கொண்ட பங்கினையும் தன்னலமற்ற தியாகங்களையும் பெறுமதிமிக்க நன்கொடைகளையும் அள்ளி அள்ளித் தயங்காது கொடுத்ததன் விளைவாக இப்பாடசாலை ஏனைய பாடசாலைகளைப் போன்று தரம் மிக்க பாடசாலையாக உயர்த்தப்பட்டது.

## கல்லூரியின் வளர்ச்சிப் பாதை

இப்பாடசாலை முதலில் 46 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. தாபகர்கள் மாணவர்களைச் சேர்க்க மிகவும் சிரமப்பட்டார்கள். தாபகர்கள் விடு வீடாகச் சென்று சைவப் பெற்றோர்களைச் சந்தித்து பிள்ளைகளை இப்பாடசாலைக்கு அனுப்பும்படி வற்புறுத்தினார்கள். தாமே தம் பிள்ளைகளையும், தம் சுற்றத்தவர்கள் பிள்ளைகளையும் இப் பாடசாலையில் சேர்க்க முன்வந்தனர். மிகுந்த சிரமத்துடனும், கடினத்துடனும் செயற்பட்டனர். இவ்வேளையில் 1946-ம் ஆண்டு அரசாங்க உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக பதிவு செய்யப்பட்டது. 1947ல் வரை இப்பகுதி வாழ் கல்வித் தகமையுள்ளோர் வேதனம் வாங்காது கடமையாற்றினார்கள். இதனால் நிதி நிலமையைச் சமாளிக்க முடிந்தது. 1944ம் ஆண்டு முதல் பாலர் வகுப்புத் தொடக்கம் 6ம் ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்டது. திரு எம். கார்த்திகேசு தலைமையில் திருமதி. கமலா, திருமதி திலகவதி என்போர் ஆரம்பகால ஆசிரியர்களாக கடமையாற்றினார்கள். இவர்களின் சேவையின் ஆற்றலினால் 1945ல் 279 ஆக மாணவர் தொகை அதிகரித்தது. இதனால் அதிபர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 1945ல் திருமதி. மீனாட்சி பொன்னுத்துரை என்பவர் அதிபராக நியமிக்கப்பட்டார். வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் நடாத்தப்பட்ட என். பி. ரி. ஏ 8ம் வகுப்பு பரீட்சைக்கு மாணவர்களை அனுப்பினார் 1946ல் 369 மாணவர்களை கொண்ட எஸ். எஸ். சி. பரீட்சைக்குரிய வகுப்புக்கள் இருந்தன இதன் காரணமாக அரசாங்க உதவி பெறும் பாடசாலையாக 1946ல் பதிவு செய்யப்பட்டது. எஸ். எஸ் சி பரீட்சைக்காக ஒய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்கள் வேதனம் இல்லாது ஆசிரியர்களாக கடமையாற்றினார்கள். அவர்களுள் திரு கார்த்திகேசு திரு சிவகுருநாதன், திரு. தியாகராஜா, திரு. செல்லையா என்போர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இப்பாடசாலையில் பாலர் வகுப்பு தொடக்கம் 5ம் வகுப்பு வரை தமிழ்மொழி மூலமும் 6ம் வகுப்புக்கு மேல் ஆங்கிலமொழி மூலமும் கல்வி கற்பிக்கப்பட்டது. இச்சமயம் 1946ல் செல்வி. பசுபதிஐயர் என்ற இந்தியப் பெண்மணி அதிபராக கடமையாற்றினார். இவரது தன்னலமற்ற சேவை, பாகுபாடற்ற கடமை, தன்னாட்டைப் போன்ற நேசம், உயர்ந்த பண்பு, ஆங்கில அறிவு, அறவாழ்வு என்பன பாடசாலையை முன்னெடுத்து செல்ல உதவின.

செல்வி. யோகாம்பிகை கனகசபை அவர்கள் பொறுப்பை ஏற்றபோது பாடசாலை தொடர்ந்து வளம் பெற்றது. 1947ல் செல்வி யோ கனகசபை அவர்கள் 483 பிள்ளைகளை முதன்முறையாக S. S. C. பரீட்சைக்குத் தோற்றுவித்தார். 80 % மாணவர்கள் சித்தியடைந்தனர். இதனால் பரீட்சையின் பெறுபேறுகள் பாடசாலைத் தரத்தை உயர்த்தி மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றது 3 ஆண்டுகளில் இப்பாடசாலையின் துரித வளர்ச்சி மெச்சத்தக்கது இங்கு பாடசாலை வரலாற்றில் செல்வி. கனகசபையின் காலம் முதல் கட்டம் எனலாம். 1947 தொடக்கம் 1952 வரை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஒழுங்கு இவற்றை இலட்சணமாக கொண்ட இவர் சேவையில் பாடசாலை வளம் பெறத் தொடங்கியது. தாவரவியல் கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்காக புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்கள். 1951ல் 1238

பிள்ளைகளும் 1952ல் 1375 பிள்ளைகளும் கல்வி பயின்றனர். செல்வி. கனகசபையைத் தொடர்ந்து செல்வி. கே. சரவணமுத்து அதிபர் பதவியை ஏற்றார். பாடசாலையின் இரண்டாவது கட்டமாக விளங்கியது. யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி. சரவணமுத்து உயிர், மூச்சு, உடல் அத்தனையையும் பாடசாலைக்காகவே அர்ப்பணித்தார்.

கல்வி அதிகாரியாக இருந்த இவர் 1952ல் அதிபராகக் கடமை ஏற்றார். 1971 வரை இவர் நிர்வாகம் நீடித்தது இக்காலப் பகுதி வட இந்து மகளிர் கல்லூரியின் மறக்க முடியாத எழுச்சிக்காலம் என்று கூறப்பட்டது. இந்திய, இலங்கை பட்டதாரிகள், விளையாட்டுத்துறை ஆசிரியர்கள் சமய சங்கீத ஆசிரியர்கள் என சகல துறைக்கும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். 1954ல் பல்கலைத் தேர்வில் கலைப்பிரிவிற்கு ஆங்கிலக்கல்வி மூலம் தெரிவு செய்யப்பட்டவர் பார்வதி கந்தையா என்பவர் ஆவர் இதன்பின் பாடசாலை தன் தரத்தை மேலும் உயர்த்திக் கொண்டது என்பது கல்வி உலகிற்கு எடுத்துக் காட்டப்பட்டது. பாடசாலை சீருடை சம்பந்தமாக ஒழுக்க அடிப்படையில் வளர்ந்த பெண்கள் நீளப்பாவாடை, மேற்சட்டை, தாவணி போன்ற உடையும், சிறு பிள்ளைகள் நீளப் பாவாடை சட்டை அணியும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.

1966ல் வலைபந்தாட்டப் போட்டிகளில் வடமாகாண நிகழ்வுகளில் பங்குபற்றி வெற்றியும் பெற்றது, இந்நிலையில் பாடசாலைக் கல்வி மதிப்பீட்டில் முதலாந்தரப் பாடசாலையாக 1957ல் தரம் உயர்த்தப்பட்டது.

செல்வி சரவணமுத்துவின் அயராத உழைப்பாலும், விடாமுயற்சியாலும் சிறந்த சேவையாலும் பாடசாலை 1957 ல் முதலாந்தரப் பாடசாலையாக உயர்த்தப்பட்டது. இப்பாடசாலை தனக்கென ஒரு வழிகாட்டியையும் தலமைப் பீடத்தையும் பெற்றுக் கொண்டது. சமய கலாசார விழாக்கள் சமயகுரவர் பூசைகள், சிவராத்திரி, நவராத்திரி விழாக்கள் சைவ பரிபாலனசபை, விவேகானந்த சபை போன்றன நடத்தும் பரீட்சைகள், சங்கீதம், நடனம், நாடகம் போன்ற தமிழ்த்துறைப் போட்டிகள், வலைப்பந்தாட்டப் போட்டிகள் போன்ற சகல துறைகளிலும் மாணவர்களை அனுப்பி பரிசில்கள் பெற வைத்தார் சிறப்பாக நாடக அரங்கில் மனோன்மணியம் என்னும் நாடகத்தை 1959ல் மேடையேற்றினார். இவர் முன்னெடுத்துச் சென்ற இலட்சியப் பாதையில் கல்லூரி முதலாந்தரப் பாடசாலையாக உயர்த்தப்பட்டது இவர் சேவையின் பெரு வெற்றியாகும் வருடம் தோறும் தைப்பொங்கல் வைபவத்தினை நடத்தி சூரிய பகவானுக்கு பொங்கல் படைத்து நிறைந்த மனத்துடன் பாடசாலை கருமங்களை ஆரம்பிப்பது வழக்கம். 1970 வரையில் இவர் பாடசாலை வாழ்வில் தனக்கென்று ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார். பாடசாலை வாழ்வும், வரலாறும் அழியாத நிலையில் செல்வி சரவணமுத்துவின் சேவையும், பணியும் மறக்க முடியாதவை.

வட இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றில் ஒளிவிடும் இராஜகோபுரம், ஆத்மா சாந்தியடைந்து வாழ்வும் சமூகத் தொண்டும் நிலைபெற வேண்டும் என்று ஆண்டவனிடம் வேண்டப்படும் இறை அஞ்சலியாகும்.

1961 இன் பின் பாடசாலை வளர்ச்சியில் தளர்வு நிலை ஏற்பட்டது. எமது பாரம்பரியம், சமயம், தமிழ்ப்பண்பாடு என்பவற்றிற்கு அமைய நடாத்தப்படும் பாடசாலை அரசாங்கப் பொறுப்பேற்றால் அவை அழிக்கப்பட்டுவிடும் என்பதால் எங்களுடைய நிர்வாக சபையானது அரசாங்கம் பொறுப்பேற்று நடத்துவதை ஆதரிக்கவில்லை. இதனால் அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் உடனடியாக அதிபர் உட்பட இடமாற்றம் செய்யப்படவே பாடசாலை தனியார் நடாத்த வேண்டியநிலை ஏற்பட்டது அச்சமயம் உதவவந்தவர்கள் சம்பளம் இல்லாமல் சேவையாற்ற முற்பட்ட போதும் எல்லாப் பாடங்களுக்கும் ஆசிரியர்களைப் பெறுவது கடினமாக இருந்தது. அதன் காரணமாக பாடசாலை சகலதுறைகளிலும் பின்னடைவு கண்டது. கட்டி எழுப்பப்பட்ட பாடசாலையானது நிலைகுலைய நேர்ந்தது தேனீக்கள் போல ஒன்று கூடிய மாணவர்கள் பாடசாலையை விட்டு வேறு பாடசாலையை நாடினார். இக்கட்டமானது இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகளை பின்னோக்கி தள்ளி வைத்தது.

இதனால் பாடசாலை மாணவர் நலன்கருதி 1962ல் பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றது. இடமாற்றம் செய்யப்பட்ட அதிபர், ஆசிரியர்கள் மீண்டும் பாடசாலைக்கு வந்தனர். பணி தொடர்ந்தது. ஆட்டங்கண்ட பாடசாலையை மீண்டும் எழுச்சிகாண வைத்தவேளையில் நிர்வாக பிரச்சினை காரணமாக செல்வி. கே. சரவணமுத்து 1967ல் இடமாற்றம் செய்யப்பட்டார். அவரின் இடைக்காலத்தில் 1967 — 69 ல் திருமதி காயத்ரி கணேசன் அதிபராக கடமை ஏற்றார். இவர் காலம் சைவசமயப் பண்பாட்டின் புத்துணர்வுகள் மேம்பட்ட காலமாகும். கல்லூரி சைவ நெறியிலும் சைவ பழக்கவழக்கங்களிலும் பண்பாட்டிலும் சிறந்து நின்றது இறைவனுக்காக கோவில் ஒன்றினை கல்லூரி மண்டபத்தில் அமைத்தார். இராமநாதன் கல்லூரியில் அதிபராக இருந்த இவர் அதேபோன்ற நடைமுறைகளை இங்கும் பின்பற்றினார். பூமாலை தொடுத்து இறையஞ்சலி செலுத்தி ஆராதனை செய்வதற்கு இவர் முக்கியத்துவம் கொடுத்தார்

திருமதி காயத்ரி கணேசனைத் தொடர்ந்து செல்வி சரவணமுத்து 1969 — 71ல் பலரின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் அதிபராகி 1971ம் ஆண்டு அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெற்றார். 1971 — 83 ல் பதவியில் இருந்தவர் திருமதி. கனகசுந்தரம். இவர் வரலாற்றில் இது பொற்காலமாகும்.

முன்னணியில் நிற்கும் கல்லூரியில் ஒன்றாக

பாடசாலை திருமதி. கனகசுந்தரத்தின் காலத்தில் பல துறைகளிலும் வெற்றியீட்டிக் கொண்டது 13 வருட சேவையில் பாடசாலை விண்ணளாவிய புகழை ஈட்டிக் கொண்டது. செல்வி. சரவணமுத்து கட்டிச் சென்ற அத்திவாரத்தில் பாடசாலை சகல துறைகளிலும் சிறந்து நின்றது. இலங்கை பூராக நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றது. 1971 — 76 வரையும் சம்பியன் எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டது. இதேபோன்று இசை, பேச்சு, நாடகப் போட்டி போன்றவற்றில் பருத்தித்துறை வட்டாரத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் வெற்றியீட்டியது, கொழும்பு வரையில் போட்டியிட்டு வெற்றிகளை ஈட்டிக் கொண்டது. 1973, 1977, 1981, 1982, 1983 ஆகிய ஆண்டுகளில் வலைபந்தாட்டப் போட்டிகளில் வெற்றி ஈட்டியது. 1977 ல் இலங்கை முழுவதற்குமான வலைப் பந்தாட்டப் போட்டியில் கொழும்பு மைதானத்தில் விளையாடி முதற் பரிசைப் பெற்றுக் கொண்டது 1982 மேற்பிரிவு மாணவர்கள், மத்திய பிரிவு மாணவர்கள் முருங்கன், மன்னார் வலைப் பந்தாட்டப் போட்டிகளில் முதலாவது பரிசினைப் பெற்றுக்கொண்டனர்.

நாடகத்தில் 1979 ல் அகில இலங்கைப் போட்டியில் ''ஏகலைவன்'' என்னும் நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றது. ''பக்த பிரகலாதன்'' என்ற நாடகத்தினை கீழ்ப்பிரிவினர் நடித்து வடமானிலத்தில் முதலாம் இடத்தைப் பெற்றனர். தமிழ்த்தின விழாப் போட்டியில் 'கர்ணன் அறமுரைத்த தம்பி கீதாபகரணம்'' என்ற நாட்டிய நாடகம் 1982 ல் முதலாம் இடத்தைப் பிடித்துக் கொண்டன. ஸ்ரார் ரொபி நிறுவனத்தால் நடாத்தப்பட்ட மகாவலிப் போட்டியில் வடமராட்சியில் முதலிடம் பெற்று அகில இலங்கை ரீதியில் வானொலிப் போட்டியில் பங்கு பற்றி முதலாம் இடத்தைப் பெற்று மகாவலித்திட்டச் சுற்றுலாவில் கலந்து கொண்டனர். விவேகானந்தா சபையினர் நடத்தும் போட்டியில் 1982 ல் கே. பிருந்தா தங்கப்பதக்கத்தைப் பெற்றார். பிரியதர்ஜினி பாலேந்திரா முதலாம் பரிசினைப் பெற்று உயர்கல்விக்கான மகாப்பொலப் பரிசினையும் பெற்றார். அத்துடன் பல்கலைக்கழக அனுமதியில் விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், கலை ஆகிய பிரிவுகளில் மாணவர்கள் கணிசமான அளவு அனுமதிக்கப்பட்டனர் சிறப்பாக தளபாலசிங்கம் ஞாபகார்த்தப் பரிசினை வைத்தியப் பிரிவிற்கு அனுமதி பெற்ற செல்வி. கருணா என்பவர் பெற்றுக் கொண்டார். இவ்வாறு வெற்றிக்குமேல் வெற்றிகளை ஈட்டி வடமராட்சியிலேயே முன்னணிப் பாடசாலையாகத் திகழ்ந்தது.

1983 ல் உதவி அதிபராக இருந்தவர் திருமதி. சுப்பிரமணியம். திருமதி. கனகசுந்தரத்தைத் தொடர்ந்து திருமதி சுப்பிரமணியம் அதிபராக பதவி ஏற்றார். இவர் பதவிக்காலமும் அரசியல் கெடுபிடிக் காலமும் இணைந்தொன்றாக அமைந்து விட்டமையால் கல்வித்துறையிலும், கலைத்துறையிலும் அதன் தாக்கங்களைக் காணக்கூடியதாக இருந்தது. 2 நேர பாடசாலையாக இருந்த ஒழுங்குமுறை ஒரு நேரப் பாடசாலை முறையாக மாற்றப்பட்டது. அரசியலின் எதிர்த் தாக்கங்களினால் ஏற்பட்ட இடையூறுகளிலே பாடசாலை நிர்வாகம் சிரமத்துடன் நடைபெற்றது. மாணவர்கள் ஒழுங்கு வரவு குறைவு போன்ற நிலைகளால் பாடசாலையில் மாணவர்கள் சந்திக்கும் நாட்கள் குறைவாக இருந்தது. அதுவும் வடமராட்சிப் பகுதியில் ராணுவ நெருக்கடியினால் தொடர்ந்து பல நாட்களுக்கு பாடசாலைகள் மூடவேண்டிய நிலைமைகள் ஏற்பட்டது. இந்நிலையால் வடமாநிலம் முழுவதும் தமிழ் மாணவர்கள் கல்விநிலை பாதிக்கப்பட்டது. பொருட்கள் உடமைகள் கட்டிடங்கள் போன்ற சொத்துக்கள் சேதங்களின் மத்தியில் பரபரப்பான காலகட்டத்தில் பயம், பீதி ஆகிய நெருக்கடியில் விளையாட்டுப் போட்டி பரிசளிப்புவிழா போன்ற வைபவங்கள் சிறப்பாக நடத்த முடியவில்லை.

பாடசாலையின் ஒரு பகுதியின் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை இயங்கி வந்தது. விளையாட்டு அரங்கில் கட்டப்பட்ட விசாலமான அரங்கில் மற்றும் கட்டிடங்களில் ஒரு பகுதி அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து மெதடிஸ்த பெண்கள் கல்லூரியை இயங்க வைக்க வேண்டிய பொறுப்பும் ஏற்பட்டதால் பெரிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளை கலை நிகழ்ச்சிகளை நடத்த முடியவில்லை. இதனால் பிரதம பாடசாலை நிகழ்ச்சிகளையே நடத்த முடிந்தது. தவிர்க்க முடியாத சூழ்நிலையில் கல்வியில் கா. பொ. த. (சா. த) க. பொ. த. (உ. த) ஆகிய வகுப்புகளுக்குரிய பாடத்திட்டங்களை நிறைவு செய்ய முடியாத நிலையில் பாடசாலைக் காலம் அமைந்திருந்தது வருந்தத்தக்கது. எனினும் திறமையும், நேர்மையும், கடமையும், கட்டுப்பாடும் உடைய அதிபர் தான் சந்தித்த சாதனைகளில் வெற்றி ஈட்டி உள்ளார்.

பல்கலைக் கழக அனுமதியில் வர்த்தகப் பிரிவை பாடசாலைக்கு கொண்டு வர வேண்டும் என்று முழுமூச்சாக செயல்பட்டவர். இதனால் அதிகமான மாணவர்கள் வர்த்தகப் பிரிவில் வந்து சேர்ந்தனர். இவ்வர்த்தகப்பிரிவில் செல்வி. பவானி என்பவர் நான்கு ஏ யைப் பெற்று பல்கலைக்கழகம் புகுந்தார், ஏனைய துறைகளும் கணிசமான அளவு பல்கலைக் கழக அனுமதி பெற்றனர். இக்காலம் மொத்தம் கலைப்பிரிவில் 60 பேரும் விஞ்ஞானம் 21 பேரும், மருத்துவம் 2 பேரும், பொறியியல் 8 பேரும், வர்த்தகம் 7 பேரும் பல்கலைக்கழக அனுமதி பெற்றனர் இக்கட்டான காலச் சூழலில் இவரது அயராத முயற்சியில் பாடசாலை முன்னெடுத்துச் சென்றது.

போக்குவரத்தின் சிரமத்தின் மத்தியில அபாயச் சூழலில் தளராத உறுதியுடன் கொழும்பு வரை மாணவர்களைக் கொண்டு சென்று பங்கு பெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தவர். அகில இலங்கை ரீதியில் ஒருவர் உயரம் பாய்தலில் முதலிடம் பெற்றார், (1984ல்) குண்டெறிதலில் யாழ் மாவட்டத்தில

1986ல் பெற்றபோதும் அவர்கள் அகில இலங்கை ரீதியில் போட்டியில் பங்கு பெறமுடியாத சூழ்நிலையிருந்தது. 1988ல் பிரிட்டிஷ் சபை நடத்திய ஆங்கில கட்டுரைப் போட்டியில் பாராட்டப்பட்டு பரிசில் பெற்றனர். 1989ல் தமிழ்த்தின பேச்சுப் போட்டியில் வாசுகி சின்னையா முதலாம் இடத்தையும் கனிமொழி என்பவர் 3ம் இடத்தையும் பெற்றார்கள்.

சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்படும் பரீட்சையின் பெறுபேறுகளில் எங்கள் மாணவியான செல்வி. பவானி தங்கப்பதக்கத்தைப் பெற்றார் திருக்குறள் மனனப் போட்டிகளிலும் அதிபர் மாணவர்களைப் பங்குபெறச் செய்தார். மொத்தத்தில் காலம் உகந்ததாக இல்லாதிருந்த போதிலும் இவர் திறமையாலும், ஊக்கத்தினாலும் பாடசாலை தனது நிலையை தளரவிடாது காப்பாற்றிக் கொண்டது.

பொன்விழாக் கால அதிபர்

1990ம் ஆண்டில் திருமதி சுப்பிரமணியத்தைத் தொடர்ந்து உபஅதிபராக பதவியிலிருந்த திருமதி. எல். குமாரசாமி அதிபர் பதவியை ஏற்றார். இவர் 40 ஆண்டுகள் பாடசாலையில் ஆசிரியர் சேவையை ஆற்றியவர், இளமையில் பதவியை ஏற்று பதவியில் இருந்து கொண்டே லண்டன் பட்டதாரியாகிய இவர் பாடசாலைக்காக சேவையாற்றிய காலம் மிக நீண்ட காலம் ஆகும்: சிரித்த முகத்தோடு சிறந்த நிர்வாகத்தை நடத்திவரும் இவர் முன்னைநாள் அதிபர் செல்வி. கே. சரவணமுத்துவின் கொள்கைகளை பின்பற்றி வருபவர். அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு உப அதிபர்கள் பகுதித் தலைவர்கள் மூலம் பாடசாலை நிர்வாகம் சிறப்புற நடைபெற்று வருகிறது. கற்பிக்கும் ஆசிரியர்கள் தொகை 60 ஆகவும் கற்கும் மாணவர்கள் தொகை 1600 ஆகவும் உள்ளது. கொத்தணி அதிபராகவும் கடமை ஏற்றுள்ளார். ஆண்டு தோறும் பாடசாலையில் நடைபெறும் நிகழ்ச்சிகள் முன்கூட்டியே திட்டமிடப்பட்டு பாடசாலை நிர்வாகம் பாதிக்கப்படாது திறமையான முறைகளில் நிகழ்ச்சிகளை நடாத்தி முடிக்கும் ஆற்றல் கொண்டவர், விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, நவராத்திரிவிழா, தமிழ்த்தினவிழா போன்ற நிகழ்ச்சிகள் மிகச்சிறந்த முறையில் மாணவர்கள் பங்குபெறும் வகையில் நடாத்தி முடிக்கப்படுவது மெச்சப்பட வேண்டியுள்ளது ஆகும். " எந்தத் துறையிலும் தேர்ந்திடப் பயிற்சி தந்திடு தர்மம் தனதெனச் சாற்றும் " என்னும் பாடசாலைக் கீதத்தின் தத்துவத்திற்கு இணங்க அவர் செயல்படுவதைக் காணலாம் பலவேறு நிர்வாகத்திற்குரிய உயர் பதவிகளையும் ஏற்று முழுமையாகவும், சிறப்பாகவும் ஆற்றுவதோடு பாடசாலையில் கூடியிருக்கும் மாணவர்கள் தொடக்கம் பாடசாலை ஆசிரியர்கள், ஊழியர்கள் வரையில் அவர்களது பிரச்சனைகள் தேவைகள் என்பவற்றை ஆராய்ந்து அனைவரும் ஏற்று திருப்தி பெறக்கூடிய வகையில் தீர்வுகளை அளித்து மனங்கோணாது அன்னையைப் போல் அரவணைத்து தனது நிர்வாகத்தைச் செம்மையாக ஆற்றி வருகிறார்.

இவர் காலத்தில் சைவபரிபாலன சபையினரால் நடாத்தப்பட்ட பரீட்சையில் செல்வி. கனிமொழி கதிர்காமத்தம்பி என்பவர் தங்கப்பதக்கத்தைப் பெற்றார். 1990ல் 1992ல் சிவன் கோவிலில் சைவ மன்றம் நடாத்திய சைவ அறிவுப் போட்டிப் பரீட்சையில் தயாளினி கந்தசாமி 1ம் இடத்தைப் பெற்று தங்கப் பதககத்தை பெற்றுள்ளார். 1993ல் ஜெயந்தி தர்மரத்தினம் 5ம் ஆண்டு சைவபரிபாலன சபைப் பரீட்சையில் 1ம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார்.

விளையாட்டுத் துறையில் 1992ல் வலைப்பந்தாட்டப் போட்டியில வடமராட்சி முழுவதும் உள்ள பாடசாலைகளில் 15 வயது, 17 வயது, 19 வயது ஆகிய மூன்று குழுககளும் முதல் இடத்தைத் தட்டிக் கொண்டது நாடகத்துறையில் அதிபர் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் அளவில்லாதது. அவர் பரிசளிப்பு விழாவை திறந்த வெளியரங்கில் இரவு வேளை நடாத்தி முடித்தவர். இவ்வாறு நடத்தியபோது 'அறம் உரைத்த தம்பி' என்னும் நாடகம் இரவு நாடகமாக மேடை ஏற்றப்பட்டு பலராலும் சிறந்ததெனப் பாராட்டைப் பெற்றது. அரசியல சூழலிலும் அமைதியான முறையில் பாடசாலை நிர்வாகம் தொடர்ந்து சென்று கொண்டிருக்கிறது.

பல்கலைக் கழக அனுமதியில் 90 — 92ம் ஆண்டுகளில் மருத்துவம் 1, விவசாயம் 2, விஞ்ஞானம் 3, பொறியியல் 5, பௌதீக விஞ்ஞானம் 8, வர்த்தகம் 13, கலை 6 ஆகிய துறைகளில் மாணவர்கள் அனுமதி பெற்றுள்ளனர். எனினும் 1993ம் ஆண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதியில் மருத்துவம், பொறியியல் ஆகிய துறைகளுக்கு அனுமதி பெறத் தக்கதாக மாணவர்கள் புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள் இக்காலவேளையில் வடமராட்சிப் பாடசாலைகளின் வளர்ச்சிப் பாதையில் வடஇந்து மகளிர் கல்லூரியானது ஏனைய பாடசாலைகளை விட முன்னேறிச் செல்வதைக் காணலாம். பரீட்சைத் திணைக்களத்தினால் அண்மையில் நடத்தப்பட்ட ஆய்வில் 1992ம் ஆண்டு உயர்தர வகுப்புப் பெறுபேறுகளைக் கொண்டு எடுக்கப்பட்ட புள்ளி விபரத்தின்படி யாழ்ப்பாண மாவட்டத்தில் வடஇந்து மகளிர் கல்லூரி 3ம் இடத்தைப் பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் இப்பாடசாலையின் கல்வி வளர்ச்சியானது துரிதமாக முன்னேறிச் செல்வதையும் உறுதிப்படுத்துகின்றது. இப் பாடசாலையை முன்னெடுத்துச் சென்ற அதிபர்களது அயராத உழைப்பினாலும் ஆசிரியர்களது சேவையினாலும் பாடசாலை தனது குறுகிய காலத்துள் வளர்ச்சியடைந்ததையிட்டு மக்கள் அனைவரும் மகிழ்ச்சியடைகிறோம். ஐம்பது வருடம் கழிந்து பொன்விழாக் காணும் பாடசாலை தொடர்ந்தும் தனது வெற்றியை நிலைநாட்டிக் கொள்ள இறைவனின் அருளை வேண்டுகின்றோம்.

தொப்பிளாவத்தை ஞானவரவர்

நீண்டு உயர்ந்த அரச மரமும், ஆலமரமும், வேப்பமரமும் தண்ணிழல் பரப்ப பாடசாலை அயலில் சிறு மண்டபத்துள் வீற்றிருக்கும் ஞானவைரவர் பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்காக அருள்பாலித்து வருகிறார் எந்த நிகழ்ச்சி பாடசாலையில் நடைபெறும் போதும் அவர் அனுக்கிரகம் பெற்றே நடைபெறுவது வழக்கம். அவரது அருட்பார்வையும் பாடசாலை வளர்ந்தோங்குவதற்கு பெரும் துணை என்பதனை நாம் மறக்க முடியாது.

பழைய மாணவியும், ஆசிரியையுமான
**திருமதி. மகேஸ்வரி இராசரத்தினம்**
B. A. Dip - in - Ed.

பெற்றோர் தம் பிள்ளைகள் அனைவருக்கும் பாரபட்சம் இன்றி அளிக்கக் கூடிய சொத்து தம் நன்னடத்தையும், கல்வி பெற வசதிகளுமே. பெற்றோர் தம் பிள்ளைகளையும், பெண்களையும் பிறர் கை பாராது உழைத்துப் பாடுபட்டு, நாணயமாய் வாழத் தகுதி பெறுமாறு செய்யப் பார்க்க வேண்டும்,

— மகாத்மா காந்தி —

# பொன்விழாவிற்கு வித்திட்ட சிற்பிகள்

ஆலயங்கள் மாறலாம். காட்சிகள் மாறலாம். கலைக்கோயில்களின் வரலாறு என்றும் நிலையானது. தஞ்சைப் பெருங்கோயில் எங்கே ? அங்கே ராஜராஜ சோழனின் புகழ் மணக்கும். மகாபலிபுரம் சிற்பத்திலூடே பவனி வருகின்றான் பல்லவ நரசிம்மவர்மன். தாஜ்மகாலுக்கு ஒரு சாஜகான். மொனாலிசா ஓவியம் அதன் அடியில் லியனாடோ டாவின்ஸி. அஜந்தாவின் பின்னால் ஒரு வர்ண இரகசியம் அறிந்த கலைஞன். காலத்தால் அழியாத கலைக் கோவில்களின் பின்னணியில் யார் ? அவர்தம் உயர்ச்சி உலகம் அறிய வேண்டும்.

இதோ ! இங்கேயும் ஒரு கல்விக் கோயில். இன்று அது ஒரு கலைக் கோயில். வடமராட்சியில் இந்துப் பாரம்பரியத்தில் நிமிர்ந்து நின்று புகழ் பரப்பும் பெண்கள் கல்லூரி. அதுதான் வட இந்து மகளிர் கல்லூரி நல்லைநகர் நாவலர் சிந்திய மறுமலர்ச்சி உணர்வின் சிறு துளியில் தன்னை நனைத்துக் கொண்டவர் தயாளசீலர் கார்த்திகேசு ஐயா அவர்தம் சீரிய உள்ளத்தே முகிழ்ந்தது பெண்களுக்கெனத் தனியான இந்துக் கல்லூரி என்ற எண்ணப் பதிவு. பொருத்தமாக அமைந்த நல் அதிபர்களின் பெருமுயற்சியால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் மலர்ந்து மணம் வீசி இன்று சைவத் தமிழ் உலகின் மங்காத ஒளி விளக்காக நிலைபெறுகின்றது. தாயவள் கற்பத்தில் கருவைப் படைக்கிறான் இறைவன். அன்னையின் அன்புப் பராமரிப்பில்தான் உருவம் வளர்கிறது. உயர்கிறது. உலகையும் உயர்த்துகிறது. முருகப் பெருமானுக்கு ஆறு கார்த்திகைப் பெண்கள் வாய்த்ததுபோல இங்கேயும் எழுவர். ஏழு அதிபர்களின் கைவண்ணத்தில் வளர்ந்தது. அவர்கள் அன்றும் இன்றும் என்றும் துதி செய்து கல்வி உலகிற்கு இனங்காட்டப்பட வேண்டியவர்கள். பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகப் புகுமுக வகுப்புவரை பாலூட்டிச் சீராட்டி ஈரேழு துறைகளிலும் மாணவர் புகழ் ஓங்கத் தம்மை அர்ப்பணித்த சிற்பிகள்.

> " அங்கொரு கல்லை வாயிற் படிஎன்
> றமைத்தனன் சிற்பி மற்றொன்றை
> ஓங்கிய பெருமைக் கடவுளின் வடிவென்
> றுயர்த்தினான்........ "
>
> [ பாரதியார் ]

கல்லூரி என்ற நினைவுக் கன்னியின் உருவச் சிலை உருமாறாது வர்ணங்கலையாது கருணைமுகம் பொலிவு குன்றாது காக்க வேண்டிய சிற்பிகளாக அதிபர் வரிசையினர் தோன்றிக் கொண்டுதான் இருப்பர்.

மக்களுக்குக் கண்ணென விளங்குவது கல்வி அக்கல்வியும் வாலறிவன் நற்றாள் தொழுதற்கரிய அன்பையும், அறிவையும், தெளிவையும் தருவதாக அமையும் பொழுதே உண்மைக் கல்வியாகிறது. அதில்தான் மனிதம் மேம்பாடடைகிறது. இத்தகைய நோக்கில் கட்டி எழுப்பப்பட்டதுதான் எமது கல்லூரி. இதன் அதிபர்களால் நாளிலும் பொழுதிலும் ஆசிரிய மாணவர் மத்தியில் இக்கருத்து வலியுறுத்தப் பட்டது. மிஷனறிப் பாடசாலைகளின் வளர்ச்சி அன்றிலிருந்து இன்றுவரை அதிபர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருந்தது. 1983ற்குப்பின் தோன்றிய அரசியல் நெருக்கடி ஒரு தடை கல்லாக இருந்தது. பிரான்ஸில் ஒரு புரட்சி அடிமைத் தளையை நீக்கியது போல 1917ல் ரஷ்யப் புரட்சி சோஷலிசத்தைத் தோற்றுவித்ததுபோல எமது அதிபர்களின் சாதுரியம், பெருமுயற்சி, தியாகம் என்பன ஒருங்கே இணைந்து ஒரு சமூகப் புரட்சியைத் தோற்றுவித்தது. கல்லில் கலை வடித்த முயற்சியாக இந்துப் பாரம்பரியம் புத்துணர்வு பெற்றது மாணவ மனங்கள் பண்படுத்தப்பட்டது. திறமை கூராக்கப்பட்டது. வாழ்க்கை அர்த்தமுள்ளதாக்கப்பட்டது. ஆண்டுக் கணக்கில் கல்லூரி ஐம்பது ஆண்டுகளைக் கடக்கவில்லை வென்று விளக்கமுற்று இருக்கிறது. காலம் என்ற களத்தில் இங்கு நிகழ்ந்தது பொன்நிகர் சாதனைகள். அதற்கு நாயகமான அதிபர்களைப் போற்ற எழுந்ததுவே பொன்விழா.

இந்த வரிசையின் அதன் ஆரம்ப கர்த்தாவாக முதல் என்ற பெருமையைத் தட்டிக் கொண்டவர் திருமதி. மீனாட்சி பொன்னுத்துரை அவர்கள். அவரது சேவை ஓராண்டே ஆயினும் 279 மாணவர்க

## முன்னாள் அதிபர்கள்



திருமதி மீ. பொன்னுத்துரை
1945



செல்வி ல. பசுபதிஐயர்
1946



செல்வி யோ. கனகசபை
1947 — 1952



செல்வி க. சரவணமுத்து
1953 — 1966



திருமதி கா. கணேசன்
1967 — 1970



திருமதி பு. கனகசுந்தரம்
1971 — 1983



திருமதி சி. சுப்பிரமணியம்
1984 — 1989

னோடு சைவத்தமிழ்க் கலாச்சாரத்திற்கு வரவேற்புக் கொடுத்த சாதனை அன்னாரதே. 1946ல் இந்தியப் பெண்மணி செல்வி. பசுபதி ஐயர் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது சைவத் தமிழ்ப்பற்று, ஆங்கில அறிவு, தாயன்பு கொண்ட பரிவு, அறவாழ்வு எனபன பாடசாலை முன்னேற்றத்திற்குக் கை கொடுத்தது தந்நாட்டைப் போன்று நேசிக்கும் மனப்பான்மை ஆசிரிய மாணவர்களோடு மட்டுமன்றிப் பெற்றோரு டனும் நல்லுறவை வளர்த்தது. மாணவர் தொகை 369 ஆக அதிகரித்தது. 1946ல் பாடசாலை பதிவு செய்யப்பட்டது. சிறிய கொட்டிலில் 1944ம் ஆண்டு ஆனிமாத அனுஷ நன்நாளில் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலையின் பிரதான மண்டபத்திற்கான அத்தி வாரம் 31-08-1944ல் இடப்பட்டது.

பாடசாலை மட்டத்தில் மாணவ ஒழுங்கு, சைவகலாசாரத்திற்குப் பொருத்தமான சீருடை என்பன பெரிதும் ஒழுங்கு அமைக்கப்பட்டுத் தொடர்ந்த காலத்தில் சமூக மட்டத்தில் ஒரு கணிப்புப் பெற்றது. 1947ல பொறுப்பேற்ற செல்வி. யோ. கனசபை அவர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற அணிகலன்களை ஆயுதமாகக் கொண்டு விளங்கினார். சிரேஸ்ட இடைநிலை வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் தொகை 483ல் இருந்து இரட்டித்து 866 ஆகி ஐந்து ஆண்டுகளில் அதாவது 1952ல் 1375ற்கு உயர்ந்தது. ஆசிரிய, மாணவர் உட்பட மதிப்பும் பயமும் கொண்டு காணப்பட்ட அன்னாரின் ஆளுமையே அக்கால உயர்விற்குக் காரணம். இவரது ஒழுங்குக் கட்டுப்பாடு அயற் கிராமங்களில் பெரிதும் மதிக்கப்பட்டது.

நடக்க முற்படும் குழந்தைக்கு நடைவண்டி கிடைத்தது போல அக்காலப் பாடசாலை முயற்சிக்குக் கைகொடுத்தது செல்வி. க. சரவணமுத்து அவர்களின் வருகை. அன்னாரின் வருகையால் கல்லூரி புதுப்பொலிவு பெற்றது. வடமாநிலக் கல்வித் திணைக்களத்தில் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றிக் கொண்டிருந்த அவர்களின் கவனத்தில் எமது கல்லூரி விழுந்தது நாம செய்த பாக்கியம். 1952ல் அதிபராகப் பொறுப்பேற்ற செல்வி. க. சரவணமுத்து யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். கல்வித்துறைசார் அனுபவம் நிறைந்தவர். இயல்பாகவே துணிவுடன் எடுத்துக்கொண்ட பணியை நிறைவேற்றுவதில் உறுதியும் தன்னம்பிக்கையும் வாய்க்கப் பெற்றவர். அன்னாரது முயற்சி பாடசாலையை ஒரு பொருத்தமான பாதையில் இட்டு விரைவாக வளர்த்துச் செல்வதற்குப் பெரிதும் வழிவகுத்தது. பாடசாலை வாழ்வைத் தன் வாழ்வோடு இணைத்துப் புலோலியைப் பெரிதும் வசிப்பிடமாக்கிக் கொண்டார். 1951ல் அத்திவாரம் இடப்பட்ட விடுதி வசதியும 1953ல் அவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இருந்து பல்துறை ஆசிரியர்களையும் வருவிப்பதற்கு விடுதி ஒரு வாய்ப்பாக இருந்தது. அதிபரோடு அத்தகைய ஆசிரியர்களின் நேரடி நிர்வாகக் கண்காணிப்பில் விடுதி இயங்கியமை மாணவரின் வருகைக்கு உந்து கோலானது. வடமராட்சி முதல் தென்மராட்சி வரையிலான கிராமங்களிலும் பாடசாலையின் புகழ்பரவி மாணவர்க்கு அழைப்பு விடுத்தது. இதில் அதிபர் அவர்களின் சாதுர்யம் பெரும் பங்கு வகித்தது. சமயப் பண்பு மாறாத கல்விச் சிந்தனையாளரான இவரது கண்களில் சமய கலாசாரம் நாற்புறமும் விரிந்து புகழ் பூத்தது. கல்வித் துறைசார் பரீட்சைகள் மட்டுமல்ல வெளி நிறுவனங்களின் பரீட்சைகளுக்கும் மாணவர் முகங் கொடுத்தனர். பெற்றோரின் ஆதரவை இவ்வெற்றிகள் ஈர்த்தது. பண்ணோடு பஜனைக்குழுக்கள் பாடசாலையிலும் அயற்கிராமங்களிலும் இசை எழுப்பின. சங்கீத, நடன, நாடகப் போட்டிகளுக்கு சிகரம் வைத்தது போல "மனோன் மணியம்" என்ற மூன்று மணித்தியால நாடகம் மூன்று நாட்கள் தொடர்ந்து ரிக்கற் கொண்டாட்டமாக நடை பற்றது. இந்தளவிற்கு மாணவர் திறமை எடுத்துக் காட்டப்பட்டது. இவை அனைத்தின் வெளிப்பாடாக 1957ல் இவரது ஐந்து வருட சேவைக் காலத்திலேயே பாடசாலை 1ம தரத்திற்கு உயர்த்தப்பட்டது. இது ஒன்றே பொன்விழா விற்கு வித்திட்ட வரலாற்றுப் பெருமையில் அன்னாரின் புகழ் பாடப் போதுமானது. பௌதிகவியல் பாடத் துறையாகக் கொண்ட அன்னாரது கற்பித்தலில் க. பொ. த. சாதாரணத்துறை உயர்ந்த பெறுபேறுகளைத் பெற்றது. க. பொ. த. உயர்தர கலைத் துறை சிறந்ததோடு விஞ்ஞானத்துறையும் முளை கொண்டது. க. பொ. த. உயர்தர மன்றம் இராப் போசன விருந்து கொண்டாடும் அளவிற்கு மாணவர் முன்னேறினர். நவநாகரிக உலகில் நாமும் நல்லது கெட்டது தெரிந்தவர்களாக வாழ இது பெரிதும் உதவியது. குறிப்பாக இவரது காலத்தில் சமத்துவம் சகோதரத்துவம் என்ற சோஷலிசக் கருத்துக்கள் புகுத்தப்பட்டதன் காரணமாக ஒரு விரிந்த மனப்பான்மை வளரலாயிற்று. அதிபரவர்களின் தாயன்பு பிழைகாணுமிடத்தில் கண்டித்துத் திருத்தும் அன்னியோன்னியம் பெற்றோருடனான நல்லுறவு இவற்றால் பாடசாலை வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தைத் தட்டிக் கொண்டவர். இடைக்காலத்தில் வேறு பல பாடசாலைக்கு மாற்றலாகிச் சென்றபோதும் கல்லூரி மேல் அவர் கொண்டிருந்த அளவிலாத காதலே மீண்டும் எமது பாடசாலையை நாடவைத்தது. சுருங்கக்கூறின் வட இந்து மகளிர் கல்லூரி என்ற நினைவுக் கன்னியின அங்க லாவண்யம், முகவசீகரம், பெண்மைக்கு ஏற்றம் கொடுக்கும் தோற்றம் பொலிவு இவையெல்லாம் செல்வி. சரவணமுத்துவின் கைவண்ணமே என்றால் அதனை மறுப்பதற்கில்லை.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு"

என்ற வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க வாழ்ந்த அன்னாரின் ஆத்ம சாந்திக்கு இறைவனை இறைஞ்சுவோமாக.

1967 முதல் 1969 வரை காயத்திரி கணேசன் அதிபராகப் பொறுப்பேற்றார். இடைக்காலத்தில் ஏற்பட்ட நிர்வாகக் கைமாற்றல் காரணமாகப் பெரும் தளர்வு கண்டிருந்தது. அன்னாரின் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் பெற்ற அனுபவங்கள் என்ற வடிகாலில் அத்தளர்வு ஓரளவு நீக்கப்பட்டது. சைவ மரபு குன்றாத இவரது வழிகாட்டலில் மாணவர் சிறப்புற்றனர். நடராஜர் சிலை பிரதான மண்டபத்தில் ஸ்தாபிக்கப்பட்டமை நல்லதோர் சகுனமாயிற்று. நவராத்திரி போன்ற சமய விழாக் காலத்தில மாணவரிடையே சரம் தொடுத்தல், மாலை கட்டல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகள் நிகழ்த்திப் பாராட்டு வழங்கி மாணவரை உற்சாகப்படுத்தும் வழக்கம் ஏற்பட்டது. இக்கால சம்பந்தமான போட்டிகள் முதன்முதல் இவரது காலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது எமது பாடசாலையில் அழகான தோற்றமும் மிடுக்கான நடையும் கொண்ட இவரது சேவைக்காலம் பலநற் கருமங்கள் நிறைவெய்த வாய்ப்புக் கொடுத்தது

1971ல் திருமதி. பூபதி கனகசுந்தரம் அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். இடைவிட்டுப் பொறுப்பேற்ற செல்வி. சரவணமுத்து 1970 ல் ஓய்வு பெறத் திருமதி. பூபதி கனகசுந்தரம் அவர்கள் பாடசாலை நிர்வாகத்தைக் கையேற்றார். 1953ல் இருந்து ஆசிரியராக இதே கல்லூரியில் இருந்த காரணத்தால் கல்லூரியின் நெளிவு சுழிவுகளுக்கு நன்கு பழக்கப்பட்டிருந்தார். அவற்றிற்கேற்ப தன்னை இசைவு படுத்தித் தனது சேவையில் வெற்றியும் கண்டார். 1971 1976 வரை திறமையான வலைபந்தாட்டக்குழு நிரந்தரமாகப் பாடசாலைக்கு புகழ்ஈட்டிக் கொடுத்தது. நாடகப் போட்டி யாழ். மாவட்டம் மட்டுமன்றி அநுராதபுரம், கொழும்பு ஆகிய இடங்களில்கூடப் போட்டியிட்டு முதலிடம் பெற்றது. இத்துடன் ஏனைய துறைகளிலும் அகில இலங்கை மட்டத்தில் பெற்ற இவர் காலவெற்றிகள் பாடசாலையின் புகழை வடகோடியில் இருந்து தென்கோடிவரை பரப்பி நின்றது. செல்வி. சரவணமுத்துவின் வழிகாட்டலில் துணிவும், திறமையும் பெற்று வளர்ந்த மாணவிகள் இக் காலத்தில் பலதரப்பட்ட போட்டிகளுக்கு முகம்கொடுத்து வெற்றி பெறும் வாய்ப்பினைப் பெற்றமை புதுமையன்று. 1979ல் அகில இலங்கை நாட்டிய நாடகப் போட்டியில் " ஏகலைவன் " நாடகம் முதலிடம் பெற்றது. 'பக்த பிரகலாதன்' சிறந்த பாராட்டைப் பெற்றது. தமிழ்த்தின விழாவில் கர்ணன் முதலிடம் பெற்றது ஆங்கில நாடகங்களிலும் சில பரிசில்களைத் தட்டிக் கொண்டனர். இவரது காலத்தில் க. பொ. த. உயர் தரம் கலைப்பிரிவில் கணிசமான மாணவர் பல்கலைக் கழக அனுமதி பெற்றனர். 1979ல் 22 மாணவர் கலைப்பிரிவிலும் எழுவர் விஞ்ஞானப் பிரிவிலும் அனுமதி பெற்றமை குறிப்பிடத்தக்கது இவ்வாறு சகல விதத்திலும் கல்லூரியின் தலை நிமிர்விற்குக் காரணமான பெருந்தகை திருமதி. கனகசுந்தரம் என்றும் போற்றப்பட வேண்டியவர் அன்னாரது வாழ்வு வளம்பெற்று நீடுழிவாழ இறைவனை வேண்டுகின்றோம்.

1983ல் அதிபராகப் பொறுப்பேற்ற திருமதி. சுப்பிரமணியம் அவர்கள் நிர்வாகத் திறமையும் செயல் ஊக்கமும் உற்றவர். ஆசிரியராக இருந்து அதிபரான தன்மையினால் காலம் செய்த கோலத்தால் நேர்ந்த பலவிதமான இடையூறுகளையும் சமாளித்துப் பாடசாலையின் ஸ்திரத்தைக் காப்பாற்றினார், கல்வி முயற்சிகளும் 1983ற்குப் பிற்பகுதியில அரசியல் சூழ்நிலை காரணமாகப் பெரிதும் குழம்பிக் கிடந்தது. இது யாழ். மாவட்டத்தின் சகல பாடசாலைகளுக்கும் பொதுவாயினும் வடமராட்சிக்குச் சிறப்பான நெருக்கடியாக இருந்தது. எனினும் 1983ல் கலைத்துறைக்கு 20 மாணவர்களும் 1987ல் விஞ்ஞானத்துறைக்கு 11 மாணவர்களும் பல்கலைக் கழக அனுமதி பெற்றனர். வர்த்தகப் பிரிவு இவரது அரிய முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டது. மாவட்ட மட்டத்தில் தனிப்பட்ட போட்டிகளில் பெற்ற முதலிடங்களைத் தொடர்ந்து அகிலஇலங்கைப் போட்டிகளிலும் முகங்கொடுக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது எனினும் அகில இலங்கைப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு காலச் சூழ்நிலை பொருந்தவில்லை. 1987ல் சைவ சமய பாடப் பரீட்சையில் தங்கப்பதக்கம் எமது மாணவிக்குக் கிடைத்தது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியிலும் முதலிடம் கிடைத்தது. விளையாட்டுத் துறையிலும் வலைப்பந்தாட்டக்குழு கணிசமான வெற்றி கண்டது. இவ்வாறு அதிபர் அவர்களால் மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உற்சாகம் மிகவும் வரவேற்கத்தக்கது. தொடர்ந்து அதிபர் அவர்களின் பெரும் முயற்சிக்குச் சவாலாக அமைந்தது மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையை எமது பாடசாலை வளவில் இயங்கத் தொடங்கியது ஆகும். வளங்கள் பெரிதும் சுருங்கியதோடு விளையாட்டு மைதானமே இல்லையென்றாகியது எந்நேரமும் பயப்பிராந்தி யாவர் மனதிலும் குடிகொண்ட அவ்வேளையில் கல்வி வளர்ச்சியும் சீர்குலையல் ஆயிற்று இந்நிலையிலும் பாடசாலையின் நற்பெயரை நிலைகுலையவிடாது காத்த பெருமை திருமதி. சுப்பிரமணியம் அவர்களையே சாரும். அன்னார் நீடூழி வாழ்ந்து சகல வளங்களையும் பெற்று வாழ இறைவனை வணங்குவோமாக.

தொடர்ந்து 1990ம் ஆண்டில் திருமதி. லோ. குமாரசாமி தற்போதைய அதிபர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். நாட்டு நிலைமையும் சகல விதத்திலும் மக்களுக்குப் பழக்கப்பட்டதொன்றாக மாறிவரும் காலம். எழுமையும் ஏமாப்புடைய கல்வியை எக்காரணம் கொண்டும் தளர விடாது பயன் படுத்த வேண்டும் என்ற உறுதி பெற்றோரிடையேயும், மாணவரிடையேயும் வெகுவாகப் பரவியது. இவற்றால் பாடசாலையின் கல்விசார் தொழிற்பாடு

கள் உட்பட ஏனைய துறைகளும் முன்னேறத் தொடங்கியது கிடைக்கத்தக்க உச்ச வளங்களைப் பயன்படுத்துவதில் கல்வித் திணைக்களமும் பெரும் அக்கறை காட்டியது. எமது பாடசாலை கொத்தணிப் பாடசாலையாக அமையாது போனாலும் எமது அதிபர் கொத்தணி அதிபர் என்ற பதவியையும் வகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. புலோலி கொத்தணி அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில் எமது பாடசாலை முன்னேற்றத்தோடு கொத்தணியில் இணைந்த சகல பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கும் ஆவன செய்தார். அதே சமயம் கொத்தணி அதிபராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டதால் பல நற்கருமங்களைப் பாடசாலை சார்பில் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. இவருடைய காலத்தில் நூல்நிலையம் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பயன்படும்வண்ணம் திருமணறத்திற்கு 13-05-94ல் மாற்றப்பட்டது. 23-02-92ல் முன்னாள் அதிபர் செல்வி. சரவணமுத்துவின் நினைவஞ்சலியன்று பழைய மாணவர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இன்றுவரை சிறப்பாகக் கருமமாற்றுகிறது. நுண்கலைத்துறையில் இளமைக் காலத்தில் இருந்து இயற்கையாகவே கொண்டிருந்த ஆர்வமும், திறமையும் ஆசிரிய மாணவ ஆக்கங்களுக்குப் பெருந்துணை புரிந்தது. அது பாடசாலை முன்னேற்றத்திற்கும் இன்றைய இணைப் பாடவிதான செயற்பாடுகளுக்கும் கைகொடுக்கின்றது என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியம் இல்லை. ஆங்கிலத்திலும் தமிழிலும் இயல், இசை, நாடகத்துறைகளில் திகழ்ந்த போட்டிகளில் மாணவர் செயற்பாடுகள் பற்றிய அறிக்கைகள் இவற்றை வெளிப்படுத்தும் வகையில் இதில் இணைக்கப்பட்டுள்ளன. தனது இனிய நடத்தையினால் பெரியவர்களையும், சிறியவர்களையும் வசீகரிக்கும் பண்புடையவர் அவரது தயவில் ஆசிரியர்களும், மாணவர்களும் பானுவின் கதிரால் இடருறும் காலம் படர்தரு நிழல் என்பதாக ஆதரவு செய்யப்பட்டார்கள்

இவ்வாறு கடந்த காலங்களில் பாடசாலை வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஏழு அதிபர்களும் ஏழு சுரங்களாக மிளிர்ந்தனர், ஏழு சுரங்களின் ஒலியில் இருந்து நாதம் பிறந்தது கீதம் மலர்ந்தது. வடஇந்து மங்கையர் கல்லூரி வாழிய வாழி நீடூழி என்ற வாழ்த்தலை நிறைகிறது இன்று தமிழர் வாழும் பிரதேசம் எங்கணும் பரந்து செறிந்து வாழும் எமது பழைய மாணவர்களும், ஆசிரியர்களும் தத்தம் கால அதிபர்களின் புகழை வாயாரச் சொல்லி வாழ்த்தி மகிழ்கின்றனர். பொன்விழாவிற்கு வித்திட்ட அனைத்து அதிபர்களோடு இன்றைய அதிபரையும் உடன் சேர்த்துக் கண்முன்னிறுத்தி நன்றி தெரிவிப்பதில் நாம் பெருமை அடைகிறோம்.

**செல்வி. அன்னபாக்கியம் கனகரத்தினம்**
B. A. Dip-in-Ed.

*எந்தநாளும் அதைரியப்படாமல் இருப்பவனே, பெருமை அடைந்து நித்தியானந்தத்தை அடைகிறான்.*

- கிருஸ்ண பகவான்

# அதிபர் அறிக்கை

வடமராட்சியில் இந்துப் பெண்களின் கல்வி யூட்டற் களமாகக் கால் கொண்டதே எமது வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி. கல்வி, செல்வம், பொது நோக்கு, முற்போக்கு என்பன ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஆன்றோர் பலரின் ஒருங்கிணைப்பில் பண்பு நலம் கனிந்த பாரதியின் புதுமைப் பெண்களைப் படைக்க வேண்டும் என்ற சிந்தனையின் முகிழ்ப்பே இக் கல்லூரியின் தோற்றம். புதிய உத்வேகத்துடன் நிர்மாணிக்கப்பட்ட கல்லூரி அன்று தொட்டுத் தொப்பிழா வத்தை வைரவ சுவாமியின் அருட்கடை நோக்கில் வடமராட்சிப் பெண்களின் பண்பாட்டுப் பாரம்பரியத்தை மிளிரவைக்கும் பணியில் அடியொற்றிச் சென்று தன் பாதையில் வெற்றிநடையிட்டு இன்று பொன்விழாக் காணுகிறது. எம் அன்னையாம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழாக் காணும் அதிபர் என்ற வகையில் பொன்விழா அறிக்கை சமர்ப்பிப்பதில் பெருமகிழ்வு எய்துகிறேன்.

## முன்னுரை

வடமராட்சி இந்துப் பெண் குலத்தின் கல்வி வாழ்வில் பொன்னேடுகள் புரளத் தொடங்கிய நாள், 1944ம் ஆண்டு ஆனி மாத அனுஷ நன்னாள். எமது கல்லூரியின் கால்கோள் நாள், 46 மாணவிகளுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் இந்துப்பெண் கல்விமுறை வடமராட்சி மண்ணில் நியம வடிவம் பெற்றது.

எம் கல்லூரி 1951ம் ஆண்டிலேயே கல்வித்தரம் ஆசிரிய மாணவ தொகை என்பவற்றில் உயர் நிலையில் இருந்தது, துரித வளர்ச்சி கண்ட முதலாம் தசாப்தத்தின் பின்னர் ஏற்பட்ட நிர்வாக மாற்றத்தினால் வளர்ச்சி நிலையில் தவிர்க்க முடியாத தளர்வு ஏற்பட்டது. ஆயினும் தொடர்ந்த ஆக்க பூர்வ நடவடிக்கைகளினால் கல்லூரி சீர்நிலையடையத் தொடங்கி இன்று பொன்விழாக் காணுகிறது. இப் பெருமைக்குரியோர் கொடை வள்ளல்களும், கால்கோட் தளகர்த்தாக்களும், கல்வித்தொலை நோக்குநருமே, இவ்வகையில் திருவாளர் கார்த்திகேசு, வைத்திய கலாநிதி சபாபதி, திருவாளர் சரவணமுத்து, திருவாளர் பொன்னையா என்போர் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அன்னாரின் பணிகள் எம் கல்லூரி வரலாற்றில் பொன்னெழுத்துகளாற் பொறிக்கப்பட வேண்டியவை. அவர்களை நாம் என்றும் நன்றிப்புலத்தில் நினைவு கூருவோம்.

இந்து மகளிர் கலைக் கோயில் சிற்பிகளென உழைத்த அதிபர், ஆசிரியர் ஆகியோரின் சேவைகளும் எம் கல்லூரியின் துரித வளர்ச்சிக்கு உரமாயின. நல் வழிகாட்டிகளாகவும் முன் மாதிரி அதிபர்களாகவும் அமைந்த அதிபர்கள், இக்கல்லூரியிற் சேவையாற்றினாராயினும் முன்னாள் அதிபர் செல்வி. க. சரவணமுத்து அவர்கள் இக் கல்லூரி வளர்ச்சியின் முதுகெலும்பாக அமைந்தாரெனின் அது மிகையல்ல. ஆசிரியர்களை அரும்பணியில் இயக்கி மாணவர்களை மணி என ஒளி வீசச் செய்த பெருமை செல்வி க. சரவணமுத்து அதிபர் அவர்களையே சாரும். இன்றும் அவரது உயிர்மூச்சு ஆசிரிய, மாணவரின் மூச்சோடு மூச்சாக கலந்து பொன்விழாக் கல்லூரி வளாகத்திற்குப் புதுப்பொலிவினை அளிக்கிறது.

இன்றைய அரசியல் நிலையின் பன்முகப்பட்ட சிக்கல்களுள்ளும் எமது ஆசிரியர்களும் மாணவர்களும் கல்வித் தடத்தினின்றும் விலகாது தியாக உணர்வுடனும் கடமை நினைவுடனும் செயற்பட்டு இணைப்பாடவிதான நெறிகளிலும் முன்னேறிச் சாதனைகள் பல புரிந்து வருகின்றனர்.

## மாணவர், ஆசிரியர்

இங்கு 5ம் ஆண்டுவரை ஆண், பெண் இருபாலாரும் கல்வி பெறுகின்றனர். இவ்வாண்டில் 1 — 5 வரையிலான வகுப்புக்களில் 529 மாணவரும், 6—11ம் ஆண்டு வரையில் 762 பேரும், ஆண்டு 12 - 13 வரையிலுள்ள வகுப்புக்களில் 139 பேரும் கல்வி கற்கின்றனர் 25 பட்டதாரி ஆசிரியர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் 19 பேரும் பயிலுனர் 06 பேரும் கல்வி வளர்ச்சிக் கழகத்தால் நியமிக்கப்பட்ட இருவருமாக மொத்தம் 52 பேர் எம் கலைக்கோயிற் சிற்பிகளாகவுளர்.

## எமது பரீட்சைப் பெறுபேறுகளின் விபரம்

| ஆண்டு 5 பரீட்சை | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியோர் | 07 | 18 | 17 | 13 | 16 |

க. பொ. த. ( சாதாரணம் ) சித்தியடைந்த விகிதம் ( % )

| பாடம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 76·36 | 76·22 | 65 28 | 88 05 | 85.84 |
| றோ. கத்தோலிக்கம் | 85·71 | 71·42 | 100 | 100 | 76.92 |
| மொழியும் இலக்கியமும் | 84·00 | 77·51 | 65·32 | 76 42 | 80·46 |
| ஆங்கிலமொழி | 55·50 | 43·41 | 33 60 | 30·00 | 25·00 |
| விஞ்ஞானம் | 44.57 | 37·98 | 30 40 | ·57 | 25 39 |
| கணிதம் | 57·14 | 39·53 | 20·80 | 30·71 | 33·59 |
| வரலாறும் சமூகக்கல்வியும் | 62·28 | 48·83 | 33 60 | 45·00 | 51.58 |
| சித்திரம் | 23·33 | 61·11 | 42 30 | 35·55 | 30·43 |
| சங்கீதம் | 15·00 | 19·48 | 20·00 | 18·84 | முடிவுகள் வெளிவர இல்லை |
| நடனம் | 46.42 | 39·13 | 46·15 | 23·52 | |
| மனையியல் | 79·78 | 35·93 | 28 98 | 60·34 | 35 82 |
| வர்த்தகம் | 91.13 | 67·79 | 76.36 | 87·67 | 87 27 |
| தட்டச்சு | — | — | — | — | 100 |

க. பொ. த. (உயர்தரம்) சித்தியடைந்த விகிதம் (%)

| பாடம் | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| தூயகணிதம் | 43·75 | 52·94 | 45·45 | 66·66 | 50·00 |
| பிரயோக கணிதம் | 68·75 | 64·70 | 90.90 | 83·33 | 62·50 |
| தாவரவியல் | 93.75 | 86.66 | 81·81 | 100 | 94·11 |
| விலங்கியல் | 93.75 | 66·66 | 86.36 | 75·00 | 88·88 |
| பௌதிகவியல் | 70·96 | 71·87 | 40·62 | 68·00 | 68·00 |
| இரசாயனவியல் | 59·37 | 62·50 | 81·25 | 76·92 | 60·00 |
| கணக்கியல் | 88·23 | 87.03 | 86·53 | 86·84 | 96 15 |
| வர்த்தகம் | 76·92 | 93·10 | 71·18 | 88·09 | 57·14 |
| பொருளியல் | 75.36 | 86 41 | 73 75 | 80 32 | 66·66 |
| இந்துநாகரிகம் | 100 | 92·59 | 97 87 | 97 61 | 100 |
| புவியியல் | — | 100 | 100 | 100 | 00 |
| தமிழ் | 94·44 | 90.90 | 83·33 | 77 27 | 92·85 |
| அளவையியல் | 77 14 | 92.68 | 95.83 | 70.38 | 88.88 |
| இந்து சமயம் | — | — | 40 | 100 | 100 |
| மனைப்பொருளியல் | — | 100 | 60 | — | 50 |
| அரசியல் | — | — | 66·66 | 87·50 | — |

அதி சிறந்த பெறுபேறுகள்

| துறை | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 |
|---|---|---|---|---|---|
| விஞ்ஞானம் | 1B 2C 1S | 2A 1B 1C | 1A 1B 2C | 1A 3B | 3A 1B |
| வர்த்தகம் | 1A 2B 1C | 4A | 1A 2B 1C | 2A 2B | 1A 1B 2C |
| கலை | 1A 1B 2S | 1A 3B | 1B 3C | 1A 3B | 1A 3B |

1992ம் ஆண்டில் நடைபெற்ற ஜீ. சீ. ஈ. உயர்தரப்பரீட்சையில் பாடசாலைப் பெறுபேறு மதிப்பெண் அடிப்படையில், இலங்கையில் உள்ள 30 பாடசாலைகள் அதி திறமையை காட்டியுள்ளன. அவற்றுள் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 9 பாடசாலைகளில் எமது கல்லூரி நான்காம் இடத்தைப் பெற்றிருப்பதைக் குறிப்பிடுவதில் நான் பெருமையடைகிறேன். இந்நிகழ்வு கல்லூரிக்கு மேலும் எழுச்சியைக் கொடுக்கும் ஒரு வாய்ப்பாகும்.

## கட்டிட தளபாட வசதிகள்

மாணவர்க்கான ஆரோக்கிய கல்வியூட்டலுக்குப் பொருத்தமான வகையில் அமையாதனவாகக் கட்டட தளபாட வசதிகள் காணப்படுகின்றன. வகுப்பறைகள் நெருக்கமானவையாகவும், தொகையளவாற் குறைந்த சிதைந்த தளபாடங்களுடனும் விசாலமான மண்டபம் அற்ற நிலையிலும் இருத்தல் இக் கல்லூரியின் வளர்ச்சியின் முக்கிய முட்டுக்கட்டைகள். கல்வித் திணைக்களத்தினரின் கவனத்திற்கு முற்குறித்தவை உட்பட வேண்டும் என்பது எனது வேணவா.

## நிர்வாகம்

எமது கல்லூரி நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்ட அதிகார அமைப்பின் கீழ் சிறந்த முறையில் இயங்குகிறது, நிர்வாக நடைமுறைப்படுத்தலுக்கென 5 பகுதித் தலைவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களின் ஆரோக்கியமான கண்காணிப்பின் கீழ்க் கற்பித்தற் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. அதே வேளை தகுதி வாய்ந்த ஆசிரியர்களிடம் ஏனைய செயற்பாடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவர்கள் எல்லோரதும் கடமைகளையும் செயற்பாடுகளையும் கவனிப்பதற்காக இக் கல்லூரியின் பிரதம பகுதிக்கு ஒரு மேலதிக பிரதி அதிபரும் சிரேஸ்ட பகுதிக்கு அதிபருடன் ஒரு பிரதி அதிபரும் உளர். மாணவரின் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு என்பவற்றை நிலைநிறுத்துவதற்கு ஆசிரியர்களாலான ஒழுக்காற்றுச் சபையும் மாணவர் முதல்வர் குழுவும் உள.

## மொழி வளர்ச்சி

மாணவரின் மொழியாற்றலையும் கலைபாற்றலையும் வளர்க்கும் நோக்கில் தமிழ் மன்றம் இயங்கி வருகிறது. மாதந்தோறும் முதற் புதன்கிழமையில் இம் மன்றம் கூடும். மேலும் தமிழ்த்தினப் போட்டிகள், சதாவதானி கதிரவேற்பிள்ளை நிலையம் நடாத்தும் போட்டிகள், விநாயகர் தருமநிதியம். நெல்லண்டை சனசமூக நிலையம், சிவன்கோவில் ஞானசம்பந்தா கலைமன்றம் என்பன நடாத்தும் போட்டிகள் என்பவற்றில் எமது மாணவரும் பங்கேற்றுப் பலபரிசுகள் பெற்றுளர். தமிழ்த்தினப் போட்டிகளில் கோட்டநிலை மாவட்ட நிலைகளில் எமது மாணவியர் முன்னணியில் நிற்பதும் யாவரும் அறிந்ததே. பாடசாலை மட்டத்தில நடைபெறும் இலக்கியதினம், தமிழ்த்தினவிழா என்பவற்றில் அதி உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும பங்கேற்று மாணவர் தம் திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.

தமிழ்மொழியில் மட்டுமன்றி உலகப்பொதுமொழியாம் ஆங்கில மொழியிலும் எமது மாணவர்தம் திறமை நடைமுறையில் தனியார்வம் காட்டுகின்றனர். ஆங்கிலதினப் போட்டிகளில் பங்கெடுத்துப் பல பரிசில்கள் பெற்றுளர் ஆங்கில நாடகப் போட்டிகளிலும் உற்சாகத்துடன் பங்கேற்கின்றனர் ஆங்கில தினவிழாவை மாணவர்கள் அதியார்வத்துடனும் மகிழ்வுடனும் கொண்டாடுகின்றனர்

## சமய வளர்ச்சி

பெண் கல்வியுடன் சைவ பாரம்பரியத்தைக் கட்டிக் காக்கவென அமைக்கப்பட்ட இக்கல்லூரியின் சமயநிகழ்ச்சிகள் பலவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. வெள்ளி தோறும் மாணவர் வகுப்பு முறை ஒழுங்கில் ஆராதனை நடத்துகின்றனர். தைப்பொங்கல் சிவராத்திரி, நவராத்திரி, என்பன அபிஷேக ஆராதனையுடன் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. அரசியல் நிலை சீராயிருந்த காலங்களில் சிவராத்திரி தினத்தன்று இரவு நான்கு யாமப் பூசைகளும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றமை உளங்கொள்ளத்தக்கது. அக்கால கட்டத்தில் குருபூசைகளும் ஒழுங்காக நடந்தேறின. நவராத்திரிவிழா பல்வேறு போட்டிகள் பரிசு வழங்கலுடன் சிறக்கிறது. மேலும் சைவ பரிபாலன சபை இந்து மன்றம் (வடமராட்சி) என்பவை நடாத்தும் பரீட்சைகளில் எமது மாணவர் தங்கப்பதக்கங்கள் பெறுவதும் சமய வளர்ச்சியினைப் படம் போட்டுக் காட்டும் வருடா வருட நிகழ்வுகளே.

## விஞ்ஞான வளர்ச்சி

எமது பாடசாலையில் துறைபோய விஞ்ஞான ஆசிரியைகளின் வழிகாட்டலில் விஞ்ஞானம் வளர்ச்சியடைகிறது. பிரதிமாதமும் 2 வது புதன்கிழமைகளில் விஞ்ஞானமன்று கூடும். வினாடிவினாப் போட்டிகள். பொது அறிவுப் போட்டிகள் என்பன இம்மன்றினால் நடாத்தப்படுகின்றன. மாணவர்க்குப் பரிசில்களை ஆசிரியர்களே வழங்குகின்றனர். பாடசாலைக்குப் புறம்பேயுள்ள கழகங்களாலும் வினாடிவினாப் போட்டிகள் நடாத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் கலந்து கொண்ட எமது மாணவர்கள் மாவட்டநிலைகளிலும் பங்குபற்றி வெற்றிக் கேடயங்கள் பெற்றுளர். இக்காலச் சூழலில் பழமைபோல் விஞ்ஞானகூடம் இயங்க முடியாதிருப்பினும் அண்மையில் எம் கல்விக் கோட்டம் வழங்கிய உபகரணங்களின் துணையுடன் இயன்றளவு திறமையாக விஞ்ஞான செய்முறை விளக்கங்கள் மாணவர்க்கு அளிக்கப்பட்டு விஞ்ஞான பாடம் பூரணத்துவமான முறையிற் கற்பிக்கப்படுகிறது.

## வணிகம்

க.பொ.த (உ.த.) வரை வணிகவியல் கற்பிக்கப்பட்டு இத்துறைக்குப் பல மாணவர்கள் பல்கலைக்கழக நுழைவினையும் பெறுகின்றனர். பிரதி மாதம் 3வது புதன்கிழமைகளில் இம்மன்று கூடி மாணவர் திறன் வளர்க்கும் பணியில் ஈடுபடுகிறது. இது வரையில் வணிகவள நிலையம் இக்கல்லூரியில் இயங்கியமை குறிப்பிடத்தக்கது.

## மனையியற்கல்வி

க. பொ. த. (உ. த.) வரை மனைப்பொருளியற் பாடம் கற்பிக்கப்படுகின்றது. வாழ்க்கைத்திறன், மனைப் பொருளியல இரண்டும் சகல வசதிகளும் கொண்ட மனையியற் கூடத்திலும் வாழ்க்கைத்திறன் கூடத்திலும் நடைபெறுகின்றன. மனையியல் மன்றும், வணிகமன்றும கூடும் நாட்களில், மனையியற் கூடத்தில் கூடும். மனையியற் கண்காட்சிகளும் இங்கு இடம்பெறுவதுண்டு.

## தட்டச்சு

தட்டச்சுக்கல்வி ஆண்டு 9 — 11 வரையிலான மாணவர்க்கு வழங்கப்படுகிறது இதற்காக இங்கு ஓர் ஆசிரியை இருப்பினும் அவருக்கு வேறும் பல பணிகள் இருப்பதினால் வேலை நெருக்கடியை உணரவேண்டியுள்ளது. இன்னும் ஓர் ஆசிரியை இப்பணிக்கு அமர்த்தப்படின் நன்று

## கவின்கலைகள்

எமது கல்லூரிக்குக் கவின்கலை வளர்ச்சியில் நீண்டகாலப் பதிவுண்டு. எமது மாணவியர் தமிழ்த்தினப் போட்டிகளிலும் ஏனைய போட்டிகளிலும் பண்ணிசை, வில்லிசை, நடனம் என்பவற்றில் பங்குகொண்டு மாவட்ட நிலைகளிலும முன்னுக்கு வந்துளர். சங்கீதத்திற்கு நிரந்தர ஆசிரியை இருந்த போதும் ஏனைய இருதுறைகட்கும் நிரந்தர ஆசிரியை வேண்டப்படுகின்றனர்.

## சாரணீயம்

யாழ் மாவட்டத்தில் சாரணீய அங்கத்துவம் பெற்ற 26வது பாடசாலையாக எமது கல்லூரி உளது. இங்கு 72 சாரணியரும் 30 சிறுதோழியரும் 6 வழிகாட்டுனருடன் இயங்குகின்றனர் எமது கல்லூரியின் சாரணியப் பொறுப்பாசிரியர், மாவட்ட அதிகாரி பதவியைப் பெற்றிருப்பது கல்லூரியைச் சார்ந்த அனைவருக்கும் பெருமையையும் மகிழ்ச்சியையும் கொடுக்கிறது பேடன்பவல் நினைவுதினம், பாசறைகள், கூட்டங்கள் என்பவற்றை இவாகள் நடத்துகின்றனர். போர்க்காலச் சூழல்ல் எமது சாரணியா அகதிகட்கு உலர்உணவு, உடை சேகரிப்பு, சிரமதானம் என்பவற்றில் ஈடுபடுவர். சாரணரின் மாவட்ட உதவி ஆணையாளர் திருமதி அருட்பிரகாசத்தின் வழிநடத்தலிலும் மாவட்டச் செயலாளர் செல்வி சி. அருணந்தியின் உற்சாகமூட்டலுடனும் எமது கல்லூரிப் பொறுப்பாளர் செல்வி ஞா. திருநாவுக்கரசின் கீழ் எமது மாணவர் சாரணியத்தில் காட்டிவரும் உற்சாகம் பாராட்டற்குரியது

## விளையாட்டுத்துறை

வருடா வருடம் இல்லங்கட்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவதுண்டு. ஆண்டு 1—5 வரையிலான மாணவர்க்கு ஒன்றும், 6ஆம் ஆண்டில் மேற்பட்டோருக்கு ஒன்றும் என வருடத்தில் இரு விளையாட்டுப் போட்டிகளை எம் கல்லூரி அன்னை கண்டு மகிழ்வாள். அகில இலங்கை ரீதிவரையில விளையாட்டு வீராங்கனைகளை உருவாக்கிய எமது கல்லூரி இன்று உடற்பயிற்சிக்கென நிரந்தர ஆசிரியர் இல்லாத நிலையிலிருப்பது வருந்தற்குரித்து. இருந்த போதும் எமது ஆசிரியர் ஒருவரின் நெறிப்படுத்தலின் கீழ் விளையாட்டுத்துறையிற் பயிற்சி பெற்ற எம் கல்லூரிப் பழைய மாணவியொருவரின் துணையுடன் உடற்பயிற்சிப் போட்டிகளில் கோட்ட மாவட்ட நிலைகளில் எம் கல்லூரியின் முக்குழுக்களும் வெற்றி பெறுவது பெருமைப்பட வேண்டியதொன்று. தற்போது உடற்பயிற்சி உதவியாளராகக் கடமை புரியும் செல்வி ப. கணபதிப்பிள்ளையை நிரந்தர ஆசிரியராக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

## நூல் நிலையம்

இவ்வாண்டில் இடம் மாற்றப்பட்டு ஓரளவு நவினமயம்படுத்தப்பட்டுள்ள எமது நூல்நிலையம் மாணவரின் வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்து அவர்களின் மொழித்திறன் வளர்ச்சியில் ஊக்கமளித்து வருகிறது. இந்நோக்கிற் செயற்பட்ட நலன் விரும்பிகள் சிலரின் நூல், கலைப் பொருட்கள் அன்பளிப்புர், ஆசிரியர் மாணவரின் நூல் அன்பளிப்புக்களும் பயனுடையதாகின்றன. எனினும நிரந்தர நூலகர் ஒருவர் இல்லாமை பெரும் குறைபாடே. இக் குறைபாட்டைப் பாரிய அளவில் நிவர்த்தி செய்து வரும் எமது கல்லூரிப் பழைய மாணவிகளின் சேவை பாராட்டற்குரியது. அவர்களை நூலகர், நூலக உதவியாளர்களாக நிரந்தர பதவி கொடுக்க கல்வித் திணைக்களம் முன்வரின் நன்று.

## ஏனைய போட்டிகள்

றோட்டரக்ட் கழகப் பொது அறிவுப் போட்டிகளில் எமது மாணவர் சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களையும் பெற்றுள்ளனர்.

முதிர்விலுதவிக் கட்டுரைப் போட்டிகளில் எமது மாணவர் பங்குபற்றிப் பரிசில் பெறுவது வழக்கம்

போருட் நிறுவனத்தினால் நடத்தப்படும் பல்வகை போட்டிகளில் இவ்வருடத்திலும் எமது மாணவர் பரிசில்கள் பெற்றுளர்.

## பிரத்தியேக பரிசுகள்

வருடாவருடம் பின்வரும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

1. வைத்தியக் கலாநிதி தனபாலசுந்தரம் வழங்கும் பாமதி ஞாபகார்த்த பரிசு க. பொ. த (உ.த) பரீட்சையில் மிகச் சிறந்த மாணவிக்கு.
2. சு. கதிர்காமத்தம்பியின் பரிசு க. பொ. த. (உ. த) பரீட்சையில் 2 ஆம் இடத்தை பெற்ற மாணவிக்கு
3. வைத்தியக் கலாநிதி பி. ஸ்ரீபத்மநாதனின் பரிசு க. பொ. த. (சா. த) பரீட்சையில் மிகச் சிறந்த சித்தி பெற்ற மாணவிக்கு
4. 5ம் ஆண்டில் மிகத் தகுதி வாய்ந்த மாணவிக்கு ஊக்குவிப்பு பரிசாக செல்வி நு. சௌபாக்கியவதி நினைவுப் பரிசில் வழங்கப்படுகிறது.
5. பழைய மாணவர் சங்கம் (கொழும்புக்கிளை) 5-ம் ஆண்டில் புலமைப்பரிசில் பெறும் மாணவிகளுக்கு தலா ரூ. 100/- வழங்கி வருகிறது.

## விடுதி

1953ம் ஆண்டில் திருவாளர் அ. பொன்னையா அவர்களால் தமது மகனின் ஞாபகார்த்தமாகக் கட்டி அன்பளிப்புச் செய்யப்பட்ட திருமன்றம் 1984ம் ஆண்டு வரையில் விடுதியாக இயங்கி வந்தது. பின்னர் தற்காலச் சூழ்நிலை காரணமாக விடுதி மூடப்பட்டு வகுப்பறைகள் சில காலம் இயங்கி தற்போது அவ் விடுதியே நூலகமாக இயங்கி வருகிறது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கமும், அபிவிருத்திச் சபையும்.

எமது கல்லூரியில் அக்கறை கொண்ட பிரமுகர்குழு பாடசாலை அபிவிருத்திச் சங்கமாகவும் அபிவிருத்திச் சபையாகவும் இயங்கி வருவது எமது நற்பேறே. எம் சிறார்களின் முன்னேற்ற நிலைகளில் நீங்காச் சிந்தனை கொண்டு உயிரோட்டமான முறையில் இயங்கி வரும் இச்சங்கம் எமது கல்லூரியின் கட்டட, தளபாடப் பற்றாக் குறைகளைப் பொருத்தமான வகையில் விரைவாகப் பூர்த்தி செய்ய முனையுமானால் சங்கத்தின் சேவை விளக்கமுறும்.

பழைய மாணவர் சங்கம்

முன்னாள் அதிபர் செல்வி க. சரவணமுத்துவின் நினைவின் அடித்தளத்தில் முகிழ்ந்தெழுந்த பழைய மாணவர் சங்கம் வடமராட்சியிலும் கொழும்பிலும் இயங்கி வருகிறது. இவர்களின் ஆக்கபூர்வ செயற்பாடுகள் எம் கல்லூரிக்கு மேன்மையைத் தேடி அளித்துக் கொண்டிருக்கின்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

நன்றி

பொன்னூஞ்சலில் எமது கல்லூரியாம் அன்னையை வைத்துக் கண்குளிரக் காணும் இவ் வேளையில், எமது கல்லூரி இலட்சிய பொன்விழாக் காணும் நிலைவரை உயர்த்திய கட்புல, கருத்துப் புலங்கட்கு உட்பட்ட அனைவர்க்கும் மறைகரமாய் நின்று உதவியோர்க்கும் நன்றி கூறுதல் எமது தலையாய மனிதப்பண்பு. எனினும் எல்லோர்க்கும் தனித் தனி நன்றி கூறுவது அத்துணை எளிதன்று. எமது கல்லூரிக்கு அத்திவாரமாகி பொன்பூப் பூக்கும் வரையில் தம்மாலியன்ற அத்தனை உதவிகளையும் வழங்கிய புரவலர் நலன் விரும்பிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம், அபிவிருத்திச்சபை உறுப்பினர், கல்வித் திணைக்களத்தினர் அனைவர்க்கும் ஆசிரியர் மாணவர் அனைவர் சார்பிலும் என் இதய பூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக் கல்லூரியின் வரலாறு ஒளி வீசித் திகழ்ந்து பவளவிழா, நூற்றாண்டுவிழா என விழாக்கள் பல காண ஆரோக்கியமான உதவிகள் பலவற்றையும் நல்க வேண்டுமென முதற்கண் இறைவனையும் கல்வித்திணைக் களம் முதல் சமூகம் ஈறாக அனைவரையும் கேட்டுக் கொண்டு மனமார்ந்த நன்றி கூறி இவ்வறிக்கையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

முக்கிய குறிப்பு: இடர் பலவற்றை நாம் எதிர்நோக்க வேண்டியிருக்கும் இன்றைய கால கட்டத்தில், தமது கல்லூரி அன்னையை மறவாது, வெளிநாடுகளிலிருக்கும் எமது பழைய மாணவர்கள், கல்லூரிக்குக் கை கொடுத்துதவுவது எமக்கு உறுதியான மனோதிடத்தையும், தளராத நம்பிக்கையையும், மட்டற்ற மகிழ்ச்சியையும், பெருமையையும் கொடுக்கிறது.

கண்களை இழந்தவன் குருடன் அல்ல எவன் தன்னிடமுள்ள
குறைகளை மறைக்கிறானோ அவனே குருடன்,
- காந்தி மகான் -

## வட இந்து மகளிர் கல்லூரி

# பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அறிக்கை

## 1993 - 1994

வடமராட்சியில் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்கும் வடஇந்து மகளிர் கல்லூரி பொன்விழாவினை கொண்டாடுவதற்காக தயாராகிக் கொண்டிருப்பதனை பாடசாலையின் அபிவிருத்திச் சங்கம் மட்டற்ற மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் வாழ்த்தி நிற்கின்றது.

ஐம்பது ஆண்டுகள் கடந்துவிட்டது என்பதனை நினைக்கும் போது நெஞ்சமெல்லாம் பூரித்து நிற்கின்றோம். மற்றைய பாடசாலைகளுடன் ஒப்பு நோக்குகையில் 50 ஆண்டுகள் என்பது காலத்தில் குறைவாக இருந்தாலும் இக்கல்லூரியின் வளர்ச்சியோ ஞாலத்தில் பெரியது.

கடந்து சென்றுவிட்ட பல கடினமான ஆண்டுகளை நினைத்துப் பார்க்கின்றேன். இருள் சூழ்ந்த வேளையிலும், பொருள் அற்ற காலங்களிலும் அருள் கூர்ந்த இறைவனை வேண்டி தெருள் நீக்கி இப்பாடசாலை முன்னேறி இருக்கின்ற தென்றால் அது மிகையாகாது.

ஆசிரியர் பற்றாக்குறை, நிதி வளம் போதாமை, கற்பிக்கும் நேரம் காணாமை இப்படி எண்ணற்ற இன்னல்களுக்கு மத்தியிலும் இந்துக் கலாசாரத்தை பேணிக்காத்து பெண்மையின் நிலைமையை உயர்த்தி நிற்கும் இந்த அற்புதக் கல்லூரியின் அபிவிருத்திச் சங்கத்தில் அங்கம் பெற்று சில நல்லவிடயங்களை செய்ய முடிந்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன் இச்சபையானது 1982ம் ஆண்டில் இருந்து தன்னால் இயன்ற பணியினைச் செவ்வனே செய்து வருகின்றன தென்பதனை இங்கு கோடிட்டுக் காட்டியே ஆகவேண்டும்.

பாடசாலை மேல்மாடிக் கட்டடம் ஆரம்பிக்கப்பட்டு பூரணப் படுத்தப்படாமல் இருப்பது ஒரு மிகப் பெருங்குறையே. இது எமது சக்திக்கு அப்பாற்பட்டது என்பதனை யாவரும் அறிவர் நாட்டில் நல்ல சூழ்நிலை ஏற்படும் போது அக்கட்டடம் முடிக்கப்படும். எமது கல்லூரி புதுப் பொலிவு பெறும் என நாம் திடமாக நம்புகின்றோம். அடுத்து கல்லூரிக்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லையென்பது கவலைக்குரிய விடயமே. விளையாட்டு மைதானத்தை பெறுவதற்குரிய முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதன் வெற்றி பெற்றாாகளின் கரங்களிலும் பழைய மாணவா சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சபை ஆகியோரின் தீவிர முயற்சியிலேயே தங்கியுள்ள தென்பதை நான் குறிப்பிட்டே ஆகவேண்டும். கல்லூரிக்கு ஒரு பிரார்த்தனை மண்டபம் கட்டுவதுபற்றி 1985ம் ஆண்டிலே தீர்மானிக்கப்பட்டது. நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக அது கைகூடவில்லை காலமும் ஒருநாள் மாறும் நம் கவலைகள் யாவும் தீருமென நினைத்திருப்போம்

கடந்த மூன்று ஆண்டுகளில் இச்சங்கம் தன்னாலான சகல பணிகளையும் நிறைவேற்றியுள்ளது. பாலர் பாடசாலையில் பல திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கு கணிசமான பணஉதவி செய்த விநாயகர் தரும நிதிய நிறுவனர் திரு. சி. முருகுப்பிள்ளை ஐயா அவாகளை இச்சங்கம் பாராட்டி நிற்கின்றது பாலர் பாடசாலை சலகூடம் திருத்தி அமைக்கப்பட்டது. பாலர் பாடசாலை நீர்விநியோகம் சீரமைக்கப்பட்டு பாவனைக்கு விடப்பட்டது. துவிச்சக்கர வண்டிகளை பாதுகாப்பதற்காக இரண்டு தரிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. அது மட்டுமன்றி தெற்குப் பக்கத்து கட்டிடத்திற்கு ஓடு போடும் பணியும் பூர்த்தியாகியது.

பல நற்பணிகளைச் செய்து வரும் சுவாமி சித்ருபானந்தா அவர்கள் எமது பாடசாலைக்கு ஒரு ஒலிபெருக்கியைத் தந்து எமது பிள்ளைகளின் நாதமும், கீதமும் எங்கும் ஒலிக்கச் செய்திருக்கின்றார். என்பதை இச்சபையானது மிகமிக மகிழ்வுடனும், நன்றியுடனும் நினைவு கூர்கின்றது. அதுமட்டுமல்ல அவர் பல உயரிய நூல்களை எமது பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்துள்ளார். என்பதையும் இச் சங்கமானது பெருமையுடன் நினைந்து மகிழ்ச்சியடைகின்றது. அன்னாரின் அரிய உதவியினை இச்சபை நாடிநிற்கின்றது.

வருடாந்த பரிசளிப்பு விழாக்களை செவ்வனே நடாத்துவதில் அபிவிருத்திச்சபை அளப்பரிய பங்காற்றியுள்ளது. குறிப்பாக 1993ம் ஆண்டு திறந்த வெளி அரங்கில் பரிசளிப்பு விழாவினை நடாத்துவதற்கு சபையின் அங்கத்தவர்கள் தங்களை அர்ப்பணித்துச் செயலாற்றினார்கள் 1993ம் ஆண்டு ஆசிரியர் தினவிழாவினை திறம்பட ஒழுங்கு செய்து கல்விச் சேவையில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஆசிரிய, ஆசிரியைகளை மாண்பு படுத்திய பெருமையும் இச்சங்கத்திற்குண்டு. இத்தனை சாதனைகளையும்செய்வதற்கு அபிவிருத்திச்சபை உறுப்பினர்கள் காட்டிய ஆர்வமும், ஊக்கமும் மிகச் சிறந்தவை என்பதனை குறிப்பிடாமல் இருப்பின் நன்றிமறந்த பழியினை சுமந்தவன் ஆவேன். அபிவிருத்திச் சபையின் தலைவி என்ற முறையில் அதிபர் திருமதி. லோகநாயகி குமாரசாமி அவர்கள் தந்த ஆக்கமும், ஊக்கமும் ஒப்பற்றவை, உயர்வானவை, மறக்கமுடியாதவை.

கல்வி நிதியம் ஒன்றின் மூலம் பல நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்ய நிதிவளம் இச் சபையிடம் இருந்ததென்பது ஒரு ஆரோக்கியமான விடயமாகும் மேலும் இந்நிதியம் வளர்ச்சியடைந்து எண்ணற்ற சேவைகளை செய்வதற்கு பெற்றோர், நலன்விரும்பிகள் சம்பந்தப்பட்ட சகலரினதும் உதவியை இருகாம் கூப்பி இச்சங்கம் நாடி நிற்கிறது.

கடந்த சில ஆண்டுகளாக அபிவிருத்திச் சங்கக் கூட்டங்களின் எண்ணிக்கை குறைவாக இருந்ததென்பதனை ஒப்புக் கொள்கின்ற அதே வேளையிலே பரந்தஅடிப்படையில் நிறைந்த அபிவிருத்தி வேலைகள் குறைந்த செலவில் நடைபெற்றன என்பது வெளிப்படை

18 – 05 – 94

பொன்விழாக் காணும் இந்து மகளிர் கல்லூரியே நீ நீடூழி வாழவேண்டும் என வாழ்த்துகின்ற இவ்வேளையிலே இங்கு கடமை ஆற்றும் அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் தந்த ஒத்துழைப்பிற்கு எமது நன்றியினை மலர்க் காணிக்கை ஆக்குகின்றோம் கல்லூரியின் மணம் காத்து பெண்மையின் குணம் காக்கும் மாணவச் செல்வங்களுக்கு ஒளிமயமான எதிர்காலமும், கல்விச் செல்வமும் நிறைவுறக் கிடைக்க எமது நல்லாசிகள். வடஇந்து மகளிர் கல்லூரியின் பாரம்பரியமும் கலாச்சாரப் பண்பாடும் தமிழ்கூறும் நல்லுலகில் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டும். கல்லூரி நிகழ்ச்சிகளிலே ஒலிக்கின்ற சலங்கை ஒலி அங்கு இசைக்கப்படும் அற்புதமான சங்கீதம் .. .. சிந்தையைக் கவர்கின்ற சிங்கார நாட்டிய நிகழ்வுகள்.... பெண்மைக்கு அணிகளனாகத் திகழும் விருந்தோம்பல் இவை எல்லாமே வடஇந்துவின் தரத்திற்கு உத்தரவாதம் தருபவை மட்டுமல்ல உயர்வும் தருபவையுங்கூட.

இப்பேற்பட்ட ஒரு அற்புதக் கல்லூரி அதன் பொனவிழாவினை கொண்டாடுகின்றதென்பது எத்தனை இன்பமான விடயம். பொன்விழா என்பது ஒரு கல்லூரியின் வரலாற்றில் மகத்தானது இவ்வேளையில் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு பெற்றோரும் நலன் விரும்பிகளும் உதவ முன்வரவேண்டும் இந்து பாரம் பரியங்களைத் தன்னகத்தே கொண்டு நெறிதவறா வாழ்விற்கு எமது பிள்ளைகளை உருவாக்கும் இப்பாடசாலையின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில், அபிவிருத்தியில் யாவரும் தங்கள் பங்களிப்பினை செய்ய வேண்டுமென நான் இறைஞ்சி நிற்கின்றேன்.

வடஇந்து நங்கை நலம் பெற்று பொலிவுடன் பூச்சூடி மகிழ பாச்சூடி இறைவனை பணிந்து நிற்கின்றோம்.

வளரட்டும் இக்கல்லூரியின் உயரிய கல்விப்பணி
உயரட்டும் இக்கல்லூரியின் நிறைவுறு புகழ்
நிமிரட்டும்பெண் இனத்தின் பெருமைநிலை
பரவட்டும் பொன்விழா தரும் மகிழ்ச்சியின் ஒளி

சம்பந்தர் சிவராஜசிங்கம்
செயலாளர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
வட இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை.

# வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

## பாடசாலை அபிவிருத்திச் சங்க

## நிர்வாகக் குழு உறுப்பினர்கள் 1994 - 1995

தலைவர்: திருமதி. லோ. குமாரசாமி (அதிபர்)

செயலாளர்: திரு. மா. நடராசசுந்தரம்
(தலைவர், வணிக முகாமைத்துறை, யாழ். பல்கலைக் கழகம்)

பொருளாளர் திருமதி. ஞா. அரியரத்தினம்

நிர்வாகக்குழு

திரு. ச. சிவராஜசிங்கம்
,, பா. ரகுநாதன்
,, சி. சித்திரவடிவேல்
,, மு ஜெயதேவன்
,, ஜெ. சபாபதி
,, செ. கந்தசாமி
,, சு. தங்கநவமணிநாதன்
,, சி. தில்லைநாதன்
,, சோ. கணேஸ்
,, சி. குலசிங்கம்

திருமதி. சி. விநாயகநாதன்
,, பா. தம்பையா
,, சி. சிதம்பரநாதன்

ஆசிரியர் பிரதிநிதிகள்

திருமதி. மகேந்திரன்
,, இந்திரராஜா
,, பாலேந்திரன்
,, மாணிக்கவாசகர்
,, ஆறுமுகம்



பொன்விழாச்சபை

# பாடசாலை அபிவிருத்திச் சபை

## அறிக்கை

கல்வித் திணைக்களத்தின் பணிப்புரையின் பேரில் அவசர அவசரமாக இச்சபை உருவாக்கப்பட்டது. தலைவராக அதிபரே கடமையாற்றுகின்றார். இதுவே விதி. ஆசிரியர்கள் சார்பில் மூன்று பிரதிநிதிகளும், பெற்றோர் சார்பில் மூன்று பிரதிநிதிகளும் பழைய மாணவர்கள் சார்பில் மூன்று பிரதிநிதிகளும் ஒரு நலன் விரும்பும் அங்கத்தவரும் இச்சபையின் பிரதிநிதிகளாவர்.

திட்டவட்டமான செயற்பாடுகள் பற்றிய அறிவுறுத்தல் கிடைக்காமையால் இச்சபையானது பூரணமாக இயங்கவில்லை. இச்சபையின் செயற்பாடுகள் பற்றி யாருக்குமே தெளிவில்லாதது ஒரு குறைபாடே.

சரியான அறிவுறுத்தல்கள் கிடைக்கப்பெறும்போது இச்சபை பாடசாலையின் வளர்ச்சியில் அபிவிருத்தியில் தன்னை பூரணமாக ஈடுபடுத்திக்கொள்ளும் என்பதை தெளிவாக தெரிவிக்கும் அதேவேளை வேறு எதுவும் செய்ய முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம் என்பதனை நான் குறிப்பிட்டேயாகவேண்டும்.

**சம்பந்தர் சிவராஜசிங்கம்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச்சபை.

15-07-94

| | | |
|---|---|---|
| தலைவர்: | திருமதி. லோ குமாரசாமி | — அதிபர் |
| செயலாளர்: | திரு. சம்பந்தர் சிவராஜசிங்கம் | — பெற்றோர் |
| பொருளாளர்: | செல்வி. கு முருகுப்பிள்ளை | — ஆசிரியர் |
| உறுப்பினர்கள்: | திரு ம. நடராசசுந்தரம் | — பெற்றோர் |
| | திரு. சி. தியாகராசா | — பெற்றோர் |
| | திருமதி. ஜெ. குலசிங்கம் | — பழைய மாணவி |
| | திருமதி. ச. தியாகராசா | — பழைய மாணவி |
| | திருமதி. பு தங்கராசா | — பழைய மாணவி |
| | திருமதி. ச. இந்திரராஜா | — ஆசிரியர் |
| | திருமதி. க. மகேந்திரன் | — ஆசிரியர் |
| | திருமதி. சி. சுப்பிரமணியம் | — நலன் விரும்பி |

# வட இந்து வாழ்வில்

# நீங்காத நினைவுகள் சில

1951ம் ஆண்டு தைமாதம் பாடசாலை ஆரம்பநாள். புதுப்பள்ளிக் கூடத்தில் 6ம் வகுப்பில் சேர்வதற்கு வடமராட்சியின் பல்வேறு பாடசாலைகளிலுமிருந்து வந்த பெருந்திரளான பிள்ளைகள் கூடி நிற்கின்றனர். (யா/வட இந்து மகளிர் கல்லூரி புதுப்பள்ளிக்கூடம் எனப் பொதுமக்களால் அன்று வழங்கப்பட்டது) அதிபரினால் நேரடியாக வாய்மொழிப் பரீட்சை நடைபெறுகிறது.

அப்போதைய அதிபராய் இருந்தவர் செல்வி. யோ. கனகசபை கட்டுக்கடங்கிய உடலமைப்பு. கச்சிதமான பழையபாணியில் கட்டப்பட்ட பட்டுச்சேலை. நெற்றியிலே முக்குறித்திருநீற்றுப் பூச்சுடன் குங்குமப்பொட்டு. மனதின் உறுதியும் செயலின் கண்டிப்பும் புலனாகும் முகத்தோற்றம். இவ்வாறான சைவத் தமிழ்த் தோற்றத்துடன் அதிபர் காட்சியளிக்கிறார்.

பாடசாலையின் முகப்புத்தோற்றம், முன்புறக்கட்டடங்கள் முற்றத்தை அணிசெய்யும் பூந்தோட்டம், மாக்கோலம் என்பன பாடசாலையின் சைவப் பாரம்பரியத்தைப் பறைசாற்றுகின்றன

வடமராட்சிப் பகுதிச் சைவப்பெண்களுக்கு ஒரு சைவப் பாடசாலை வேண்டுமெனக் கண்ட இவ்விடப் பெரியோர்கள் வடமராட்சி சைவ கல்வி விருத்திச்சபையை நிறுவினர். சபைமூலமாக ஆரம்பிக்கப்பட்டதே வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி எனப்பெயரிய இக்கல்வி நிறுவனம் 1944ம் ஆண்டு ஆனிமாத அனுஷ தினத்திலே 45 பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை, அன்றைய காலத்தேவை காரணமாக துரித வளர்ச்சி கண்டது மிக விரைவில் கல்லூரித் தரத்தை எய்தியது.

1952ம் ஆண்டு செல்வி. க. சரவணமுத்து அதிபர் கதிரையை அலங்கரிக்கத் தொடங்கினார். பாடசாலையின் வளர்ச்சி மேலும் துரிதப்படுத்தப்பட்டது. கலை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டி எனப்பல சிறப்பு வைபவங்கள் கல்லூரியின் புகழை மேலோங்கச் செய்தன.

சைவப்பண்பாடும் பழக்கவழக்கங்களும் பேணப்பட்டன. விழாக்களும், விரதங்களும் அவற்றிற்கு மெருகூட்டின. பாடசாலைப் பிள்ளைகளுக்கு சமய தீட்சையளிக்கும் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன என்றால் பிறவைபவங்களைப் பற்றிக் கூறவும் வேண்டுமோ? இலங்கைப் பாடசாலைகளில் சமய பாடத்தைக் கட்டாய பாடமாக மாணவர்களுக்கும் கற்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கு முன்னரே சைவசமயமும், தமிழ் இலக்கியமும் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்குக் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட்டன. க. பொ. த. சா/த பரீட்சைக்கு இவ்விரண்டு பாடங்களிலும் கட்டாயம் மாணவிகள் தோற்றும் கட்டுப்பாடு அமைந்திருந்தது. இது கல்லூரியின் இலட்சியம் எவ்வளவுக்குப் பின்பற்றப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுகிறதல்லவா? சமய நெறியும் இலக்கியமும் ஒரு மனிதனை வாழ்வாங்கு வாழவழி வகுக்கிறது. கல்வியின் நோக்கமும் மனிதனை மனிதனாக வாழவைப்பதே.

தூரஇடத்திலிருந்து வந்து கற்கும் மாணவிகள் தங்கியிருந்து கற்பதற்கான விடுதி வசதியும் அமைந்திருந்தமை கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பேறாயிற்று

இக் காலகட்டத்தில் கல்லூரி சிறப்பும், முன்னேற்றமும் அடையச் சூத்திரதாரியாக இருந்தவர் எமது முன்னாள் அதிபர் செல்வி. க. சரவணமுத்து என்பதைப் பெருமையுடன் நினைவு கூருகிறோம்.

கற்பித்தல் முறையிலும் ஆசிரியர்களுக்கு ஒரு வழிகாட்டியாக ஊக்கசக்தியாக அதிபர் விளங்கினார். அவரிடம் கணிதம், பௌதிகம் ஆகிய பாடங்களைக் கற்ற மாணவியர், "அதிபர் கற்பித்த ஒவ்வொரு சொல்லும் வசனமும் இன்னும் எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன" என்று கூறுவதை இன்னும் கேட்கலாம்.

அதிபர் தலைமையில் ஆசிரியர்கள் மாதிரிப் பாடங்களை இடையிடேயே நடாத்திக் கற்பித்தலில் புத்தூக்கம் பெற்றனர். அதிபரின் மேற்பார்வையில் கற்பித்தலில் ஈடுபட்ட ஆசிரியர்கள், பட்டப்பின் படிப்பு, டிப்ளோமா வகுப்புக்களில் பயிலும்போது தாம் சிரமமின்றிப் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபடமுடிந்ததென்றும் அதற்கு அதிபரின் வழிகாட்டலே காரணமென்றும் கூறுவர். அன்று இக்கல்லூரி ஆசிரியர்களிடம் கற்ற மாணவர்கள் நல்லாசிரியர்களாக இன்று துலங்குகிறார்கள் ஆசிரியர்களின் கற்பித்தல்முறை மாணவர்மனதில் அவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது.

யான் ஆசிரியப் பணியேற்றுக் கொழும்பில் வாழ்ந்த காலம் பாடசாலைக்கு நடந்தே செல்வேன். தெருவில் செல்கையில் திரும்பிப் பார்க்கும் பழக்கம் இல்லை. அதிபர் செல்வி சரவணமுத்துவின் போதனையும் பயிற்சியுமே காரணம் வீதியைக் கடக்கையில் திருப்பிப் பார்ப்பதுண்டு வாகனங்களை மட்டும் அவதானிப்பேன். அனேகமாக நான் பாடசாலையை அடைந்து சிறிது நேரத்தில் ஒரு ஆசிரியை வேர்க்க விறுவிறுக்க மூச்சிரைத்தபடி வருவார். "தெருவில் வரும்போது பின்னால் வந்தேன். உம்மை அழைத்தேன் அவதானிக்கவில்லை. பிடிக்கலாம் என நடையை வேகப்படுத்தினேன. முடியவில்லை. நான் களைத்ததுதான் மிச்சம்" என்று கூறுவார். அப்போது என் மனக்கண்ணில் அதிபர் செல்வி. சரவணமுத்து தோன்றி என்னைத் தட்டிக்கொடுப்பதாக உணர்ந்தேன்.

உண்மையாகவே அதிபர் என் முதுகில் தட்டி நல்லபிள்ளை என மகிழ்ந்த சம்பவம் ஒன்று பின்னாளில் நிகழ்ந்தது.

1957ம் ஆண்டு மாணவியாக வடஇந்துவில் இருந்து வெளியேறிய யான் 1970-ம் ஆண்டு ஆசிரியராக கொழும்பிலிருந்து மாற்றம் பெற்று வந்தேன். 1970ம் ஆண்டு மார்கழி மாதத்துடன் 55 வயது பூர்த்தி செய்த அரச ஊழியர்களுக்கு கட்டாய ஓய்வு அளிக்கப்பட்டது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் செல்வி. சரவணமுத்து அவர்களும், வேறு இரு ஆசிரியர்களும் (அவர்களும் என்னைக் கற்பித்தவர்களே) ஓய்வு பெறுகின்றனர். மூவரும் என் மதிப்பிற்குரியவர்கள். அவர்கள் திடீரென 60 அகவையைப் பூர்த்தி செய்யாமலே ஓய்வு பெறுவது கல்லூரிக்குப் பெரும் பாதிப்பு அவ்வேளை மூவரையும் சிறப்பித்து வீரகேசரியில் ஒரு கட்டுரை எழுதினேன். அக்கட்டுரையைக் கண்டே அதிபர் அவ்வாறு என்னைத் தட்டிக் கொடுத்தார். அப்போது நான் அடைந்த பேரானந்தத்திற்கு அளவில்லை. எனது தலைமைக்குருவுக்கு நான் நன்றிக்கடன் செலுத்தியதாகவும் எனக்கு ஒரு மனநிறைவு. அத்துடன் நான் பெரியவளான பின்னும் என்னைத் தன் மாணவி எனக்கருதி என்னைப் பாராட்டியமை எனக்கு நாணத்தோடு கூடிய பெருமிதத்தைத் தந்தது.

ஆயினும் 12 வருட இடைவெளிக்குப்பின் நான் எனது பாடசாலைக்கு வந்தபோது பெருவேதனை அடைந்தேன். "நான் கற்ற பாடசாலையா இது" என ஏங்கினேன். மாணவர் பழக்கவழக்கம், பாடசாலை நிலைமை எல்லாமே என்னை வேதனைப்படுத்தியது. அதேவேளை முன்னர் கற்பித்த ஆசிரியர்களில் பெரும்பான்மையோர் ( எனனைக் கற்பித்தவர்கள் ) தொடர்ந்து ஆசிரியர்களாக விளங்கினர். எனது மனக்கருத்தை வேதனையை வெளியிடவும் முடியாமல் சீரணிக்கவும் முடியாமல் திண்டாடினேன்.

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்த போது விதியே என அமைய வேண்டி இருந்தது. 1961ம் ஆண்டில் இலங்கை அரசு பாடசாலைகளை சுவீகரித்தபோது பாடசாலை நிர்வாகம் அரசிடம் பாடசாலையைக் கையளிக்க மறுத்தது. ஆசிரிய குழாம் அரசு பக்கம் சார்ந்தது

ஆசிரியர்கள் வேறு பாடசாலைக்கு மாற்றப் பட பயிற்சி அற்றவர்கள் கற்பிக்க முன்வந்த னர். இவ்வாறு ஏற்பட்ட பிரச்சனையால் மாணவர்கள் அல்லோலகல்லோலப் பட்டனர் சிரமத்துள் சிக்கவிரும்பாத மாணவர் வேறு பாடசாலைகளுக்கு மாறினர் பாடசாலை சீர் குலைந்தது.

மீண்டும் அதிபர் செல்வி. சரவணமுத்து வும். அதே ஆசிரியர் குழாமும் பாடசாலையில் காலூன்றிக் கடமையின் சிறப்பால் பாடசாலை யைப் பழைய நிலைக்குக் கட்டியெழுப்ப முயன்றனர் ஆயினும் விதி பாடசாலையின் முன்னேற்றப் பாதையில் குறுக்கிட்டது. நிர் வாகப் பிரச்சனை காரணமாக அதிபர் மாற்றப் பட்டார் பாடசாலையின் சமநிலைகெட்டது.

ஆயினும் முதல் இடப்பட்ட அத்திபாரமும் தொடர்ந்து வந்த செயற்பாடுகளும் கல்லூரி யைக் குன்றின் விளக்காக்கின. சிவநெறி பொலியும்வரை இந்து மகளும் புகழ்பரப்புவாள் எங்கள் நினைவிலும் நீங்காது நிற்பாள்.

**திருமதி. பொன்னம்மா இரத்தினசோதி**
ஆசிரியை, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.
பழைய மாணவியும்.

அடக்கமும் அன்பும் துன்பத்தால்
கற்றுக் கொடுக்கப்படும்.

– ஜார்ஜ்எலியம்

# பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் தமிழியற் பணிகள்

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தலைவர் – தமிழ்த் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கந்தசாமி கணபதிப்பிள்ளை அவர்கள் 1903ஆம் ஆண்டு பருத்தித்துறையிலே பிறந்தார். வடமராட்சியிலே வளர்ந்து வந்த ஒரு புலமைத்துவ மரபு இவருடைய கல்விக்கு அடிப்படையாக அமைந்தது. வடமொழியிலும் தமிழ்மொழியிலும் வல்லதொரு புலமைக் குழுவினர் வடமராட்சியிலே சிறப்புற்று விளங்கினர். முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் போன்றோர் இக் குழாத்தினைச் சேர்ந்தவர்களாயிருந்து, இரு மொழிக் கல்வியை வளம்படுத்தினர். கணபதிப்பிள்ளை இவ்வாறு வளம்பெற்றவர்களுள் ஒருவர் ஆவார். முத்துக்குமாரசுவாமிக் குருக்களிடம் வடமொழியையும் தமிழையும் கற்ற கணபதிப்பிள்ளை, பிற்காலத்திலே மாணிக்க மாலை என்னும் மொழிபெயர்ப்பு நாடகத்தை எழுதியபோது, தன்னுடைய ஆசிரியருடைய பெயரை அவர் அந்நூலைக் காணிக்கையாக்கி எழுதிய பாடலிலே,

> " நந்தும் பருத்தித் துறைவாழ் சிவச்சுடர்
> நான்மறையோன்
> ஒத்தநல் லாரியம் செந்தமிழ் என்னை
> உணரவைத்தோன்
> முத்துக்குமார சுவாமிக் குருமணி
> மொய்கழற்கீழ்
> வைத்திப் பனுவலை மாணு மவனருள்
> வாழ்த்துவனே"

என்று குறிப்பிட்டுச் செல்கின்றார். இளமையிலே தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்ற கணபதிப்பிள்ளை 1930ம் ஆண்டிலே இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே கலைமாணிப் பட்டத்தினை (முதற்பிரிவில)ப் பெற்றார். இங்கு தமிழ், வடமொழி, பாளிமொழி ஆகியனவற்றைக் கற்றார். பின்னர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே விபுலானந்த அடிகளாரிடமும் சோமசுந்தரம் கந்தசாமி ஆகியோரிடத்தும் தமிழை நன்கு கற்று வித்துவான் பட்டத்தினைப் பெற்றார். பின்னர் இலண்டன் பல்கலைக்கழகத்திலே நவீன மொழியியல் அறிவினைப் பெற்றுப் பேராசிரியர் ரேணர் ( TURNER ) அவர்களுடைய வழிகாட்டலிலே இடைக்காலத் தமிழ்க் கல்வெட்டுக்களின் மொழிநடை பற்றி ஆராய்ந்து எழுதிய ஆய்வேட்டுக்குக் கலாநிதிப் பட்டம் பெற்றார். பட்டம் பெற்று நாடு திரும்பிய கலாநிதி கணபதிப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியிலே விரிவுரையாளராகப் பணியாற்றத் தொடங்கினார். 1947ல் தமிழ்ப் பேராசிரியராயிருந்த அருட்டிரு விபுலாநந்த அடிகள் நோய்வாய்ப்பட்டு இவ்வுலகை நீக்க, கலாநிதி கணபதிப்பிள்ளை தமிழ்த்துறையிலே பேராசிரியராகப் பதவி உயர்வு பெற்றார்.

## பேராசிரியரின் கல்விப் பணிகள்

பேராசிரியர் கணபதிப்பிள்ளை இலங்கைப் பல்கலைக்கழகம் பேராதனைக்கு மாற்றப்பட்ட பொழுது அங்கு தமிழ்த்துறைத் தலைவராக மட்டுமன்றி கீழைத்தேய மொழிப்பீடத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். பீடத் தலைவராகப் பணிசெய்யும் வேளையிலே, துணைவேந்தர் சேர் நிக்கலஸ் ஆட்டிகலை வெளிநாடு சென்ற வேளையிலே பதில் துணைவேந்தராகவும் பணியாற்றியுள்ளார். இக்கால கட்டத்திலே இங்கிலாந்தில் நடைபெற்ற பொதுநலவமைப்பு நாடுகளின் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டிலும் பங்குபற்றினார். பல கீழைத்தேச மொழியியல் மாநாடுகளிலே பங்குபற்றிக் கட்டுரைகளும் படித்துள்ளார். 1964ஆம் ஆண்டு புதுடில்லியிலே நடைபெற்ற கீழைத்தேசவியலார் மாநாட்டிலே இங்கிலாந்தில் இருந்து ஜோன் மார், ஆர் இ. அஷர். தொமஸ் பரோ. பிரான்சு நாட்டில் இருந்து ஷான் பிலியோசா, அமெரிக்காவிலிருந்து எம். பி. எமெனொ, இந்தியாவிலிருந்து வி. ஐ. சுப்பிரமணியம், சுப்பையா, இலங்கையிலிருந்து அருட்திரு தனிநாயகம் அடிகளார், கா. பொ. இரத்தினம் ஆகியோருடன் போராசிரியர் கணபதிப்பிள்ளையும் பங்குபற்றினார். இம்மாநாடு முடிவுற்றபோது, தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் தமிழர் வரலாறு பண்பாடு முதலியன நுண்ணாய்வுக்கு உட்படுத்தக்கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்தும் முகமாக உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினை ஏற்படுத்தினர். இதுவரை கோலாலம்பூர், சென்னை, பாரிஸ், யாழ்ப்பாணம், மதுரை, மொரிசியஸ், கோலாலம்பூர் ஆகிய இடங்களிலே உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளை நடத்தி வரும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தினைத் தோற்றுவித்தவர்களுட் பேராசிரியரும் ஒருவர் என்பதை நாம் மறக்க முடியாது.

பல ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதியுள்ளார். பல கவிதை, சிறுகதை, நாவல் நாடக இலக்கிய நூல்களை ஆக்கியுள்ளார்.

## மொழியியலாளனாக

தமிழ், மலையாளம், சமஸ்கிருதம், பாளி, ஆங்கிலம், லத்தீன் மொழிகளிலே நன்கு தேர்ச்சியுற்ற காரணத்தினாலே, மொழியாய்வுத்துறையிலே இவருடைய நாட்டம் சென்றது. இலண்டன் பல்கலைக் கழகத்திலே மொழியாய்வு மேற்கொண்ட பொழுது நவீன மொழியியலிலே பயிற்சிபெறும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. சாசனத் தமிழை ஆராய்ந்து, அதிலே ஏற்பட்ட ஒலிவேறுபாடுகள் ( எழுத்து வேறுபாடுகள் ) பற்றிச் சில புதிய கருத்துக்களை முதன் முதல் முன்வைக்கும் வாய்ப்பினைப் பெற்றார். இவருடைய கலாநிதிப்பட்ட ஆய்வு சாசனத் தமிழைப் பற்றியதாகவே அமைந்தது. தமிழ்ச் சாசனங்களிலே 'ந' கரத்துக்கு ஈடாக 'ன' கரமும் 'ன' கரத்துக்கு ஈடாக 'ந' கரமும் எழுதும் வழக்குக் காணப்பட்டது. 'கொடு' என்னுஞ் சொல் 'குடு' எனவும். 'தொடங்கு' என்னுஞ் சொல் 'துடங்கு' எனவும் எழுதப்பட்டன. இத்தகைய வேறுபாடுகள் அக்காலப் பேச்சு மொழியின் பண்புகளை ஓரளவு அறிந்துகொள்ள அமையும் சான்றுகள் எனப் பேராசிரியர் கணபதிப் பிள்ளை கருத்துக் கூறினார்

இவருடைய மொழியியற் புலமை யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழையும் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழையும் நுணுகி ஆராய்வதற்கு வழிவகுத்தது. ''ஊருக்கொரு பேச்சு'' என்றொரு கட்டுரையினைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க வெளியீடான இளங்கதிர் என்னும் இதழிலே இவர் எழுதினார். யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் இயல்புகளை எடுத்துரைக்கும் இக்கட்டுரையிலே யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிற்கும் மட்டக்களப்புப் பேச்சு வழக்கிற்குமுள்ள வேறுபாடும் விளக்கம் பெறுகின்றது. அதனுடன் பேச்சு வழக்கு மொழி ஒவ்வொன்றும் சொற்களைத் தொடர்களாக ஒன்றுகூட்டி இசைக்கும்போது இடத்துக்கிடம் வேறுவேறு வகையாக இசைக்கும் என்றும் இத்தகைய பேச்சுமொழித் தொடர்கள் ஒரு பகுதியில் (சாவட்டம் அல்லது பேரூர்) ஒருவகை ஓசையுடனும் வேறொரு பகுதியில் வேறொரு ஓசையுடனும் ஒலிக்கும் என்றும் பேராசிரியர் இக்கட்டுரையிலே விரித்துரைக்கின்றார்.

பல்கலைக்கழக ஆய்விதழ்களிலே பண்டைத் தமிழ்மொழி இயல்புகள் பற்றியும் யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழின் இயல்புகள் பற்றியும் ஆங்கில மொழியிலே பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளார். பேராசிரியருடைய மொழியியற் புலமை அவருடைய ஆக்க இலக்கிய முயற்சிகளுள் ஒன்றாகிய சமூக நாடக எழுத்துக்கு ஒரு புதிய போக்கினை நல்கியது. இது பற்றிப் பின்னர் விளக்கமாகக் கூறப்படும்.

## ஈழத்தமிழர் பண்பாட்டாய்வாளனாக

ஈழத்தமிழர் பண்பாட்டை நன்கு உணர்ந்து கொண்டு அதனைப் பற்றிப் பல கட்டுரைகள் எழுதினார். அத்தகைய கட்டுரைகளிற் சில ஈழத்து வாழ்வும் வளமும் என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. பொதுவாக ஈழத்தமிழர் பண்பாடு என்று அவர் குறிப்பிட்டாலும், பெரும்பாலான அவருடைய கட்டுரைகள் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டையே சிறப்பாக எடுத்துப் பேசுகின்றன. யாழ்ப்பாணத்துக் கோயில்களிலே அமைந்துள்ள கைலாய வாகனம், கேடகம், சப்பரம், தேர் ஆகிய பற்றி விரிவாக '' கோயிலில் சிற்பக்கலை '' ( இளங்கதிர் 1953 — 54 ) என்னும் கட்டுரையிலே எழுதியுள்ளார்.

> ''யாழ்ப்பாணத்துக் கோயில்களில் உள்ள சப்பரங்கள் பல வகையாய் அமைந்தன. நல்லூர், மாவிட்டபுரம் முதலிய கோயில்களிலுள்ள சப்பரம் தட்டுத்தட்டாய் ஓவியங்களமைந்த சேலைகளால் ஆயது. சில கோயில்களில் இச்சப்பரங்கள் கண்ணாடியிலே தீட்டிய ஓவிய வேலைப்பாட்டுடன் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவற்றைக் கண்ணாடிச் சப்பரம் என்று அழைப்பர். இந்நாட்களில் இச் சப்பரங்கள் சிறிது சிறிதாகக் குறைந்துகொண்டு வருகின்றன. ஆனால் பருத்தித்துறைச் சித்திவிநாயகர் கோயிலில் இத்தகைய சிறந்த சப்பரம் ஒன்று இன்னும் இருக்கின்றது. சப்பரத் திருவிழாவன்று இச்சப்பரத்துள் கைலாய வாகனத்துள் வைத்துப் பூட்டி அக் கைலாய வாகனத்தின்மீது சுவாமியை எழுந்தருளவைப்பர். தீவட்டி வெளிச்சத்திலே இச்சப்பரமும் கைலாயவாகனமும் கண்ணுக்கு மிகுந்த அழகாக இருக்கும்.

ஏறக்குறைய நாற்பது வருடங்களுக்கு முந்திய ஒரு செய்தியினை மேற்காட்டிய பகுதியிலிருந்து பெறுகின்றோம். யாழ்ப்பாணத்தாரின் உணவுப் பழக்கம், நம்பிக்கைகள், கொண்டாட்டங்கள் பற்றியெல்லாம் பேராசிரியர் தம்முடைய ஈழத்து வாழ்வும் வளமும் நூலிலே விரித்து எழுதியுள்ளார் பிள்ளைப் பேறு நடைபெற்றால், யாழ்ப்பாணத்தவர் பின்பற்றும் நடைமுறைகளும் இந்நூலிலே விரித்துக் கூறப்பட்டுள்ளன.

## கல்வெட்டியல், வரலாறு தொடர்பாக

இலங்கைப் பல்கலைக்கழகத்திலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயில்பவருக்குக் கல்வெட்டியல் ஒரு கட்டாய பயில்நெறியாக அமைந்திருந்தது. பேராசிரியர் கணபதிப்பிள்ளையே இப் பாடத்தை மாணவர்களுக்குக் கற்பித்தார். கல்வெட்டியல் அறிஞர்களான கலாநிதி இந்திரபாலா, பேராசிரியர் வேலுப்பிள்ளை ஆகியோர் பேராசிரியரிடம் பயின்ற மாணவர்களே. ஈழத்துத் தமிழ்க் கல்வெட்டுக்கள் சிலவற்றைப்படித்து, அவற்றின் மொழியியல், வரலாற்

றுச் சிறப்புக்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். **University of Ceylon Review** என்னும் ஆய்விதழிலே மாங்கணாய், பாண்டுவஸ்நுவர ஆகிய இடங்களிலே பெற்ற தமிழ்த் கல்வெட்டுக்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதியுள்ளார். ஈழநாட்டிலே கல்வெட்டியல் ஆய்விலே ஈடுபட்ட முதல் தமிழ் அறிஞர் பேராசிரியர் கணபதிப்பிள்ளையே ஆவர். அவருடைய முயற்சியினாலேயே அத்துறை இங்கு ஆய்வுநிலைத் துறையாக வளர்ச்சி பெற்றது. வரலாற்று ஆவணங்களை ஆராயும் குழுவொன்று அப்பொழுது இலங்கை அரசினால் உருவாக்கப்பட்டது. இக்குழுவிலே பேராசிரியரும் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். இதனாலே தமிழ்க் கல்வெட்டுக்கள் பலவற்றை இலங்கைப் புதைபொருள் திணைக்களத்திடமிருந்து இவராலே பெற முடிந்தது. இவ்வாறு பெற்றவற்றை இந்திரபாலா போன்றோருடன் சேர்ந்து வாசித்தறிய முற்பட்டார்

பண்டுவஸ்நுவரக் கல்வெட்டிலே ''தென்னிலங்கைக் கோன்'' என்னும் தொடர் இடம்பெறுகின்றது. நிசங்கமல்லனுடைய ஆட்சிக் காலத்து (கி. பி. 1187 — 1196)க் கல்வெட்டிலே இடம்பெறும் இத்தொடர், இலங்கை இவனுடைய காலத்திலே தென் - வட எனப் பிரிவுற்றிருந்திருக்கலாமெனவும், தென் இலங்கையையே இது சுட்டுகின்றதெனவும் பொருள்படப் பேராசிரியர் எழுதியுள்ளார்.

பேராசிரியர் இலங்கை வாழ் தமிழர் வரலாறு என்னும் சிறிய நூலினை எழுதினார். இது சங்கிலி என்னும் அவருடைய நாடக நூலுடன் சேர்ந்து ஓர் இணைப்பாகப் பிரசுரிக்கப்பட்டது. இவ்வரலாற்று நூல் 1956ஆம் ஆண்டிலே வெளியிடப்பட்டது. ஈழத்துத் தமிழருடைய வரலாறு பற்றிப் பல இருட்டடிப்பு நடைபெற்ற காலம் அது. தமிழருடைய உரிமைகள் பல பறிபோய்க்கொண்டிருந்த காலம் அது. ஈழத்துத் தமிழர் தம்முடைய வரலாற்றை ஒரு தடவை முறையாகப் பின்நோக்கிப் பார்க்க வேண்டிய தேவை அக்காலத்திலே ஏற்பட்டது. இதற்கு ஒரு தூண்டுகோலாகவே பேராசியரிர் இவ் வரலாற்று நூலை எழுதினார்.

### கவிஞராக

இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியர் அருட்திரு விபுலாநந்த அடிகளார் இலக்கியம் படைக்கும் ஒரு பேராசிரியராக விளங்கினார். அவரைத் தொடர்ந்து தமிழ்த்துறைப் பேராசிரியர் பணிநிலையை அழகு செய்த கலாநிதி கணபதிப்பிள்ளையும் இலக்கியம் படைக்கும் ஒரு பேராசிரியராக விளங்கினார். பேராசிரியர் கணபதிப்பிள்ளை இலக்கியம் படைக்கும்போது இரண்டு வகையான மொழி நடையைக் கையாண்டார். சமூகத்திலே காணப்பட்ட பல சிக்கல்களை நாடகங்களாக எழுதியபோது யாழ்ப்பாணத்துப் பேச்சு வழக்கினைக் கையாண்டார். ஆனால், கவிதைகள் எழுதியபோது எப்போதுமே உயர்வழக்குத் தமிழையே கையாண்டார். தன்னுடைய நாடகங்களிலே யாழ்ப்பாணத்துச் சீதன வழக்காலேற்பட்ட கொடுமைகளைப் பேச்சுத் தமிழிலே சித்தரித்தார். ஆனால், தாவும் மலரே என்னும் அவருடைய கவிதைத் தொகுதியிலே இடம்பெறும் ''சீதனக் காதை'' என்னும் தொடர் செய்யுளை ஆசிரியப் பாவிலே இலக்கியத் தமிழிலே எழுதினார். படித்து விளக்கக்கூடியவர்கள் அச்சிக்கலின் கொடிய விளைவுகளை உணர்ந்து கொள்வர். எடுத்துக்காட்டாகச் 'சீதனக் காதை'யில் வரும் பின்வரும் செய்யுளடிகளை நோக்குக.

''கூறுவன் கேட்பீர் கூறுவன் கேட்பீர் நல்வளம் செறிந்து
மண்பொருள் படைத்து வாழ்பெருங்குடியில் வந்து பிறவாது
பட்ட பெருந்துயர் பகரக் கேண்மீன் என்னருமகட்கே
எழில் பெறுமணவினை ஆற்றச் சீதனம் போற்றிக் கொடுக்க
இயலாத்தன்மையால் அன்னவனடக்கு நிகழ்ந்த இன்னலும் நிலை
யிலாத் தமியோன் கொண்ட அவலமும் கூறக் கேண்மோ''

பழைய தமிழ்ச் செய்யுளாலே புதுமையான பொருளைப் பாடுபவராகப் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அமைந்தார். இந்த வகையிலே தான், ஆற்றுப்படை என்னும் பழைய இலக்கிய வடிவத்தைக் கையாண்டு யாழ்ப்பாண மண்மணம் கமழும்படியான இலக்கியமாகக் காதலியாற்றுப் படை என்னும் கவிதை நூலை எழுதினார். யாழ்ப்பாணத்து ஊர்களின் புவியியலமைப்பு, அங்குவாழ் மக்களின் வாழ்வியல் ஆகியன இச்செய்யுள் நூலிலே கலைநுணுக்கத்தோடு வெளிக்கொணரப்படுகின்றன. வடமராட்சிப் பிரதேச சமூக பண்பாட்டுக் கூறுகள் மிகத் தெளிவாக இந்நூலிலே ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. வடமராட்சியிலே நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் ஆகிய முன்றலில் பல நாடக விற்பன்னர்களுடைய நாடகங்கள் மேடையேறும் இடமாகத் திகழ்ந்தது. அக்காலத்திலே அண்ணாவி தம்பையா வடமராட்சிப் பிரதேசத்திலே புகழ்பூத்த நடிகராகவும் அண்ணாவியாராகவும் விளங்கினார். இச்செய்திகளை யெல்லாம்,

''கூத்துப் பார்க்கக் கூர்நிலா வேளையில் சேர்த்துப் பலரைச்
சித்துகள் பாடிக் கையில் தாளங் கணக்குறத்தட்டி ஆர்ப்பொடு
தெருவில் ஆடவர் பெண்டிர் நெல்லண்டை நோக்கி நல்லசோடினை
செய்யும் பெரியதம்பியின் புதல்வன் நாடகத் தமிழை நன்கன
புணர்ந்தே தான் ஆடலும் பாடலும் அவையவருமாசான் அண்ணாவி தம்
பையன் அருமையாய் பழக்கிய விலாசம் பார்க்க வெற்றிலை
பருந்தி விரைந்து விரைந்து நடப்போர்''

என்னும் பாடலடிகளாலே குறிப்பிடுவர்.

பருத்தித்துறையிலிருக்கும் காதலனுடைய ஊருக்கு யாழ்ப்பாணத்துக் காதலியை ஆற்றுப்படுத்துவதாகக் காதலியாற்றுப்படை நூல் அமைகின்றது. யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்குமிடையே உள்ள ஊர்கள் பல சிறப்பித்துப் பாடப்படுகின்றன. இவ்வாறு பல ஊர்களுடாகச் செல்லும் காதலி பல நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் கண்டு செல்வதாகக் கொண்டு, அந்நிகழ்ச்சிகளையும் காட்சிகளையும் விரித்துரைக்கிறார். பள்ளிக்குப் போகும் பிள்ளைகள் விளையாடும் விளையாட்டுக்களை உண்மைக் காட்சிகளாக,

''ஏட்டைக்கட்டி இறப்பிலொழித்துப் புளிய மரத்திற்
றூங்கிக்
காய்க்கும் கல்லுப் பற்றியிலக்காயெறிந்தும் நாவன்
மரத்து
நலம்பெற வேறித் தாவிக் கொம்பரிற் நறாபழம்
பறித்துங்
கிந்தியடித்தும் வளையமுருட்டியும் தட்டுப்பாய்ந்துங்
கிட்டியடித்தும்
மாவின் கொட்டை மகிழ்வொடு போட்டும்
பலவகையாட்டம்
பாங்குடனாடும் பள்ளிப் பொடியன்''

என்னும் அடிகளாலே வடிக்கின்றார். உயர் இலக்கியத் தமிழிலே செய்யுள் புனைய முயன்றாலும் மண்வாசனைக்கேற்ற பணியாரம், வாய்ப்பன்கள், பள்ளிப் பொடியன், ஆத்தை, வல்லைமுனி போன்ற சொற்கள் தவிர்க்கமுடியாதபடி வந்துவிடுகின்றன.

மாணவர்களாகிய நாம் சேர்ந்து கவிதை எழுதிய பேராதனைக் கவிதை (1960) என்னும் நூலிலே பேராசிரியரும் பாட்டெழுதினார். ''குறிஞ்சிக் கோமான்'' என்ற புனைபெயரிலே மகாவலிகங்கை ஆற்றின் அருகே மாலையிலே காதல்புரியும் பல்கலைக் கழக நம்பியர் நங்கைகள் பற்றியொரு பாட்டு எழுதினார்.

''பறவைகளுக் கென்று மதன் விட்ட மலர்க்கணைகள்
பன்னுகுறி தப்பியங்கு பாங்கரதில் நின்ற
முறையுணர் கலைக்கழக நம்பியரை நங்கையரை
மோதிடவே மோனநிலை மேவியவர் நின்றார''

என்றொரு பாடலை எடுத்துக்காட்டாக இங்கு தருகிறேன். மென்மையான நகை உணர்வுடன் பாடல் புனையும் பண்பு பேராசிரியரிடம் இருந்தது என்பதற்கு இப்பாடலடிகளும் சான்றாக அமைகின்றன.

பேராசிரியருடைய கவிதை ஆக்கங்கள் எல்லாமே சிறப்புடையன என்று நாம் கூறவேண்டியதில்லை. ஆனால், அவரிடம் ஒரு சிறந்த கவிஞனுக்குரிய உள்ளம் இருந்த தென்பதற்கு அவருடைய காதலியாற்றுப்படை காலங்காலமாகச் சான்றுகூறி நிற்கும். அவர் கவிதைகளிலே மகிழ்ச்சி கண்டவர். அவரே இதனைப் பின்வரும் கூற்றுகளாலே இவ்வுண்மையினைப் புலப்படுத்துகின்றார்.

''இக்காலத்தில் நாவல் சிறுகதை முதலியவற்றின் மூலம் சமுதாய ஊழல்களையும் ஒழுக்க நெறியையும் எழுத்தாளர் உலகத்தார்க்குத் துலக்கிக் காட்டுவதுபோல நானும் சமுதாயத்திற் காணும் உயரிய பண்புகளையும் மட்டுமன்றித் தாழ்ந்தநிலைகளையும் இன்பதுன்பங்களையும் பாட்டிலே தீட்டிக் காட்டுவதில் உளநிறைவு கண்டேன் பாட்டின்மூலம் அழலாம். சிரிப்பிலும் பார்க்க அழுதலே கூடிய சுவையைக் கொடுக்கும். என் வாழ்வில் நகையும் அழுகையும் அதிகமாய் எழுந்த காலங்களில் தீட்டி வைத்தவையே இப்பாடல்கள். இவை எனக்கு இன்பத்தை ஊட்டின. இன்றும் ஊட்டுகின்றன'

பலர் சிறுகதை, நாவல் வடிவங்களாலே கூறமுயன்ற சமூகச் சிக்கல்களைப் பாடல்களினாலே வெளிப்படுத்தப் பேராசிரியர் முயன்றார். இதனாலே அவருடைய பெரும்பாலான கவிதைகள் கதைப்பாடல்களாக அமைந்தன.

## புனைகதையாசிரியனாக

புனைகதைத்துறையிலே பேராசிரியருக்கிருந்த ஈடுபாட்டை விளக்கிக்காட்டுவதாக இவர் எழுதிய பூஞ்சோலை, வாழ்க்கையின் விநோதங்கள், நீரரமகளிர் என்ற மூன்று நூல்களும் விளங்குகின்றன. ஜேர்மானிய நாவலாசிரியர் தியோடர் கதாம் என்பவர் எழுதிய இம்மென்சே என்னும் நாவலின் தழுவலாக அமைந்ததே பூஞ்சோலை என்னும் நாவலாகும். பிரேஞ்சு நாவலாசிரியர் அபூ என்பவர் எழுதிய ''இரட்டையர்'' என்னும் நாவலைத் தழுவி, ஈழநாட்டுக் கதை ஒன்றினைப் புனைந்து கூறுவதாக வாழ்க்கையின் விநோதங்கள் என்னும் நாவல் அமைகின்றது. தழுவல்களாக இந்நாவல்கள் அமைந்த போதும் எம்முடைய மண்ணின் கதைகளே புனையப்படுகின்றன. எம்முடைய நாட்டு மாந்தர்களே இவற்றின் கதை மாந்தர்களாகவும் அமைகின்றனர். பேராசிரியருடைய கற்பனைத்திறன், பாத்திரப் புனைவுச் சிறப்பு, தன்னாட்டுணர்வு, கலையுள்ளம் ஆகியனவற்றை இந்நாவல்கள் மூலம் உணர்ந்துகொள்கிறோம்.

பேராசிரியருடைய நீரரமகளிர் என்னும் சிறுகதையின் கதைக் கருவும் பிறமொழிக் கதையொன்றிலிருந்து தழுவப்பட்டதேயாகும். மட்டக்களப்பு வாவியிலுள்ள பாடும்மீனை பற்றி விபுலானந்த அடிகளார் குறிப்பிட்டுள்ளார். திருமணத்தாலே மட்டக்களப்புத் தொடர்பு பேராசிரியருக்கு ஏற்பட்டது. இப்பாடு மீன்களை நீரர மகளிராகக் கற்பனை பண்ணலாம், இது அவருடைய சிறுகதைக்குப் பின்னணியாக நின்றுள்ளது எனில் மிகையாகாது.

## நாடக ஆசிரியராக

பேராசிரியருடைய ஆக்கங்களையெல்லாம் நிரைப்படுத்திக் கூறிய வித்துவான் க. சொக்கலிங்கம் அவர்கள் (சொக்கன்) பைந்தமிழ் வளர்த்த பதின்மர் (1972 : 54) என்னும் நூலிலே இறுதியாக,

'' இவற்றையெல்லாம் ஆக்கியிருப்பினும் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பெயர் அவர் ஒரு சிறந்த நாடகாசிரியர் என்னும் வகையிலேதான் தமிழிலக்கிய வரலாற்றிலே நிலைத்து நிற்கும் என்பது எனது கருத்தாகும்.''

என்று கூறியுள்ளார், சொக்கன் அவர்களுடைய இக் கருத்தினை முழுமையாக நான் வழிமொழிகிறேன்.

ஈழத்து நாடக வளர்ச்சியை எண்ணுபவர், பேராசிரியர் கணபதிப்பிள்ளையை ஒருபோதும் மறந்துவிடார். மொழியியல், சாசனவியல் கட்டுரையியல் ஆகிய துறைகளிலே தமிழுக்கு தொண்டாற்றிய பேராசிரியர் நாடகத் தமிழுக்கும் குறிப்பிடுமளவிற்கான தொண்டு செய்துள்ளார். அவர் எழுதிய நாடக நூல்கள் நான்கு வெளிவந்துள்ளன. அவை; நானாடகம், இரு நாடகம், சங்கிலி, மாணிக்கமாலை ஆகியனவாகும். இவற்றுள் முதலிரு நூல்களும் ஈழத்துத் தமிழர் சமுதாய நிலையைச் சித்தரிக்கும் ஆறு சமூக நாடகங்களைக் கொண்ட தொகுதிகளாகும். மூன்றாவது நூல் ஒரு வரலாற்று நாடகமாகும். ஈழத்து யாழ்ப்பாணத்து அரசை ஆண்ட செகராசசேகரம் என்னும் பெயர் கொண்ட சங்கிலி (கி. பி 1519–1565) மன்னனே இந்நாடகத்தின் கதாநாயகனாவான். மாணிக்கமாலை என்பது ஒரு மொழி பெயர்ப்பு நாடகமாகும். இது கன்னோசி நாட்டை ஆண்ட உறர்ஷவர்த்தனன் என்னும் புலமைமிகுந்த மன்னரால் வடமொழியில் எழுதப்பட்ட ரத்னாவளி என்னும் நாடக நூலைப் பின்பற்றியதாகும், ஆகவே பேராசிரியர் சமூக நாடகம், வரலாற்று நாடகம், மொழிபெயர்ப்பு நாடகம், என நாடகத்துறையில் மூவகைப்பட்ட பகுதிகளுக்குத் தொண்டாற்றியுள்ளார். இனி இந்த நாடகங்களை ஆராய்வதன் மூலம் அவற்றிடையே காணப்படும் தனிப்பண்புகள், ஆசிரியருடைய நாடகத் திறமை ஆகியவற்றைக் கண்டு கொள்ளலாம்.

ஒரு நாட்டின் மொழியென்பது, அந்நாட்டு மக்கள் பேசும் மொழியே என்னும் கருத்து இப்பொழுது வலுவடைந்து வருகின்றது. தமிழ்ப் பேசும் மக்கள் யாவரையும் உலகரீதியாகப் பிணைப்பது எழுத்து மொழியேயாயினும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதியினர் பேசும் மொழியே உயிர்த்துடிப்புடையது; உண்மைத் தன்மை உடையதாகும். தமிழைக் கற்ற மேனாட்டார் எழுத்து மொழியினை மேடைப் பேச்சு மொழியென்றும், செயற்கைத் தன்மை வாய்ந்த மொழியென்றும், பேச்சுத் தமிழே இயற்கைத் தன்மை வாய்ந்ததென்றுங் குறிப்பிட்டுள்ளனர். இவ் உண்மையை மொழியியல் ஆராய்ச்சியில் ஈடுபட்ட பேராசிரியர் கணபதிப்பிள்ளை உணர்ந்து கொண்டார். இதன் பலனாக அவர் எழுதிய நாடகங்களில் பேச்சு மொழியினையே பெரிதும் கையாண்டார். இது பற்றிப் பேராசிரியர் பின்வருமாறு கூறுவர்.

'' தமிழை இயல். இசை, நாடகம் என வகுத்தார் முன்னோர், இயற்றமிழ் வேறு நாடகத் தமிழ் வேறு என்பதை வற்புறுத்தற் பொருட்டன்றே. இதனை அறியாது இயற்றமிழில் நாடகமெழுதப் புகுந்தாரது பேதைமை என்னே. இக் குற்றத்தைத் திருத்துவாம். அன்றியும் நாடகம் என்பது உலக இயல்பை உள்ளதை உள்ளபடி காட்டுவது. ஆகவே, வீட்டிலும் வீதியிலும் பேசுவது போலவே அரங்கிலும் ஆடுவார் பேசல் வேண்டும்'' இவ்வுரைகள் பேராசிரியரது எண்ணத்தை எமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

மாணிக்கமாலை தவிர்ந்த ஏனைய நாடகங்களில் பெரும்பாலும் அவர் கையாண்ட மொழி யாழ்ப்பாணத்துக்குப் பொதுவாயும், பருத்தித்துறைப் பகுதிக்குச் சிறப்பாயும் உள்ளது எனப் பேராசிரியரே குறிப்பிட்டுள்ளார் இவ்வாறு யாழ்ப்பாணப் பேச்சு வழககினை நாடகத்திற் புகுத்தி நாடகப் பாத்திரங்களுக்கு இயற்கைத் தன்மையினையும் யாழ்ப்பாணப் பேச்சு மொழிக்கு இலக்கிய அந்தஸ்தையும் வழங்கியுள்ளார் ஆசிரியர். இது இவர் ஈழத்துத் தமிழ் நாடகத்துக்குச் செய்த புதுமை எனலாம். பேராசிரியர் தொடக்கி வைத்த இப் புதுமை, சிறிது காலத்தில் கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு, வாழ்க்கையின் இயற்கைத் தன்மையைக் காட்டும் பண்பை மறைத்து, நகைச்சுவைப் பண்பையே ஊட்டி வந்தது. யாழ்ப்பாணப் பேச்சு வழக்கிலே ஒரு பாத்திரம் (பெரும்பாலும் ஒரு தரகர் அல்லது கதாநாயகனின் வயது போன தந்தை அல்லது சிறிய தந்தை முதலிய பாத்திரங்களாக அமையும்) மேடையில் உரையாடுவதென்றால் அப் பகுதி அவர்களுக்கு ''விழுந்து விழுந்து'' சிரிக்கக்கூடிய நகைச்சுவைப் பகுதியாகவே இருந்தது ஆனால் தற்போது பேராசிரியருடைய இலட்சியத்தை நன்குணர்ந்த நாடக இளைஞர்கள் நம்மிடையே தோன்றி விட்டார்கள் யாழ்ப்பாணப் பேச்சுமொழி நாடகத்திலே இடம்பெறுவது நகைக்காகவல்ல, பாத்திரங்களை யாழ்ப்பாண இயற்கைச் சூழலிலே அமைத்துக் காட்ட என்னும் கருத்து வலுவடைந்து வருவதைத் தற்காலச் சமூக நாடகங்கள் சிலவற்றிலிருந்து அறியமுடிகின்றது.

'பொருளோ பொருள்' நாடகத்தில் வரும் 'சிவில் சேவன்று' வடிவேலு பேசுகின்ற மொழியும் ''முருகன் திருகுதாளத்'' தில் வரும் பேராசிரியர் சோமசுந்தரம் பேசும் மொழியும் அவர்கள் வீட்டிலே அன்றாடம் பேசும்மொழியேயாகும். படிப்பு அந்தஸ்து, பணம் என்ற காரணத்தினால் வீட்டிலே பேசுகின்ற தமிழ்மொழி மாறிவிடாதல்லவா? இதையே பேராசிரியர் தன்னுடைய நாடகப் பாத்திரங்கள் மூலமாகப் புலப்படுத்துகின்றார்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை தான் வாழ்ந்த காலத்துத் தமிழர் சமூக நிலையத் தன்னுடைய சமூக நாடகங்கள் மூலம் எடுத்துக்காட்டுகின்றார். மேலைத்தேய நாகரிகம் எவ்வாறு தமிழர் சமூகத்தைத் தாக்கியதென்பதையும், அந்நாகரிகத்துக்குட்படாது பல படித்தவர்கள் அன்று வாழ்ந்தனர் என்பதையும் அவருடைய ''பொருளோ பொருள்'' என்ற நாடகம் நன்கு எடுத்துக்காட்டுகின்றது. உத்தியோகம், அந்தஸ்து முதலியவற்றால் யாழ்ப்பாணத்துக் கலியாணம், சீதனம் முதலியவற்றில் ஏற்பட்ட மாற்றத்தினைப் பேராசிரியரின் நாடகங்களிற் காணலாம்.

சங்கிலி நாடகத்திலே சங்கிலியனை ஓர் இணையில்லாத் தமிழ் மன்னனாக படைக்க முற்பட்டுள்ளார் ஆசிரியர். ஈழம்வாழ் தமிழ் மக்களுக்கும், தமிமொழிக்கும் 1956ம் ஆண்டிலே ஒரு சோதனை ஏற்படத் தொடங்கியது. இவ்வரசியற் சூழ்நிலையிலே பழைய வரலாற்றுப் பின்னணியை நோக்கி ஒரு வீரத் தமிழ் மன்னனை, இலட்சிய வீரனாகப் படைத்துவிடுவதால், ஈழத்தமிழ் மக்கள் உரம்பெறுவர் என்று எண்ணிப்போலும் பேராசிரியர் ''சங்கிலி'' என்னும் இந்நாடகத்தை வெளியிட்டார் என எண்ணத் தோன்றுகின்றது. இந்நாடகமும் அக்கால அரசியல், சமூக, சமய நிலைகளை நன்கு எடுத்துக் காட்டுவதால் ஒரு வரலாற்று நாடகநூல் எனக்கூறல் தகும்.

நாடிகை என்ற நாடக இலக்கணத்துக்கமைந்ததாகிய 'ரத்னாவளி' நாடகத்தினை 'மாணிக்கமாலை' எனத் தமிழிலே பேராசிரியர் எழுதியதிலிருந்து, அவருக்கு வடமொழியிலிருந்த புலமை மட்டுமன்றி, நாடகப் பண்பு குறையாது எழுதியதிலிருந்து அவருக்கு நாடகத்திலிருந்த ஈடுபாடும் நன்கு வெளிப்படுகின்றது. பாத்திரங்களுடைய கூற்றுக்களும் இடையிடையே அவர் வாய்மூலமாக வரும் பாடல்களும் தெளிவான தமிழ்ச் சொற்களிலே அமைந்துள்ளன. நாடகப் பண்பு குன்றாது, முதநூலுக்கேற்றபடி இந்நூலைப் பேராசிரியர் அமைத்துள்ளார்.

முடிவாக, பேராசிரியர் கணபதிப்பிள்ளைக்கு ஈழத்து நாடக வரலாற்றிலே ஒரு தனி இடமுண்டு. பேச்சுவழக்கினை முழுக்கப் புகுத்தி நாடகம் முதன்முதல் எழுதிய பெருமை அவரையே சாரும். பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராயிருந்தபடியால், பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு தன் நாடகங்களை மேடையேற்றுவித்தார். தன் நாடகங்களை மேடையிலே பார்த்து, அவற்றின் குறைநிறைகளை நோக்கி, பின்தான் எழுதும் நாடகங்களைச் சிறப்புற எழுதுவதற்கு அவற்றைத் துணைகொண்டார்.

## பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

### பற்றி மேலும் விரிவான விளக்கம் பெறக்கூடிய

### நூல்களும் கட்டுரைகளும்


அனு — ''காதலியாற்றுப்படைக் காட்சி'' இளங்கதிர்
இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்க ஆண்டு மலர்,
பேராதனை, 1962 – 63.

சண்முகதாஸ் அ. — ''ஈழத்து நாடக வரலாற்றில் ஒரு தமிழ்ப் பேராசிரியர்''
இளங்கதிர், 1968 – 69.

சண்முகசுந்தரம் த. — கலையருவி கணபதிப்பிள்ளை சில நினைவுகள்,
கலைப்பெருமன்றம், தெல்லிப்பளை, 1974.

சிவானந்தன் இ. — இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்,
கொழும்பு, 1979.

சிவநேசச்செல்வன் ஆ. — பேராசிரியர் கணபதிப்பிள்ளை
வாழ்க்கையும் பணியும்,
சங்கமம், 1974.

செல்வரஞ்சிதம் சி. — பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் நூல்கள் பற்றி ஆய்வு
(பிரசுரிக்கப்படாதது)
தமிழ்த்துறைச் சிறப்புக் கலைமாணித் தேர்வுக்காகச் சமர்ப்பிக்கபட்ட
ஆய்வேடு.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1988.

சொக்கன் க. — பைந்தமிழ் வளர்த்த பதின்மர்,
ஸ்ரீலங்கா அச்சகம், யாழ்ப்பாணம், 1972.

மனோன்மணி சண்முகதாஸ் — ஈழத்துஅறிஞர் வரிசையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளை
பல்கலைக்கழகப் பிரவேசச் சிறப்புமலர்,
புனித யோசேப் கல்லூரி, பண்டாரவனை, 1976.

வித்தியானந்தன் சு. — பேராசிரியர் கணபதிப்பிள்ளையும்
ஈழத்தின் அடிநிலைத் தமிழர் பண்பாட்டு விழிப்புணர்வும்
வித்தியானந்தம், மணிவிழா, வெளியீடு, 1984.

# சமூகத்தில் சமயம்

கலாநிதி. நா. ஞானகுமாரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
மெய்யியல் துறை,
யாழ். பல்கலைக் கழகம்.

இருபத்தோராம் நூற்றாண்டை அண்மிக்கின்ற இக்காலகட்டத்தில் விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஈர்ந்த கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்வின் பல்வேறு நடவடிக்கைகளுக்கும் விளக்கம் அளித்து புதிய பல கொள்கைகளை உருவாக்கிவரும் வேளையில் சமயம் முற்றாக அழிந்துவிடுமோ எனும் ஆசங்கையை எடுத்து விளம்புவோர் பலரை நாம் காண்கின்றோம். மற்றும் பல்வேறு கோணங்களிலிருந்தும் சமயத்துக்கு எதிராகப் பல்வேறு நியாயங்களும் வாதங்களும் எடுத்தியம்பப்படுகின்றன. இவற்றையெல்லாம் தாக்குப்பிடித்து நிற்கும் சக்தி சமயத்துக்கு உண்டோ என்பதை நாம் நோக்குவதற்குமுன் சமயம் என்றால் என்ன என்பதை முதலில் உணர்தல் நன்மை பயப்பதாகும்.

சமயம் எனின் என்ன என்பதை யாவரும் பொதுவாக அறிந்திருக்கின்றனராயினும் சமயம் எனும் பொருளின் உண்மையான தாற்பரியத்தை பொதுமக்கள் யாவரும் சரிவர உணரவில்லை என்பதே உண்மையாகும். சிறு வயதில் சமயப் பதிகங்களையும், தேவாரங்களையும், கிரியைகளையும், புராணங்களையும் பற்றிக் கற்கும் போது பலர் இவைகளையே சமயம் எனக் கொண்டு விடுகின்றனர். வளர்ந்து பெரியோரான பின்னரும்கூட இந்நோக்கு இன்றைய சமூகத்தில் நிலைத்து நிற்கின்றதைக் காண்கின்றோம். மேற்குறிப்பிடப்பட்டனவற்றில் விதிக்கப்பட்டவாறு கோயிலுக்குச் சென்று வழிபாடு நடத்துவோமாயின் சமயத்தின் கடமைகளை ஆற்றிவிட்டோம் எனக் கருத முற்படுகின்றனர் பலர், ஆயினும் சமூக வாழ்வில் ஈடுபட்ட ஒருவன் கோயில் வழிபாடுகளை மட்டிலும் விதிப்படி ஆற்றுகின்றமையினால் உண்மைச் சமயத்தைக் கடைப்பிடிப்பவனாகிறான் என்று கூறிவிட முடியாது. காலையிலும் மாலையிலும் கடவுளைத் தொழுதுவிட்டு நாம் நாம் உண்மைச் சமயிகள் என்று கூறுவோர் பலர் எம்மிடையுண்டு. ஆயினும் உண்மைச் சமயியாக விளங்குபவருக்கு இருக்கவேண்டிய தகுதி கடவுளை வழிபடுதல் அல்லது ஆலயத்திற்குக் கிரமம் தவறாது செல்லுதல் ஆகியவற்றில் மட்டும் அடங்கிவிடாது. சமயம் பற்றி விளக்க முற்பட்ட இந்தியத் தத்துவ அறிஞர் டாக்டர் இராதாகிருஷ்ணன் 'மறை பொருள்கள் பற்றிய கல்வியையும், கிரியைகள் அல்லது சடங்குகள் பற்றிய உண்மைகளையும் அறிதல் மட்டும் சமயமாகிவிடாது' எனச் சுட்டுதல் காணலாம். மேலும் சமயம் என்பது ஒரு வாழ்க்கைவழி என விளக்கம் தந்துள்ளார். சமூக வாழ்க்கையுடன் சமயம் தொடர்புறுகின்ற வேளை அங்கு உண்மையைக் கண்டறிதலும் (தரிசனம்) உண்மையை உய்த்து அறிதலும் (அனுபவம்) உள்ளடங்கும் பிரதான அம்சங்களாகின்றன. இங்குதான் சமயம் எனும் பதத்தின் தாற்பரியமும் தெளிவாகின்றது.

விஞ்ஞானம் வளர்ச்சியடைந்ததுடன் அனைத்து நிலை அறிவுகளும் விஞ்ஞான பூர்வமான அறிவுகளாகப் பரிணமித்துள்ள இக் காலச் சமூகங்களிலும் சமயங்கள் செழித்து வளர்தற்குரிய காரணங்கள் அச்சமயங்கள் மனித சமூகத்திற்கு வழங்கும் பண்பாட்டினை மறைமுகமாகச் சுட்டி நிற்பதாகின்றது. கோடி செல்வம் கொண்டிருந்தாலும் கோபுரத்தில் வாழ்வை நடாத்தினாலும் நிரந்தரமற்ற இவ்வுலகப் பொருட்களினால் மனிதனைத் திருப்திப்படுத்த முடியாது போய் விடுகின்றது. இவ்வுலகப் பொருட்களினால் திருப்தியடையாத ஓர் மனிதனின் நிரந்தர திருப்திக்கான விழைவு அல்லது துடிப்பினைச் சமயங்கள் சித்தரிக்கின்றன, 'எல்லையொன்றின்மை எனும் பொருளதனை' காட்டி நிற்கும் பண்பினதே சமயமாகும். இச் சமயம் மனநிறைவினையும் அமைதி பொங்கும் சாந்தியினையும் வாரி வழங்க வல்லதாகின்றது.

சமயம் என்றால் என்ன என விளக்கமளிக்கப் புகுந்த சுவாமி பவித்திரானந்தா, 'மனிதனுள் அடங்கியுள்ள ஈடேற்றத்தைப் பெறவிரும்பும் ஓர் அவா அல்லது உந்துதலின் பிரதிபலிப்பே சமயம்' என எடுத்தாளுகின்றார். இவ்வுந்துதல் வழியே துன்பமயமான வாழ்வின் நிரந்தரமின்மையினின்றும் ஈடேற்றமான, கட்டுப்பாடற்ற, நிர்ணயமற்ற, இடத்தை அடையச் சாத்தியமாகின்றது. நிரந்தரமற்ற இவ்வுலகின் எப்பொருளும் அவனுக்கு நிரந்தரமான திருப்தியை அல்லது மகிழ்ச்சியை அளிக்க முடியவில்லை. ஆகவே அவன் நிரந்தரமான நிம்மதியை, நிரந்தரமான இன்பத்தை அமைதியைப் பெறுதற்குரிய வழியை நாடுகின்றான் அது சுலபமான வழிமுறையாக இல்லையாயினும்

அவனுக்கு அத்தகைய திருப்திகரமான இடம் உள்ளதென்பதும் தெளிவாகிவிட்டது. அதனை இட்டு ஆழ்ந்து சிந்திக்கத் தொடங்குகின்றான். இதனையே தத்துவ விசாரம் அல்லது தத்துவச் சிந்தனை என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் விளம்புகின்றார். இதன் வழி உண்மையில் நிரந்தரமான ஈடேற்றத்தைப் பெறுவதற்காக மனிதன் செய்யும் முயற்சிகளின் பிரதிபலிப்புத்தான் சமயம் என விளங்க வைக்கப்பட்டது. இங்கு மனித வாழ்வின் சீரிய நோக்கினை அடைந்திடத் துணைபுரிவதாய்ச் சமயம் அமைய அச் சமயத்திற்கு உரமான அடித்தளமாக தத்துவம் அமைகின்றது. சுருங்கச் சொல்லின், தத்துவம் வாழ்க்கையின் உண்மை நிலையினைத் தர்க்க முறைக்கு இயைந்த நிலையில் எடுத்தியம்ப சமயங்களோ வாழ்வில் வேண்டி நிற்கும் நோக்கினைப் பூர்த்தி செய்ய வல்ல நடைமுறை வழிகளினைக் காட்டுவனவாக அமைகின்றன.

சமூக வாழ்வில் ஒவ்வொரு மனிதனிடமிருந்தும் உண்மைச் சமயம் வேண்டுவது நல் ஒழுக்கத்தையே தவிர, வெறும் சம்பிரதாயங்கள், சடங்குகளை மட்டும் அல்ல. இதனையே உண்மைச் சமயம் வேண்டுவது சடங்குகள் அல்ல, ஆனால் நல்நடத்தையே என இராதாகிருஷ்ணனும் வலியுறுத்தி நிற்கின்றார். நல் நடத்தையை உருவாக்குவதில் சடங்குகள், சம்பிரதாயங்கள் உதவுமாயின் மிகநன்று. ஆனால் நல் நடத்தையைக் கெடுக்கும் எந்தச் சடங்குகளையும் உண்மையான சமயம் ஆதரிக்கவில்லை என்கின்றார் அவர். உண்மைச் சமயத்தில் சமயத்திற்குத் தீங்குகள் விளைவிக்கும் மூட நம்பிக்கைகளுக்கு இடமில்லை என்கிறார். ஒரு குறிப்பிட்ட கடவுளை வணங்கினால் மட்டுமே ஈடேற்றம் பெறப்பட முடியும் என இந்து சமயம் போதிக்கவில்லை. அவ்வாறே எந்த ஒரு சமயமேனும் போதிக்குமாயின் அது ஏற்றுக் கொள்ளத் தக்கதன்று. சமயம் வேண்டுவது சிறப்புடைய கோட்பாடுகளல்ல. ஆனால் நல்வாழ்க்கை முறையேயாகும். இதனால் தான் ஒரு நடத்தையின் செம்மையை நிர்ணயிக்கும் விடயத்தில் அந்நடத்தைக்கான நோக்கு நன்மை பயப்பதாக அமைதல் வேண்டும் எனவும் அவ்வாறு நிர்ணயிக்கும் காரணிகளில் நோக்கு ஒன்றே நிச்சயமாக அமைந்திருக்க வேண்டியதென்றும் ஜேர்மனிய நாட்டைச் சேர்ந்த தத்துவ ஞானியான இமானுவல் கான்ற் என்பவர் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட நோக்கு செம்மையுற உருவாகுவதற்கு அவசியமாகின்ற தன்மையென்னவெனில் நல்லதொரு மனப்பாங்காகும்.

மனித மனதைப் புனிதமாக்க, நல்ல மனப்பாங்கை அமைத்துக் கொடுப்பதில் சமயமானது முக்கிய இடத்தினை வகிக்கின்றது. இறைவழிபாடு, தியானம் மற்றும் பல்வேறு சமயச் சம்பிரதாயங்களும் மேற்குறிப்பிட்ட தன்மையை மனிதனில் உருவாக்க முயல்கின்றன. மனிதன் இவற்றின் உபயோகத்தை நன்கு பயன்படுத்தி முக்கிய நோக்கான தனது உளத்தூய்மையை வலுவடையச் செய்ய முயலுதல் வேண்டும். சமயங்களின் உட்கிடைதான் மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழி கொடுத்துதவுகின்றது. இவ்வகையில் வழிகாட்டும் சமய வாழ்வானது ஊரறிய உலகறியப் பிறர் போற்றப் புகழ வாழும் வாழ்க்கையன்று. ஒவ்வொரு மனித உள்ளத்தின் புனிதப் பயணத்தின் முன்னேற்றமே சமயம் எனுமாற் போல் அமைவதாகின்றது. ஆன்ம ஈடேற்றத்துக்கு அவசியமானதெனக் கருதப்படுவதும் இதுவேயாகும். எவ்வெவ் வழிகளின் மூலம் உங்கள் மனதைத் தூய்மையானதாக்க முடியுமோ அவ்வவ் வழிவகைகளை மேற்கொள்ளுங்கள் எனப் போதிக்கின்றது இந்து சமயம். இந்து சமயத்தைப் பின்பற்றுவோர் மட்டுமே ஈடேற்றத்தை அடைய முடியும் என அது கூறவில்லை. நதிகள் பலவாயினும் அவை இறுதியில் சமுத்திரத்தில் சங்கமிப்பதுபோல் அல்லது விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே என்பதுபோல வழிகள் பலவாயினும் அடையும் இலக்கு ஒன்றே என்பதனை அடிநிலையாகக் கொண்டு திகழ்கின்றது. இறைவன் ஒருவனேயாவான், முனிவர்களும் ஞானிகளும் அவனைப் பல்வேறு பெயர்களால் வழிபடுகின்றனர் என்பதும் இந்து சமயம் காட்டும் தத்துவமாகும்.

சமயங்கள் உண்மையானவை எனக் கூறுகின்றீர்களே, ஆனால் ஒரு சமயம் காட்டுகின்ற கடவுள் அல்லது இறைவன் மற்றொரு சமயத்தின் கடவுளில் இருந்து வேறுபடுகின்றதே! இவற்றில் எது உண்மைக் கடவுள் என்று வினா எழுப்புவோருக்கு இராதாகிருஷ்ணன் தெளிவாகப் பதில் அளிக்கின்றார். இவ்வாறு வேறுபாடுகள் காணப்படுவதற்கான உண்மைக் காரணம் நாம் கடவுளைப்பற்றி அவரின் உருவம் குறித்து ஏற்படுத்திக் கொண்ட வேறுபாடான அபிப்பிராயங்களே என்று கூறுகின்றார். ஆயினும், கடவுளைப் பற்றிய உண்மைகளை நாம் சரிவர அறிய முடியவில்லை என்பதற்காக கடவுள் இல்லை என்பது பொருத்தமாகாதென்பது அவருடைய கருத்தாகும். உண்மையில் கடவுளுக்கான எவ்வுருவ வழிபாடும் மனிதனால் உருவாக்கப்பட்டதேயாகும். கடவுளின் உருவை உணர்ந்து கொள்ளுதல் படம் பிடித்து அமைத்துக் கொள்ளுதல், மனிதனுக்கு இயலாத செயலாகும். இதனை ஆற்றுகையில் அவன் முறையான, சரியான உருவத்தைக் கொண்டுவர முடியவில்லை இதனாலேயே வேறுபாடுகள் தென்படுகின்றன. ஆயினும் உருவகங்களில் வேறுபாடு தென்படுவதால் கடவுளை நோக்கி மனிதன் வழிபாடு செய்தல் பயனற்றுப் போய் விடுகின்றது என்பது பிழையான கருத்தாகும். எதனை வழிபட்டாலும் கடவுளெனக் கருதி வழிபாடு செய்யும் போது அது அதனைச் சேர்ந்து அடைந்து விடுகிறது என்பது உண்மை. மலைகளிலிருந்து உற்பத்தியாகும் ஊற்றுக்கள் இறுதியாக எவ்வாறு நதியை வந்தடைகின்றனவோ அதே போன்று கடவுள் என்று நினைத்து ஆற்றப்படுகின்ற வழிபாடுகள் யாவும் இறைவனை வந்து அடைந்து விடுகின்றன என இந்து சமயம் போதிக்கின்றது.

உண்மையான சமயி தன்னுள் அன்பு, சேவை ஆகிய வற்றை ஆழப்பதிய வைக்க வேண்டும். இவையே உண்மைச் சமயத்தின் பிரதிபலிப்புக்களாகும். சமய ஞானிகளின் வரலாறுண்மைகள் கற்றுத் தந்த பாடத்தினை மீட்போமாயின் தன்னை மறந்த காதல், தியாகம், தொண்டு ஆகியன கலந்திணைந்த பக்தி நிலை தெளிவாகத் தெரிகின்றது. இத் தன்மைகளை உருவாக்கி மனதை ஒருநிலைப்படுத்துவதற்கு முயல்வதே உண்மையாக வேண்டப்படுவதாகும். ஒரு நாளைக்குப் பல தடவைகள் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்வோரில் பலர் நெஞ்சில் அன்பு எனும் பண்பு சிறிதும் அற்றவராயும் குரூர நடவடிக்கைகளை ஆற்றுபவராகவும் இருக்கக் காண்கின்றோம். சமயத்தின் உண்மையான எதிரிகளாக, படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில் என்பது போல இருப்பவர்கள் இவர்களே. ஏனெனில் இவர்கள் சமயம் எனும் போர்வையின் கீழ் தமது சுயநல நோக்குகளையும், தேவைகளையும் பூர்த்தி செய்ய விழைகின்றனர், இவர்கள் சமூகத்தில் பசுத்தோல் போர்த்த புலிகளாக உலாவி வருகின்றனரென்பதும் கண்கூடு. இத்தகையோர் எத்தனைமுறை கடவுளை வழிபடினும் இறையருளைப் பெறமாட்டார்கள் என்பது உண்மை. உண்மைச் சமயியானவன் தன்னுள் அன்பு பண்பு, உண்மை, தியாக மனப்பான்மை, சுயநலமின்மை, சேவை ஆகிய நல்லொழுக்கங்களைக் கொண்டிருத்தல் அவசியமாகும். இவ் ஒழுக்கங்களை உருவாக்குவதில் தெய்வவழிபாடு உதவுகின்றதென்பதும் மனத்திடைக் கொள்ளத்தக்கதாகும்.

உலகப் பெருஞ் சமயங்களுள் சனாதன தர்மம் குறிக்கும் இந்து சமயம் உலகளாவிய மனிதப் பண்பினை உயிர்ப்பாகக் கொண்டதென விளக்கிய வீர புருஷர் விவேகானந்தரின் கூற்றுத்தான் இன்றைய சமூகங்களில் எவ்வளவு பேரால் விளங்கிக் கொள்ளப்படுகின்றன. 'அன்பே கடவுள்' எனவும் 'உண்மையே கடவுள்' எனவும் திரும்பத் திரும்ப இடித்துரைத்த மகாத்மா காந்தியின் கூற்றுக்கு அவசியமென்ன என்பதனை ஆழ்ந்து நோக்கினால் இன்றைய சமூகங்கள் சிலவற்றிடையே குறிக்கோள் எதுவுமின்றி வாழ்கின்ற போக்கினை இனங்காணக் கூடியதாகவுள்ளமை புலனாகும். வாழ்வின் இறுதி நிலையிலும் தனக்குப் பொல்லாங்கு செய்தவன்மீது அன்பு கொண்டவராக வாழ்ந்து மறைந்த மகான் மகாத்மா காந்தி ஆவர். இத்தகைய அன்பு மனப்பான்மையை அடையப் பெறுவது சுலபமான விடயமெனக் காந்தி எவ்விடத்தும் கூறவில்லை. ஆயினும் நாம் அன்பு நிறைந்தவர்களாக வாழ வேண்டும் என்று உண்மையில் விழைகின்றவர்கள் இன்று சமூகத்தில் எத்தனை பேர் உள்ளனர்? தன் சுயநலத்தை மட்டும் பேணாது பிறர் நலத்தையும் பேண விழைவதன்மூலம் அன்பை வளர்க்க முடியும் என்பதனை காந்தி எடுத்தாண்டுள்ளார். உடனடியாக இச்சேவை மனப்பான்மையை வளர்ப்பது இயலாததாயினும் இதற்கான முயற்சியில் ஈடுபடச் சமூகத்தவர் விரும்புகின்றனரா எனும் கேள்விக்கு விடைகாண வேண்டியோர் சமயிகளே ஆவர்.

இன்றைய சமூகங்களில் சமயமானது பரந்த நோக்குடையதாக விளங்க வேண்டும். தெய்வம் பல சொல்லிப் பகைமை - குரோதங்களை வளர்ப்பது அறிவுடைமையாகாது, யாவரையும் அன்புடன் மதித்து நடாத்தும் பண்பைப் பகவத் கீதை போதிக்கின்றது. 'லோக சங்கிரகம்' என்னும் உலக ஒற்றுமைக்காக உழைப்பதற்கு முதற்கண் தேவையானது அன்புடன் கூடிய உளச்சிந்தனையாகும். ஆகவே உண்மைச் சமயிகள் எவ்வாறு கோயில் வழிபாடு, சடங்குகள், சம்பிரதாயங்கள் ஆகியவற்றில் ஈடுபடுகின்றனரோ அவ்வாறே தம்முள் அன்பு, சுயநலமின்மை எனும் நற்பண்புகளையும் வளர்க்க முயலவேண்டும்.

இவைகளைக் கொண்டதே உண்மைச் சமயமாகும் உண்மைச் சமயம் இவ்வுலகிலிருந்து இல்லாதொழிய வேண்டுமாயின மனித சமூகத்தில் இப்பண்புகளுக்கு இடமில்லாது போன பின்பே அது சாத்தியமாதல் இயலும் என விளம்புகின்றார் சுவாமி பவித்திரானந்தா. இந் நற்பண்புகளைச் சமயக்கலாச்சாரம் என்று குறிப்பிட்டால் கூடத் தவறாகாது. ஏலவே கண்ட இந் நற்பண்புகள் இன்றைய சமுதாயத்தில் இழையோடி நிற்கும் வரை உண்மைச் சமயம் அழிவற்று நிலைத்து நிற்குமென்பதில் சந்தேகமில்லை.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரது வாழ்க்கை நெறியும் ஆத்மீகச் சிந்தனைகளும்

திருமதி. ஏ. என். கிருஷ்ணவேணி
விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## அறிமுகம்

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுப்பது மதம். இவ்வழிகாட்டுதல்கள் காலத்திற்குக் காலம், யுகத்திற்கு யுகம் அவதார புருஷர்களினாலும் ஆன்மீகச் செல்வர்களினாலும் நடைமுறைப்படுத்தப் பட்டதனைக் காண்கின்றோம். இத்தகைய மகா புருஷர்களின் வரிசையில் வைத்துப் போற்றப்படுபவர் ஸ்ரீ இராமகிருஷ்ணபரமஹம்சர் அவர்கள். இவரது இயற்பெயர் கதாதரர், 19ம் நூற்றாண்டில் (1836 — 1886) பாரத நாட்டின் ஆன்மீக வாழ்வு, சமய, தத்துவப் பண்பாட்டுக் கலாசார மரபின் முழுவடிவமாக அவதரித்தவர் இராமகிருஷ்ணர் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. எளிமையும் ஏழ்மையும் நிறைந்த ஆசாரமான அந்தணர் குலத்தில் தோன்றிய அவர் சிறுவயதில் பள்ளிப்படிப்பில் ஆர்வங் கொள்ளாது தெய்வீக இசையிலும், பக்திப்பாடல் களிலும், நாடகங்களிலும் தெய்வீகக் கதைகளி லும் ஈடுபாடுகொண்டார். பள்ளிப்படிப்பு பக்தியை வளர்க்குமா? உலகபோகங்களில் இருந்து விடுபட்டு பரம்பொருள் அனுபவத்தைப் பெற உதவுமா என்ற ஏக்கம் ஸ்ரீ இராமகிருஷ்ணரிடம் இருந்தது. இளமையி லேயே தியானஞ் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதுடன், ஏட்டுப்படிப்பு உலகியல் அறிவும் ஆன்மீக ஞானம் ஆகாதெனவும், அனைத்துயிர்களை யும் ஒன்றாகக் கருதும் ஒருமைப்பாடு, மனப்பக்குவம் ஆகியவையே ஆன்மீக ஞானம் எனவும், இதுவே வீடு பேற்றுக்குரிய சாதனம் எனவும் உணர்ந்து கொண் டார்.

## பரவித்தியா

உபநிடதங்கள் கூறும் பரவித்தியா, அபரவித் தியா என்று இருவகையான அறிவுபற்றி ஆராயின் பரவித்தியா என்பது மேலான பிரமம், ஆன்மா பற்றிய உயர்ந்த அறிவாகவும், அபரவித்தியா என்பது சாதாரணமாக நூல்களைக் கற்று அதன்மூலம் பெறும் அறிவாகவும் விளக்கப்பட்டிருப்பதைக் காண லாம். சாந்தோக்கிய உபநிடதத்தில், நாரதருக்கும் சனற்குமாரருக்கும் இடையே நடைபெற்ற உரை யாடல் இதனைத் தெளிவுபடுத்துகிறது. இங்கே நாரதர் தாம் "வேதங்கள் உபநிடதங்கள், இதி காசங்கள், புராணங்கள், மந்திரம், தந்திரம், வான நூல் சாஸ்திரம் போன்ற சகல கலைகளையும் கற்றுள் ளேன். ஆனால் ஆத்மஞானத்தின் மூலமே மோட் சத்தைப் பெறமுடியும். எனக்கு அதையே போதித் தருள்வீராக", என்று சனற்குமாரரிடம் கேட்டபோது ஆத்மா பற்றிய பரஞானம் ஒன்றே மோட்சத்திற்கு வழி என்ற கருத்து தெள்ளெனப் புலப்படுகிறது. சக்திஉபாசகரான இராமகிருஷ்ணர் இப்பரஞானத் தைப் பெறுவதற்கே தியானம், இறைவழிபாடு போன்ற எளிமையான நெறிகளைப் பின்பற்றியிருக்க வேண்டும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண் டும்.

சனாதனதர்மம் எனப் போற்றப்படும் இந்து மதத்திற்கு அடிப்படையாக அமைந்த நூல்கள் வேதங் கள், வேதங்களின் சாரமாகிய உபநிடதங்கள், உப நிடதங்களின் சுருக்கமாகிய பிரமசூத்திரம் ஆகிய மூன்றுமாம். இவற்றைப் பிரஸ்தானத்திரயம் என்று அழைப்பது வழக்கம். வேதஉபநிடதங்கள் கூறும் கருத்துக்களுக்குப் புத்துயிரூட்டி, அவற்றுக்கு விளக்கங் கொடுக்கும் வகையில் வாழ்ந்து காட்டியவர் இராம கிருஷ்ணர்

பரம்பொருளாகிய பிரமமும் அனைத்துடல் களின் இயக்கத்திற்கு காரணமான இருக்கும் ஆன்மா வும் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை நன்குணர்ந்து கொண்டவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர் என்பதை மறுப்பதற் கில்லை. அறிபவனாகிய ஆத்மனும், அறியப்பட வேண்டியதாகிய பிரமமும் ஒன்றாய் இருக்கையில், அதனின்றும் வேறாய், அதனால் அறியப்பட வேண்டிய தாய் வேறேது உண்டு (பிருஹதாரண்யகம்) என்று யாக்ஞவல்கியர் வினாவுவது போன்று, வாழ்ந்து காட்டியவர் இராமகிருஷ்ணர்.

## ஸ்ரீ இராமகிருஷ்ணர் பரமஹம்சரே வாழ்க்கைநெறி

இராமகிருஷ்ணரதும் அவரது வாழ்க்கைத்துணையாக அமைந்த அன்னை சாரதாதேவியாரதும் வாழ்க்கைநெறி சாதாரண மானுட வாழ்க்கைநெறியாக அமைந்துவிடவில்லை. இந்துமதம் கூறும் ஆச்சிரமம் தர்மத்தில் கிருகஸ்தம் என்று கூறப்படும் இல்லறதர்மம் மிக உயர்ந்த இடத்தை வகிக்கின்றது. வாழ்க்கைத் துணையாக இல்லாளுடன் இணைந்து ஆற்றப்படும் அறங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையிலே ஒருவன் பிரமயக்ஞம், தேவயக்ஞம், பிதுர்யக்ஞம் மானுடயக்ஞம், பூதயக்ஞம் ஆகிய ஐம்பெரும் வேள்விகளையும் ஆற்றவேண்டும் என்று ஸ்மிருதி நூல்கள் கூறுகின்றன. மேலும் இல்லறம் தவிர்ந்த ஏனைய பிரமச்சரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய ஆச்சிரம நிலைகளை அனுஷ்டிக்கப்படுபவர்களுக்கும் உற்ற துணையாக விளங்குபவன் இல்லறத்தானே. சாரதாதேவியாருடன் இணைந்து சமயச் சடங்குகளையும், தர்மங்களையும் மேற்கொண்டு இந்துமதம் வகுத்த நெறிகளில் வாழ்ந்து ஆத்மீக சாதனை செய்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர். சாதாரண பௌதீக வாழ்க்கையில் ஈடுபடாது லௌகீக வாழ்க்கையை மேற்கொண்டமை போற்றுதற்குரியதே.

தெய்வீக புருஷரான இராமகிருஷ்ணர் இளமைப் பருவத்திலே தியானம், வழிபாட்டில் ஈடுபட்டு நீண்ட நேரம் பக்திப் பரவசத்தில் ஆழ்ந்து விடுவார். இதனால் உலகியல் வாழ்வில் ஊறிப்போனவர்களின் கண்களுக்கு அவர் பைத்தியக்காரராகவே தென்பட்டார். ஆனால் பரமஹம்ஸரது கருத்துப்படி இறைவழிபாடும், உலக மக்களுக்குக் கடமை செய்தலுமே பிறவிப் பெரும்பயன் அவர் துறவுநெறி நின்றாலும் தமது இளம் மனையாளைத் துறக்கவில்லை. அவரை அன்புடன் நேசித்து பக்குவத்திற்கேற்ப தமது உயர்ந்த இலட்சியங்களைப் போதித்தார். சாரதாதேவியாரே தம் கணவனது போதனை குறித்து தனது சிஷ்யர்களுக்குக் கூறும் போது " அப்பொழுது பேரானந்தம் நிறைந்த பூரண கும்பம் ஒன்று என்னுள்ளத்தில் வைக்கப்பட்டது போன்று நான் உணர்ந்தேன்" என்று தனது மனநிலையை எடுத்துக் கூறியுள்ளமை இங்கு நோக்குதற்குரியது.

பிரம்மஞானத்தில் நிலைபெற்ற ஒருவனுக்கு ஆண் பெண் வேறுபாடில்லை மனிதனுக்கு அடிப்படைச் சக்தியாக அமைந்த ஓர் பொருளே ஆத்மன் அந்த ஆத்மன் காரணமாகவே உடல் இயங்குகிறது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக்கரணங்கள் இயங்குகின்றன. உடல் அல்லது சரீரமே ஆண் பெண் வேறுபாடு கொண்டது. ஆத்மன் பகுதிகள் அற்றது, எல்லைகளைக் கடந்தது. வேற்றுமைகளுக்கப்பாற்பட்டது. வண்டியிலே கட்டப்பட்ட குதிரையைப் போன்று ஆத்மன் சரீரத்திற் கட்டப்பட்டுள்ளது காண்பது கண்ணல்ல, கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பதே ஆத்மன். பேசுவதும் நாக்கல்ல, நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவதே ஆத்மன். மனதும் ஆத்மாவல்ல, மனதைக் கருவியாகக் கொண்டு இதை எண்ணுவேன் என்று எண்ணுபவனும், மனதை அடக்குபவனுமே ஆத்மன். மனத்தையே கருவியாகக் கொண்டு தியானத்தில் மூழ்கி பரமாத்மாவைக் கண்டு ஆனந்தங்கொள்பவனே ஆத்மன். இவ்வாறு உடலினின்றும், இந்திரியங்களினின்றும் உடலின் செயல்களினின்றும் மனத்தினின்றும் வேறான பொருளே ஆத்மன். அந்த ஆத்மன் அழிவற்ற, நித்தியமான உள்பொருள். ஒருவனது உடல் சாவற்ற அழிவற்ற உருவமற்ற ஆன்மாவிற்கு இருப்பிடமாக உள்ளது. ஒருவன் இந்த உடலோடு இணைக்கப்பட்டிருக்கும் போது சுக துக்கங்களுக்கு ஆளாகிறான். ஆனால் எவன் உடலினின்றும் விடுபடுகிறானோ அவன் சுகதுக்கங்களாற் பீடிக்கப்பட மாட்டான் (சாந்தோக்கிய உபநிடதம்). அவன் காணும் காட்சியில் பிரம்ம சொரூபம் ஒன்றே தெரியும் இத்தகைய பிரம்மானுபவத்தில் திளைத்த ஸ்ரீ இராமகிருஷ்ணர், தமது மனைவி சாரதையுடன் நடத்திய வாழ்க்கை உபநிடதச் சிந்தனைகளுக்கு விளக்கந் தருவதாக உள்ளது. யாக்ஞவல்கியர் மைத்திரேயி உரையாடலில் (பிருஹதாரண்யக உபநிடதம்) " கணவன் நேசிக்கப்படுவது கணவனின் பொருட்டே அன்று. அவன் ஆத்மாவின் பொருட்டே. மனைவி நேசிக்கப்படுவது மனைவியின் பொருட்டே அன்று, அவன் ஆத்மாவின் பொருட்டே. புத்திரர் நேசிக்கப்படுவது புத்திரர் பொருட்டன்று, அவர் ஆத்மாவின் பொருட்டே என்ற உயர்ந்த தத்துவம் கணவன், மனைவி, புத்திரர் என்பதெல்லாம், கணவன், மனைவி, புத்திரர் என்பதற்காகப் போற்றப்படுபவையல்ல, அவை ஆத்மாவின் பொருட்டே போற்றப்படுகின்றன என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகின்றது. இதிலிருந்து பிரமஞானத்தைப் பெற்ற ஒருவனே இல்லறத்திலும் துறவைப் பேண முடியும் என்ற உண்மையை அறிந்து கொள்ளலாம்.

குருதேவரது வாழ்க்கையை நோக்கின் ஆன்மீக சாதனை என்பது அனுபவத்தின்மூலம் உணர்வுபூர்வமாக ஏற்படுவதேயன்றி அறிவின் மூலம் உண்டாவதன்று 'பரம் பொருள்' என ஒன்று உண்டென்று அறிவது வேறு, உண்டென்று உணர்வது வேறு அறிவும் உணர்வும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாயினும், இராமகிருஷ்ணர் உணர்வுக்கு முதலிடம் கொடுத்தார்.

### பக்திநெறி

சாதகன் ஒருவனுக்கு இலகுவான நெறியாக விளங்குவது பக்தியே. பக்தியிலும் உயர்ந்தது, சரணாகதித் தத்துவமாகப் போற்றப்படும் பிரபக்தி, கீதையில் கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனுக்கு இதையே போதிக்கிறார்.

" சர்வதர்மான் பரித்தியஜ்ய மாம் ஏகம் சரணம் விரஜ,
அகம் துவா சர்வ பாபேபியோ மோசஷ்யிஷ்யாமி மசுசக "

(பகவத்கீதை)

''சகலவிதமான தர்மங்களையும் கைவிட்டு ஒருவன் என்னையே சரணம் என்று அடைந்தால் நான் அவனை சகலவிதமான பாவங்களில் இருந்தும் விடுவித்து மோட்சத்தை அருளுவேன்'' என்ற கருத்து வெளிப்படுத்தப்படுகிறது உபநிடதங்களில் பிரமஞானம் மோட்ச சாதனமாகக் கூறப்பட்டாலும், பக்தியும் ஞானமும் ஒன்றுக்கொன்று முரண்பாடானவையல்ல. உண்மை பக்தன் ஞானியாகவும், உயர்ந்த ஞானி சிறந்த பக்தனாகவும் விளங்குகிறான். இத்தகைய நிலையில் உள்ள ஒருவன் கர்மயோகி ஆகிறான். கீதை கர்மயோகியை 'ஸ்திதப்பிரக்ஞன்' என்று அழைக்கிறது. ஸ்ரீ இராமகிருஷ்ணரது ஆத்மீக வாழ்க்கை அவரை ஓர் கர்மயோகியாகவும், உயர்ந்த பக்தனாகவும், ஞானயோகியாகவும் இனங்காட்டுகிறது

துறவுக்கொள்கை

இந்துமதம் துறவு நிலையை எடுத்துக்கூறினாலும் தனது ஆன்மீக விடுதலைக்காக மட்டுமே சாதனைகளில் ஈடுபடும் முற்றுந் துறந்த முனிவர்களைப் போற்றவில்லை. அத்தகைய நிலையிலுள்ளோர் சமுகத்திற்கு எந்தச் சேவையும் ஆற்றமுடியாது உலகில் ஈடுபாடு கொண்டு, சகல ஆத்மாக்களின் விடுதலைக்காகவும் சாதனை புரிபவனே துறவியாகப் போற்றப்படுகிறான்.

இராமகிருஷ்ணரது கொள்கைப்படி தவம், தியானம் இறைவழிபாடு இவற்றினால் மனத்தை ஒருநிலைப்படுத்தி ஒவ்வொரு ஆண்மகனும் எந்த ஒரு பெண்ணையும் தாயாகக் கருதி நேசிப்பதன் மூலம் காம இச்சையை இலகுவில் அடக்கிவிடலாம் அதேபோன்று ஒவ்வொரு பெண்ணும் ஆணைக் குழந்தையாக கருதி இதய சுத்தியோடு அன்பு செலுத்தும் போது அது தாயன்பாக மலர்ந்து உயிர்கள் அனைத்தையும் ஒன்று எனக் கருதும் மனப்பக்குவத்தை உண்டுபண்ணுகிறது இத்தகைய பக்குவந்தான் எதையுந் தாங்கும் மனத்திடத்தையும் திருப்தியையும் தருகிறது. துறவுக் கோலத்தால் எவனும் மேன்மை அடைவதில்லை துறவு உணர்வும், துறவு வாழ்வுமே ஒருவனை மேன்மைப்படுத்துகின்றன இத்தகைய ஆன்மீக மறுமலர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர் ஸ்ரீ இராமகிருஷ்ணர்.

உபநிடதங்கள் கூறுவது போலப் பிரமத்தை அறிந்தவன் பற்றுக்களினின்றும் விடுபட்டு, இடையறாத தியானத்தில் ஈடுபட்டுத் தனது குறிக்கோளை அடைகிறான். ''ஆசைகளும், பற்றுக்களுமே பிறவிக்குக் காரணம் எனக் கூறும் உபநிடதங்கள், எப்பொழுது இருதயத்திலுள்ள ஆசைகள் விடுபடுகின்றனவோ, அப்பொழுது சாவுள்ளவன் சாவற்றவன் ஆகிறான். அப்பொழுதே பிரமத்தை அடைகிறான். பிரமத்தைப் பற்றிய மெய்ஞானம் படைத்தவன் நன்மைக்கும், தீமைக்கும் சுகத்திற்கும் துக்கத்திற்கும், மற்றும் வேற்றுமைக்கும் அப்பாற்பட்டவனாகிறான்'' என்ற உண்மைகளை எடுத்தியம்புகிறான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் துறவுநிலைக்குக் காரணமாக இருந்தது மெய்ஞானமே

மெய்ஞானத்தைப் பெற்றவர் கூட வாழ்க்கையிலீடுபடப் புலன்வழி வரும் அனுபவங்களினால் பாதிக்கப்பட்டுத் தனது சலனமற்ற அமைதியை இழக்க நேரிடும் என்பதனால் உபநிடதங்கள் யோகம் பற்றியும் பேசுகின்றன. இயல்பாகவே வெளிநோக்கும் புலன்களின் சக்தியை உள்நோக்கச் செய்து மனதையும் பக்தியையும் அமைதியாக்கி பிரமத்தைத் தியானித்தால் பிரமத்தை அறியவும், அடையவும் முடியும் என்பது உபநிடதங்களின் கருத்து ''சரீரத்தை ரதமாகவும், புத்தியை சாரதியாவும், மனதைக் குதிரையைப் பிணைத்துள்ளவர்களாகவும் இந்திரியங்களைக குதிரைகளாகவும் கொண்டு, ரதத்திலே செல்லும் ஒருவனாக ஆத்மன் கட உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது அடக்கப்பட்ட புலன்கள் சாரதிக்கடங்கிய நல்ல குதிரைகள் போன்றன. புலன்களை அடக்குதலே யோகத்திற்கு வழி. இந்நிலையில் மனிதன் எதனாலும் பாதிக்கப்படுவதில்லை என்கிறது கடஉபநிடதம், தியானம், தவம் போன்ற பதங்களும் யோகத்துடன் தொடர்புடைய சாதனங்களே. ''தியானத்தின் மூலம் எள்ளில் எண்ணெய் போலவும் பாலில் வெண்ணெய் போலவும், ஆற்றுமணலில் நீர் போலவும், மரக்கட்டையில் நெருப்புப் போலவும், ஆத்மனை இருதயத்தில் காணலாம என்று சுவேதாஸ்வதர உபநிடதம் தியானத்தின் மகிமையை விளக்குகிறது.

இத்தகைய ஆத்மீக சாதனங்களைப் பின்பற்றிய இராமகிருஷ்ணரது வாழ்க்கை நெறியை ஆராய்ப்புகின் அவரை ஒரு சிறந்த கர்மயோகியாகவும், பக்தியோகத்தை அனுசரித்தவராகவும், ஞானநெறி நின்ற ஒரு பெருந்துறவியாகவும் காணலாம் என்பதில் ஐயமில்லை

## உசாத்துணை நூல்கள்


1. Dasgupta, S. N. ( 1932 ) — A History of Indian Philosophy, Vol I, At the University Press, Cambridge.

2. Hiriyanna, M — Indian Conception of Values, Kavyalaya Publishers Mysore.

3. Paul Deussen — The Philosophy of Upanisads Dover Pubilications INC, Newyork.

4. Radhakrishnam, S — The Principal Upanisads George Allen and Unwin LTD, Ruskin House, Museum Street, London.

5. The Gospel of Sri Ramakrishna, Translated by Swami Nikhilanda, Sri Ramakrishna Math, Mylapore, Madras, 1944.

6. Life of Sri Ramakrishna compiled from Various Authentic Sources, Advaita Ashrama, Mayavati, Almora, Himalayas.

7. Brhadaranya Upanisad with the Commentary of Sankaracarya, Translated by Swami Madhava nanda, Advaita Ashrama, Mayavati, Almora, Himalayas.

# ஈழத் தமிழர் நாட்டார் கலைகள்

## - ஓர் அறிமுகம் -

கிருஷ்ணபிள்ளை விசாகருபன்,
B. A. (Hons),
விரிவுரையாளர், தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

உலகக் கலை வரலாற்றிலே கலைவடிவங்களை நாட்டார் கலைகள் செந்நெறிக் கலைகள் என இரு வேறாகப் பிரித்துப் பார்க்கும் பண்பு இருந்து வந்துள்ளது. சமூக வளர்ச்சி, தொழில் நுட்பப் பயன்பாடு குறைந்த கிராமப்புற மக்களிடையே தொன்றுதொட்டு வழங்கிவரும் கலைவடிவங்கள் 'நாட்டார் கலைகள்' என அழைக்கப்பட்டன. உலகில் உள்ள ஒவ்வொரு இனமும் தத்தமக்கெனத் தனித்துவமான சில நாட்டார் கலை வடிவங்களைக் கொண்டுள்ளன எனலாம்.

கிராமியக் கலைகள் பற்றி அ. சண்முகதாஸ் அவர்கள் குறிப்பிடுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கதாகும்.

> " நமது கலைகள் என்றிருந்தவை காலகதியில் 'கிராமியக் கலைகள்' என்னும் பெயர் பெறலாயின. நகர உருவாக்கம் தனக்கெனச் சில பண்பாட்டுக் கூறுகளைத் தோற்றுவித்துக் கொண்டது. நவீன விஞ்ஞான வளர்ச்சி நகரத்திற்கென பல புதிய விடயங்களை அறிமுகம் செய்தது. நகரங்களிலே வாழத் தொடங்கிய தமிழர்கள் அந் நகர மயமான கலைகளிலேயே ஈடுபாடு கொண்டனர். நகரமல்லாத இடங்கள் கிராமங்கள் எனப் பட்டன அப்பிரதேசங்களிலே காணப்பட்ட கலைகள் கிராமியக் கலைகள் எனப்பட்டன " 1

அ. சண்முகதாஸ் அவர்களின் கருத்துக்கள் கிராமியக் கலைகளுக்கான தளத்தினை விளக்கி நிற்கின்றன எனலாம்.

தமிழர் கலை மரபிலே கலைகளை வேத்தியற் கலைகள், பொதுவியற்கலைகள் என இரண்டாகப் பாகுபடுத்திப் பார்க்கும் பண்பு பழங்காலந் தொட்டே இருந்து வந்துள்ளன. " வேத்தியல், பொதுவியல் என்றிருதிறத்தின் " என சிலப்பதிகாரம் அரங்கேற்றுகாதை முப்பத்தொன்பதாம் அடி கூறுகிறது. வேந்தனுடைய அவையிலே வழங்கப்படும் கலைகள் பொது மக்களிடையே வழங்கப்படும் கலைகள் என அக்காலத்தில் வேறுபாடுடையனவாகத் தமிழ்க் கலைகள் அமைந்திருந்த காரணத்தினால் இப் பாகுபாடு ஏற்பட்டது போலும்.

ஒரு காலத்தில் வேந்தனுடைய அவையில் உயர்கலை அந்தஸ்தைப் பெற்றிருந்த கலைகள், காலப் போக்கில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்களினாலும் அவ் அந்தஸ்த்து நிலையிலிருந்தும் விடுபட்டுச் சாதாரண கிராமிய மட்டத்து மக்களிடையே சென்று வழங்கத் தொடங்கியிருக்க வேண்டுமெனவும், இந் நிலையில் இவை 'கிராமிய' என்ற அடையினைப் பெற்றிருக்கலாம் என. சி. மௌனகுரு கருதுகின்றார். 2

மௌனகுருவினுடைய கருத்தானது 'கிராமியக் கலைகள்' என்பதனுள் அடங்குகின்ற அனைத்துக் கலை வடிவங்களுக்கும் ஏற்புடைய ஒன்றா? என்பது ஆய்வுக்கு உரியதாகும் எமது பண்பாட்டின் இரு கூறுகளாக வேத்தியற் கலைகளையும், பொதுவியற் கலைகளையும் நாம் கருத்திற் கொள்ள முடியும்.

தமிழரிடையே பல்வேறுபட்ட நாட்டார் கலைகள் தொன்றுதொட்டே வழக்கிலிருந்து வருகின்றன. சமூக வளர்ச்சி, தொழில் நுட்பப் பயன்பாடு எனபவை குறைந்த கிராமப்புறங்களிலுள்ள பழைய தலைமுறையினரிடம் புதிய கல்வி முறையின் பாதிப்போ, நாகரிகத் தாக்கமோ ஏற்படாமையால் அவர்களிடம் நாட்டார் கலைகளின் செல்வாக்கு மிகுதியாகக் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந் நாட்டார் கலைகளின் தோற்றக்காலம் எது என்பது வரையறை செய்யமுடியாத ஒன்றாகும் நாட்டார் வழக்கியல் சார்ந்த கட்டுரை ஒன்றிலே க. கைலாசபதி அவர்கள் குறிப்பிடுவது இவ்விடத்தில் நோக்கத்தக்கது.

> " மனிதன் தன்னைப்பற்றிச் சிந்திக்கத் துவங்கிய காலம்முதல் சமுதாயத்திலே நாட்டார் வழக்கியல் பல்வேறு நாமரூபங்களில் இருந்து வந்திருக்கின்றது தனது வாழ்க்கையோடு இரண்டறக் கலந்திருந்த வழக்காறுகள்.

நம்பிக்கைகள், சடங்குகள் அவற்றினடியாகத் தோன்றிய கிளவிகள், பாடல்கள் முதலிய வற்றை எல்லாம் மனிதன் மரபுவழி வழங்கி வந்த பொழுது நாட்டார் வழக்கியலும் உருப் பெற்றுவந்தது '' [3]

இந் நாட்டார் கலைகள் பற்றி இ. பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகையில்,

'' ஒவ்வொரு இனத்தினரதும் அரும்பெரும் கலை வடிவங்கள் பரம்பரை பரம்பரையாகப் பேணப் பட்டு வரும் நாட்டார் கலை மரபிலே தோற்றம் பெற்று வளர்ந்தவையாகும். புவியியற் சூழல், பொருளாதார வளம், ஆடல்கள், வாழ்க்கை முறை, சமயச் சடங்குகள், நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள், பொழுது போக்குகள் பாடல்கள், ஆகிய அனைத்தையும் உள் வாங் கியனவாகவே நாட்டார் கலைகள் தோற்றமும் வளர்ச்சியும் பெற்று வளர்ந்து வந்துள்ளன' [4]

இக் கருத்து இந் நாட்டார் கலைகளின் தோற்றம் வளர்ச்சி என்பவை பற்றி விளக்குவதாக உள்ளது

நாட்டார் கலைகள் வெறும் பொழுதுபோக் கல்ல. அவை தெய்வ பக்தி, அழகுணர்ச்சி, நல்லொ ழுக்கம் முதலியவற்றை மக்களுக்குப் புகட்டி வருவ தோடு இக் கலைகள் மக்களை ஒற்றுமைப்படுத்தியும் ஊக்குவித்தும் வருபவை எனலாம்.

ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களில் வழங்கி வரும் நாட்டார் கலைகள் பற்றி இவ்விடத்தில் சிறப்பாக நோக்குதல் பொருத்தமாகும்.

ஈழத்தில் வழங்கும் நாட்டார் கலைகளை அவ ற்றின் பயில்நிலை நோக்கி நான்கு பிரிவுகளாக இ. பாலசுந்தரம் அவர்கள் பிரித்து நோக்குவார். [5] அவையாவன,

01. அவைக்காற்றுக் கலை
    1. கூத்துக்கலை
    2. நடனக்கலை
    3. வில்லிசை

02. இலக்கியக்கலைகள்
    1. நாட்டார் பாடல்கள், கதைகள்
    2. பழமொழி, விடுகதைகள்

03. விளையாட்டு

04, ஒப்பனைக் கலை

இப் பிரிவுகளே இவரால் எடுத்தாளப்பட்ட பிரதான பகுப்புக்களாகும்.

மேலே குறிப்பிட்டவாறு இப் பகுப்பை அடி யொற்றி நோக்கும்போது ஈழத்தமிழரிடையே பயில் நிலையிலுள்ள நாட்டார் கலை வடிவங்களாக நாட் டார் இலக்கியங்கள் ( நாட்டார் பாடல், கதைப் பாடல், விடுகதை, பழமொழி ) நடனக்கலை, காவடி வில்லிசை, கரகம், கோலாட்டம், வசந்தன், கும்மி பொய்க்காலாட்டம், பொம்மலாட்டம், கூத்துக்கலை ஒப்பனைக்கலை, போன்றனவற்றுடன் விளையாட்டும் பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாட்டார் இலக்கியம்

நாட்டார் இலக்கியங்கள் என்பவற்றுள் கிரா மியப் பாடல்கள், கிராமியக் கதைகள், கதையாடல் கள் முதலியன அடங்கும் என்றும், அவை பின்வரும் சில பண்புகளைக் கொண்டிருக்கும் என்கிறார் அ. சண்முகதாஸ் அவர்கள். [6] அவையாவன,

01. மக்கள் வாழ்வுப் பண்புகளைக் கொண் டிருத்தல்.
02. மக்கள் மொழியாலமைதல்
03. வாய்மொழி, செவிகருவியாகப் பேணப் பட்டு வருதல்.
04. காலத்துக்குக் காலம் மாற்றத்துக்குட்படு தல்

மேற்படி ஆக்கங்களெல்லாம் பலவொருவ ரின் தனிப்படைப்பாகவோ, கூட்டுப்படைப்பாகவோ அமைந்திருக்கும். இவை ஏட்டில் எழுதப்படவில்லை இவற்றைப் பாடிய மக்களுக்குப் போதிய இலக்கண அறிவும் இல்லை.

இப் பாடல்கள் நெடுங்காலமாகவே மக்கள் மத்தியில் நிலவி வருபவை. இந் நாட்டார் இலக்கி யங்களில் ஒரு சில இடங்களில் சில சொற்றொடர்கள் விரசமாகவும் இருத்தல் கூடும். அத்துடன் வட்டார வழக்குச் சொற்களை இவை கொண்டிருக்கும் எனலாம்.

நாட்டார் பாடல்களை நா. வானமாமலையவர் கள் தாலாட்டுப் பாடல்கள், தெய்வப் பாடல்கள், விளையாட்டுப் பாடல்கள், காதற் பாடல்கள், திருமணப் பாடல்கள், கும்மிப் பாடல்கள், சமூகப் பாடல்கள், உழைப்புப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல் கள் எனப் பலவாறாகப் பிரித்தாய்வு செய்கிறார்கள். [7]

நாட்டுப் பாடல்களின் அமைப்பினை நோக்கும் போது இப் பாடல்கள் அடிவரையறையற்றவை யாகவே உள்ளன, என்றாலும் கூட இரண்டடிப் பாடல்கள் முதல் ஐந்நூறு அடிப்பாடல்கள் வரை அமைந்துள்ளன. குழந்தைப் பாடல்கள் குறைந்த அடிகளையும், பெரியவர்கள் பாடும் தொழிற் பாடல் களும், பக்திப் பாடல்களும் அளவற்ற அடிகளையும் கொண்டுள்ளன. திரும்பவரல் (          ) என்னும் அமைப்பு நாட்டுப்புறப் பாடல்களை நினைவில் வைத்துக் கொள்ளவும் புதிதாகப் புனைந்து கொள்ள வும் உதவிடும் வகையில் அமைந்துள்ளது. இசை ஒலி கள் பாட்டின் முதல்நிலை, இடைநிலை, கடைநிலை என்னும் மூந்நிலையிலும் வருதலுண்டு. [8]

இந் நாட்டார் பாடல்கள் ஈழத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் அவ்வப் பிரதேசங்களுக்கே உரிய தனித் தன்மைகளுடன் விளங்கி வருகின்றன. இந் நாட்டார் பாடல்கள் உலகு முழுதளாவிய பொதுத் தன்மையுடையவை; மனுக்குலத்தின் போராட்டங்கள் வெற்றிகள், கனவுகள், தோல்விகள், எதிர்பார்ப்புகள் நம்பிக்கைகள் முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டிருப்பவை ஆகும்.

## நாட்டார் கதைகள்

நாட்டார் கதைகளும், நாட்டார் பாடல்களைப் போலவே வாய்வழியாக வாழ்ந்து வருகின்றன. காலத்துக்குக் காலம் சிறு மாறுதல்களைப் பெறுவதுண்டு. ஒரு கதையே இடத்துக்கிடம் சில வேறுபாடுகளுடன் வழங்கிவரும் ஆயினும் அடிப்படைக் கருத்தில் ஒற்றுமை இருக்கும். இக் கதைகளை விலங்குக்கதை தேவகதை, நாடோடிக்கதை, புராணக்கதை, காப்பியக்கதை, வரலாற்றுக்கதை, நீதிக்கதை என்று கலைக்களஞ்சியம் நிரற்படுத்துகின்றது. 9

ஈழத்தமிழரிடையே வழக்கிலுள்ள நாட்டார் கதைகளாக மரியாதை இராமன்கதை, விக்கிரமாதித்தன் கதை, மயில்ராவணன் கதை ஆயிரம் தலை வாங்கிய அபூர்வசிந்தாமணி, மதனகாமராஜன் கதை அல்லி அருச்சுனா வனவாசம், பவளக்கொடி கதை, முதலியவற்றைக் குறிப்பிடலாம்.

## கதைப் பாடல்கள்

நாட்டுப்புறக் கலை வகைப்பட்டதும் ஒரு கதையைப் பாடல் வகையில் எடுத்துச் சொல்வதும் கதைப்பாடலாகும். கதைப்பாடல்கள் வருணனை மிக்கவை, பாடக்கூடியது, உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் நாட்டுப்புறவியல் வகைப்பட்டது எனலாம். இக்கதைப் பாடல்களை,

அ) புராண இதிகாசக் கதைகள்
ஆ) வரலாற்றுக் கதைகள்
இ) சமூகக் கதைகள்

என மூன்றாகப் பகுக்கலாம் என்பார் புலவர் இரா. சுரேந்திரன் அவர்கள். 10 ஈழத்தில் பிரபல்யம் பெற்று விளங்கும் கதைப்பாடல்களாக பவளக்கொடி மாலை, அல்லியரசாணிமாலை, நல்லதங்காள் கதை புலேந்திரன் களவு, ஆரவல்லி சூரவல்லி, கோவலன் கதை முதலானவற்றைச் சுட்டலாம்.

## பழமொழிகள்

பழமொழிகள், முதுமொழிகள் எனவும் வழங்கப்படும். நாட்டுப்புற மக்களிடையே இவைஇன்றும் வழக்கொழியாமல் இருக்கின்றன. நொடிகளை விடுகதைகள் எனவும் சொல்லலாம். விடுகதைகளில் ஏதாவது புதிர் ஒன்று மறைந்திருக்கும். விடுகதையைக் கூறியவுடன் நொடிப்பொழுதில் அதனைக் கண்டு பிடித்து விடவேண்டும். இவைபெரும்பாலும் வினா - விடை அமைப்பில் இருக்கும். தொல்காப்பியம் இதனைப் 'பிசி' என்கிறது. ஈழத்தமிழரிடையே பல்வேறு விடுகதைகள், பழமொழிகள் வழக்கத்திலிருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்தமிழரிடையே வழங்கும் நாட்டார் இலக்கியங்கள் சேகரிக்கப்பட்டு அவ்வப்போது நூலாக வெளியிடப்பட்டுள்ளன. நாட்டார் பாடல்களை அச்சுவாகனமேற்றுவதில் முன்னோடியாக அமைந்தவர் மக்கள் கவிமணி வட்டுக்கோட்டை மு. இராமலிங்கம் ஆவார். 11 பின்னர் மட்டக்களப்பு, மன்னார், முல்லைத்தீவு யாழ்ப்பாணம், மலையகம் முதலிய தமிழர் வாழும் பிரதேசங்களில் அடிப்படையில் இந்நாட்டார் பாடல்கள் வெளிவந்துள்ளன. ஆனாலும் பலஇலக்கியங்கள் இன்னமும் ஏடுகளிலேயே இருக்கின்றன. அவை அழிந்து போகமுன்னர் பாதுகாக்கப்படுவது அவசியமாகும். பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் கா. சிவத்தம்பி பண்டிதர் வீ. சி. கந்தையா பேராசிரியர் இ. பாலசுந்தரம் போன்றோரது முயற்சிகளினால் சிலகிராமிய நாடக ஏடுகள் நூலுருப்பெற்றுள்ளன. இதேமுயற்சிகள் கிராமியத்துறை சார்ந்த பழமொழிகள், விடுகதைகள், நாட்டுப் பாடல்கள் பக்கமும் திசைதிருப்பப்பட வேண்டும்.

## நாட்டார் நடனக்கலை

முன்னர் குறிப்பிட்டவாறு பொதுவியலில் அடங்கும் நாட்டார் நடனத்தைச் சேர்ந்தவையாக ஈழத்தமிழரிடையே பல்வேறுபட்ட நடனங்கள் இன்றும் வழங்கிவருவதைக் காணலாம் குறிப்பாக ஈழத்தமிழரிடையே கரகம், காவடி, கோலாட்டம், கும்மி எனப் பல்வேறு நடனங்கள் வழக்கிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கலைகள் பலவற்றிற்கும் அடிப்படையாகவும், ஆதியாகவும் உள்ளது ஆடற்கலையாகும். உள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் உடற்கூறுகள் வாயிலாகப் புலப்படுத்துவதே இந்நடனங்களாகும். கிராமிய மக்கள் தமது இன்பதுன்பங்களை வெளிப்படுத்த இதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள்

## வசந்தன்

வசந்தன் ஒரு ஆடற்கலை சார்ந்த வடிவமாகும் நாட்டார் கலைமரபில் இடம்பெறும் நடனங்களில் 'வசந்தன் ஆட்டம்' தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். ஈழத்தில் அனைத்துக் கிராமங்களிலும் வசந்தன் ஆடப்பட்டு வந்திருக்கின்றது. கோவிற்சடங்குகளோடும் சித்திரை வருடப்பிறப்பு, தீபாவளி முதலாம்பண்டிகைக் காலங்களிலும் மட்டக்களப்பில் வசந்தன் ஆட்டத்தை சிறுவர்களும், இளைஞர்களும் பேணிவந்திருக்கின்றனர். வசந்தன் ஆட்டத்தை அதில்கைதேர்ந்த அண்ணாவியார் மூலமே பழகவேண்டும். எட்டுப்பேர் அல்லது பத்துப்பேர் கொண்ட ஒரு குழு நடனமாகவே இந்த ஆட்டம் அமையும். இந்நடனத்தில் தென்னிந்தியாவில் பெண்களும் பங்கேற்பர். ஆனால் ஈழத்தில் இதுவரை ஆண்களே இக்கலையை வளர்த்து வந்திருக்கின்றனர். எனலாம். மத்தளம், தாளம், வசந்தன் தடிகள், காற்சதங்கை என்பன. வசந்தன் ஆட்டத்திற்கு உரிய உப

கரணங்களாகும். யாழ்ப்பாணப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் கட்டுவனூரை மையமாகக் கொண்டே 'வசந்தன்' ஆடப்படுகிறது. அதனாலேயே 'கட்டுவனூர் வசந்தன்' என்ற வழக்கம் தோற்றுவதாயிற்று. மட்டக்களப்புத் தமிழகத்தில் வசந்தன் பாடல்கள் நாட்டார் இலக்கிய மரபிலே தோற்றம் பெற்றுவழங்கி வருகின்றன. ஆனால் கட்டுவன் வீரபத்திரர் வசந்தன் பாடல்களை வீமன் காமத்தைச் சேர்ந்த விசுவப்புலவர் (கி. பி 1750) பாடியதாக அறியமுடிகின்றது.[12] கட்டுவனூர் வசந்தன் பாடல்கள் மழை வேண்டிப் பாடப்பட்டவைவாகவே காணப்படுகின்றது.

இன்று வசந்தன் ஆட்டம் ஆடுவோர் மிகச் சிலரே. இன்று எஞ்சியிருப்பது வசந்தன் பாடல்கள் மட்டுமே எனலாம் அத்துடன் இதுவைத தழுவிய கூத்து வகையைச் சார்ந்ததல்ல என்பதும் முக்கியம்.

காவடியாட்டம்

ஈழத்தமிழர் கிராமியக் கலைகளில் தனித்துவமானது இக்காவடியாட்டம். காவடியாடுதல் பல்வேறு நிலைகளில் அமையும். முன் கூட்டியே ஆயத்தங்கள் பயிற்சிகள் எதுவுமின்றி, மேள வாத்தியம், நாதஸ்வரம் என்பனவற்றுக்கு ஏற்றபடி ஆடும் முறை ஒன்று. கைகள், புயங்கள், நெஞ்சு, முதுகு என்பனவற்றில் சிறிய வேல்களைக் குத்தி முதுகிலே சிறிய கொளுக்கிகளை ஏற்றி அவையனைத்தையும் கொடியினால் இணைத்து ஒருவர் இழுத்துப் பிடிக்கச் சுழன்று சுழன்று ஆடும்முறை வேறொன்று. இதற்குப் பக்க வாத்தியமாக மேளமும் நாதஸ்வரமும் அமையும்.

காவடி ஆட்டம் சமயத்தொடர்புடையது. சிறப்பாக முருகன் வழிபாட்டுடன் தொடர்புடையது. ஈழத்தைப் பொறுத்தவரை செல்வச்சந்நிதிக் கந்தன் ஆலயம் இக் காவடியாட்டத்திற்குப் பெயர் பெற்ற முருகன் ஆலயமாகும். செல்வச் சந்நிதியை அண்டிய பகுதிகளிலிருந்தும் பிற தூர இடங்களில் இருந்தும் பெருமளவு பக்தர்கள் நேர்த்திக்கடன் அடிப்படையில் காவடி எடுப்பது வழக்கமான ஒன்றாகும். இதுபற்றிய விரிவான செய்திகளை 'ஆற்றங் கரையான்' என்ற நூலிலே அ. சண்முகதாஸ் அவர்களும் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் தருகின்றார்கள்.

> "அம்மன் கோவில்களிலே கரக ஆட்டம் முக்கியத்துவம் பெற, முருகன் கோயில்களிலே காவடியாட்டம் முக்கியத்துவம் பெறுகிறது...
> ... செல்வச் சந்நிதி முருகன் கோயிலில் ஆண்டு தோறும் நடைபெறும் விழாக்காலங்களில் பல்வேறு வகையான காவடிகள் வந்து சேரும்............", 13

நீண்ட தடியின் இருமருங்கிலும் கடவுளர்க்கு நேர்த்திக்கடன் செய்த பொருள்களைக் கூடையில் வைத்துக் கட்டிக் கொண்டு கூடையைக் காவி அல்லது மஞ்சள் துணியால் மூடித்தடியின் மத்திய பகுதியைத் தோளில் வைத்து ஆடுவர். இலங்கையில் இதனைச் செய்மையாகவும் அழகாகவும் அமைப்பர். காவு தடியில் இருபுறமும் நிற்கத்தக்கதாகக் கால்கள் அமைத்து ஒரு புறத்திலிருந்து மறுபுறத்தைத் தொடும்வண்ணம் ஒரு வில்லுக் கூடாரம் அமைத்து நான்கு கால்களின் இடுக்குகளிலும் நான்கு சுற்றை மயிற்றோகைகளைக் கட்டி வில்லுக் கூடாரத்தை அழகிய துணியால் மூடி அழகுபடுத்தி ஆடுவார்.

இக் காவடியாட்டத்தை அதன் நோக்கம் அமைப்பு, ஆட்டம ஆகியவற்றைக் கொண்டு பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

1. அன்னக் காவடி
2. செடில்காவடி — ஆட்டக்காவடி
3. பாற்காவடி
4. தாளக்காவடி
5. பறவைக்காவடி — தூக்குக்காவடி

அன்னக்காவடி எடுக்கும் வழக்கம் ஈழத்தில் இல்லை தங்களுக்கும் தங்களைச் சார்ந்தவர்களுக்கும் உணவு பெற்று வருவதற்காகப் பரதேசிகள் தங்கள் தோள்களில் காவடியைச் சுமந்து வீடுவீடாகச் சென்று ஆடுவதே இக் காவடியாட்டம். ஈழத்தில் சில காலத்திற்கு முன்பு மலைநாட்டில் இவ் ஆட்டம் நிலவியதாகத் தெரிகின்றது.[15]

செடில்காவடி அல்லது ஆட்டக்காவடி என்பது பிரார்த்தனைக்காகத் தோலிடையே கொக்கியைச் செலுத்தி அந்தக் கொக்கியை அதற்கென நாட்டப்பட்ட நீண்ட கூழையில் மாட்டி ஆடும் ஆட்டம் எனலாம். வெள்ளியாற் செய்யப்பட்ட வேற் செடில்களைப் பக்தரின் முதுகிற் குத்தி வெள்ளிக் கொழுக்கிகளின் அடியில் உள்ள நூல்களைச் சேர்த்துக் கட்டிய கயிற்றை ஒருவர் பிடித்திழுக்க காவடியெடுக்கும் பக்தர் காவடியைத் தோளில் வைத்தாடுதல் வழக்கம்.

தாளக் காவடியானது அண்ணாவியாரிடம் முறையாகப் பயின்று ஆடும் ஆட்டமாகும். இதற்கெனத் தனித்தனியே தாளக் கட்டுக்கள் உண்டு. தாளக் காவடியை ஆட விரும்பும் ஆர்வலர்கள் இதில் துறைபோகிய அண்ணாவியாரிடம்மூன்று மாதங்கள் முதல் ஆறு மாதங்கள் வரை பயிற்சி பெற வேண்டும். கிராமியக் கோலங்களும், கலைத்துவமும் இணைந்தது தாளக் காவடியே எனலாம்.[16] காவடியாட்டத்தில் பிரசித்தமான அண்ணாவிமார்களாக கந்தப்பிள்ளை ஆவரங்கால்) இணுவில் ஏரம்பு, அளவெட்டி, இளையதம்பி, நெல்லியடி கந்தர் கதிரேசு, நற்குணம் கரும்பசிட்டிச் சின்னத்துரை முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

பறவைக்காவடி அல்லது தூக்குக்காவடி

இவ்வகைக் காவடி முதன்முதலில் செல்வச் சந்நிதியில் ஆடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.[17] சகடை ஒன்றின் இரு பக்கமும் இரண்டு மரங்களைத் தூண்கள்போல நிறுத்தி இரண்டு மரங்களையும் இணைத்து உயரத்தில் வளை ஒன்றைக் கட்டி வளை நடுவில் கப்பி ஒன்றைப் பொருத்தி அந்தக் கப்பியிலே கயிற்றைப்போட்டுக் காவடியெடுப்பர். உடம்பில்

லா, முதுகு, பின்புறம் முழங்கை போன்ற பகுதிகளில் முட்களைக் குத்தியபின் முட்களுடன் தொடுக்கப்பட்டிருக்கும் கயிற்றை கப்பிக் கயிற்றுடன் இணைத்த பின்பு உயர்த்தி மேலும் கீழுமாக ஆட்டியாடுவார்

இக் காவடியாட்டங்கள் எல்லாம் பெரும்பாலும் கிராமத்து ஒரு எல்லையில் இருக்கும் ஆலயத்தில் இருந்து இன்னொரு எல்லையில் உள்ள கோவிலை நோக்கியே ஆடப்படும் கிராமங்களின் முக்கிய சந்திப்புக்களில் ஆட்டம் நடைபெறும்.

கரகாட்டம்

தமிழ் மக்களுடைய பாரம்பரிய நாட்டார் கலைகளுள் கரக ஆட்டமும் ஒன்றாகும். இது மிகவும் பழமையானது. ஆடலும் பாடலும் கலந்த அழகிய கலையாக இது விளங்குகின்றது. மாரியம்மனுடன் தொடர்புடைய இக் கரகாட்டம கிராமங்களில் பஞ்சம் தொற்றுநோய் என்பன வரும் வேளைகளில் ஆடப்பட்டு வந்தது. கரகத்தில் புனித நீர் வைக்கப்படும் கரகாட்டம் இரண்டு செம்பு தொடக்கம் ஒன்பது செம்புகள் வரை வைத்து ஆடப்படும். [18] கரகாட்டம் இரு வகைப்படும்.

1. சக்திக் கரகம் 2. ஆடும் கரகம்

சக்திக் கரகம் பக்தியுடன் எடுக்கப்படும் கரகம். ஆடவர் மட்டுமே சக்திக் கரகம் எடுப்பர். பெண்கள் தீட்டுடையவராதலால் அவர்கள் எடுப்பதில்லை. ஆடும கரகம் தொழிற்றுறைக் கலைஞர்களால் ஆடப்படுவது. கலையுள்ளம் கொண்டோர் சடங்குகளிலிருந்து சக்திக் கரகத்தை விடுவித்து, அபிநயங்களுடன் தாம் மகிழவும் பிறரை மகிழ்விக்கவும் ஆடுவர். ஆடுகரகத்தைப் பெரும்பாலும் பெண்களே ஆடுவர். ஆடுகரகத்தின் ஒன்றுக்கு மேற்பட்ட செம்புகளை வைத்து ஆடுவதுண்டு கரகாட்டம் ஆடுபவர்கள் அனைவரும் கால்களில் சதங்கை கட்டியிருப்பர் இதனை 'மணிக்கச்சம்' எனறும் கூறுவர். யாழ்ப்பாணத்தில் கரகம், கரகாட்டம் என அழைக்கப்படும். மலைநாட்டினர் கரகாட்டம், செம்பாட்டம், கரகக்கூத்து எனவும் மட்டக்களப்பினர் கரகம் எனவும் அழைப்பர். [19]

கோலாட்டம்

நாட்டார் கலைகளில் மிகவும் செல்வாக்குப் பெற்றவை கோலாட்டமும், காவடியுமே எனலாம். கைகளில் சிறிய இரு கோல்களை வைத்துக்கொண்டு பாடி ஆடுதலே கோலாட்டம் ஆகும். இந் நடனத்தில் பாடப்படும் பாடல்களின் ஓசைக்கும் பக்கவாத்தியங்களின் இசைக்கும் ஏற்றபடி ஆடியவண்ணம் தங்கள் இரு கைகளிலுமுள்ள கோல்களை ஒன்றோடு ஒன்று தட்டி ஒலியெழுப்பி மாறிமாறி ஆடும்போது ஒருவர் கையிலுள்ள கோலால் மற்றவருடைய கையிலுள்ள கோலைத் தட்டியும், ஒலியெழுப்பியும் ஆடிப்பாடுதல் இதன் சிறப்பம்சமாகும். கும்மியில் கையால் தட்டித் தாளம் போடுவதை இவர்கள் கோலால் தட்டித் தாளம் போடுவர். [20]

கோலாட்டத்தில் ஆண்களும் கலந்துகொள்வதுண்டு. ஆயினும் இது பெண்களுக்கே உரியதென்பர். கும்மி, கோலாட்டம் முதலானவற்றில் ஆடுவோர் வட்டமாக நின்று ஆடுதல் மரபு. இது பலரும் இதில் பங்கெடுக்க உதவுவதோடு அழகாகவும் இருக்கும். கும்மியில் எவ்வாறு குனிந்தும், நிமிர்ந்தும், துள்ளிப் பாய்ந்தும் அடிப்பார்களோ அவ்வாறே கோலாட்டத்திலும ஆடிப்பாடி அடிப்பார்கள். கோலாட்டத்தில் பயன்படுத்தப்படும் தடிகள் பொதுவாக எட்டு அல்லது பத்து அங்குல நீளமும் முக்கால் அங்குல கனமும் உடையதாகும். இவை மிக அழகாகச் செதுக்கப்பட்டு திரண்டதரு முனையிலிருந்து மறு முனைக்குக் குறுகிச் செல்லும். கோலாட்டப் பாடல்கள் மிகவும் எளிமையானவை.

கும்மி

கும்மியாட்டம் பெரும்பாலும் விழாக் காலங்களில் ஆடப்படும். ஆண்களோ, பெண்களோ வட்டமாக வளைந்து நின்று பாட்டுப் பாடிக்கொண்டே கைகளைத் தட்டுவது கும்மி எனப்படும். ஆண்களை விடப் பெண்களே இதில் அதிகம் ஈடுபடுகின்றனர். ஆண்கள் மட்டும் ஆடும் ஆட்டத்தை வெறுமனே 'கும்மி' என்று அழைப்பர். பெண்கள் கும்மியடிக்கும்போது குனிந்து தட்டுவது, நின்றுகொண்டு தட்டுவது மேல் எழும்பித் தட்டுவது என்ற மூன்று முறைகளைக் கையாளுவர். [21]

பொம்மலாட்டம்

இது நீண்ட வரலாற்றினை உடையது. இதன் தாயகம் இந்தியாவே. [22] பொம்மலாட்டத்தைத் தோற்பாவைக் கூத்து, மரப்பாவைக் கூத்து, பாவைக் கூத்து என வேறுபடுத்துவர். பொம்மைகளை நடிகர்களாகக் கொண்ட நாடகமே பொம்மலாட்டம். இங்கே மனிதர்களுக்குப் பதிலாக பொம்மைகளை நடிக்க வைப்பார்கள், பார்ப்பவர்களுக்குத் தெரியாத வண்ணம் பொம்மைகள் இயக்கப்படும் ஈழத்தில் சிங்கள மக்களிடையே இக் கலைவடிவம் இன்றும் காணப்படுகின்றது,

வில்லிசை

ஈழத்தமிழர் நாட்டார் கலைகளில் இன்றும் மிகுந்த செல்வாக்குடன் பரவலாக வழங்கி வருவது வில்லிசையே எனலாம். தமிழ் நாட்டிலும் இது செல்வாக்குடன் விளங்குகின்றது. இக் கலைவடிவம் தமிழகத்திலிருந்து வந்த ஒன்றாகவே கருதப்படுகின்றது. 1960 களுக்குப் பின்பே இது ஈழத்தில் மிகுந்த செல்வாக்கைப் பெறுவதாயிற்று எனலாம். மட்டக்களப்புப் பகுதியில் மாஸ்ரர் சிவலிங்கம், கொழும்புப் பகுதியில் லடீஸ் வீரமணி. யாழ்ப்பாணப் பகுதியில் சின்னமணி குழுவினர், ஸ்ரீதேவி குழுவினர் முதலானோரும் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினரும் இக்கலை முயற்சிகளில் அதிக ஈடுபாடுகாட்டி வருகின்றனர். சிறுவர்களும் விழாக்காலங்களில் ஒரு குழுவாகச் சேர்ந்து வில்லுப்பாட்டுப் பழகி வில்லடிப்பதுண்டு. அன்மைக் காலங்களில் சமகாலக் கருத்

துக்களை இந்த வில்லிசை என்கின்ற கலை வடிவத்தினூடாக வெளிப்படுத்தும் முயற்சிகள் பெரு வெற்றியளித்து வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### விளையாட்டுக் கலை

ஈழத் தமிழரிடையே கிராமப்புற மக்களிடையே இன்றும் பல விளையாட்டுக்கள் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வருகின்றன எனலாம். பாரம்பரிய விளையாட்டுக்கள் உலகப் பண்பாட்டுப் பின்னணியில் மதிப்புமிக்கனவாகக் கருதப்படுகின்றன இப் பாரம்பரிய விளையாட்டுக்கள் சம்பந்தப்பட்ட பிரதேசங்களின் கலை, கலைச்சார அம்சங்களைப் புலப்படுத்தி நிற்கின்றன எனலாம் ஈழத் தமிழரிடையே கிளித்தட்டு, தாச்சி, வாரோட்டம், போர்த் தேங்காய் அடித்தல், சிந்தியடித்தல், பசுவும் புலியும், கொழுத்தாடு பிடித்தல், ஊஞ்சலாட்டம், கழங்கு, சொக்கட்டான், அம்மானை, பட்டம் விடுதல், வண்டிச் சவாரி, தாயகம் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் இன்றும் பயில் நிலையில் உள்ளன.[23] ஈழத் தமிழரிடையே வண்டிச் சவாரி வடக்குக் கிழக்கு மாகாணங்களிலே மிகப் பரவலாக நடைபெற்று வந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் அளவெட்டி, இளவாலை, மாவிட்டபுரம், கோப்பாய், யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி, வட்டக்கச்சி முதலான இடங்களில் மிகவும் சிறப்பாக நடைபெறுகின்றன. பொதுவாக விழாக்களிலும் பண்டிகைக் காலங்களிலும் இவ் விளையாட்டுக்கள் முக்கியமாக இடம்பெறும். ஈழத் தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்களைப் பதிவு செய்து பேண வேண்டியது நமது கடனாகும்.

### ஒப்பனைக் கலை

ஒப்பனைக்கலை பரம்பரை பரம்பரையாகப் பேணப்பட்டு வருகின்ற தனித்துவமான ஒரு கலையாகும். பல்வேறு நாட்டார் கலைகளிலும் ஒப்பனைக் கலை பயன்பாட்டில் உள்ளது குறிப்பிடத்தக்கது. சிறப்பாக கிராமிய நாடகங்களுக்கு வேண்டிய அலங்காரங்களையும், ஒப்பனைக் கலைஞர்களே செய்கின்றார்கள். நடிகர்களுக்குரிய விதம்விதமான முடிகள், கிரீடங்கள், வில், வாள், கதாயுதங்கள் முதலிய உபகரணங்கள், வேலைப்பாடுகள் கொண்ட சடைகள், தலைப்பாகைகள் என்பனவும் இவ்விடத்திலே குறிப்பிடத்தக்கதாகும். நாடகத்துறையில் ஒப்பனைக் கலையின் பங்கு சிறப்பானதாகும். ஆடை பாதி, ஆள்பாதி என்பது பழமொழி. அழகுக் கலை அற்புதமான இன்பக் கலையாகும். சாமுவேல் பெஞ்சமின் போன்ற தலை சிறந்த ஒப்பனைக் கலைஞர்கள் இன்றும் இருக்கின்றார்கள். இவர்களை ஊக்கப்படுத்திப் பயன்படுத்த வேண்டியது நமது கடனாகும்.

ஈழத்தில் எழுதப்படாத கலை வடிவங்களில் ஒன்றாக இதனை இ. பாலசுந்தரம் அவர்கள் குறிப்பிடுகின்றார்.[24] ஆராய்ச்சியாளர்களின் சிரத்தைக்கு இவ் ஒப்பனைக்கலை உட்படாதது வருந்தத்தக்கது. ஒப்பனைக் கலையும் வழிவழியாகத் தொழில் ரீதியில் கையளிக்கப்பட்டு வருவதைக் காணலாம். ஈழத்தமிழரின் பாரம்பரிய ஒப்பனைக் கலைப்பொருட்களைச் சேகரித்துப் பேண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

### நாட்டார் இசை

ஈழத் தமிழர் கலைகளில் இடம்பெறும் நாட்டார் இசை பற்றியும் சிறிது நோக்குதல் பொருத்தமாகும் நாட்டார் இசை மரபுகள் எளிமையான இசை அமைப்புக் கொண்டவை, பகட்டில்லாதவை, உள்ளத்தை ஈர்க்கும் இனிமையும் இசைப் பொலிவும் நிறைந்தவை. இந்த இசை மரபுகளை நாட்டார் பாடல்களில் காணலாம்.[25]

நாட்டார் மரபிலே இசையை இசைப்பதற்கும், இசையை மேலும் செறிவூட்டுவதற்காகவும் பலவகையான இசைக் கருவிகள் துணைக் கருவிகளாகப் பயனபடுத்தப்பட்டிருக்கின்றன. ஈழத்தைப் பொறுத்தவரையிலே தமிழ் மக்களிடம் நாட்டுப்புறக் கலைகளோடும், சடங்குகளோடும் தொடர்புடைய இசைக் கருவிகளான மத்தளம். உடுக்கு, பறை, நபாணம், குழல் வகைகள், சல்லரி, சங்கு முதலியன வழக்கிலிருந்து வருகின்றன. சமகாலததில் பிற இசைக் கருவிகளின் ஊடுருவலும் இக் கலை வடிவங்களில் ஏற்படுவதைக் காணலாம்.

### கூத்துக்கலை

ஈழத்தமிழர் நாட்டார் கலைகளில் தனித்துவமானதும், தமிழர்களின் தேசியக் கலைவடிவமாக வைத்துப் பார்க்கப்படக் கூடியதுமான கலை வடிவமாக விளங்குவது கூத்துக்கலை எனலாம். ஈழத்தமிழரிடையே கூத்து மரபானது தொன்றுதொட்டு வழங்கிவருகின்றது. ஈழத் தமிழர்கள் பரந்து வாழ்கின்ற மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, சிலாபம், வன்னி, யாழ்ப்பாணம், மலைநாடு, சிலாபம் போன்ற பல்வேறு பிரதேசங்களிலும் வெவ்வேறு தனித்துவமான அம்சங்களுடன் இக் கூத்துக்கள் ஆடப்பட்டு வருகின்றன. இக் கூத்து மரபை வடமோடி, தென்மோடி, இசை நாடகம், விலாசம் என்ற பெரும் பிரிவுகளுக்குள் அடக்கி ஆய்வு செய்ய முடியும்.

இவ்வாறாக ஈழத் தமிழரிடையே பயில் நிலையில் இருந்துவரும் நாட்டார் கலைகளாக நாட்டார் இலக்கியங்கள், காவடியாட்டம், கரகாட்டம், கோலாட்டம் கும்மியாட்டம், பொய்க்காலாட்டம், பொம்மலாட்டம், வசந்தன் நடனம், ஒப்பனைக்கலை, விளையாட்டுக்கலை, கூத்துக்கலை எனப் பல்வேறு நாட்டார் கலை வடிவக் கூறுகளை இனங்காண முடியும். இவையும் இவைபோல் இன்னும் பலவும் இன்றும் சிற்சில பிரதேசங்களில் தனித்துவமாக விளங்கி வருகின்றன. மேனாட்டு நாகரிகத் தாக்கத்தினால் வழக்கொழிந்துவரும் இக் கலை வடிவங்களை உரிய முறையில் பாதுகாக்க முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். இவற்றில் பல நாட்டார் கலை வடிவங்கள் இன்று வழக்கொழிந்து வருகின்றன என்பது குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். ஈழத்தமிழின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கும் இக் கலை வடிவங்கள் ஈழத்தின் தேசியக் கலைவடிவங்களாகும்.

## அடிக்குறிப்புக்கள்

1. சண்முகதாஸ், அ. ; 1987 'கிராமியக் கலைகளை நவீனப்படுத்துதல்' ஆய்வு, தொகுதி 1 — 2, ஏப்பிரல், யூன், ப. 58.
2. மௌனகுரு, சி. ; 1992, 'பழையதும் புதியதும்', ப. 9
3. கைலாசபதி, க. ; 1980, 'இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல் வந்தவையும் வர வேண்டியவையும்: இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல் வெளியீடு 2 ப. 1
4. பாலசுந்தரம், இ. ; 1991, 'ஈழத்தமிழர் நாட்டார் கலைகள்', முத்தமிழ் விழா மலர் ப. 57.
5. மேற்படி, பக். 58.
6. சண்முகதாஸ், அ. ; 1087, 'கிராமியக் கலைகளை நவீனப்படுத்துதல்' ஆய்வு, தொகுதி 1—2; ஏப்ரல், யூன், பக் 58 — 59.
7. பாலசுந்தரம், இ. ; 1979, 'ஈழத்து நாட்டார் பாடல்கள் ஆய்வும் மதிப்பீடும்', (மட்டக்களப்பு மாவட்டம்', ப. 5
8. சுரேந்திரன், இரா ; 1979, 'தமிழக நாட்டுப்புறப் பாடல்கள்', ப 17
9. கலைக் களஞ்சியம், 1956, 111 : 184.
10. சுரேந்திரன், இரா ; 1979, 'நாட்டுப்புற இலக்கியம் நலந்தரு விளக்கம்', ப. 18.
11. சண்முகதாஸ், அ. ; 1987, 'கிராமியக் கலைகளை நவீனப்படுத்துதல்', ஆய்வு, 1—2, ஏப்ரல், யூன், பக். 59.
12. பாலசுந்தரம், இ ; 1990, 'யாழ்ப்பாணத்து நாட்டார் கலைகள்', கலைமுகம், தை, பங்குனி, பக் 23.
13. சண்முகதாஸ், அ மனோன்மணி சண்முகதாஸ், ; 1989, 'ஆற்றங்கரையான்' பக் 102 — 103.
14. சுந்தரம்பிள்ளை செ. ; 1990 'வடஇலங்கை நாட்டார் அரங்கு' (கலாநிதிப்பட்ட ஆய்வேடு பதிக்கப்படாதது), ப. 31
15. சடகோபன், வி ; 1960, 'தென்னிந்தியக் கிராமிய நடனங்கள் (மொழிபெயர்ப்பு)', பக் 26.
16. பொன்னுத்துரை, ஏ. ஈ ; 1988, 'தாளக் காவடி', பக். 2.
17. சுந்தரம்பிள்ளை, செ. ; 1990, மு. கு. நூ பக். 37
18. வேலுசாமி, வி. ; 1986, 'கரகாட்டக்கலை', ப. 53.
19. சுந்தரம்பிள்ளை, செ ; 1990, மு. கு. நூ பக். 28.
20. மேற்படி, ப. 45.
21. மேற்படி, ப. 52.
22. மேற்படி, ப 68.
23. பாலசுந்தரம், இ. ; 1991, மு. கு. நூ, ச 62.
24. பாலசுந்தரம், இ ; 1990, 'ஒப்பனைக்கலை' பக் 6
25. பாலசுந்தரம், இ. ; 1991, 'நாட்டாரிசை இயல்பும் பயன்பாடும்', ப. 15.

# தமிழர் பண்பாட்டுப் பேணலில் வட இந்து மகளிர் கல்லூரியின் பங்களிப்பு

— மனோன்மணி சண்முகதாஸ், எம். ஏ.
சிறப்பாய்வாளர்,
கக்சுயின் பல்கலைக்கழகம், யப்பான்.

## 1. காலத்தின் பின்னணியில்

1944 ஆண்டு வடமராட்சியில் மேலைப் புலோலியில் ஒரு மகளிர் கல்லூரிக்காக அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த நிகழ்ச்சிகள் வடமராட்சியில் கல்விப் பாதையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக நிலைத்துவிட்டது. வடஇந்து மகளிர் கல்லூரி, என்ற பெயரைப் பெற்று இன்று பொன்விழாக் கொண்டாடுகின்ற அந்தக் கல்லூரியின் கல்விப்பணி பற்றி மதிப்பீடு செய்கின்ற தேவையும் ஏற்பட்டுள்ளது. அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக் கிடந்த யாழ்ப்பாணத்து மக்கள் தம் நிலை மறந்து நின்ற காலத்தில் இக் கல்லூரி தோன்றியது. அடிமை வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட மக்கள் தம் மொழி, சமயம், பண்பாடு என்பவற்றையும் அந்நியரிடம் அடகு வைத்தனர். இதனால் பலர் மதம் மாறினர். தமிழ் மொழியைக் கைவிட்டு ஆங்கில மொழியை ஆர்வத்துடன் கற்கலாயினர். கத்தோலிக்க மதம் வடமராட்சியிலே வேகமாகப் பரவியது. இந்துமதமும் வழிபாட்டு நடைமுறைகளும் பண்பாடும் அழிநிலையை நோக்கிச் சென்றன. இந்த நேரத்திலே பழமையான பண்பாட்டிலே நாட்டமும் முதுமையறிவும் கொண்ட முதியோர்கள் இந்த அழிநிலையைத் தடுக்க எண்ணங் கொண்டனர். மீண்டும் இந்தப் பண்பாட்டை வடமராட்சியிலே நிலைபெறச் செய்வதற்கு ஒரு நிறுவனம் தேவை என்பதனையும் உணர்ந்தனர். சிறப்பாக அழிநிலையடைந்து கொண்டிருக்கும் இந்துப் பண்பாட்டினைப் பெண்கள் மூலந்தான் மீண்டும் நன்னிலைக்கு கொண்டுவரலாம் என எண்ணிச் செயலபடத் தொடங்கினர். இந்துசமய மறுமலர்ச்சிக்காக எழுந்த நிறுவனமாக வடஇந்து மகளிர் கல்லூரி உருவாகிற்று. அதன் உருவாக்கத்தின் நோக்கத்தை அனைவரும் உணரும் வகையில் கல்லூரி இயங்கத் தொடங்கிற்று.

19ம் நூற்றாண்டிலே மிசனரிமார்கள் தம் மதக் கருத்துக்களை கல்வி யூட்டலினூடாகவே செய்தனர். ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி அதனூடாக கிறீஸ்தவ மதக் கொள்கைகளைப் பரப்பினர். தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை, பண்டைத்தரிப்பு, மானிப்பாய், உடுவில் முதலிய இடங்களிலே விடுதி வசதியோடு கூடிய பாடசாலைகள் அமைக்கப்பட்டன. பெண்கள் கல்வி என்ற சிறப்பு நிலையில் உடுவில் மகளிர் பாடசாலை அமைக்கப்பட்டது. இக் கால கட்டத்தில் வெஸ்லியன் மிசனரி கழகத்திலே கல்வி கற்றுத் தேறிய திரு. ஆறுமுகநாவலர் கல்விமூலம் மத மாற்றம் நடைபெறுவதை வன்மையாகக் கண்டித்தார், ஆனால் சைவப்பிள்ளைகளின் சமய அனுட்டானங்களையும், சைவச்சின்னங்கள் தரிப்பதையும் கல்விக்கூடங்களில் மிசனரிமார் கண்டித்தனர். இதனால் நாவலர் அதனை எதிர்க்க வேண்டிய நிலை உருவாகிற்று. அரசாங்க ஆதரவு பெற்றிருந்த மிசனரிமார்களது பணியினை நாவலர் கண்டிக்க ஆரம்பித்தார். வெறுமனே கண்டிப்புடன் மட்டும் நின்றுவிடாது நாவலர் அதனைக் செயற்பாட்டிலும் காட்டினார். வண்ணார் பண்ணையிலே ஒரு சைவ ஆங்கிலப் பாடசாலையை ஆரம்பித்தார். ஆனால் பொருள்வளமும் அரசாங்க உதவியும் இன்மையினால் அப் பாடசாலையைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை எனினும் நாவலர் தொடங்கிவைத்த இக்கல்விப் பணி பின்வந்தவர்களுக்கு வழிகாட்டுகின்ற பணியாக அமைந்தது. கிறீஸ்தவ சமயத்தினால் இந்து சமயத்துக்கு ஏற்பட்ட இடர்களைத் தீர்ப்பதற்குக் கல்வியே தேவையானது என்பதும் இதன்மூலம் உணரப்பட்டது. பாதிரிமார்கள் பல்வேறு இடர்களை ஏற்படுத்திய போதும் பழமையான பாரம்பரியங்களோடு மீண்டும் சைவசமய மறுமலர்ச்சி தோன்றுவதற்கு நாவலர் வகுத்துச் சென்ற பாதை சிறந்ததொரு பாதையாக திகழ்ந்தது.

நாவலரது பணிகள் வடமராட்சியிலே பருத்தித்துறையிலும் பரவியதால் அவர் பணியைப் பின்பற்றிப் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. சைவ சமயம் மிசனரிமாரின் வருகையால் பன்னிலைபெற்ற போது பருத்தித்துறையிலும் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. மேலைநாட்டவரது குழுநிலையான கல்விப்பணியிலே வெஸ்லியன் மிசன், மெதடிஸ்ற்மிசன்,

அமெரிக்கமிசன், கத்தோலிக்கமிசன், போன்றவை பல பாடசாலைகளை நிறுவின. பருத்தித்துறையைச் சார்ந்த பகுதிகளில் நிறுவப்பட்ட பாடசாலைகள் பற்றிய குறிப்பினைப் பின்வருமாறு கூறலாம்.

1 மெதடிஸ்த மிசன் குழு நிறுவிய பாடசாலைகள்

1. தட்டாதெரு — 1814
2. மாதனை — 1802
3. கற்கோவளம் — 1896
4. வதிரிவடக்கு — 1857
5. புலோலி தமிழ்க் கலவன் பாடசாலை — 1833
6. மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை — 1875
7. வெஸ்லியன் மிசன் காட்லிக் கல்லூரி — 1838

2. அமெரிக்க மிசன்

1. நாகர்கோவில் — 1881
2. குடத்தனை — 1890
3. பொலிகண்டி — 1910
4. அம்பன் — 1914
5. கொற்றாவத்தை — 1916

4. கத்தோலிக்க திருச்சபை

1. உடுத்துறை — 1850
2. அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலை — 1885
3. ஆழியவளை — 1885
4. சேர்பியன்பற்று — 1890
5. கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை — 1905
6. தாளையடி — 1901
7. மணற்காடு — 1949
8. குடத்தனை கரையூர் — 19 4
9. வெற்றிலைக்கேணி — 1897

2. கருத்துநிலைப் பின்னணியில்

இவ்வாறு அமைக்கப்பட்ட பாடசாலைகள் வடமராட்சியில் இந்து சமயத்தின் அழிநிலைக்குக் காரணிகளாக அமையக்கூடிய சூழலும் ஏற்பட்டது. வடமுனைக் கரையோரப் பகுதியில் இப் பாடசாலைகள் மூலம் கிறிஸ்தவ சமயம் கட்டாய பாடமாகக் கற்பிக்கப்பட்டது பிள்ளைகளைப் பாடசாலையில் அனுமதித்தல், ஆசிரியர்களை நியமித்தல் என்பவற்றில் சமயமே ஒரு முக்கியமான அளவு கருவியாகப் பயன்பட்டது. ஆங்கிலக் கல்வியையும், அதனால் கிடைக்கும் வேலைவாய்ப்புக்களையும் விரும்பியவர்கள் இப் பாடசாலைகளிலே தம்முடைய பிள்ளைகளைச் சேர்த்தனர். இந்த நிலையே சைவப் பெரியோர்கள் சிலருக்கு சைவப் பாடசாலைகளைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது. முதன்முதல் பருத்தித்துறைச் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பெயருடன் பாடசாலை தோன்றியது. சைவசமயத்திற்கு அக்காலத்திலே வழிகாட்டியாக விளங்கிய சுப்பிரமணியக்குருக்களும் அவருடைய மகன் கணபதிக்குருக்களும் ஆறுமுக நாவலருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தமையால் இத்தகையதொரு பாடசாலையைத் தோற்றுவிப்பதும் இயல்பாயிற்று. இதேபோன்று 1895-ம் ஆண்டு வேலாயுதம்பிள்ளை என்பவரால் ஒரு ஆண்கள் பாடசாலை தோற்றுவிக்கப்பட்டது. 1930-ம் ஆண்டு வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை என்பவரின் அரிய முயற்சியால் 178 மாணவர்களையும், 5 ஆசிரியர்களையும் கொண்ட தும்பளைச் சைவப்பிரகாச வித்தியாசாலை உருவாகியது. 1914-ம் ஆண்டு வல்லியப்பா விநாயகம் என்னும் பெரியாரால் புற்றளைப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இப் பாடசாலை அமைக்கப்பட்ட பகுதியிலே கத்தோலிக்க திருச்சபையினால் மதம் மாற்றப்பட்ட ஒரு பகுதி மக்கள் வாழ்ந்தனர். எனவே அம் மதத்தின் செல்வாக்கு மேலும் பெருகா வண்ணம் தடை செய்கின்ற பாடசாலையாக இப் பாடசாலை உருவாகியதெனலாம். 1924-ம் ஆண்டு தும்பளைச் சைவப்பிரகாச வித்தியாலயத்தை ஆரம்பித்த சிதம்பரப்பிள்ளை அவர்கள் பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தையும் உருவாக்கினார். கடற்கரையோரத்தில் வெஸ்லியம் மிசனறிமாரால் மதமாற்றம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்ததால் இப் பாடசாலை மிகுந்த இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. இப் பாடசாலையைச் சுற்றி நாற்புறமும் மிசனரிமாருடைய பாடசாலைகள் அமைந்திருந்தன காலத்தின் கோலத்தால் பாடசாலை அழிபாடுகளுக்கும் எதிர்கொடுத்த பாடாசலையாகும். அப் பாடசாலை வேலாயுதம் பாடசாலையின் ஒரு பகுதியாகவும் சில காலங்களிலே இயங்கிவந்துள்ளது.

இவ்வாறு பருத்தித்துறைப் பகுதியிலே கிறிஸ்தவ மதப்பரம்பல் ஏற்பட்டு பாடசாலைகள் உருவாகியிருந்தபோது பல சைவசமயப் பாடசாலைகளும் தோன்றின. சைவப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயப் பரம்பலைத் தடுக்கின்ற தளங்களாகவும் அமைந்தன. ஆங்கிலக் கல்வியும், அரசாங்க வேலை வாய்ப்பும் என்ற நிலையில் சைவ மக்கள் பலர் மதம் மாறியபோது அவர்களைப் பின்பற்றிப் பலரும் செல்லக்கூடிய வாய்ப்புக்களையும், வசதிகளையும் கொடுக்கின்ற ஒரு சமயமாக விளங்கியது. இதனால் தமிழ் மக்கள் காலங் காலமாய்த் தாம் கைக்கொண்ட சைவசமய நடைமுறைகளைக் கைவிட்டுக் கிறிஸ்தவ சமயத்தைச் சாரலாயினர், 'மதப்பரம்பல்' மக்களுக்குக் கல்வியறிவூட்டல் என்ற சமூகப் பணியினூடாகக் கிறிஸ்தவப் பாதிரிமார்களால் செய்யப்பட்டது. ஏழ்மை நிலையிலும், சாதியமைப்பு முறையிலும் சமூகத்திலே பின்தங்கியவர்களான அடிமட்ட மக்கள் விரைவாக மதமாற்றத்தை ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவ சமயம் பற்றிய பூரண விளக்கத்தை அவர்கள் அறிய விரும்பவும் இல்லை. தங்களுடைய சமூக நிலைப்பாட்டைக் கிறிஸ்தவ சமயம் உடனடியாக உயர்த்தும் என்ற நம்பிக்கையை மட்டுமே ஆதார

மாகக் கொண்டு அச் சமயத்திலே சேரலாயினர். வழிபாட்டு நடைமுறைகளிலே இரு மத வழிபாட்டு நடைமுறைகளையும் கூடக் கைக்கொண்டு வாழ்ந்தனர். இந்த நிலையிலே 1944-ம் ஆண்டு ஆனி மாதம் வட இந்து மகளிர் கல்லூரிக்கு அத்திவாரமிடப்பட்டது. ஆரம்பத்திலே திருவாளர் கார்த்திகேசு அவர்களின் முயற்சியால் அவரது இல்லத்திலே கல்வி கற்பிக்கப்பட்டது. பின்னர் கொட்டில்களிலே வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. எனவே தனிப்பட்ட ஒருவரது வீட்டிலிருந்து உருவாகிய இந்து மகளிர் கல்லூரியின் பணி சைவ சமயத்தையும் தமிழர் பண்பாட்டையும் பேணல் என்ற இலக்கினையே முன்னெடுத்துச் செல்வதாக அமைந்தது. மெதடிஸ் பெண்கள் பாடசாலையோடு போட்டிபோட்டு சமய நிலையில் மட்டுமன்றிப் பண்பாட்டு நிலையிலும் பெண்களுக்கு அறிவூட்டுகின்ற ஒரு அரிய நிறுவனமாகவும் அமைந்தது.

## 3. தோற்றப் பின்னணியில்

வடமராட்சிப் பகுதியிலே பெண்களின் கல்வி நிலை உயர்வடைய இரு பாடசாலைகள் தோன்றியுள்ளன. அவற்றில் ஒன்று கிறிஸ்தவ மதப் பாடசாலையாகவும் மற்றது சைவசமயப் பாடசாலையாகவும் இயங்கி வந்தமை அப்பிரதேச மக்களிடையே மதம் பற்றிய ஒரு நிலைப்பாட்டைச் சிந்திக்கத் தூண்டியது. சமூக மரபுகள் என்ற நிலையிலே சைவ சமய நடைமுறைகள் மக்கள் மத்தியிலே வேரூன்றி இருந்தாலும் கிறிஸ்தவ சமயத்தின் வருகையானது அதனைச் சிதைக்கின்ற ஒரு எதிரியாகவும் அமைத்தது. இதனால் இந்த இரு வேறுபட்ட பாடசாலைகளிலும் இரு வகையான சமயம் சார்ந்த வாழ்க்கை நெறிமுறைகள் பயிற்றப்படலாயின. சைவம் வளர்ந்திருந்த வடமராட்சிப் பகுதியிலே மேலை நாட்டாருடைய செல்வாக்கினாற் பரப்பப்பட்ட மதத்தின் அரவணைப்போடு ஆரம்பிக்கப்பட்ட மெதடிஸ்த பெண்கள் பாடசாலை இப்பகுதிப் பெண்களுக்கு மதத்தோடு கூடிய ஆங்கிலக் கல்வியை அளித்தது. இதுவரை நடைமுறையிலிருந்த பல விடயங்கள் பெண்களால் கைவிடப்படுகின்ற நிலைமையும் ஏற்பட்டது. கிறிஸ்தவ சமய நிறுவனங்களின் உதவியால் பெண்கள் கடல்கடந்து சென்று உயர்கல்வியைப் பெறுகின்ற வாய்ப்பும் ஏற்பட்டது, பெண்கல்வி தேவையற்றது. அவர்களுக்கு ஒழுக்கமும், வீட்டு நிர்வாகத் திறனுமே அவசியமானவை என்ற சமூக மதிப்பீடு கிறிஸ்தவ சமயம் அளித்த பெண் கல்வியால் மாற்றமடையலாயிற்று. பெண்களுக்கு கல்வி மிகவும் தேவையான தொன்று. பெண்களை அறிவூட்டுவதன் மூலமே தமது சமயத்தின் பரம்பல் வழிபாட்டு நிலையிலே சமூகத்திலே ஆழமாகப் பரவும் என்ற உண்மையைக் கிறிஸ்தவ சமயப் பரம்பலைச் செய்தவர்கள் நன்கு உணர்ந்து மெதடிஸ்த பெண்கள் பாடசாலையை உருவாக்கினர் இந்த உண்மையை உணர்ந்த சைவம் சார்ந்த பெருமக்களும் வட இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சியும் சைவப் பெண்களின் அறிவூட்டலும் பிறசமயப் பரம்பலின் வேகத்தைத் தடுப்பதற்கு உதவுமெனக் கருதினர். எனவே கிறிஸ்தவ சமயம் ஆரம்பித்த பாடசாலையைப் போலவே வட இந்து மகளிர் கல்லூரியின் கல்விப் பணியையும் தொடரலாயினர். இப் பாடசாலையை உருவாக்கிய சைவ விருத்திச் சபையினர் முக்கிய உறுப்பினர்களான 9 பேர் அமைந்து பணி செய்தனர். உறுப்பினர்களாக இருந்தவர்களிற் சிலர் தமது சொந்தக் காணிகளையே பாடசாலையைப் பெருப்பிப்பதற்கு நன்கொடையாக உதவினர். அதனால் திரு. கார்த்திகேசுவின் சொந்த வீட்டிலே ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை தனக்கென ஒரு வளவு கொண்ட பாடசாலையாக வளர்ச்சி பெற்றது. பல்வேறு வசதிகளும் விடுதி வசதிகளும் கொண்ட மெதடிஸ்த பாடசாலைக்கு எதிராக வட இந்து மகளிர் கல்லூரியை வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்பு இந்த அங்கத்தவர்களுக்கு இருந்தது. ஆரம்பத்திலே 40 மாணவர்களைக் கொண்டமைந்த பாடசாலையைப் பின்னர் வட இந்து மகளிர் கல்லூரியாக வளரும்வரை பல இடர்களையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது மெதடிஸ்த பெண்கள் கல்லூரியில் கல்விகற்க விரும்பிய மாணவர்களைக் 'கவர' வேண்டிய ஒரு தேவைகூட ஏற்பட்டது. வட இந்து மகளிர் கல்லூரியின் ஸ்தாபகர் வீடு வீடாகச் சென்று சைவப் பெற்றோர்களைச் சந்தித்து அவர்களுடைய பெண்பிள்ளைகளை இப் பாடசாலைக்கு அனுப்புவதற்கு வற்புறுத்தி பணிசெய்ய வேண்டியிருந்தது. மிகுந்த சிரமத்துடனும் கடினமான உழைப்பினாலும் இதற்காகச் செயற்பட வேண்டியிருந்தது. 1940-ம் ஆண்டு அரசாங்க உதவி நன்கொடை பெறுகின்ற பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. 1947-ம் ஆண்டு வரை இப்பகுதியிலே வாழ் கல்வித் தகைமையுடையோர் பலர் ஊதியம் பெறாது ஆசிரியர்களாகக் கடமையாற்றி பாடசாலையின் நிதி நிலைமையைச் சீர் செய்ய வேண்டியிருந்தது.

இப் பாடசாலையின் வளர்ச்சி நிலையிலே மாணவர் தொகையை அதிகரித்தல் முக்கியமானதொன்றாக அமைந்தது. அரசாங்க உதவி நன்கொடையைப் பெறுவதற்குக் குறிப்பிட்ட ஒரு தொகையான மாணவர் அப் பாடசாலையிலே இருக்க வேண்டும். இதனால் பாடசாலை அதிபராகப் பொறுப்பேற்பவருக்கு மாணவர்களை வீடுவீடாகச் சென்று சேர்க்கின்ற நிலைவரை கடமை காத்திருந்தது. பாலர் வகுப்புத் தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை தமிழ்மொழிக் கல்வி கற்பிக்கப்பட்டு ஆறாம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலமொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட்டது கட்டடங்களை விஸ்தரிக்க வேண்டிய நிலை ஏற்பட்ட காலங்களில் எல்லாம் பொது மக்கள் நன்கொடை பெறப்பட்டது. அதிபர்களாகப் பாடசாலையின் கடமையாற்றிய பெண்களின் பணியே இப்பாடசாலை வட இந்து மகளிர் கல்லூரியாக வளர்ச்சி பெறுவதற்கு அடிப்படையாக விருந்தது. பாடசாலையிலே திருமணமும் என்ற விடுதி அமைக்கப்பட்ட போது அந்த நிகழ்ச்சி பாடசாலையின் வளர்ச்சி நிலையிலே குறிப்பிடத்தக்க ஒரு திருப்பமாகவும் அமைந்தது. பெண்களின் கல்விப்பணி தொடர வேண்டுமாயின் வயதுவந்த பெண்குழந்தை பாடசாலையின் விடுதியிலே தங்கியே தமது கல்வியைத் தொடர வேண்டியிருந்தது

அக்காலத்து சமூக நடைமுறைக்கேற்ப பருவமடைந்த பெண்கள் வீட்டைவிட்டு வெளியே நாளாந்தம் கல்விக்காகச் செல்வது தடைசெய்யப்பட்டிருந்தது. இதனால் அப் பெண் குழந்தைகள் விடுதிகளிலே தங்கியிருந்து படிப்பதற்கு வசதி ஏற்பட்ட போது தம்முடைய கல்வியைத் தொடர்வதற்கும் வாய்ப்பேற்பட்டது.

## 4 பண்பாட்டுப் பின்னணியில்

வடமராட்சியின் பண்பாட்டு நிலையிலேயே இந்த விடுதி வாழ்க்கையானது கல்விபயில்கின்ற ,பெண்களுக்கு ஒரு நல்ல பயிற்சிக் கூடமாகவும் அமைந்தது. வீட்டு நிலையான தடைகள் ஏதும் இன்றித் தமது கல்வியைத் தொடர்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. பெண்களின் கல்வி திருமண வயதெல்லையைக் கூட்டுவதாக அமைந்தாலும் அறிவாற்றல் என்ற நிலையில் சமூகத்தில் பெண்களின் நிலை உயர்ந்தது. ஆங்கிலக் கல்வி பெண்களுக்கு அளிக்கப்பட்ட அதே வேளையில் ஏனைய இசை, நடனம், நாடகம் போன்றவற்றிலும் அவர்கள் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சமய நெறியிலே ஓர் ஒழுங்குபட்ட வாழ்க்கையை மேற்கொள்ள பெண்கள் பழகிக் கொள்வதற்கும் விடுதி வாழ்க்கை வாய்ப்பளித்தது. தமது சொந்த வீடுகளை விட்டு கூட்டு நிலையிலே விடுதியிலே ஒன்றிணைந்து வாழும்போது ,வடமராட்சிப் பெண்கள் ஆளுமை பெற்றவராக வளர்வதற்கும் இடம் ஏற்பட்டது. கல்லூரியிலே அதிபர்களாகப் பெண்கள் கடமையாற்றியமையால் அவர்களின் தோற்றம், பணி, செயற்றிறன் என்பன மாணவிகளை கவர்வதுடன் மட்டுமன்றித் தாமும் அவ்வாறு வர வேண்டுமென்ற விருப்பைக் கொடுக்கின்ற அம்சமாகவும் விளங்கியது.

வட இந்து மகளிர் கல்லூரியின் மாணவிகள் சீருடையானது தமிழர் பண்பாட்டைப் பேணுகின்ற நிலையிலே பலகாலமாக அமைந்திருந்தது. பூப்படைந்த மாணவிகள் மேலாக்கு அணிந்தே செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடு இருந்தது. இது மாணவிகளிடையே அவர்களது உடல் நிலையான வளர்ச்சியினை புலப்படுத்துவது மட்டுமன்றிக் கடமைநிலையின் வளர்ச்சியையும் காட்டுவதாக அமைந்தது. தமிழர் பண்பாட்டு நடைமுறைகளாக இருந்த கலைகளை மாணவிகள் பயில்வதால் தமிழர் பண்பாடு பேணல் என்ற விடயமும் வட இந்து மகளிர் கல்லூரியில் வளர்க்கப்பட்டது. ஆங்கிலப் பண்பாட்டின் தாக்கத்தினால் மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மாணவியர் ஆங்கிலப் பண்பாடான விடயங்களைக் கற்க வேண்டியிருந்தது. மேலும் அவற்றையே தமது வாழ்க்கைக்கு தேவையானது என்று நம்பி வாழ்கின்ற ஒரு நிலையும் ஏற்பட்டது. இதனால் இயற்கை நிலையில் வடமராட்சிப் பகுதிக்குப் பொருத்தமற்ற உடை நடை பாவனைகளைக் கூட அவர்கள் கைக்கொள்ள வேண்டியிருந்தது. சீருடை என்ற நிலையிலே மேல் நாட்டுப் பண்பாடு மாணவிடையே அறிமுகமானது மட்டுமன்றி நின்று நிலைப்பதற்கு ஏதுவாயிற்று. மேற்கத்திய நடனம், இசை போன்ற கலைகளும் கிறிஸ்தவ சமயப் பரம்பல் என்ற பணியும் மாணவிகளுக்கு முக்கியமான கல்விப் பணிகளாயின, இந்நிலையானது வடமராட்சிப் பெண்களிடையே ஒரு பாகுபாடு உருவாவதற்கும் வழிவகுத்தது. பண்பாட்டு நிலையிலே தமிழர் பண்பாட்டு மேலைத் தேசத்தவர் பண்பாடு என்ற இரு பண்பாடுகளின் கூர்மையான வேறுபாடு வெளிப்படையாகத் தெரிவதற்கும் இந்த இரு பாடசாலைகளும் சான்றுகளாயமைந்தன. வட இந்து மகளிர் கல்லூரி மாணவியர்க்கும் மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவர்களுக்கும் இடையே தோற்றப்பாட்டிலே இவ் வேறுபாடு கூர்மையாகத் தெரிந்தது. நமது நாட்டுப் பண்பாட்டு நடைமுறைகள் பிற்போக்கானவை என்ற ஒரு எண்ணம் மேலை நாட்டுப் பண்பாட்டைப் புதிதாகக் கற்ற மாணவிகளிடையே தோன்றி வளரலாயிற்று. ஆங்கில மொழியின் பயன்பாடும் இதற்கு உறுதுணையாக இருந்தது. கிறிஸ்தவ' சமய நிறுவனங்களின் ஒத்துழைப்பும் இதற்குப் பின்னணியாக இருந்தது. வெளியிடங்களிலே இரு கல்லூரி மாணவிகளும் தோன்றுகின்ற காலங்களில் மக்களிடையே இரு பாடசாலை மாணவிகளையும் இரு நிலைப்பட்ட பண்பாடுகளையும் ஒப்பிட்டு நோக்குகின்ற தன்மையும் ஏற்படலாயிற்று.

கிறிஸ்தவ நிறுவனங்களின் நேரடிக் கண்காணிப்பு என்ற நிலையிலே மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஒரு கட்டுக்கோப்பான பயிற்சிக் கூடமாக மக்களின் பார்வையில் தென்பட்டது. மேலைத் தேசப் பண்பாடு என்ற புதிய கோலம் மாணவியரின் தோற்றத்தைப் புதுமைப்படுத்திக் கவர்ச்சி நிலைக்கு இடமளிக்கவே இக் கல்லூரியின் பெயர் மக்களிடையே பெரிதும் பரவலாயிற்று. வட இந்து மகளிர் கல்லூரிக்கு ஒரு சமய நிறுவனத்தின் ஒத்துழைப்பு ஆரம்பத்திலிருந்தே இருக்கவில்லை. இன்னும் கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் தாம் நிர்வகிக்கின்ற பாடசாலையிலே கல்வி கற்கின்ற பிள்ளைகளின் பெற்றோர்களது வசதிகளையும் கவனித்துச் செயற்பட்டனர். சமய வழிபாடு நடக்குமிடங்களில் பெற்றோருக்குப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம், கல்வியின் தேவை, கல்வியின் பயன் என்பவற்றை நேரடியாக எடுத்து விளக்கினர். இதனால் பெற்றோர் பெரிதும் கவரப்பட்டுத் தமது பிள்ளைகள் கிறிஸ்தவ நிறுவனம் நடத்துகின்ற பாடசாலைகளிலே கல்விகற்பதே அவர்களுடைய எதிர்காலத்திற்கும் பயன்தரும் என நம்பினர். குழுநிலையிலேயே பெற்றோர் சேர்ந்து அத்தகைய பாடசாலைகளுக்குத் தமது ஒத்துழைப்பையும் நல்கினர். ஆனால் வட இந்து மகளிர் கல்லூரிக்கு இத்தகைய ஒரு குழுநிலைப்பட்ட சமயப்பின்னணியால் அறிவூட்டப்பட்ட பெற்றோர்களது ஆதரவு இருக்கவில்லை.

## 5 தனித்துவ நிலையில்

வட இந்து மகளிர் கல்லூரி இன்று அதன் பொன்விழாவைக் கொண்டாடுகின்ற வேளையில்

தனது சமுதாயத்திற்கான பணியையும் பங்களிப்பையும் பற்றி மீள நோக்கிப் பார்க்கின்ற வாய்ப்பையும் பெறுகின்றது. வடமராட்சியில் இந்துப் பெண்களின் நிலை உறுதிப்பாடடைவதற்கு இக் கல்லூரி தான் துணை செய்துள்ளது. பிறமதப் பரம்பலிலே ஒரு தலைமுறையினர் வழிதவறிச் செல்கின்ற வேளையிலே சமூகத்தவர் அனைவருமே அவ்வழிச் செல்லாது நிற்பதற்கு வட இந்து மகளிர் கல்லூரி ஒரு தடைக்கல்லாக நின்று பணி செய்துள்ளது. இப் பாடசாலை அன்று உருவாகியிராவிட்டால் வடமராட்சியில் பெண்கள் மத்தியில் தமிழர் பண்பாடு பற்றிய உணர்வு தோன்றாமல் போயிருக்கும். தமிழர் பண்பாட்டு எதிர்நிலையான மேலைத் தேசப் பண்பாட்டின் பரம்பலை மனங்கொண்டு தமிழர் பண்பாட்டைக் காக்க வேண்டும் என்னும் அறிவூட்டலைப் பல பெண்கள் பெறுவதற்கு இக் கல்லூரி அரும்பணி செய்துள்ளது. இங்கு இதுவரை காலமாகக் கல்விப் பயிற்சி பெற்ற மாணவிகள் அனைவரும் பிற பண்பாட்டுப் பரம்பலையும், பிற சமயப் பரம்பலையும் எதிர்த்து மௌனப் போர் செய்த பெண் போராளிகளாவர். தமிழர் பண்பாட்டு நிலையை விளக்கும் ஆடைகளை இம் மாணவிகள் அணிந்து பாடசாலை சென்றபோது 'நாட்டுப் பெண்கள்' எனக் கேலி செய்தவர்களும் இருக்கின்றார்கள். அந்த நாட்டுப் பெண்கள்தான் இன்று தமிழர் பண்பாட்டை வடமராட்சியில் பேணி வளர்த்த நாடுகாவற் பணிசெய்த பெண்கள் என்ற பெருமைக்குரியவர்கள் ஆகின்றனர். வட இந்து மகளிர் கல்லூரியின் வளர்ச்சிநிலையிலே தமிழர் பண்பாடு ஒரு மையப் பொருளாகவே இன்று வரை இருக்கின்றது. தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் அழிந்துவிடாமல் வடமராட்சியிலே பாதுகாக்கப்பட்டதற்கு இக் கல்லூரியும் தன்னாலான பங்களிப்பைச் செய்துள்ளது. அதற்காக இதுவரை தமது உழைப்பை நல்கிய அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவிகள், பெற்றோர் நலன்விரும்பிகள் அனைவரும் நமது பண்பாட்டைப் பேணுகின்ற அரும்பணியிலே நல்ல தொண்டாற்றியுள்ளார்கள்.

காலச் சுழற்சியிலே தனிப்பட்டவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் எல்லாம் அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டபோதும் பண்பாட்டு நிலையான வேறுபட்ட தன்மை விலகிவிடவில்லை. கிறிஸ்தவ சமயம் என்ற பின்னணியில் மேலைநாட்டு பண்பாடு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்தாலும் சமூகத்திலே அப்பண்பாட்டை வலிந்து புகுத்துகின்ற வன்முறை சற்றுத் தளர்ந்திருக்கின்றது. உயர்கல்வி என்ற நிலையில் வட இந்து மகளிர் கல்லூரி தனது பண்பாட்டுப் பேணலைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும். காலம் காலமாகத் தமிழர்களால் நம்பப்பட்டு வந்த வாழ்க்கை நெறியை சமூகத்திலே நிலைபெறச்செய்வதற்கும் இக் கல்லூரியின் பங்களிப்பு இன்றியமையாதது. எதிர்காலத்திலே தமிழ் மொழியும், தமிழ்ப் பண்பாடும் நமது மண்ணிலே நின்று நிலைப்பதற்கும் இக் கல்லூரி இன்னும் பல திட்டங்களைப் போட்டுச் செயற்பட வேண்டும். பெண்களுக்கு அறிவூட்டல் மூலம் நாட்டின் வளத்தைப் பெருக்கலாம். நமது பெண்கள் கல்வியறிவு பெற்றுவிட்டால் அவர்களைச் சூழ இருக்கின்ற போலித்தளைகள் தாமாகவே கழன்றுவிடும். பொன்விழாக் கொண்டாடுகின்ற கல்லூரி என்ற வளர்ச்சி நிலையிலிருந்து இன்னும் வேகமான நிலையிலே இக்கல்லூரியின் பணிகள் தொடரப்பட வேண்டும். அதற்கெனச் சில கருத்துக்களை இங்கு கூறுவதும் பொருத்தமாகும்.

வடமராட்சிச் சமூகத்திலே வாழ்கின்ற பெண்கள் அனைவரும் நிறைவான கல்வியறிவைப் பெறுவதற்கு இக் கல்லூரி சில செயற்றிட்டங்களைப் புதிதாக ஆக்க வேண்டும். இன்று எமது பிரதேசத்திலே நாற்பது ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. இன்றைய சூழ் நிலைகளால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது அடிப்படையான நம்பிக்கையைக் கைவிட்டுப் புதிய அறிவூட்டல்களைப் பின்பற்றுகின்றனர். மீண்டும் கிறிஸ்தவ சமயமும் பிறநாட்டுப் பண்பாடும் புதிய கோலத்திலே எமது மண்ணை விழுங்கக் காத்துநிற்கின்றன. இந்த நிலையிலே வட இந்து மகளிர் கல்லூரி தனது கடந்த காலப் பணியைக் கருத்திற்கொண்டு இயங்க வேண்டியதும் அவசியம். மாணவர், பெற்றோர், ஆசிரியர், அதிபர் என்ற நிலையிலே கல்லூரியின் அங்கமாக இருக்கின்ற அனைவரும் ஒன்றுபட்டு இந் நிலையைச் சீர்செய்ய வேண்டித் திட்டங்கள் ஏற்படுத்த வேண்டும். கல்லூரியின் வளர்ச்சி என்ற நிலையில் மட்டும் இதனை நோக்காது நமது சமூகத்தின் வளர்ச்சிநிலை என்ற வகையில் கல்லூரியின் பணியினைச் சமூகத்திற்கும் பரவலாக்க வேண்டும். எதிர்காலத்திலே நமது வடமராட்சிப் பெண்கள் கல்வியறிவிலே மேம்பட்டவராக மட்டுமன்றி நாட்டுக்கான பணிநிலையிலும் பங்களிப்புச் செய்தவராக வரலாற்றில் இடம்பெற வேண்டும்.

கல்லூரியிலே கற்பித்தல் மொழி என்ற நிலையில் மட்டுமன்றி நமது நாட்டின் மொழி என்ற பெருமையைத் தமிழ் பெறுவதற்கு வழி செய்ய வேண்டும். தமிழ் மொழியும் தமிழர் பண்பாடும் அழியாமல் பாதுகாக்கப் பல வழிகளை நாட வேண்டும். புதிதாக முளைக்கின்ற 'சமயப் பரப்பல்' என்ற நோயைக் கல்வி எறிய வேண்டும். பெண்களின் அறிவாற்றலும், கல்விப் பயிற்சியும் அதற்குப் பயன்பட வேண்டும். கற்றல், கற்பித்தல் இரு நிலைகளில் கல்லூரிப்பணி சுருங்கிவிடாமல் சமூகப்பணி, நாட்டுப்பணி என்று பரந்துபடவேண்டும். அப்போதுதான் வட இந்து மகளிர் கல்லூரி தமிழர் வரலாற்றில் இடம்பெறும்; வடமராட்சி மண்ணின் புகழும் நின்று நிலைக்கும்.

# கீர்த்தனைகளில் இராமாயணம்

பேராசிரியர் வி. சிவசாமி
தலைவர், சம்ஸ்கிருதத் துறை.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீர்த்தனை அல்லது கீர்த்தனம் என்னும் சொல் தமிழிலே புகழ்ச்சி, ஒருவகை இசைப்பாடல் எனப் பொருள்படும். இதன் மூலச்சொல்லான கீர்த்தன எனும் வடமொழிச்சொல்லிற்குக் கூறுதல், கூறச்செய்தல், வெளிப்படுதல், தொடர்பு கொள்ளுதல், புகழுதல், சிறப்பித்தல் எனப்பல பொருள்உண்டு. இறைவனின் சிறப்பியல்புகளையும் பெருமைகளையும் புகழ்ந்து கூறும் இசைப்பாடல்வகை யொன்றினைக் குறிப்பதற்கே இது பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

கர்நாடக இசைக்குரிய கீர்த்தனைகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகியமொழிகளில் உள்ளன. வடஇந்திய மொழிகளான ஹிந்தி, மராத்தி முதலியனவற்றிலே கீர்த்தனம்என்பது கீர்த்தன் என வரும்; ஹிந்துஸ்தானி இசைக்கான கீர்த்தனங்கள் உள்ளன. கீர்த்தனைகள் பொதுவாகப் பல்லவி, அநுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளைக் கொண்டிலங்குவன. சிலவற்றில் பல்லவியும், அநுபல்லவியும் சரணமும் சேர்ந்து சமஷ்டி சரணமெனவும் வரும். ஒவ்வொரு பகுதி முடிவிலும் பல்லவி மீண்டும் இசைக்கப்படும். கர்நாடகஇசைக்குரிய ராகங்களின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றுக்கும் கீர்த்தனைகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியனவற்றிற்குமிடையே நெருங்கிய தொடர்புகள் உள்ளன. கீர்த்தனங்களிலே சாஹித்யம் பிரதானமாகும். தெய்வீக இயல்பும் ஈடுபாடும் முக்கிய இடம் பெறும் பாவரசங்கள் குறிப்பாகப் பக்தி ரசம் ததும்பும். இக்கீர்த்தனை வடிவம் கி. பி. 14-ம் நூற்றாண்டளவிலே தோன்றியதாகப் பேராசிரியர் பி. சாம்பமூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் கீர்த்தனைகளின் உருவாக்கத்திலே மராத்தி, கன்னட, தெலுங்கு சம்ஸ்கிருதக்கீர்த்தனைகளின் தாக்கம் இடம் பெற்றிருந்தாலும், அவற்றின் தோற்றம், வளர்ச்சி ஆகியனவற்றிலே தனித்துவம் உண்டு. இக் கீர்த்தனைக்கான வடிவம் (பல்லவி, அநுபல்லவி, சரணம் அடங்கிய வடிவம்) மேற்குறிப்பிட்ட மொழிகளிலுள்ள கீர்த்தனைகளையொட்டித் தோன்றியிருக்கலாம். ஆனால் கீர்த்தனை எனும் இசைப்பாடல் வகை மராத்தியத் தொடர்பாலே தமிழிலேற்பட்டதெனப் பேராசிரியர் தெ. பொ. மீனாக்ஷிசுந்தரன், திரு. மு. அருணாசலம் போன்ற அறிஞர்கள் கூறியுள்ளனர். ஆனால் தமிழ்க்கீர்த்தனைக்கான கருவினைத் தமிழிலக்கியத்திலே காணலாம். இது பற்றிய நோக்கிலே பார்க்கும் போது பழந்தமிழ் நூல்களிலே கலித்தொகை, பரிபாடல், ஆகியனவும் சைவத் திருமுறைகள், ஆழ்வார் திருப்பாசுரங்கள் திருப்புகழ் முதலியனவும் குறிப்பிடற்பாலன. சில அறிஞர்கள் ''தலையே நீ வணங்காய்'' எனத் தொடங்கும் திருநாவுக்கரசு சுவாமிகளின் தேவாரப்பதிகத்திலே பல்லவிக்கான முன்னோடி அமிசம் காணப்படுகின்றது எனக்கருதுகின்றனர். வேறு சில அறிஞர்கள் கலித்தொகை, பரிபாடல் போன்ற நூல்களிலே கீர்த்தனைக்கான முன்னோடி அமிசங்கள் சில உள்ளன எனக் கொள்ளுவர். தேவாரம் (இறைவனைப்பற்றிய புகழ் மாலை), திருப்புகழ் (இறைவனின் புகழ்) ஆகிய தெய்வத்தமிழ் மாலைகள் குறிப்பிடற்பாலன. அதே வேளையிலே தமிழ் மன்னர் பற்றிய மெய்க்கீர்த்திகள் கவனித்தற்குரியன. மன்னரைப்பற்றிய புகழ்மாலைகளுக் குப்பதிலாக அல்லது அவற்றைப்போல இறைவனின் புகழ் கூறும் இசைமாலைகளாகக் கீர்த்தனைகள் தோன்றியிருக்கலாம், மேலும், சிந்து, பள்ளு, குறவஞ்சி முதலிய தமிழ்ப்பிரபந்தங்களும் கீர்த்தனைகளின் ஆரம்ப நிலைகளை அறிவதற்கு உதவுவன. எனவே, மேற்குறிப்பிட்ட பலமூலங்கள் தமிழ்க்கீர்த்தனையின் உருவாக்கத்திலே ஏதோவகையில் துணை புரிந்திருக்கலாம். பொதுவாக, எளிமையான நடையில் ஜனரஞ்சகமான முறையில் இசையுடன் இறைவன்புகழைக் கீர்த்தனைகள் எடுத்தியம்புவன.

இன்று கிடைத்துள்ள காலத்தால் முந்திய தமிழ்க் கீர்த்தனை வெண்றிமலைக் கவிராயரால் எழுதப்பட்டதாகும் ஒல்லாந்தர் கவர்ந்து சென்ற திருச்செந்தூர் முருகனின் படிமம் 1653லே மீட்கப்பட்டபோது இது பாடப்பட்டதாகும். திருப்புகழ்போன்று இதுவும் முருகனைப்பற்றியதாகும். எனவே இவ்விரண்டிற்குமிடையி

லுள்ள தொடர்புகள் நன்கு ஆராயப்பட வேண்டியதாகும். ஆனால் 1653 க்கு முன்பே தாளபாக்க அன்னமாச்சாரியர் ( 1424 - 1503 ) புரந்தரதாசர் ( 1480 – 1564 ) முதலியோர் தெலுங்கு, கன்னடம் சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளில் இயற்றிய கீர்த்தனைகள் வந்துவிட்டன. காலத்தால் முந்தியபுகழ் பெற்ற தமிழ்க்கீர்த்தனை ஆசிரியர்களிலே சீர்காழியைச் சேர்ந்த முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை, அருணாசலக்கவிராயர் 1712 – 1779 ) ஆகியோர் குறிப்பிடப்பாலர். இவர்களுடைய இறுதிக்காலகட்டத்திலேதான் கர்நாடக இசைக்குரிய சங்கீத மும்மூர்த்திகள் தோன்றினர்.

இக்காலகட்டத்திலே தமிழகத்திலே பிரபல்யமாக நிலவிய வழிபாடுகளிலே ராம வழிபாடும் ஒன்றாகும். இந்திய இலக்கிய நூல்களிலே இராமாயணம் மிக முக்கியமான இடம் ஒன்றினை வகித்துவந்துள்ளது. வேறு எந்த நூலுக்குமில்லாத சிறப்பு இதற்கு உண்டு. இராமாயணம் காட்டும் இலட்சியங்கள் குறிப்பாக இராமனின் இலட்சியங்கள் தென்னாசிய மக்களின் இலட்சியங்களாக இலங்கின. இராமன் மிக உன்னதமான அவதார புருஷனாகவும் திகழ்ந்துள்ளான். வடமொழி ராமாயண ஆசிரியரான வால்மீகிகாலம் தொட்டு இக்காலம்வரை இந்தியாவிலும் இந்தியப்பண்பாடு பரவிய தென்கிழக்காசிய நாடுகளிலும் ராமபக்தி முக்கியமான இடமொன்றினைப் பெற்றுவந்துள்ளது. இலக்கியத்தில் மட்டுமன்றி கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் முதலிய பல கலைகளிலும் இராமாயணம் மிகுந்த தனிப்பட்ட செல்வாக்குப் பெற்றிருந்தது, தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே வால்மீகி இராமாயணத்தைப் பின்பற்றித் தமிழில் இயற்றப்பட்ட மிகச்சிறப்பான பெருங்காப்பியம் கம்பஇராமாயணம் ஆகும். கம்பனுக்கு முன்பே சங்ககாலம் தொட்டு அல்லது அதற்கு முற்பட்ட காலம் தொட்டு தமிழர் இராமாயணக் கதையினை நன்கு அறிந்திருந்தனர். ஆழ்வார்களின் திருப்பாசுரங்களில் குறிப்பாகக் குலசேகராழ்வர் பாடல்களிலே இராமபக்தி நன்கு காணப்படுகின்றது. கம்பனுக்கு முன்பே சில கவிஞர்கள் இராமாயணத்தினைத் தமிழிலே பாடினர் என்ற கருத்தும் நிலவுகின்றது. எனினும் கம்பஇராமாயணம் தனிச்சிறப்பு வாய்ந்தது. இதைத்தொடர்ந்தும் பின்பற்றியும் பல நூல்களும், தனிப்பாடல்களும் தோன்றின. இவற்றுள்ளே சந்த விருத்தத்திலே பாலபாரதியார் பாடியுள்ளது ஒன்றாகும். 18ம் நூற்றாண்டிலே வாழ்ந்த சீர்காழி அருணாசலக்கவிராயர் இராமாயணக் கதையினை நாடகமாகப் பெரும்பாலும் கீர்த்தனைகளில் பாடியுள்ளார். இது இராமநாடகக் கீர்த்தனை என அழைக்கப்படும். கம்பனின் இராமாயணம் கற்றோர் இதயத்தைத்தொடும் காப்பியம் என்பதில் ஐயமில்லை, பாலபாரதியின் இராமாயணமும் நயமுள்ள ஒரு நூலாகும். ஆனால் அருணாசலக்கவிராயர் இராமாயணத்தை நன்கு ஜனரஞ்சகமாக்கும் நோக்குடன் இன்னிசைப் பாடல்களில் நாடகமாக இதனை அமைத்துள்ளார். ஏறக்குறைய இவரின் சமகாலத்தவராகிய பத்ராசலம் ராமதாசர், உபநிஷத்பிரமன் போன்றோர் கீர்த்தனைவடிவிலே ராமனைத் தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலிய மொழிகளிலே பாடியுள்ளனர் தமிழகத்தில் மட்டுமன்றி மைசூர், ஆந்திரதேசம், கேரளம் முதலிய மாநிலங்களிலும், அவ்வவ் மாநிலமொழிகளிலே இராமாயணம் ஒன்று அல்லது பல எழுதப்பட்டு வந்தன. ராமனாட்டம் எனும் நடனம் கேரள சாஸ்திரீய நடனமாகிய கதக்களிக்கு வழிவகுத்தது. அருணாசலக்கவிராயர் சைவராயினும், சிறந்த ராமபக்தர். சிவபிரானையும், இராமபிரானையும் அவர் சமநிலையிலே பரம்பொருளாகவே கருதிய சமரசநோக்குடையவராக விளங்கினார்.

இராமநாடகக்கீர்த்தனை பெரிதும் கீர்த்தனைவடிவில் அமைந்துள்ளமைபற்றி ஏற்கனவே கூறப்பட்டுள்ளது கீர்த்தனைகள் முதலிலே தனியாகவும் பின்னர் நாடகத்தின் பகுதிகளாகவும் மிளிர்ந்து காலப்போக்கிலே நாடகம் முழுவதிலும் இடம்பெறலாயின. இந்நாடகக் கீர்த்தனை தமிழிலே புதிய ஒரு இலக்கிய வடிவிலான முதலாவது நூலாகும். இது மேலும்பல இசை நாடகங்களுக்கு முன்மாதிரியாக மிளிர்ந்தது: இத்தகைய நாடகங்கள் இசை நாடகங்கள் அல்லது கேயநாடகங்கள் ( operas ) எனவும் அழைக்கப்படும்.

ஏற்கனவே குறிப்பிட்டவாறு, அருணாசலக்கவிராயர் சமகாலத்தமிழகச்சமய, சமூகச்சூழ்நிலைக்கேற்ப இராமாயணத்தை ஓர் இசை நாடக வடிவில் அமைத்துள்ளார். இவருக்கு முன் எவராவது தமிழில் இராமாயணத்தைக் கீர்த்தனை வடிவிலே பாடியதாகத் தெரியவில்லை. தாம் இயற்றிய கீர்த்தனைகளுக்கான ராகதாளங்களை நிச்சயிப்பதற்குத் தம்மிடம் இயற்றமிழ் கற்றவரும், சீர்காழிக்கு அடுத்துள்ள சட்டநாதபுரம் எனும் கிராமத்தவருமான வேங்கடராமய்யர், கோதண்டராமய்யர் எனும் இரு அந்தண மாணவர்களின் உதவியைப் பெற்றிருந்தார். இவர் இராமநாடகத்தினை எழுதுவதற்கு அவர்கள் நன்கு தூண்டுகோலாக விளங்கினர். இசைவல்லுனராலே பாடத்தக்கதும், மக்களாலே கேட்டு மகிழத்தக்கதுமாகிய இசைநாடக வடிவத்தினை ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார். இந்நாடகத்திலுமிவர் முதலிலே பாடியது யுத்தகாண்டத்திலே அங்கதன் ராவணனுக்கு கூறியதாகச் சொல்லப்படும் 'அடடா வெளியே புறப்படடா' என்று தொடங்கும் இசைப்பாடலாகும். மேற்குறிப்பிட்ட மாணவர்கள் இதற்கு ராகதாளம் அமைத்துச் சென்னையிலிதனைப் பாடிப் பரிசில் பெற்றனர். தொடர்ந்து அருணாசலக்கவிராயர் முழு இராமாயணத்தையும் பாடி முடித்தார்: இதனைக் கம்பர் போல ஸ்ரீரங்கத்திலே அரங்கேற்ற விரும்பினார். ஆனால் கோவிற்றுறையாளர்கள் கம்பருக்குப்போல இவருக்கும் பெருமாளின் உத்தரவு தேவை எனக்கூறியதாகவும், இவர் 'ஏன் பள்ளி கொண்டீர் ஐயா" எனத் தொடங்கும் கீர்த்தனையினையும், பெருமாளின் பரிசனங்கள் பற்றியும் பாடி ஸ்ரீரங்கநாதரின் உத்தரவையும், கோவிற்காரரின் அனுமதியையும் பெற்றார் என்றும் கம்பராமாயணம் அரங்கேற்றப்பட்ட அதே மண்டபத்திலே இந்நூலையும்

1772லே தமது 60 வயதிலே அரங்கேற்று வித்தார் என்றும், அறியப்படுகின்றது. சம காலத்திலே வாழ்ந்த மணலி முத்துகிருஷ்ண முதலியார் இவருக்கு கனகாபிஷேகம் செய்து கௌரவித்தார். மேலும் சில இடங்களிலிது அரங்கேற்றப்பட்டது.

ஆசிரியர் இந்நூலினை நாடகம் என்றே பல இடங்களிலே குறிப்பிட்டுள்ளார். தொடக்கத்தில் உள்ள விநாயகர் துதியிலே ''எங்குலதெய்வமே இந்த இராமநாடகத்திற்கு அனுக்கிரகிப்பாயே'' எனவும், அனுமார் துதியில் ''இணை ஒன்றில்லாத வல்ல ராம நாடகம் சொல்லத்துணை செய்தருள்வாய்'' எனவும் அவர் கூறியிருப்பன கவனித்தற்பாலன. வால்மீகி. போதாயனர் முதலியோர் வடமொழியிலும், கம்பர் தமிழிலும் எழுதியுள்ளமையைக் குறிப்பிட்டு, தகுதியில்லாத தாமும் ஒரு நாடகமாய் இதனை எழுதியதாகக் கூறுகிறார். அபசாரக்ஷமையிலே 'கனமான வால்மீகி சுலோகம் செய்தார், கம்பரும் இராமாயணத்தைக் கவியாய்ச் செய்தார். உனதாசையாலே நாடகமாய்ச் செய்தேன்' என்கிறார், மேலும் 'கேவலம் நான் இ தப்பாகவதர் படிக்கும் கீர்த்தனையாய்ச் சொன்னேன்' எனவும் தொடர்ந்து கூறுகிறார். எனவே இவற்றில் ஆசிரியன் நோக்கம் தெட்டத்தெளிவாகின்றது. நாடகக்கீர்த்தனை வடிவிலே இராமாயணத்தை அமைப்பதே இவரின் இலக்காகும். மேலும் முடிவிலுள்ள நூற்பயனிலே ''ஞானநாயகனாம் இராமன் நாடகம் இசையால் சொல்லும் கானபாகவதர் உள்ளம் களித்திட'' எனக்கூறப்படுவதாலும் இக்கருத்து வலுப்பெறுகிறது.

ஆசிரியர் பெருமளவு கம்பரையொட்டியே தமது நாடகக்கீர்த்தனையினை அமைத்துள்ளார். ஆயினும் சில இடங்களில் வால்மீகியையும் பின்பற்றியுள்ளார் ஆனால் மூலநூல்களைப் போன்று ராமகதையினை விரித்துக்கூறாமல், தமது நோக்கத்திற்கேற்பச் சுருக்கி இசை, நாடகமெருகு ஊட்டிக் கூறுகிறார். இசைநயம் நாடகப்பண்புகளுடன் தமது சொந்தக்கற்பனைகளுக்கும் இடம் அளித்துள்ளார். இந்நூல் தசரதனின் ஆட்சியிலிருந்து இராமன் ராவணனை வென்று முடிசூடியது வரையுள்ள கதையைக் கூறுகின்றது. தொடக்கத்திலே பாயிரமும், மூலராமாயணங்களையொட்டி, பாலகாண்டம் அயோத்தியாகாண்டம், ஆரணியகாண்டம், கிஷ்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களும் கொண்டிலங்குகின்றது. கட்டியக்காரன் வருகை தசரதனின் அரசியலை விளக்குவதாக அமைகின்றது. ஒரு பாத்திரம் தன்னைத்தானே அறிமுகப்படுத்திக் கொண்டு வெளிப்படும் தெருக்கூத்தின்பாணி இதில் அமைந்துள்ளது.

அரங்கத்திலே தோன்றும் தசரதன் ''நெடுநாளாய்ப்புவி ஆண்டேன்'' என்று தன்னை அறிமுகம் செய்கிறான் அதுபோல லட்சுமணன் வருமிடத்திலே 'நானே லட்சுமணன், ஆனால் கொடுக்கிறேன் ராமனுக்கு மணிமகுடம்'' என்று கூறுவதைச்சுட்டிக்காட்டலாம். இராமநாடகக்கீர்த்தனையிலே காப்பு, பாயிரம் உட்பட ஆறுகாண்டங்களிலும் 268விருத்தம், 197 தரு (பல்லவி, அனுபல்லவி, சரணம் அடங்கிய கீர்த்தனை) 60 திபதை, 6 கொச்சகம், 2 வெண்பா, ஒரு கலித்துறை, ஒரு தோடயம், ஒரு வசனம் ஆகியன இடம்பெற்றுள்ளன விருத்தப்பாக்கள் கம்பஇராமாயணத்தொடர்பை நன்கு வலுயுறுத்துவன. யுத்தகாண்டத்திலேதான் கூடுதலான விருத்தங்களும், தருக்களும் உள்ளன.

காண்டங்களின் தொடக்கமும் இறுதியும் விருத்தப்பாக்களிலமைந்துள்ளன. ஒரு விருத்தம் முடிய, அதைத்தொடர்ந்து தரு அல்லது திபதை இடம்பெறுகிறது. விருத்தங்கள் கதைக்குறிப்புகளுடன் விளக்கப்பகுதியாக அமைய, தரு, திபதை ஆகியவை உணர்ச்சிவேகமுள்ள பகுதிகளாகக் காணப்படுகின்றன தோடயமும், வசனமும் நூலின் தொடக்கப்பகுதியில் மட்டும் உள்ளன. ஆசிரியர் குறிப்பாகக் கம்பஇராமாயணத்தையே பின்பற்றியிருப்பினும், ஒரு சில அம்சங்களிலே கதைப போக்கிலே மாற்றங்கள் செய்துள்ளார். எடுத்துக்காட்டாக, கடல் தாவு படலத்தில் சுரசைப்பற்றிய செய்தியில்லை. இராமன் சூர்ப்பனகையுடன் உரையாடுமிடம் வால்மீகியைத் தழுவியுள்ளது கம்பஇராமாயணத்தில் சீதையின் துயர் நிலையைக் கூறுமிடம் கவிகூற்றாக அமைய, இராமநாடகக் கீர்த்தனை சீதையே தன்னிலையைக் கூறுவதாக அமைந்துள்ளது.

இராமநாடகக் கீர்த்தனையிலே பெரும்பாலும் மாலையிலும், இரவிலும் பாடக்கூடிய ரக்திராகங்களையே ஆசிரியர் பயன்படுத்தியுள்ளமை பொருத்தமாகும். இராகம், சுவை ஆகியவற்றுக்குப் பொருத்தமான நூலாக (லக்ஷணகிரந்தமாக) இந்நூல் அமைந்துள்ளமை சிறப்பாகும். ஆசிரியர் சாவேரி தோடி, மோஹனம், சங்கராபரணம், பைரவி, அடானா, கல்யாணி, அசாவேரி சுருட்டி, புன்னாகவராளி, முகாரி, முதலிய 27 இராகங்களையும் ஆதி, அட, மிச்ரசாபு, ரூபகம் ஆகிய நான்கு தாளங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

இதிலுள்ள சில காட்சிகளைக் குறிப்பிடலாம் பாலகாண்டத்திலே அறுபதினாயிரம் ஆண்டுகள் நன்நிலையிலே வாழ்ந்தாலும் பிள்ளைப் பாக்கியமின்றித் தசரதன் மிகமனவருத்தமுற்றமை பின்வருமாறு கூறுப்படுகிறது.

(ப) ''பிள்ளை இல்லாத பாக்கியம் — நான்
பெற்றிருந்தேன் லோக்கியம் (பி)

(அ. ப) வள்ளலே ஜன்மமலடன் என்றொருகாலே
வசைகொண்டேன் தசரதன் நான்புவிமேலே
கள்ளியானது நெடுகவளர்ந்ததாலே
காய் உண்டோ கனிஉண்டோ அதுபோலவே (பி)

(ச) மறுவில்லாது இந்தச் சூரிய வங்கிசம் இது
வளரும் வங்கிசம் ஆச்சே – யிது
மழைபெய்ந்தடிமறைந்தால்போலே என்
மட்டிலே நின்று போச்சே (பி)
பெருக்கக்காண்பதே காண்பதல்லாமல்
பெறுவதொன்றும் காணேன் — மிகு
பிச்சர் போலே நெடுநாளும் உண்டஉண்ட
எச்சிலை உண்ணல் ஆனேன்... (பி)
ஏந்தினேன் இல்லையே ஒரு பிள்ளைக்கனி
என்னவீடென்ன வாசல் எனக்கினி (பி)

எனத்தசரதன் மனநிலை தெளிவாகக் கவிநயத்துடன் காட்டப்படுகின்றது.

ஸ்ரீராமபிரான் பரப்பிரமம் என்பதை ஆசிரியர் வெளிப்படையாகக் கூறியுள்ளார்.

(ப) ''பரப்பிரம்ம சொரூபமே–ஸ்ரீராமன் ஆகப்
பாரில் வந்தது பாரும் (ப)
(அ. ப) வரத்தினால் அரக்கரை வானத்தில் ஏற்றவும்
வானத்தில் தேவர்கள் மலர்மாரி தூற்றவும்''
(ப)

என ராமாவதாரமும், நோக்கமும் கூறப்படுகின்றது.

தான் செய்யும் வேள்வியைக் காவல் செய்தற்கு இளம் இராமனைத் தன்னிடம் விடுமாறு விசுவாமித்திரமுனிவர் தசரதனிடம் கேட்டார். ஆனால், அதற்கு அரசன் உடன்படாது தானே மகனுக்காக வருவதாகக் கூறினான். இவ்வேளையில் குருவாகிய வசிஷ்டர் விசுவாமித்திரரின் வேண்டுகோளுக்கு இணங்குமாறு தசரதனுக்கு ஆலோசனை கூறுவது குறிப்பிடற்பாலது.

(ப) ''மோசம் வாராதையா நான்
சொன்ன வார்த்தை
மோசம் வாராதையா (மோ)
(அ. ப) கோசிகன் பின்னே ராமனைக்
கூட்டிவிடுவாய் சொன்னேன் (மோ)
(ச) உப்பு நீர்மேகம் சேர்ந்தால் — உலகின்
பிரளயம்
அப்படி உன் மகனுக்கு —
அடுத்தடுத்தோயோகம்'' (மோ)

எனவரும் பகுதி கவனித்தற்பாலது.

ராமர் சீதையைக்கண்டு காதலிக்கிறார் வால்மீகி கூறாத இவ் அம்சத்தைக் கம்பர் தமிழக அகப்பொருளிலக்கிய மரபிற்கேற்ப மிதிலைக் காட்சிப் படலமாகவே அமைத்துள்ளார். அருணாசலக்கவிராயரும் சுயம்வரத்திற்கு முன்பே இராமன் சீதை காதல் பற்றிக் கூறுகிறார். மிதிலையிலுள்ள கன்னி மாடத்திலே தான் கண்ணுற்ற கன்னியாம் சீதா பிராட்டியை இராமன்

(ப) ''ஆரோ இவர் ஆரோ —
என்பேரோ அறியேனோ
(அ. ப) கார் உலாவும் சீர் உலாவும் மிதிலையில்
கன்னி மாடந்தன்னில் முன்னே நின்றவர்
(ஆரோ) எனவும்
.............................
(ச) சந்திரவிம்ப முகமலராலே என்னைத்
தானே பார்க்கிறார் ஒருகாலே
அந்த நாளில் தொந்தம்போலே உருகிறார்
இந்த நாளில் வந்து சேவை தருகிறார்.
(ஆரோ)''

எனவும், கூறியிருப்பன கம்ப இராமாயணத்தை நினைவூட்டுவன.

சீதாபிராட்டியின் சுயம்வரத்தின் போது இராமபிரான் நிபந்தனைக்கேற்பப் பெரிய வில்லைத் தொட்டு வளைத்த மாத்திரத்திலே அது யாவரும் வியக்கத்தக்க வகையில் இருதுண்டுகளாக ஒடிந்தது இதனை ஆசிரியர்

''சிங்கமெனும் சனகனுடன் விண்ணும் மண்ணும்
திடுக்கிடவே எல்லாரும் ராமன் கையால்
துங்கமுள்ள அந்தவில்லை வளைவு காணத்
தொடக்கண்டார் இரண்டு துண்டாய்
விடக்கண்டாரே''

எனக் கவிநயம்படக் கூறியுள்ளார்.

சீதாபிராட்டி சபா மண்டபத்திற்கு வருதல், ஸ்ரீராமர் மணக்கோலம் கொள்ளுதல், இருவருக்கும் திருமணச்சடங்குகள் நடைபெறல், சோபனம் கூறுதல் முதலியன நேர்த்தியாக வருணிக்கப்பட்டுள்ளன

இராமனின் முடிசூட்டு விழாவினைத் தடுப்பதற்குக் கூனி கைகேயிடம் வருதலும், முதலில் கைகேயி அவளை ஏசுதலும் குறிப்பிடற்பாலன.

(ப) ''கூனிவந்தாளே பொல்லாத கூனிவந்தாளே
(அ. ப) போனநாள் இராமன் செய்த பகையால்
காய்ந்து
பூனைபோல் இருந்து புலிபோல் பாய்ந்து''

எனக் கூறிவருதலும்,

(ப) ''ராமனுக்கு மன்னன் முடிதந்தாலே
நன்மையுண்டொருகாலே (ரா)
(அ. ப) பாமரமே உனக்கென்னடி பேச்சே
பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல்
ஆச்சே (ரா)
.............................
(ச) நம்மை எல்லாம் காத்தவண்டி
பட்டம் கட்ட ஏற்றவண்டி
நாலு பேரில் மூத்தவண்டி
அவன் என் கண்மணி (ரா)
.............................

நான்தான் என்னமட்டியோ
வெட்டிப் போடுவேன் உன்னை (ரா) ''

எனக் கைகேயி கூறுதலும் குறிப்பிடத்தக்கவை. இவற்றிலுள்ள சொல்லாட்சி, ஓசைநயம், இறுதி எதுகை முதலியவை கவனித்தற்பாலன.

ஆனால் இவ்வாறு கூறும் கைகேயி மனத்தினை முற்றிலும் மாற்றித் தசரதன் குடும்பத்திற்கே பெரிய இழுக்கினை ஏற்படுத்திய கூனியைத் '' தசரதன் குடிகேடி '' என ஆசிரியர் குறிப்பிடுகிறார். இது போலச் சூர்ப்பணகையை '' ராவணன் குடிகேடி '' என்கிறார். கூனியின் சதிக்குப் பலியான கைகேயி ராமனிடம் தசரதன் தனக்கு வாக்களித்தவற்றை நிறைவேற்றும்படி கூறுகிறாள்.

'' ஈரேழ்வருஷம் ராமா நீ காட்டில்
சென்றுதவம் செய், பரதன் உலகை ஆள்வான்
செல் என்றாள் இது வேந்தன் சொல்
என்றான் ''

என அவன் கூறுவதிலே நாடகத்தன்மையும் காணப்படுகின்றது.

காட்டிற்சென்று ராமன் தம்பதிகள் இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தனர். இராமன் சித்திர கூட மலையின் இயற்கை எழிலையும், கிளிகள் வேதம் ஓதுவதையும், பிறவற்றையும் சீதாபிராட்டிக்குச் சுட்டிக்காட்டுகிறார்.

(ப) ''பாராய் பெண்ணே பாராய் பெண்ணே
—பாக்கியசனகன் கண்ணே (பா)

(அ. ப) சீர் ஆகு நமக்கு நேர் ஆகிற இந்த
சித்திரகூடமலை ரத்தின பீடம்போல (பா)

(ச) மாதவர் முனிவர் சொல்வேதங்களைக் கிளி
வாடிக்கையாற் கற்று வனமெங்கும்
படிப்பதும் (பா)

எனவரும் பகுதி குறிப்பிடற்பாலது.

பரதன் தாயினைக் கோபித்துக் கூறுதலும், பரதன் காட்டிற்குச் சேனையுடன் வரும் நல்ல நோக்கினை அறியாத குகனும், லட்சுமணனும் வெகுண்டெழுதலும் சாதாரணமாக மக்களின் இயல்புக்கேற்பக் கூறப்படுகின்றன.

பரதன் இராமனிடத்துக்கொண்ட இணையற்ற அன்பும், இராமன் பரதனிடத்துக் கொண்டிருந்த சகோதரபாசமும் நன்கு வெளிப்படுத்தப்படுகின்றன. அரசனாக வந்து நாட்டினை ஆளுமாறு வற்புறுத்திக் கூறிய பரதனுக்கு இராமன் அளித்த பதிலில் அவனுடைய குணநலமும், தரும சிந்தனையும் காணப்படுகின்றன.

'' இன்னம் சிறுபிள்ளைபோலே என்னை
அழைக்கிறாய்
என்சொல்வேன் பரதா என் கண்ணின்மணியே
அன்னை தந்த பணிவிடையே
தன்மம் என்று மதித்தேன்
அப்படி நீ மதிக்காமல் இப்படி வந்ததில்தானே ''

எனவரும் பகுதியினைக் கவனிக்கலாம்.

சூர்ப்பனகை சீதையின் அழகினை வருணித்து ராவணனைச் சீதைமீது மையல் கொள்ளச் செய்கிறாள்.

'' சுந்தரமும் அவள் சிகப்பு
தொட்டிட்டுக் கொள்ளலாம் அண்ணாவே, நான்
இந்த வயதிலே என் கண்ணால்
எங்குங் கண்டதில்லை அண்ணாவே '' எனவும்,

'' காணவேணும் லட்சம் கண்கள் சீதாதேவியின்
காலுக்கு நிகரோ பெண்கள்.
அவளே நல்ல ஐஸ்வரியம் அவளே நல்ல
காம்பிரியம்
அவள் வந்தாலல்லோ வீரியம்
அப்போ முடியுமுன் காரியம் '' எனவும்.

பலவாறு கூறுகிறாள். இவற்றைக்கேட்ட ராவணன் '' சீதைமேலே கருத்தாடக் காமப்பேய் தலை சுற்றாட, உடுப்பதுவும் உண்பதுவும் மறந்தான் சிந்தை, உலைகெழு மெழுகானான் அரக்கன், அம்மானே நீ, அடுத்தெனக்கு ராமன் மனைவியைத்தா,'' என மாமன் மாரீசனிடம் கேட்கிறான். இதைக் கேட்ட மாரீசன், நாராசம் காய்ச்சி நடுச்செவியில் வைத்தாற்போலே நடுங்கி இராவணனுக்கு தக்கபுத்தி சொல்லி இத்தகைய தீய எண்ணம் கொள்ளக்கூடாதெனத் தடுக்கிறான். ஆனால் பலனில்லை. சூர்ப்பனகை சீதையைக் கவருமாறு ராவணனைத் தூண்டுவதும், மாரீசன் இவ்வெண்ணத்தினை கைவிடுமாறு புத்தி கூறுவதும் ஒப்பிடற்பாலன

இராவணன் சீதையை வஞ்சகமாக கவர்ந்து செல்லும் வழியில் சடாயு அவனைத்தடுத்து அறிவுரை கூறுகிறான்.

(ப) '' விடுவிடடா சீதையை விடுவிடடா
ராவணா
விடுவிடடா சும்மா விடுவிடடா (வி)

(அ. ப) சுடுநெருப்பிவளாலே அடிபோடே
வேகாதே
சொரூபத்தைத் தெரியாமல்
நரகத்தில் மூழ்காதே
அடடா சொன்னேன் சொன்னேன்
நடுவிலே சாகாதே
ஆசையினாலே குலநாசம் ஆய்ப்
போகாதே (வி)

எனக் கூறியுமவன் செவிசாய்க்காமையால் இராவண னுடன் போர் புரிந்தான்.

(ப) கொத்திக்கொத்தி அடித்தானே இடித்தானே
சடாயுராஜன்
கொத்திக்கொத்தி அடித்தானே (கொ)

(அ. ப) பத்துச்சிரசிலும் தாளிலும்
வெற்றிக்கரத்திலும் மாரிலும் தேரிலும்
தத்தித்தத்திப் பறந்தெத்தி எத்திக்கையால்
குத்திக்குத்தி எங்கும் சுற்றிச்சுற்றி மூக்கால்
(கொ)

எனச்சடாயு இராவணனுடன் கடும்போர் புரிந்த வாறுதத்ரூபமாக ஓசைநயம் மிக்கதாக வருணிக்கப்படு கிறது

சடாயு போர் புரிந்து வீரமரணம் அடை கிறான். இதைக்கண்டு சீதாபிராட்டி தந்நிலை குறித்து இரங்குகிறாள் தசரதனாகிய மாமனும், சடாயுவாகிய மாமனும் இறப்பதற்குத் தானே காரணம் என மனம் நோகின்றாள்.

" வீட்டிலே புகுந்தேன் அந்த மாமனை
விதிபோலே தின்றேனே

காட்டிலே புகுந்தேன் இந்தமாமனைக்
கண்முன்னேகொன்றேனே " என்பது அவளின்
துயரமிகுவாக்கு

அசோகவனத்திலே அரக்கியர் மத்தியிலே சீதாதேவி யைக் கண்ணுற்ற அனுமான்

(ப) சீதையைக்கண்டானே அனுமான் செடிமேல்
நின்று
சேவையைக்கொண்டானே – அனுமான் (சீ)

(அ. ப) தாயிவள் தாயிவள் நிலைவரமே – சாமி
தனக்குமிவள் மெத்த மனோகரமே
தீயுஞ்சுடுமிவள் சரித்திரமே – தெய்வ
தெய்வங்களுக்குமிவள் மீசரமே (சீ)
எனக்குறிப்பிடுகின்றார்.

சீதாபிராட்டி அனுமாருக்கு அடையாளம் ஈர்ந்து கூறும் வார்த்தைகள் அர்த்தமுள்ளவை.

(ப) அனுமானே சாமிக்கிந்த அடையாளம்
சொல்ஐயா (அ)
(அ. ப) சானகி இலங்கைச் சிறையில் தன் உயிரைத்
தானே
மனதில் ராமாமிர்த சீவனம் செய்திருக்கிறாள்
என்று (அ)
எனத்தொடங்கும் வார்த்தைகள் குறிப்பிடற்பாலன

அனுமான் அசோகவனத்தை அழித்தமைபற்றிய வருணனை சொல்நயம், பொருள்நயம் உள்ளவை

சீதாபிராட்டியைக் கண்டேன் கண்டேன்" என அனுமான் பிராட்டியை உயிரோடு கண்டமை குறித்து ராமனுக்குக் கூறுவதும் சுவையுள்ளதாகும்.

சீதாபிராட்டியின் சூளாமணியை இராமன் அனுமானிடம் பெற்று அளப்பிலா ஆனந்தமுற்றான் இதனை ஆசிரியர்

(ப) சூடாமணியைக் கண்டபோதே சாமிக்கு
வந்த சுகம் அனந்தசுகம் (சூ)

(அ. ப) வாடி அனுமான்சொல்ல ஆடிமுட்ட முட்ட
நாடிச்சீதையம்மை சூடிவரவிட்ட (சூ)

(ச) அமலராமணி தன்னை வாங்கினான் உயிர்
செய்
அமிர்தசஞ்சீவிபோல் தாங்கினான் சீதை
கமலக்கை போற்றிடித் தோங்கினான் கவலை
கதிர்கண்ட பனிபோல் நீங்கினான் கண்டு
கண்ணிரண்டும் குளிர்ந்தான் மேல்வரும்
எண்ணங்களும் தெளிந்தான் அந்த (சூ)
எனக்கூறும் விதம் நயமுடைத்தாகும்.

இராமன்தன்னைச் சரணடைந்த விபீஷணனுக்கு இலங்கை அரசையும் அபயத்தையும் அளிக்கும் விதத்தை ஆசிரியர் நன்கு வருணித்துள்ளார்.

இவ்வாறு பல இசைநயம், இலக்கிய நயம் நாடகப்பண்புள்ள இசைப்பாடல்கள் இந்நூலிலே காணப்படுகின்றன இதிலுள்ள இசைப்பாடல்கள் இசைக்கச்சேரிகளிலும், சங்கீத உபநியாசங்களிலும் நன்கு பயன்படுத்தப்படுகின்றன மேற்குறிப்பிட்ட எடுத்துக்காட்டுகளிலே காணப்படும் எளிமையான உவமைகள், கருத்துரைகள், மூதுரைகள் முதலியன குறிப்பிடற்பாலன ஆசிரியர் பாமரமக்களையும் மன தில் கொண்டு ஜனரஞ்சகமாக இதனை இயற்றிய படியால் பேச்சு வழக்கிலுள்ள சொற்கள், சொற்றொ டர்களுமிதில் விரவிவந்துள்ளன.

இராமனைப்பிரமமாகக் கொண்டு பல கீர்த்த னைகள் தொடர்ந்து இயற்றப்பட்டு வந்துள்ளன இவை தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம் முதலியமொழி களில் உள்ளன. இவ்வகையிலே தியாகராஜசுவாமி களின் தெலுங்கு, சம்ஸ்கிருதக் கீர்த்தனைகள் நன்கு குறிப்பிடப்பாலன, அவருக்கு இராமனே பரப்பிரமம். அனைத்துமவருக்கு இராமனாகவே தோற்றம ளித்தன.

" நிந்நே நறநம்மி நானுரா
ஓராம ராமய்ய (உன்னையே முற்றிலும்
நம்பினேன் ராமபிரானே ) "
"ராமகதாஸுதாரஸ" (ராமகதையெனும் அமுதரசம்)
" ராமநீசமானமெவரு " ( இராமனுக்கு எவர் சமான மானவர் ;

'' ராமமேவ தைவதம் ரகுகுலதிலக (ராமனே மேலான தெய்வம் ரகுகுலத்தின் செம்மலே )

எனவரும் கீர்த்தனங்கள் குறிப்பிடப்பாலன

ஸ்ரீ முத்துசுவாமிதீக்ஷதர், மைசூர் வாசுதேவாச்சாரியர், பாபநாசம் சிவன் போன்ற வாக்கேகாரர்கள் ( இசைப்பாடல்களை இயற்றியோர் ) இராமனைப் பற்றிச்சம்ஸ்கிருதம், தெலுங்கு, தமிழ் முதலிய மொழிகளிலே கீர்த்தனைகள் இயற்றியுள்ளனர்.

இராமாயணக் கதையினைத் தனிக்கீர்த்தனையாகப் பாடும் மரபும் நிலவிவந்துள்ளது. ஏற்கனவே குலசேகராழ்வார் பதிகம் ஒன்றிலே இராமாயணக் கதை முழுவதையும் பாடியுள்ளார். அருணாசலக் கவிராயரின் நாடகக்கீர்த்தனையிலே வரும் 'எனக்குன் இருபதம் நினைக்க வரம் அருள்வாய்'' என தொடங்கும் தருவிலுள்ள (கீர்த்தனையிலுள்ள) ஒன்பது சரணங்களிலும் இராமாயணக்கதை கூறப்பட்டிருக்கிறது. இவரைப்பின்பற்றியோ, அல்லவோ பின்வந்த வாக்கேயகாரர்கள் பலர் இராமாயணக் கீர்த்தனைகள் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாகச் சுவாதித்திருநாள் மஹாராஜா பாடியுள்ள '' பாவயாமி '' எனத் தொடங்கும் சம்ஸ்கிருதக்கீர்த்தனையையும், பாபநாசம் சிவன் தமிழில் எழுதியுள்ள இராமாயணக் கீர்த்தனையினையும் குறிப்பிடலாம்.

இராமாயண இசை நாடகங்கள் தொடர்ந்து எழுதப்பட்டு வந்தன. இவைகள் விலாசம் எனவும் அழைக்கப்பட்டன. வேம்பு அம்மான் என்பவர் இராமாயணக்கீர்த்தனை, சீதாகல்யாணம் என்னும் இசை நாடகங்களை எழுதினார். ராஜசேகரமுதலியார் இராமாயண ஓரடிக்கீர்த்தனை இயற்றியுள்ளார் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்த அருணாசலம் இராமநாடகம் எழுதியுள்ளார் நல்லூர் கந்தப்பிள்ளை (ஆறுமுகநாவலரின் தந்தை) இராமவிலாசம் என்னும் நூலை இயற்றியுள்ளார். சின்னத்தம்பி என்பவரும் இராமவிலாசம் ஒன்று எழுதியுள்ளார். சிந்துவடிவிலும் இராமாயணம் எழுதப்பட்டது. தமிழகத்தைச் சேர்ந்த சுப்புசுவாமி இராமாயணச் சிந்து எனும் நூலை எழுதியுள்ளார். இவ்வாறு தொடர்ந்து இசை நாடகம், நாடகம், கீர்த்தனை, சிந்து எனச்சில ஜனரஞ்சகமான இலக்கியவடிவங்களில் இக்காலம் வரை இராமாயணக் கதை எழுதப்பட்டு வந்துள்ளமை குறிப்பிடற்பாலது.


சில உசாத்துணை நூல்கள்

அருணாசலக்கவிராஜர், இராமநாடகக்கீர்த்தனை, சென்னை.
கம்ப இராமாயணம் ( மூலம் )
வால்மீகி இராமாயணம் ( மூலம் )
புலவர் பி. கீர்த்தனை நாடகங்கள், மதுரை, 1980.
பெருமாள் ஏ. என். 1. தமிழ் இசை, சென்னை, 1984.
2. தமிழ் நாடகம், ஓர் ஆய்வு, சென்னை, 1979.
சுப்பிரமணியம், புத்தனேரி ரா, பாட்டும் கூத்தும், மதுரை, 1977.


சுருக்கங்கள்

ப. — பல்லவி: அ. ப. — அநுபல்லவி: ச — சரணம்

எப்படி மெழுகுதிரி பற்றவைத்த உடனேயே பிரகாசிக்க ஆரம்பிக்கிறதோ அப்படியே நல்ல காரியங்களும் இந்த இருண்ட உலகில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும்.

—ஷேக்ஸ்பியர்—

# சுவாமி விவேகானந்தர்

சுவாமி சித்ருபானந்தா
ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்,
பருத்தித்துறை.

**சு**வாமி விவேகானந்தர் இப் பூமியில் தோன்றி 131 வருடங்கள் ஆகின்றன. ஆனால் சுவாமி விவேகானந்தர் பூமியில் மானிட சட்டை தாங்கி வாழ்ந்த காலம் 39 ஆண்டுகள் தான் இவ்வளவு ஆண்டுகளாக சுவாமி விவேகானந்தர் உரைகளாலும் எழுத்துக்களாலும் எம்மனோரைக் கவர்ந்துவருகின்றார். இதன் மகத்துவம் யாது? இது சம்பந்தமாக சுவாமி விவேகானந்தர் தன்னைப்பற்றி நினைத்தது உண்டு "உருவமில்லாத எண்ண அலைகள்" யான் இவ்வுடலை நீத்து பிரபஞ்சம் முழுவதும் எனது கருத்துக்களைப் பாயவிட ஆசைப் டுகிறேன்; எனது பணி ஓயாது; மனித சமூகம் கடவுளுடன் ஒன்றுபடும் வரை யான் அயராது பாடுபடுவேன் என்று சுவாமி விவேகானந்தர் பகர்ந்துள்ளார். இவரை அன்பாகவும் ஆசையாகவும் சுவாமிஜி என்று அழைப்போம்.

சுவாமிஜி மகாசமாதி அடைந்து 90 ஆண்டுகள் ஆகியும் சுவாமிஜியின் கட்டுக் கடங்காத சக்தி, பேராற்றல் குறைந்ததாகத் தெரியவில்லை. சுவாமிஜியின் ஆழ்ந்த சிந்தனைகள் படித்த பேரறிவாளர்களிடமும் தியாக வாழ்வை மேற்கொண்ட சந்நியாசிகளிடத்தும் வாழ்வில் பல துன்பங்களினால் கண்ணீர் சிந்தும் ஏழைகளிடத்தும் என்றும் பரவி வருவதை நாம் கண்கூடாகக் கண்டுள்ளோம்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 12-ம் திகதி தேசிய இளைஞர் தினமாகவும் 1988-ம் ஆண்டில் சுவாமிஜியின் 125 வது பிறந்த நாள் விழாவும் அதிவிமரிசையாக உலகின் பல பாகங்களிலும் அனுஷ்டிக்கப் பட்டது. ரஷ்யா, சீனா போன்ற சமதர்மக் கொள்கை கடைப்பிடிக்கும் நாடுகளில் விவேகானந்த தத்துவம் இடம் பிடித்து விட்டது.

விஞ்ஞான உலகில் இன்று சுவாமிஜி மறைந்து பல வருடங்களுக்குப் பின்பும் எம்மிடையே ஒரு கவர்ச்சியான மனிதராகத் தோன்றக் காரணம் என்ன? சுவாமிஜியின் பொன் மொழிகள் சாகாவரம் வாய்ந்தவையா? இவரது கருத்துக்களுக்கு என்ன ஆற்றல்?

இதற்குப்பதில் காண்பது அவ்வளவு கடினம் அல்ல சுவாமிஜி எங்களிடம் அபாரமான அன்பைச் சொரிந்தார். முதன் முதலில் மானிட வர்க்கத்திடம், கடவுள் மேல்சொரியும் அன்புக்கு நிகராக மக்களை நேசித்தார். மனிதனின் தெய்வீகத்தன்மையும் ஆத்மாவின் தூய்மையையும் மனிதனிடத்து இருக்கும் அளவிடற்கரிய ஆற்றலையும் முதலில் உலகிற்கு எடுத்தியம்பியவர் சுவாமி விவேகானந்தராவர். சுவாமிஜியின் கருத்துப்படி கடவுள் நம்பிக்கை யற்றவனை நாஸ்திகன் என்றழைப்பது தவறு; தன்னிடத்தில் நம்பிக்கை அற்றவனே நாஸ்திகன்.

உலகிடை வாழ்ந்தவர்களில் சிலர் மாத்திரம் மனித நேயம் பற்றியும், மனிதனிடத்தில் தெய்வீகத்தன்மை இருப்பதாகவும் பகர்ந்துள்ளனர். இவர்களில் சுவாமி விவேகானந்தர் முதன்மை பெறுகின்றார். சகோதரி நிவேதிதா

சுவாமிஜி பற்றிக் கூறுமிடத்து "சுவாமிஜியின கூற்றை ஒரு வாக்கியத்தில் சொன்னால், மனித சமூகமே எழுந்திரு! விழித்திரு! கருதிய கருமம் கைகூடுமட்டும் அயராது உழை" இதுவே சுவாமி விவேகானந்தர் உலகிற்கு விடுத்த செய்தியாகும். ஏழைகள் நசுக்கப்படுவதை யும், அநீதியாக நடத்தப்படுவதையும் கோழைகளாக, பயந்தாங்கொள்ளியாக வாழ்வதை யும் சுவாமிஜி அறவே விரும்பவில்லை. இதனை அடைய சுவாமிஜி பாவித்த ஆயுதங்கள் அன்பும் கருணையுமாகும்.

சுவாமி விவேகானந்தருக்கிருந்த சாஸ்திர அறிவு அபாரம். ஆனால் சுவாமியிடம் இருந்த இரக்கம்! இருதயத்தில் உள்ள கசிவு அளவிடற்கரியது. ஒரு நாள் சுவாமி விவேகானந்தர் தனது சீடர் ஒருவருக்கு வேதங்களைப் பற்றி சங்கராச்சாரியார் கூறிய கருத்துக்களைப்பற்றி விமர்ச்சித்துக் கொண்டிருந்தார். சுவாமி விவேகானந்தர் கிரீஷ் சந்திரரை நோக்கி " நீவிர் கிருஷ்ணரை, விஷ்ணுவை விட்டுவிட்டு வேதாந்தம் படிக்க வருகிறீரா? " என்றார். மேலும் சுவாமிஜி நீர் உமது காலம் யாவையும் இவர்களது வழிபாட்டில் செலவழித்தீரே தவிர நேரங்களின் முடிவு, சாஸ்திர ஞானம் யாவும் உமக்கு ஒன்றும் தெரியாது என்றார். சுவாமிஜியின் உள்ளுணர்வை நன்கறிந்த நாடக வல்லுனரான கிரீஷ்சந்திர கோஷ் கவிதை வடிவில் ஏழைகளின் துயர், பெண்களுக்கு ஏற்பட்டுள்ள இழிவு நிலைமையும் மக்கள் படும் அவலங்களை சுவாமிஜிக்கு எடுத்தியம்பினார். கிரிஸ் சுவாமிஜியை கேட்டார் தயவுசெய்து உங்கள் வேதங்கள் இந்த அவல நிலைக்கு என்ன பரிகாரம் சொல்லுகிறது என்றார். சுவாமி விவேகானந்தர் இதைக்கேட்ட மாத்திரத்தே தன்னையும் மீறிக் கண்ணீர் சொரிய விசும்பி விசும்பி அழுதார். சுவாமிஜியைப் போல் நமக்கு அழுகை வருகிறதா? சிந்தித்தே பாருங்கள்...............

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர் சுவாமி விவேகானந்தரைப் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சுவாமி விவேகானந்தருடைய தன்னைப் பற்றிய பெருமை, மிதமிஞ்சிய தன்னம்பிக்கை, சுதந்திரமான வாழ்வும் கருத்தும் இவையாவும் ஏழைகளின் துயர் கண்டதும் ஆயிரம் இதழ்கொண்ட தாமரை மலர் போல் மலர்ந்து பின் தங்கிய மக்களுக்கு நம்பிக்கையும், ஆறுதலும், பணியும் அருளும் என்றார்.

இதை விளக்க ஒரு நிகழ்ச்சி தரப்படுகின்றது. சுவாமி துரியானந்தரை சுவாமி விவேகானந்தர் அபு ரெயில் நிலையத்தில் சந்தித்தபோது இவ்வாறு கூறினார்.

" சுவாமி துரியானந்தரே, எனக்கு இன்னமும் உங்கள் சமயத்தைப் பற்றி விளங்கவில்லை தனது இருதயத்தில் கையை வைத்து சுவாமிஜி ஏழைகளிடத்து எனக்கு ரொம்ப இரக்கம் ஏற்படுகிறது – இதை நீர் நம்புவீராக" என்று சொல்லிவிட்டு மேலும் பேசமுடியாமல் சுவாமி விவேகானந்தர் அழுதார்

இதைக் கண்ணுற்ற சுவாமி துரியானந்தர் ( சுவாமிஜியின் சகோதர சீடர் ) இவ்வாறு கூறலானார்.

சுவாமிஜி இப்படி அழுது கண்ணீர் விடவும் எனக்கு ரொம்ப சங்கடமாகப் போய் விட்டது இப்படித்தானே புத்தபகவான் கண்ணீர் சொரிந்தார். சுவாமி தன் நெஞ்சத்தில் ஆழ்ந்து கிடந்த இரக்கம், ஏழைகள் மாட்டு அளப்பரிய அன்பு ஏழைகளுடைய துயர் தீர்க்க அவரது வாழ்வில் தாம் கண்ட மகத்தான சேவை இவையாவும் எனது மனக்கண்ணில் தோன்றின.

சுவாமி விவேகானந்தர் திருமூலர் சொன்ன திருமந்திரத்துக்கு புதுமெருகு ஊட்டினார்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிவிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

மனிதன் கர்மம் செய்து கொண்டே இருக்க வேண்டும். மனிதன் தெய்வத் தன்மை அடையவும் தெய்வமாகும்வரையும் சிவதொண்டு நின்று விடக்கூடாது. சுவாமிஜி போல் பூமியில் வாழ்ந்த காலத்தில் கர்மம் புரிந்தவர்

யாரேனும் உண்டா ? சுவாமிஜிக்கு சமயம் என்பது வெளித்தோற்றத்திலோ, சடங்கிலோ தங்கியிருக்கவில்லை. ஏழைகளுக்கு உண்ண உணவு கொடுக்காத கடவுளை யான் விரும்பேன். மோட்சம் எனக்கு இதைவிட முக்கியமானதல்ல. ஏழைகளுக்கு கல்வி அறிவூட்ட வேண்டும். "யான் ஒரு சமயம் இப்படியும் எனக்குள் நினைத்தது உண்டு. மடங்களும் ஆச்சிரமங்களும் கட்டுவதால் என்ன பயன் ? இவற்றை நான் விற்றுவிட்டு இதனால் கிடைக்கும் பணத்தை ஏழைகளுக்கு வாரி வழங்கினால் என்ன ? எங்களுக்கு இறைவன் படைத்த மரங்கள் நிழலாக இருந்தால் போதுமே பல ஏழைகள் பட்டினியால் வாட நாம் ஒருவித இரக்கமுமில்லாமல் அறுசுவை உண்டி சாப்பிட ஒருப்படலாமா? நான் மேலை நாடுகளுக்குச் சென்றது "ஏழைகளுக்கு வசதியும் 'உணவும் தேடவே" என்றார் சுவாமி விவேகானந்தர்.

ஏழைகளின் துயரைக் கண்டதும் பூஜைகளின் சடங்குகளையும் சங்கு ஒலிப்பதையும் மணி அடிப்பதையும், விக்கிரகங்களுக்கு முன்னால் தீபத்தைக் காட்டுவதையும் விடுத்து கிராமம் கிராமமாகச் சென்று ஏழைகளுக்கும் திக்கற்றவர்களுக்கும் சேவை செய்வோமாக. எங்களிடத்தில் உள்ள ஒழுக்கமான வாழ்வின் முடிவாக பெரிய தனவந்தர்களின் செல்வத்தை வாழ்க்கையில் பின் தங்கிய மக்களுக்கு செலவிடும்படி உணர்த்தி சேவை மூலம் திருப்தி காணுவோம். இவ் ஏழைகள் தான் நாட்டின் முதுகெலும்பு ஆவார். இவர்கள் தமது இரத்தத்தைப் பிழிந்து சேவை செய்யாவிட்டால் நாட்டில் வறுமை தலைவிரித்தாடும்.

சுவாமி விவேகானந்தர் தமக்குக்காட்டிய உன்னத பாதையை விடுத்து தம்மைத்தாமே பெரிது படுத்தி நமக்குக் கிடைத்த பொன்னான வாழ்வை இழக்காதீர்கள் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரில் சர்வமத சபையில் சிங்கநாதம் செய்து எமை உலகிடை பெரிதும் புகழ் அடையச் செய்துள்ளார். சிக்காகோவில் அறைகூவிய சுவாமியைப் போற்றி இவரது அறிவுரையின் வழிநின்று உயர்வடைவோமாக.

முக்கிய குறிப்பு :

சுவாமி விவேகானந்தரின் உலக சமயப் பெருவிழாவின் அடையாளமான நூற்றாண்டில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பொன்விழா நடைபெறுவது திருவருளின் செயலாகும்.

> அதிஸ்டம் எப்போதும் சுறுசுறுப்பைத் தொடர்ந்தே
> சென்றுகொண்டிருப்பதைக் காணலாம்,
>
> — கோல்ட் ஸ்மித் —

# வாழும் இந்துமதம்

திருமதி. வி. சிவகுமாரன், B. A.
ஆசிரியை

உலகிலுள்ள மதங்களில் மிகத் தொன்மையான மதமாக இந்துமதம் விளங்குகின்றது. சிந்துவெளிச் சான்றுகளின்படி இந்துமதம் ஐயாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட பழமை வாய்ந்த மதமாக விளங்குகிறது. இந்துமதம் காலகதியில் சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் முதலான ஆறுபிரிவுகளைத் தன்னுள்ளே கொண்டிருந்தபோதிலும் அதுஇன்றும் நம்மிடையே வாழும் மதமாக விளங்கிவருவது அம்மதத்தின் தனி சிறப்பென்றே பகருதல் வேண்டும்.

இந்துமதம் பிறந்து வளர்ந்த நாடு இந்தியா எனினும் அம்மதம் உலகெங்கும் வாழும் மதமாக விளங்குகின்றது கீழைத்தேசங்களில் மட்டுமே வசித்த இந்துக்கள் இன்று உலகெங்கும் வாழ்கின்றார்கள். கீழைத்தேயத்திற்கு உரித்தான இந்துமதமும் அதன் கலாசாரங்களும் இன்று உலகளாவிய ரீதியில் பரந்து விட்டது. இந்துமதத்தின் தியானம், பிரார்த்தனை வழிபாடுகள் போன்றவற்றில் நாட்டமுற்ற மேலைத்தேயத்தவர் ஆன்மீக நாட்டத்துடனும், ஆராய்வுவிருப்புடனும் இந்துமதநாடான இந்தியாவையும், மற்றைய நாடுகளையும் நாடிவருகின்றனர். வெளிப்படையாகக் கூறப்போனால் இந்துமதம் வாழும் நாடுகளைவிட மேற்கத்திய நாடுகளில் இந்துமத ஈடுபாடும் அம்மதத்தைப் பற்றியறியும் ஆர்வமும் அதிகரித்திருக்கின்றன. இன்று உலகின் பெருநகரங்களான வெம்பிள்டன், நியூயோக், சிக்காக்கோ, மொன்றீல் போன்ற நகர்களில் இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கீழைத்தேயங்களிலிருந்து குடிபெயர்ந்த இந்துக்கள் உட்பட ஏராளமான மேற்கத்திய நாட்டவர் இந்து மதத்தையும் அதன் கலாசாரத்தையும் நாட்டத்துடன் பின்பற்றுகின்றனர்.

இந்துமதமானது எந்தமதங்களையும் விட சுதந்திரத்தன்மை உடையதாய் விளங்குகின்றது. எந்த ஒரு இந்துவையும் கட்டாயமாக இவ்விதிக்கு அமைய ஒழுகவேண்டும் என்று அது நிர்ப்பந்திக்க வில்லை. ஒவ்வொரு மனிதனும் உய்வடைவதற்குரிய வெவ்வேறு வழிகளை அது வகுத்துக் காட்டி இருக்கின்றது. கிறீஸ்தவம், இஸ்லாம் போன்ற மதங்களை எடுத்துக் கொண்டால் அம்மதங்கள் கட்டாயமாகத் தொழுகை, ஆராதனை, பிரார்த்தனைக்காகச் சில குறிப்பிட்ட நாட்களை வகுத்து காட்டியுள்ளன. இந்துமதத்தில் எல்லாநாட்களுமே ஒவ்வோர் விசேடத்துடன் கூடிய நாட்களாக விளங்குகின்றன. இதனால் ஒவ்வொரு இந்துவும் தான்விரும்பிய எந்நாளிலும் இறைவழிபாடாற்றும் சுதந்திரம் உண்டு அதுவும் 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' எனச் சிவபுராணம் செப்புகிறது. இந்துமதத்தில் இறைவனை வணங்குவதற்கு இறையருள் வேண்டும் எனப்படுகின்றது. இதனால் காலத்துக்குக் காலம் நெகிழ்வுடைய மதமாக இன்றும் வாழும் மதமாக விளங்குகின்றது. அதனை எதிர்த்த சமணம், பௌத்தம், கிறீஸ்தவம் முதலான மதங்களுடன் ஈடு கொடுத்து என்றும் வாழும் தன்மை பெற்றிருக்கிறது.

மற்றைய மதங்களிற்கும் இந்துமதத்திற்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் உண்டு. மற்றமதங்கள் தாம் எதை கோட்பாடுகளாகக் குறிப்பிடுகின்றனவோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று விதிக்கின்றன. இந்துமதம் அவ்வாறு கூறவில்லை. அதைநாம் உணர்ந்து அநுபவித்துப் பயன் பெறவேண்டும் என்பதே இதன் முக்கியமான கருத்து. ஆகவே இந்துமதத்தின் இரண்டு முக்கியமான அடிப்படைகள் உள்ளன. மனத்தை உள்முகமாகத் திருப்பி உணர்வது (தரிசனம்) அதனால் ஏற்படுவதை அனுபவிப்பது (அனுபவம்) எனவும் கூறலாம். இவ்வாறு நமக்கு ஏற்படுவதைப் பொறுத்தே இந்துமதம் அமைக்கப்பட்டிருப்பதால் அதை வாழ்க்கை முறையை எடுத்துச் சொல்லும் மதமாகவே கருதுகிறார்கள். இந்து மதம் ஒரு வழிபாட்டுமுறை மட்டுமல்ல அது ஒருவாழும் நெறி கூட என்று ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள். இதை இந்துக்களே புரிந்துகொள்ளவும் அக்கறைப்படுவதில்லை.

வரலாற்றாளர் கருத்துப்படி சிந்துநதிக்கரையில் வாழ்ந்த பழங்குடி மக்களால் பின்பற்றப்பட்டு வந்த மதமே இந்துமதமாகச் சொல்லப்படுகின்றது. இம் மதம் எப்போது தோன்றியது. யாரால் தோற்றுவிக்கப்பட்டது. என்பதும் இன்றுவரை எவர்க்குமே புரியாத ஒன்றாயுள்ளது. இதனால் தொன்மை மிக்க மதமாக இன்றும் வாழும் மதமாக இந்துமதம் விளங்குகிறது. இந்துமதத்தின் முதல் நூல்களாக வேதங்களும் ஆகமங்களும் விளங்குகின்றன. இவை வடமொழியில் எழுதப்பட்டிருக்கின்றன. அத்துடன் அந்தணர்மட்டுமே அறியும் தன்மையுடையதாயுள்ளது. இந்நிலையில் நோக்குமிடத்து இந்துமதத்தைப் பின்பற்றுகின்ற யாவர்க்கும் அதன் தத்துவங்கள் பற்றிச் சரிவரப் புரிந்துகொள்ளும் வாய்ப்புக் குறைவென்றே கூறவேண்டும். சுருக்கமாகச் சொன்னால் வேத, ஆகமங்கள் வடமொழியில் அமைந்திருந்த காரணத்தினால் வடமொழியைக் கற்றவரே அவற்றில் அருளப்பட்டவற்றை அறியும் வாய்ப்பிருக்கின்றது. ஆங்காங்கே ஒரு சில தமிழ்நூல்கள் அக்கருத்துக்களைத் தமிழில் தந்திருப்பினும் எல்லா இந்துக்களுக்கும் வேத ஆகமங்களில் கூறப்பட்டவற்றை முழுமையாக அறியும் வாய்ப்பு இதுவரை இல்லை என்றே கூறக்கிடக்கின்றது ஆனாலும் இந்துமதம் இன்றும் வாழும் மதமாக விளங்குகின்றது.

இந்துமதத்தின் மிகமுக்கியமான அம்சங்கள் யாவும் வேத ஆகமங்களில் அருளப்பட்டிருக்கின்றன. இவை முழுவதுமே அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்டவை. இன்னும் விளக்கமுறக் கூறினால் இவை அனுபவத்தை உணர்ந்த ஞானிகளால் வெளிப்படுத்தப்பட்டவை. அவ்வாறு அவர்கள் சொன்னவை தாம் பின்னர் நூல்வடிவம் பெற்றன. வேதங்களில் கூறப்பட்டுள்ள உண்மைகள் வாழ்க்கை முறையோடு ஒட்டியவை. எனவே அதைப்பின்பற்றி வாழ்ந்தோமே யானால் அதே அநுபவத்தை நாமும் பெறமுடியும். இதனால் வேதங்கள் எக்காலத்திற்கும் பொருந்தக்கூடியவை இருக்கக்கூடியவை அவரவர் ருசிக்கு ஏற்ப நாம் ஒவ்வொன்றையும் உணர்ந்து அநுபவிப்பதைப் போல பெரியோர்கள் அவரவர் கண்ணோட்டத்திற்கு ஏற்றபடி வேதங்களிற்கு விளக்கங்கள் கொடுக்கின்றார்கள். அவற்றின்மூலம் நாம் அவற்றைப் புரிந்துகொள்ளலாம்.

இந்துமதம் இயற்கையை அடிப்படையாகக் கொண்டது. இறைவனைப் போன்று புனிதமானது. இயற்கை நதிகள், விருட்சங்கள், நீர்நிலைகள், சூரிய சந்திரர் போன்ற இயற்கை அம்சங்களைத் தெய்வமாகப் போற்றி வந்திருக்கின்றனர். தெரு ஓரங்களில் நிழல் தரு விருட்சங்களை நாட்டுவதும் நீர்நிலைகளை அமைப்பதும் புனிதமான புண்ணிய காரியங்களாக இந்துமதம் பகர்கிறது. பால்மரங்களைத் தறிப்பதும் பாரிய விருட்சங்களை அழிப்பதும் பாவமான காரியமாகப் பகர்ந்துள்ளது. இந்த அழகான இயற்கை நாம் வாழ்வதற்காக இறைவனால் அளிக்கப்பட்ட கொடை இதில் எந்த உயிர்க்கும் ஊறு விளைவிக்காமல் நல் வாழ்வில் ஈடுபட இந்துமதம் வழிகாட்டியுள்ளது. இவ்வழியில் எந்த இந்து ஒழுகுகிறானோ அவன் ஆன்மஈடேற்றத்துக்கு வழிவகுக்கின்றான். எவன் ஒருவன் இவ்வாறு ஒழுகத்தவறுகிறானோ அவன் கீழ்நிலைக்கு வித்திடுபவனாகின்றான். இயற்கையை மதித்து போற்றுபவனை இயற்கை போசிக்கிறது. அவ்வாறு மதியாதவனை அதுவே அவமதிக்கின்றது.

உடலையும் உள்ளத்தையும் தாம் வாழும் சூழலையும் புனிதமாக வைத்திருப்பதை இந்துமதம் வலியுறுத்துகின்றது. இதற்காகவே நீர்நிலைகள் நிழல் தருமரங்கள் என்பவற்றுக்கு முக்கியம் கொடுத்துள்ளது. ஆலயங்களிற்கு தல விருட்சங்களையும் புனிதநீர் நிலைகளையும் (தீர்த்தம்) விசேடமாக்கியுள்ளது, சூழலும் உடலும் சுத்தமாக இருப்பதனால் உள்ளத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்வது சாத்தியமாகும். இதனால் தானோ என்னவோ இந்துமதம் இவ்வழியை வகுத்துக்காட்டியுள்ளது.

எந்த ஒரு இந்துமதத்தவனும் எல்லா உயிர்களையும் தனது உயிர்போல் கருதும் பண்புடையவனாதல் வேண்டும் என்பது இந்துமதம் எதிர்பார்க்கும் ஒரு வாழ்க்கைத்தத்துவம். இத் தத்துவத்தை புலால் உண்ணாமை, கொல்லாமை, ஜீவகாருண்யம் முதலான நற்பண்புகள் வாயிலாக இந்துக்களிடையே வாழ வழி வகுக்கப்பட்டிருக்கின்றது இவற்றோடு விருந்தோம்பும் பண்பையும் இனிய வார்த்தைகளைப் பேசும் பண்பையும் அது வகுத்திருக்கின்றது 'எள்ளாயினும் எட்டாய்ப் பகிர்ந்திடும் பண்பும்'' எல்லா இந்துக்களிடையேயும் எப்போதும் இல்லாவிடினும் முக்கிய வைபவங்களிலும் விழாக்களிலும் இன்றும் வழங்கி வருகின்றது. எந்தவொரு செயலைச் செய்தாலும் அதற்குப் பயன் உண்டு. இதனை வினைப்பயன். என்று இந்துமதம் வகுத்திருக்கின்றது இதனால் ஒவ்வொருவரும் நல்ல செயல்களைப் புரிவதற்கும், தீய செயல்களைச் செய்யாதிருப்பதற்கும் அது வழி காட்டியுள்ளது இவ்வாறானால் ஒருவர் எப்பொழுதும் நல்ல செயலைத்தான் புரிவார் என்று எதிர்பார்க்கலாமா? என்ற கேள்வி எழுவது நியாயமே. தீய செயல்களைச் செய்யாதிருப்பதும் சிரமமான காரியமே. எனினும் நல்லது கெட்டது என்னும் இரண்டையும் வகுத்திருக்கிறது இந்துமதம். இதன்வழி நல்லவற்றைக் கடைப்பிடித்தால் நன்மையும் தீமையைக் கடைப்பிடித்தால் தீவினையும் வந்து சேரும். இவ்வாறு இந்துமதம் வாழும் வழியை வகுத்துத் தந்துள்ளதேயொழிய தான் வகுத்த எவ்வழியையும் கட்டாயமாகப் பின்பற்ற நிர்ப்பந்திக்கவில்லை. இவ்வுலக வாழ்வில் ஈடுபட்டுள்ள எவரும் ஆன்ம ஈடேற்ற நாட்டமுள்ளவராயிருப்பின் அவ்வழியைப் பின்பற்றலாம் என வழிகாட்டியுள்ளது. இதனால் இன்றும் வாழும் மதமாக விளங்குகிறது.

இந்துவாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இவ்வுலகின்கண் எத்தனையோ கடமைகளுண்டு. அக் கடமைகளையெல்லாம் பயன்கருதாது இவ்வுலக இன்ப

துன்பங்களில் உழன்று கொண்டே ஆற்றிக் கொண்டிருப்பதற்கு இந்துமதம் வழி செய்திருக்கின்றது. உபநிடதங்களும் பகவத்கீதையும் சிறப்பாக இதற்கு வழி காட்டியாயுள்ளன. தொல்லைகளும் அல்லல்களும் நிறைந்த இவ்வுலகின் கண் கீதை பகரும் கர்மயோகத்தின் வழியில் எல்லாம் அவனுக்கே சமர்ப்பணமாக்கி சரணாகதித் தத்துவத்தை எல்லாச் செயல்களிலும் எல்லா நிலைகளிலும் எப்போதும் கைக்கொள்ளுவோமானால் நாம் இந்துமதத் தத்துவத்தைப் புரியாதவர்களானாலும் விளங்காதவர்களானாலும் கூட இந்து மதத்தினூடாக வாழும்வழி தெரிந்து கொண்டவர்களாகி விடுவோம் என்பதில் ஐயமில்லை.

சரணாகதித் தத்துவம் என்பது நம்முடைய எண்ணங்களையும் செயல்களையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விடுவது என்பதுதான் ஒவ்வொரு செயலையும் நாம் கடமை உணர்வுடன் செய்ய வேண்டும், ஆனால் அதன் பயனைப்பற்றிக் கவலைப்படக்கூடாது அது 'ஆண்டவனின் சித்தம்' என்று விட்டுவிட வேண்டும். இவ்வாறு நாம்செய்யும் காரியங்கள் கர்மவினையினால் பாதிக்கப்படுவதில்லை. இது மிகவும் முக்கியம் இதை நாம் உணர்ந்து செயற்பட வேண்டும் இவ்வாறு காரியங்களைச் செய்யும் போது 'நான் செய்தேன்' என்று சொல்லிக்கொள்ளும் அகந்தை நமக்கு வருவதில்லை அப்போது அதுவே தூய்மை அடைகிறது. நீங்கள் குளிக்கும் போது இதற்குப்பின் நல்ல தூய்மையான உடையை அணிந்து கோவிலுக்குப் போகப் போகிறது என்று சொல்லிக் கொண்டு குளியுங்கள். அப்போது உடலுடன் உள்ளமும் தூய்மையடைகிறது. அந்தச் சிறு செயலையும் நீங்கள் உங்களுக்காக செய்யவில்லை, ஆண்டவனுக்காகவே செய்கிறீர்கள். இதைப் போல வாழ்க்கையில் ஒவ்வொரு செயலையும் நாம் கடமை உணர்வுடன் செய்யும் போது இது கடவுளுக்கே அர்ப்பணம் என்று சொல்லிக் கொண்டே செய்தீர்களேயானால் அதை இறைவன் ஏற்றுக் கொள்ள உங்கள் இதயத்தில் வந்து அமர்ந்து விடுகிறான். அதுவே அவனுக்கு உகந்த இடமாகவும் ஆகி விடுகிறது. அப்படிப்பட்ட உள்ளத்தில் வீணான ஆசைகளும் தோன்றுவதில்லை. வாழ்க்கையில் நாம் ஆசைப்பட்டுத் தேடும் பணம், அதிகாரம், பெருமை எல்லாமே நாம் இறந்துபோனபின் நம்முடன்வரக்கூடியவையல்ல. ஆனால் இவை எதுவானாலும் அது இறைவனுக்கே அர்ப்பணம் என்று நினைத்து விடும்போது அவை அழிவில்லாத் தன்மையைப் பெறுகின்றன. அதன் பலன் நமது இவ்வுலக வாழ்க்கைக்குப் பின்பும் நம்மை தொடர்ந்து வருகிறது. அடுத்த பிறவியிலும் நமக்கு பலனைத் தருகிறது என்று பகவான் சிறீசத்தியசாயி பாபா குறிப்பிட்டிருக்கின்றார்.

இந்துமதம் என்றும் வாழும் மதமாகத் திகழ்கின்றது. வைகறைத் துயிலெழுதல்முதல் இரவு நித்திரைக்குப் போகும்வரை எல்லா நிகழ்ச்சிகளிலும் சமயம் கலந்துள்ளது. வாழ்க்கையில் அடிக்கடி விரதங்களை அனுட்டிப்பதைக் கண்கூடாகக் காணலாம். இதனால் தெய்வசிந்தனை நிலைநிறுத்தப்படுவதுடன் உடல் ஆரோக்கியமும் ஓம்பப்படுகின்றது. விவாகம் முதலிய சடங்குகளிலும் தெய்வீகம் கலந்துள்ளது. சிறுவர் சிறுமியர்க்குப் பெயர் சூட்டும்போதும் இறைவன் பெயரைச் சொல்ல வைக்கின்றது. இந்துவாகப் பிறந்தவரின் வாழ்க்கையும் சமயமும் பின்னிப்பிணைப்புண்டு நிற்கின்றன. மதத்தை வளர்த்தல் வேண்டும் என முனைந்து செயற்படாமலே இந்துக்கள் வாழும்வரை இந்துமதமும் வாழ்ந்துவரும்.

> பொய்யினால் ஒருவன் அடையும் ஆதாயமெல்லாம்
> இதுதான்; அவன் உண்மை சொல்லும் போதும்
> எவரும் நம்ப மாட்டார்கள்.
>
> — அரிஸ்டாடில் —

# தமிழ்மொழி கற்பித்தலின் பயன் பெருக

எம். சிறீபதி
ஆசிரியர்,
யா / மெதடிஸ்த பெ. உ. பா.
பருத்தித்துறை.

மொழி மனித இனத்தின் சிறந்த படைப்புக்களில் ஒன்று. சிந்தனையினால் மொழி வளர்கின்றது. மொழியினால் சிந்தனை வளர்கின்றது, சிந்தனையின் விளைவாக, மொழி கருதப்படுவது வழக்கம். அவ்வாறே சிந்திப்பதற்கு மொழி அடிப்படைத் தேவைகளில், ஒன்றாகவும் அமைகிறது மொழியானது கடந்தகால பண்பாட்டின் விளைவு, பண்பாட்டினை பேணுகின்ற ஒரு கருவி, அதனாலேதான் சமுகத்துக்கும் மொழிக்கும் இடையேயுள்ள தொடர்பு உயிர்துடிப்பானது என தத்துவவியலாளர்கள் குறிப்பிடுவர்.

இன்று கல்வி அமைப்பில், தாய் மொழி பிரதான இடத்தை வகிக்கின்றது என்பது உண்மை. கல்வி என்ற கருத்தமைப்பு மனித கருத்துருவாக்க கருவிகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. நிலவுடமை சமுகத்தில் மதம் பெற்ற இடத்தை முதலாளித்துவ சமுகத்தில் கல்வி பெற்றுள்ளது. கல்வியானது முதலாளித்துவ சமுக அமைப்பினை பேண முயல்கின்றது என கூறும் அதேவேளை கல்வி முதலாளித்துவத்துக்கு எதிரான கருத்துருவங்களை உருவாக்குவதிலும் பிரதான இடத்தை இன்று வகிக்கின்றது என்பதும் உண்மை. 'ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி என்ற முறையில் இன்று கல்வியின் தேடல்கள் ஆரம்பமாகியுள்ளன'. கல்வி மேற்கூறியவாறு முதலாளித்துவசார்புடையது முதலாளித்துவ சார்பற்றது என இரு நிலைப்பட்ட முரண்பாடுகளில் மாத்திரம் இயங்கி வருகின்றது எனக் கூறுவதற்கும் இல்லை. இலங்கை போன்ற நாடுகளில் கல்வியின் இயங்கு முறைமை பல தளங்களில் காணப்படுகிறது இதனால் கல்வியை பன்முகமுறைமை எனக் கூறுதல் பொருந்தும்.

மேற்குறித்த இயல்புகளையுடைய கல்வி அமைப்பில் தமிழ் மொழி. தமிழரைப் பொறுத்த வரை பிரதான பங்களிப்பு செலுத்துகிறது. தமிழ்மொழி போதனா மொழியாகவும், பாட மொழியாகவும், பாடசாலை அமைப்பில் பயன்பட்டுவருகின்றது. எமது நாட்டில் உள்ள பாடசாலை அமைப்பு சீரான பாடசாலை அமைப்புத் தொகுதிகள் என கூறுவதற்கில்லை. பாடசாலை அமைப்புக்கள் கலைத் திட்டங்களின் அடிப்படையிலேயே தொகுதிப் படுத்தப்பட்டுள்ளன. ஆகவே கலைத்திட்டத்தில் மொழி பெறும் பங்கு காரணமாக தாய் மொழியின் பங்களிப்பு விதந்து கூறுமளவுக்கு உள்ளது எனலாம்.

தமிழ்மொழி போதனாமொழி ஆக்கப்பட்டு நான்கு தசாப்தங்கள் முடிவுற்றுவிட்டன. எனினும் எமது தமிழ்மொழி தகுந்த முறையில் பயன்பாடு உடைய மொழியாக கல்வி அமைப்பில் மாறிவிட்டதா என்பது பற்றி இன்றும் திட்டவட்டமாக கூறுவதற்கில்லை.

சமுகத்திலே தமிழ்மொழி பயன்படும் நிலைமை பற்றி அறிஞர்களிடையே, மொழி பயிற்றுவாரிடையே, ஒருமித்த கருத்துக்கள் காணப்படவில்லை. குறிப்பாக தமிழ்மொழியை பயன்படுத்துபவர்கள் மத்தியில் சில குறைபாடுகள் காணப்படுவது பற்றி பொதுப்படை

யாக சில கருத்துக்கள் சுட்டப்பட்டு வருவதை யாவரும் அறிவர். அக் குறைபாடுகளை நாம் இரண்டு வகையாக வகைப்படுத்தலாம்.

1) சாதாரணமான தமிழ்மொழி மூலம் கல்வி கற்ற மாணவரிடத்தில் ஒழுங்காக எழுதும் திறன் காணப்படவில்லை. அதாவது படித்த தமிழர்கள் வழுவின்றி எழுத முடியாது உள்ள நிலமை.

2) அதிகம் கற்ற தமிழ்மொழிவாணரிடம் காணப்படும். அதித அன்னியத் தன்மைப்பட்ட வாக்கிய அமைப்பும் ஒருமைத் தன்மை அற்ற சலைச் சொல்லாக்க எத்தனிப்பும் வாக்கியங்கள் இலக்கண வழு அற்றவையாக இருந்த போதிலும் அவற்றின் பொருளை விளங்கிக் கொள்ள முடியாத நிலைப்பாடு.

மேற்கூறப்பட்ட இரண்டு குறைபாடுகளில் முதலாவது விடயமே இங்கு கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.

படித்த சாதாரண தமிழர் எழுதுவனவற்றில் சில குறைபாடுகள் உள்ளன. என சுட்டிக் காட்டப்படுவது பொதுவான வழக்கம் குறிப்பாக புணர்ச்சி விதிகளில் காணப்படும் இலக்கண வழுக்கள் :-

- 'ழ'கர / 'ள'கர / 'ல'கர வேறுபாடற்ற தன்மை.
- 'ந்' / 'ன்' வேறுபாடற்ற தன்மை
- 'ய'கரம் / 'இ'கரம் வேறுபாடற்ற தன்மை.
- தெளிவான நேர்மையான வாக்கிய அமைதியற்ற தன்மை
- வாக்கியங்களின் எழுவாய் பயனிலை இயைபு அற்ற தன்மை.
- கூறவரும் பொருளை அனுப்பூட்டும் வசனங்களில் தெரிவிக்கும் இயல்பு.

ஆகியன இக் குறைபாடுகளில் குறிப்பிடத்தக்கவை. இவை எல்லாவற்றையும் விட 'வரிவடிவ எழுத்து வெளியீடு' தமிழ் மாணவர்களிடையே மிக மோசமான முறையில் வீழ்ச்சி அடைந்துவரும் நிலை பலரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. பொதுப்படக் கூறினால் தமிழ் மாணவர்களின் எழுத்துத்திறன் விரைவாக வீழ்ச்சி அடைந்து வருகிறது என்பதை இக் குறைபாடுகள் பற்றி சுட்ட விரும்புவோர் தெரிவிக்க விரும்புகின்றனர்.

தமிழ்மொழி தொன்மையான மொழி; இன்றும் வழங்கிவரும் மொழி அதனுடைய எழுத்து பயிற்சி திறன் கிட்டத்தட்ட இரண்டாயிரம் ஆண்டு பழமையானது. எனவே எழுத்துத்திறன் தமிழர்களிடம் இருக்க வேண்டும் என எதிர்பார்ப்பது நியாயமானது. அடுத்த தலைமுறையினருக்கு "விடயங்களைக் கையளிக்க, எழுத்துத்திறன் மிக இன்றியமையாதது.

பொதுப்பட நோக்கப்படும் இக் குறைபாடுகளுக்கு சில நியாயங்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்க நியாயங்களில் சில :-

- மொழி கற்பிக்கும் திறனுடைய ஆசிரியர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. மொழியினை மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் திறன் பெருந்தொகையான ஆசிரியர்களிடம் இல்லை என்பதே இதன் கருத்து.
- இன்று பாடப் புத்தகங்கள், அவை சுட்டும் பாடப் பரப்புகள் மிகுதியானவை மொழி பயிற்சிக்கோ வழங்கப்பட்ட பயிற்சிகளை பார்வையிடுவதற்கோ இன்று ஆசிரியர்களுக்கு போதிய அவகாசம் கிடைப்பதில்லை
- கற்றல் திறனுடைய நல் மாணாக்கர்களுக்கு பொதுப்பட தமிழ் பயில்வதில் ஆர்வம் குறைவாகவே காணப்படுகிறது.
- செய்யுள்வழி இலக்கணத்தை நாம் கற்பிப்பதால அது மாணவர்களுக்கு சுமையாகவே காணப்படுகிறது. அதாவது நல்ல முறையில் இலக்கணம் தெரிந்தவர்களும் வழு இன்றி எழுதமுடியாது உள்ளது. செய்யுள்வழி இலக்கணமுறை நடைமுறை பயன்பாட்டுக்கு ஒவ்வாதனவாகவே அமைகிறது.

உதாரணமாக: கல் + தீது கஃறீது சம்பந்தமாகக்கூறப்படும் இலக்கண விதிகள் பொதுவாக தமிழ் மாணவனுக்கு ஏன் அவசியமானவை ? என்பதும் நியாயபூர்வமானவையே.

● எமது தமிழ் மொழியில் உள்ள புணர்ச்சி விதிகள் பழந்தமிழ் செய்யுள் தமிழுக்கு பொருத்தமுடையனவே. ஆனால் உரைநடை தமிழுக்கு இவை அவசியம் தானா என்பது உடனடியாக நோக்கப்பட வேண்டியதே. உரைநடைத் தமிழுக்குரிய புணர்ச்சி விதிகள் விதிமுறை ரீதியாக வகுக்கப்பட முடியாது உள்ளது

உதாரணமாக; ஆண்டு '9' தமிழ் பாடநூலில் 94 வகையான புணர்ச்சி விதிகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன

இவ் விதிகளில் பல நடைமுறை அல்லது பிரயோக தமிழுக்கு பொருத்தமற்றதாகவே காணப்படுகின்றன. இவ்வாறு பெரும் தொகை விதிகளை அறிமுகம் செயவதால் மாணவர்கள் இவற்றை மனனம் செய்து கொள்கின்றனர். ஆனால் பயன்படுத்துவதில்லை ஏனெனில் அவர்களது சுற்றுப்புற சூழல் மொழி அதற்கு உகந்ததாக இல்லை.

● மாணவர்களிடத்து தொலைக்காட்சி, வானொலி கேட்கும் பழக்கம் மேலோங்கி வருவது எழுத்துத்திறன் குறைவடைவதற்கு ஒரு காரணமாகிறது இவற்றினைவிட மாணவர்கள் தனித்து பாடநூல்களை மாத்திரம் வாசிப்பவர்கள் அல்லர். அவர்கள் பத்திரிகை, சஞ்சிகை ஆகியவற்றினையும் வாசிக்கின்றனர். அவற்றில் வித்தியாசமான வாக்கிய ஒழுங்குகள், புணர்ச்சி விதிகள் பின்பற்றப்படுகின்றன. எனவே அவற்றினது தாக்கமும் மாணவர்களது எழுத்துத் திறனில் ஆதிக்கம் செலுத்தும். மொழி என்பது இயங்கியல் தன்மை உடையது. எனவே மாற்றம் அதன் பொது இயல்பு. மொழி மாற்றமடையாது இருக்கும்போதுதான் தாரதர இலக்கண விதிகள் செயல்திறன் உடையதாக இருக்கும் மாற்றம் மொழிக்கு உண்டு என ஏற்றுக்கொண்டால் பழைய இலக்கண விதிகளும் மாறவே செய்யும். ஆகவே தமிழ் மொழியின் பரவலான பயன்பாடுகள் முழுமையையும் மனதில் கொண்டே இலக்கண விதிகள் உருவாக்கப்பட வேண்டும் பொதுவாகவே மாறும் தமிழுக்குரிய, பிரயோக தமிழுக்குரிய இலக்கண நூல்கள் தமிழில் குறைவாகவே உள்ளன. இக் குறைபாட்டின் காரணத்தினாலும் தமிழ் மொழியினது எழுதும் திறன் பற்றி மதிப்பீடு செய்வது சில வேளைகளில் கடினமாக அமையலாம்.

● மாணவர்களது வாசிப்புத்திறன் எழுதும் திறனை அதிகரிக்கும் மாணவர்கள் பாடநூலில் மாத்திரம் பெருமளவிற்கு தங்கியிருக்கின்றார்கள் மாணவர்கள் வாசிக்கும் இன்றைய சஞ்சிகைகள், 'கொமிக்ஸ்' நூல்கள் ஜனரஞ்சக இலக்கிய நூல்கள் ஆகியவற்றில் கையாளப்படும் மொழி நடை மாணவர்களது மொழித்திறனைப் பெரிதும் பாதிப்படையச் செய்கிறது.

● இன்று பரவலாக சகல பாட ஆசிரியர்களும் வழங்கப்பட்ட இலவச பாட நூல்களை பயன்படுத்துவதற்கு பதிலாக குறிப்புரைகளை வழங்கி அவற்றினையே மாணவர்களை பயன்படுத்தும்படி தூண்டுகின்றனர்.

மேற்காட்டப்பட்ட நியாயங்களில் சில மாணவர்களினது மொழி வெளியீட்டுத் திறனை குறைவடைய வைப்பதற்கு மரபுவழி அணுகுமுறைகளும் ஆசிரியர் சார்பான குறைபாடுகளும் காரணமாக அமைவதை சுட்டி நிற்கின்றன. மாணவர் சார்பான காரணங்களும் உள.

மரபுத் தமிழ் இலக்கண முறமைகள் இன்று பெருமளவிற்கு வற்புறுத்தப்படுவது பொருத்தமற்றது போலவே தெரிகிறது, இதனை ஒரு விடயத்திற்கூடாக தெளிவு படுத்தலாம். "தமிழ் மொழி அமைப்பில் சந்தி பிரித்து எழுதுதல், அல்லது சந்தி சேர்த்து எழுதுதல் இறுக்கமான விதித் தன்மைகளுடன் பின்பற்றப்படுகிறது". சந்தி எங்கு பிரித்தெழுதுவது அல்லது எங்கு சேர்த்து எழுதுவது என்பதுபற்றி மரபுஇலக்கண ஆசிரியர்களிடையே தடுமாற்றம் உள்ளது

அங்குப் போனார் — அங்கு போனார். என புணர்ச்சி விதிகளில் தடுமாற்றங்கள் உண்டு.

பல + பல = பற்பல, பலப்பல, பலபல என அமையும் உதாரணங்களும் இதனை தெளிவுபடுத்தும்.

மா + கப்பல் = மாகப்பல் மாக்கப்பல் என இயல்பாகவும், விகாரமாகவும் வரும் சந்தர்ப்பங்களில் பொருள் வேறுபாடும் உண்டு எனவே சந்தி விதி நூற்றுக்குநூறு அவசியமற்றது; எனக் கூறுவதனைவிட சந்தி விதியினை மொழி பேசப்படும் சூழலை அடிப்படையாகக் கொண்டே நோக்குதல் வேண்டும். மொழியின் பயன்படுநிலை முழுமையாக நோக்கப்பட்டே 'சந்தி' விதிகள் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப்படல் வேண்டும். தமிழ் அறிஞர்கள் மத்தியிலேயே சந்திவிதிப் பயன்பாடு ஒருமைத் தன்மை பெற்றதாக இல்லை. சுவாமி விபுலானந்தர். பேராசிரியர் வித்தியானந்தன் போன்றோர் இறுக்கமான சந்தி விதிகளை கடைப்பிடித்தோர். பேராசிரியர் வரதராசன், முத்து சண்முகம் போன்றோர் சந்தி விதிகளை இறுக்கமாக பின்பற்றவில்லை. எனவே புணர்ச்சி / சந்தி விதிகள் மாணவர்களிடையே பின்பற்றப்படாமையை அவர்களுடைய எழுத்துத் திறன் குறைபாடாக வற்புறுத்து ஆசிரியர்களினது மரபுவழி மனப்பாங்கையே சுட்டுவதாக கொள்ளவேண்டும்.

எனினும் மாணவர்களிடத்து சிந்தனையை தெளிவாகக் கூறும் மொழித்திறன் விருத்தி இன்மை காணப்படுவது உண்மையே. குழந்தை அல்லது மாணவன் மொழியினை சிறந்த முறையில் பயன்படுத்தி தனது கருத்துக்களை செம்மையாக எழுதப் பழகுதல் வேண்டும். இத்தகைய பழக்கத்தினை ஆசிரியர்கள் உருவாக்க பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்துவது குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக ஆண்டு '3' ஐ மாணவன் அடையும்போது அவன்/அவள் பெற்றுக்கொள்ளும் ஆரம்ப மொழித்திறன்கள் அவன்/அவளது பிற்கால எழுத்துத் திறனை வழிப்படுத்தும். எனவே ஆரம்ப கல்வி பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் இது சம்பந்தமான சில 'கைங்கரியங்களை' நிறைவு செய்தல் வேண்டும்,

● ஆரம்பகல்வி ஆசிரியை / யன் தனது தாய்மொழி சம்பந்தமான பிரயோக மொழியியல் அறிவினை கல்வி உளவியல் அறிவுடன் இணைத்து பிரயோகம் செய்யும் ஆற்றலுடையவராக தன்னை மாற்றிக் கொள்ளுதல் வேண்டும். ( ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாகப் பணிபுரிபவர்கள் குறைந்தளவு பயிற்சியை தானும் பெற்றதன் பின்னரே மாணவர்களை கற்பிக்க அனுமதிக்கும் முறையை கல்வி நிர்வாகம் நடைமுறைப்படுத்த சித்தமாக இருத்தல் வேண்டும் )

● குழந்தைகளுக்கு இன்று எழுத்துக்கள் மரபு வழியிலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன அ, ஆ, ...... ஔ என்ற முறையிலேயே 'அரிச்சுவடி' முறைமூலம் எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. எழுதுவதில் இலகுவான எழுத்துக்களில் இருந்து கடினமான எழுத்துக்களுக்கு மாணவர்கள் வழிநடத்தப்படுதல் வேண்டும்.

● எழுத்துக்கள் அறிமுகப்படுத்தப்படும் போது எழுத்துக்களின் உருவ அமைதி ஒற்றுமைகளும் கவனிக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற முறையில் எழுத்துக்கள் வகைப்படுத்தப்பட்டு மாணவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும்.

● மாணவர்களுக்கு சொற்கள் அறிமுகப்படுத்தப்படும் போது மாணவர்களிற்கு பழக்கமான சொற்களில் இருந்து எழுத்து வழக்கு சொற்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும். தமிழ்மொழி; வட்டார, சமூக சூழலுக்கு ஏற்ப பிரத்தியேக மொழிப்பிரயோகங்களை கொண்டதாக காணப்படுகிறது. அதாவது தமிழ்; எழுத்து வழக்கு பேச்சு வழக்கு ( இப்பேச்சு வழக்கு பல திறப்படும்; ) ஆகிய இரு வழக்குகளைக் கொண்டது. எங்களது பாடசாலை அமைப்புக்கள் பாடநெறி தொகுப்பின் அடிப்படையிலேயே வகுக்கப்பட்டதன்றி அப்பாடசாலை ஆற்றவேண்டிய பணியின் அடிப்படையில் வகுக்கப்படவில்லை. இதன் காரணமாக சகல பாடசாலைகளுக்கும் பிரதேச வேறுபாடுகள் இன்றி ஒரே பாடப்புத்தகம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு பயிற்றுவிக்கப்படுகிறது. மாணவர்களுடைய குறித்த பிரதேச சூழலில் பேச்சு மொழி பிரயோகத்தில் இருந்து எழுத்து மொழி பிரயோகத்துக்கு அவர்களை ஆற்றுப்படுத்தும் பாரிய பணி ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்குண்டு என்பதை மறந்து

விடக்கூடாது சூழலில் பேசும் மொழி பாடசாலைகளிலும் பயன்படுத்தும்போது பாடசாலைச் சூழல் உயிர்துடிப்புடையதாக அமையும்.

ஆரம்ப கல்வி மாணவர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் நினைவாற்றலை வளர்க்கும் பயிற்சிகளாக இல்லாது மொழித்திறனை வளர்க்கும் பயிற்சிகளாக அமையவேண்டும். பேச்சு வழக்கை அடிப்படையாக கொண்ட உரையாடல் மூலம் இப்பயிற்சித்திறன் கட்டி வளர்க்கப்படலாம். பேச்சு மொழிச் சொற்கள் மாணவர்களுக்கு அறிமுகமான பின் அதனை திருந்திய தாராதரத் தமிழ் என நாம் எண்ணும் மொழி நடைக்கு வழிப்படுத்தலாம்

பிலாப்பழம் — பலாப்பழம்

வேண்டினேன் — வாங்கினேன் என

சுற்றுப்புற சூழல்மொழி அமைப்பில இருந்து எழுத்து வழக்கு மொழிக்கு மாணவர்கள் ஆற்றுப்படுத்தப்படலாம். அவ்வாறு எளிமையான சொற்களை அறிமுகப்படுத்துவதே பொருத்தமுடையது. வாங்கிடலாம் என்பதை விட வாங்கலாம் என்ற சொற்களை அறிமுகமாக்குவது பொருத்தமானது,

குறிப்பாக மாணவர்கள் அதிகம் தவறும் எழுத்து வழுக்களை ஆரம்ப காலத்திலிருந்து திட்டமிட்ட செயல் திறனுடைய பயிற்சிகளுக்கூடாக நீக்க முயலுதல் வேண்டும். சொல் முறைக்கூடாக சொற்கள் உச்சரிக்கப்படும் முறைமையை மாணவர்கள் நன்கு அவதானிக்கும்படி செய்தல் வேண்டும் குறிப்பாக குறில், நெடில் வேறுபாடுகள் எமது மொழி அமைப்பில் பொருள் வேறுபாட்டையும் தரும்.

உ+ம் படம் — பாடம்

தண்டு — தாண்டு

தூண்டில் — துண்டில் ஆகியவற்றினை நோக்குக. பொருளற்ற முறையில குறிலை நெடிலாக்க முடியாது. நெடிலை குறிலாக்க முடியாது.

உ+ம் அப்பம் — அப்பாம் என வரமுடியாது

கதவு காதவு என வரமுடியாது.

வேண்டும் — வெண்டும் என

வரமுடியாது.

ஆரம்பக் கல்வி மாணவர்களிடத்தில் நெடில் பெரும்பாலும் குறிலாகவே நோக்கப்படுகிறது.

அதுவே வரிவடிவத்திலும் இடப்படுகிறது இத்துறையில் ஆசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறே ந், ன், இ ய ல, ள ஆகியவற்றின் ஒலி உச்சரிப்பு,வரிவடிவம் ஆகியவற்றிலும் கூடிய கவனம் மேற்கொள்ளுதல் வேண்டும். ஆரம்பக்கல்வி மாணவன் மொழியில் பிழை விடுகின்றான் அல்லது தவறு விடுகிறான் என்றால் அதனை ஆசிரியர்கள் மாணவர்களது இயலாத் தன்மையாகக் கருதி விடக்கூடாது. மாணவன் விடும் ஒவ்வொரு பிழையும் எழுத்துத்திறனில் அவன் கொள்ளும் ஆர்வ நிலையையும் எழுத்துத் திறனின் வளர்ச்சிப்படி நிலைகளையும் வெளிக்காட்டுவன எனக் கொள்ளுதல் சிறப்பானதே. ஆரம்பக் கல்வி மாணவன் மொழி எழுத்துத் திறனில் தவறும் இடங்கள் தொகுக்கப்பட்டு அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் பாகுபாடு செய்யப்படல் வேண்டும். செய்யப்பட்டு அதனை நிவர்த்தி செய்யும் பரிகார முறைகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படின் மொழி வெளியீட்டுத்திறனில் மாணவர்கள் பின்தங்கியுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டை ஆசிரியர்கள் எளிதில் புறங்கண்டு கொள்ள முடியும்.

இவ்வாறே தமிழ் பாடநூல் ஆக்குபவர்களும் தமிழ் மொழியின் தன்மை, தமிழ்மொழியின் பிரயோகத்தன்மை, தமிழ் மொழியின் வேறுபாடுள்ள பிரதேச வழக்காறுகள் ஆகியவற்றினை மனங்கொண்டு பாடநூல்களையும் உருவாக்குதல் வேண்டும். பாடநூல் உருவாக்க எழுத்தாளர்களிடம் மொழியியல் அறிவும் சமூக மொழியியல் அறிவும் இணைந்து காணப்படுதல் வேண்டும். மொழியின் அமைப்பு, மொழி சமூகத்தில் செயற்படும் முறைமை ஆகிய இரண்டும் கவனத்தில் கொள்ளப்பட்டு உளவியல் நியமங்களுக்கு ஏற்ப பாடநூல் உருவாக்கப்படின் 'குறை சுருங்கி நிறை பெருகும்' எனலாம்.

"சிறந்த மரபுரிமை ஒன்றினைவிட சமூகத்துக்கு நன்மை பயப்பதும் சிறப்புக்கள் தருவதும் வேறொன்றுமில்லை. ஆனால ஒரு நாடு அல்லது ஒருமொழி சார்ந்த சமூகம் அந்த சிறந்த மரபுரிமையிலேயே தங்கி வாழ நினைப்பது போல தீங்கு தருகின்ற விடயமும் வேறொன்றுமில்லை."

இக் கருத்தினை மொழித்திறன் விருத்தி பற்றி நோக்குவோர் எண்ணுதல் பொருத்தமுடையதாகும்.

# குழந்தை பராமரிப்பு

திருமதி. சாந்தாதேவி ஞானப்பிரகாசம், B. Sc.

குழந்தைகள் இயற்கை அன்னையின் மடியில் வளருகிறார்கள். இயற்கை, உடலுக்கும் உள்ளத்திற்கும் சிறந்தது. செயற்கை முறைகள் அவ்வளர்ச்சியினைக் குறைவுறச் செய்கின்றன என்று சான்றோர்களும், கல்வியாளர்களும் கருதுகிறார்கள். குழந்தைகள் நல்லாரோடு இணங்கும்போது நல்லவர்களாக மாறுகிறார்கள். தீயவரோடு பழகும்போது தீயவர்களாக மாறுகிறார்கள் இன்று உலகம் அளிக்கும் காட்சி, மாற்றங்களின் கண்காட்சியே ஆகும். மனிதனுடைய அகவாழ்க்கையிலும் மாறுதல்கள், புறவாழ்க்கையிலும் மாறுதல்கள். இவற்றின் வேகம், கண்டறிய முடியாத நிலையில் உள்ளது. சூழ்நிலையில் உள்ள நல்ல கலாச்சார பண்பாட்டினை மட்டும் குழந்தை வளர்ப்பில் பின்பற்ற வேண்டும்.

இளமையில் வழிகாட்டியில்லாது வளரும் குழந்தைகள் வழிகெட்டுத் திசைகெட்டுத் திரிடும். 'இளமையில் கல்' என்பது ஔவையின் வாக்கு. குழந்தைகளுக்குக் குழவிப்பருவத்திலிருந்தே இறை, அன்பு, நினைவாற்றல், ஆய்வுத்திறன், கருத்தமைதி, கற்பனையாற்றல், ஒருவரோடொருவர் ஒற்றுமையுடனிருந்தல், கூடி நலம் பாராட்டுதல் போன்ற நற்பண்புகளிடையில் நலமுடன் முழு ஆளுமையை வளர்ப்பதற்குச் சமூகத்தில் அனைவரும் உதவவேண்டும் குழந்தைகளை உற்றவழியில் உணர்த்திச் செல்லுவது ஆலயவழிபாடு போன்றது. என்பதை நாம் மறக்கக்கூடாது.

வீடு குழந்தையின் உலகம் அங்குதான் அது வாழ்க்கைக்கு வேண்டிய பாடங்களை முதலில் கற்றுக் கொள்கிறது. அதன் உடலும் உள்ளமும் வளர்ச்சியடைகின்றன. அதன் உணர்ச்சி தன்மையெல்லாம் மலர்கின்றன. ஆதலால் குழந்தையின் பூரண வளர்ச்சிக்கு வீடு முதற்காரணமாகிறது. பெற்றோரையும் அவர்களுடைய வாழ்க்கையையும் குழந்தை வளர்ப்பு முறைகளையுமே குழந்தையின் வளர்ச்சி முக்கிய அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பெற்றோர்கள் தமது வாழ்க்கையையும், குழந்தையிடம் நடந்து கொள்ளும் வகையையும் சரியானபடி அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

சில பெற்றோர்கள் குழந்தைகளை அதிகக் கட்டுப்பாட்டுமுறையில், கைப்பொம்மைகளாக ஆட்டி வைக்கிறார்கள். குழந்தையை 'அதைச் செய்யாதே' "இதை செய்யாதே'' என்று சொல்லுவதைவிட அப்படிக் குழந்தை செய்யக்கூடாத காரியங்களைச் செய்யாமல் தவிர்ப்பது நல்லது.

குழந்தையை ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கும்படி வற்புறுத்தாமல் விளையாட்டாகவே கற்பிக்க முயலவேண்டும். தலைவார மறுக்கும் குழந்தையைத் "தலைவாரிக்கொள்" எனக் கட்டளையிடுவதைவிட, ''நீ எப்படி தலைவாரிக் கொள்வாய்? தலை வாரினால் அழகாக இருப்பாயே'' என்று ஆரம்பித்தால், குழந்தை தானாகவே மனமுவந்து தலைவாரிக் கொள்ளுகிறது. விரட்டியோ, அவசரப்படுத்தியோ, தலையில் குட்டியோ, அடித்தோ பலவந்தமாகத் தலைவாரினால் அச்செயலின்மீதே குழந்தைக்கு வெறுப்பு ஏற்பட்டு விடலாம்

அன்பு குறைவாகவுள்ள இடத்திலும், குழந்தை வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. சில பெற்றோர்களுக்கு இயல்பாக அன்பு இருந்தாலும் அதைக் குழந்தைக்கு வெளிப்படையாகக் காண்பிக்கக் கூடாது என்று எண்ணிக் குழந்தையிடம் கண்டிப்பாக நடந்து கொள்ளுவார்கள் மேலும் வாழ்க்கையில் குழந்தை குற்றமில்லாமல் சிறந்து விளங்கவேண்டும் என்ற ஆசையால் குழந்தையிடம் காணப்படும் குறைகளையே காட்டுவதும், மற்ற குழந்தைகளோடு ஒப்பு நோக்கி அதைத்தாழ்த்திப் பேசுவதும், குற்றம் செய்தால் கடுமையான தண்டனை விதிப்பதும் ஒரு சிலருடைய பழக்கம் இவையெல்லாம் குழந்தையின் பரிபூரண ஆற்றல்களுக்குப் பாதகமாகவே முடியும்.

சிலர் ''இதோ, நெருப்பு, பூச்சாண்டி, பேய்'' என்றெல்லாம் குழந்தைகளைப் பயமுறுத்திக்

கட்டுப்படுத்துவதுண்டு. பயமென்பது மிக மோசமான உணர்ச்சி, அதை அதிகமாக உடையவர்கள் வாழ்க்கையில் எந்தத் துறையிலும் வெற்றியடைய முடியாது. மனவலிமையை வளர்ப்பது பெற்றோரின் கடமையாகும்.

சில சமயங்களில் பெற்றோரிடையே குழந்தையின் வருங்காலத்தைக் குறித்து அபிப்பிராய பேதம் ஏற்படலாம். குழந்தையை "நீ டாக்டராக வேண்டும்" எனச் சொல்லி உற்சாகப்படுத்துவார் தகப்பனார், தாயோ "நீ ஆசிரியராக வேண்டும் என ஊக்கப்படுத்தலாம். பெற்றோர் இம்மாதிரி ஆசைப்படுவது சரிதான் அதற்காகக் குழந்தையின் மனம் எதை விரும்புகிறது? எதில் நாட்டம் கொள்ளுகிறது? என்பதை உணர்ந்து அந்த வழியில் ஊக்குவித்தால் குழந்தை சிறப்படையும். அதை அறியாமல் பெற்றோரின் விருப்பத்திற்கு வளைந்து கொடுக்கும்படி செய்வது தவறு.

வீட்டில் எப்பொழுதும் சண்டை, துயரம் போன்றவை இருந்தால் குழந்தை மனம் கெட்டுவிடும். வெளியுலகிலாவது சிறிது மகிழ்ச்சி காணலாம் என நினைத்துக் குழந்தை தவறான பாதையில் செல்ல வழியாகிறது. குழந்தையின்முன் பெற்றோர் சண்டையிட்டுக் கொள்ளுவதோ ஒருவரைப்பற்றி மற்றொருவர் இகழ்வதோ மிகவும் தவறு. இதே போல வீட்டிலுள்ள பெரியவர்களைப்பற்றிய தங்கள் விருப்பு வெறுப்புக்களைக் குழந்தையின் மனதில் திணிப்பதும் தவறு.

"நீ பாட்டுப் பாடினால் உனக்குக் காசு தருவேன்" "கட்டுரை எழுதினால் காசு தருவேன்" என்று குழந்தையின் செயலைப் பணத்துடன் ஈடுகட்டுதல் சரியல்ல. பெற்றோரைப் 'பணத்திற்காக' என்று குழந்தை நினைக்காமல், "அன்பிற்காக" என்ற மனப்பான்மை குழந்தையிடம் ஏற்பட வேண்டுவது அவசியம்.

பெற்றோரின் அன்பும், ஆதரவும் தனக்கு உண்டு என்ற நம்பிக்கை, குழந்தை மனதில் விழுந்தால்தான் குழந்தைக்குத் தவறைத் திருத்திக் கொள்ளும் மனப்பான்மை ஏற்படும். குழந்தை பொய் பேசுகிறது தகாத வார்த்தைகளைக் கூறுகிறதென்றால் குழந்தையைத் தண்டிப்பதைவிடக் குழந்தை ஏன் அப்படிப் பேசுகிறது என்ற காரணத்தை உணர்ந்து அதை நீக்க முயல வேண்டும். சிறுவர்கள் தங்களுடைய திறமைகளெல்லாம் பூரண மலர்ச்சி பெற்று வளர்வதற்குப் பெற்றோரின் அன்பும், ஆதரவும் முக்கியம்

குழந்தையிடம் பெற்றோர்கள் அன்பு செலுத்துகிறார்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அன்பு மிகவும் தேவையானதுதான் என்றாலும் அதிலும் ஒரு வரையறை இருக்கவேண்டும். கண்மூடித்தனமாகக் குழந்தையிடம் செலுத்தும் அதிக அன்பினாலும், பாதுகாப்பினாலும் குழந்தையின் தன்னம்பிக்கை, தன்முயற்சி முதலிய தன்மைகள் வளராமல் போகின்றன. குழந்தை வயதுவந்த காலத்திலும் எதற்கும் பிறரையே எதிர்பார்த்து நிற்க முயலுகின்றது. உலகத்தில் எல்லோரும் பெற்றோரைப்போல அன்போடு இருப்பார்களென எண்ணி ஏமாற்றமடைகிறது.

குழந்தை நமக்கு விருப்பம் தராத காரியத்தில் ஈடுபடுமானால் குழந்தைதானே என்று தொடர்ச்சியாக விட்டு விடுகிறார்கள் சிலர். அவ்வாறு செய்தால் குழந்தைக்கு இதுதான் நல்லது, இதுதான் கெட்டது எனத் தெரியாது. தான் எது எப்படி செய்தாலும் மற்றவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற மனநிலை ஏற்பட்டுப் பின்னால் சங்கடங்களுக்கு உள்ளாக நேரிடும். இதில் திடீரென சிறிதளவு மாற்றம் ஏற்பட்டாலும் குழந்தை அவதிக்குட்படுகிறது.

கண்ணே! "நீ விளையாடினால் சட்டை அழுக்காகிவிடும், சளி பிடிக்கும் வீட்டு நிழலிலேயே இரு" என்றெல்லாம் கூறி அதிகப்பாதுகாப்புடன் குழந்தைகளை வளர்ப்பதும் நல்லதல்ல. வெளியுலகம் என்ன என்றே தெரியாமல் இருந்துவிடக்கூடும். நான் தான் குழந்தைப் பருவத்தில் அனுபவிக்க இயலவில்லை. நமது குழந்தையாவது அனுபவிக்கட்டுமே என நினைத்து, குழந்தை கேட்பதையெல்லாம் கரும் தாய் தந்தையரும் உண்டு இது அன்பிற்கு அறிகுறியன்று, குழந்தையின் வளர்ச்சிக்கு ஏற்றபடி தக்கவை தகாதன எவை என்பதை அவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும்.

குழந்தைப் பராமரிப்பில் குழந்தைகளுக்குப் பெற்றோர்களிடத்தில் வெறும் நட்புணர்ச்சி மட்டுமில்லாமல், மிகுந்த பற்றும் அன்பும் ஏற்படும்வகையில் பெற்றோர் நடந்து கொள்ள வேண்டும். மாறாக சில பெற்றோர்கள் குழந்தைகளிடத்து வெறுப்புணர்ச்சி கொண்டு அவர்களைப் புறக்கணிக்கிறார்கள் குழந்தை வளர்ப்பில் வெறுப்புணர்ச்சியை தவிர்க்க வேண்டியது பெற்றோரின் இன்றியமையாத கடமையாகும்

சில பெற்றோர்கள் தங்கள் கோபஉணர்ச்சியை மறைப்பதுண்டு இதனால் அவர்களுக்கு மிஞ்சுவது தலைவலியும் களைப்புந்தான் இத்தகைய தாய்மார்கள் குழந்தைகளின் நோய் அல்லது படிப்புபற்றி மிகக் கவலை கொண்டு எப்பொழுதும் குழந்தைக்கு வேண்டியதைவிட அதிகமாக உதவி செய்கிறார்கள். இவர்களின் சின உணர்ச்சி பாதுகாப்புதரும் உணர்ச்சியாக வெளியாகிறது.

சில நேரங்களில் பெற்றோர் தங்களின் சினத்தை வெகுநேரங்கழித்து வெளிப்படுத்துகிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு குழந்தை காலையில் எழுந்ததிலிருந்து பொருட்களை எடுத்து வீசுதல், அயல்வீட்டுக் குழந்தையை அடித்தல், அன்றாட கடமைகளை செய்யாதிருத்தல், தகாத வார்த்தைகளை உபயோகித்தல் முதலிய குறும்புகளைச் செய்துகொண்டு இருக்க

லாம். இதையெல்லாம் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்த பெற்றோர், குழந்தை அப்படி ஒன்றும் செய்யாத வேளையில் சினங்கொண்டு, குழந்தையைக் கடுமையாகத் தண்டிப்பார்கள். தகாத நேரத்தில் பெற்றோரின் பொறுமையே குழந்தையை குற்றஞ் செய்ய ஊக்குவிக்கிறது என்பதை உணர்ந்து ஆரம்பத்திலேயே குற்றங்களைக் கண்டித்துத் தவிர்த்தல் நலம்.

வாழ்க்கையில் ஏமாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே பெற்றோருக்கு ஏற்படும் ஏமாற்றங்களும் வெளிவேலைகளின் தொல்லைகளும் குழந்தையைக் கவனிக்க முடியாமல் செய்து அதன்மேல் சினத்தை ஏற்படுத்தக்கூடும். உதாரணமாக, வேலைக்குச் சென்று அலுத்து வீட்டுக்கு வரும் கணவர், மனைவியைக் கோவிப்பதும் இதைப் பொறுக்காத மனைவி தன் சினத்தை தன் குழந்தைமேல் செலுத்தி, பின் அதற்காக வருந்தி தன்னை நொந்து கொண்டு துன்புறுவதும் வாழ்க்கையில் நாம் காணும் நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

பெற்றோருக்கு என்னென்ன விடயங்கள் துன்ப உணர்ச்சியை உண்டாக்குகிறதோ அதுவே குழந்தைகளுக்கும் துன்பமுண்டாக்குகிறது. குழந்தைகள் பெற்றோரிடம் தங்களின் கோப உணர்ச்சியை வெகுவாக நேரிடையாக வெளிப்படுத்துவார்கள். சில நேரங்களில் சினத்தை மறைத்து மாறுபட்ட விதமாக தெரியப் படுத்துவார்கள். எடுத்துக்காட்டாக அத்தகைய குழந்தைகள் அதிக பய உணர்ச்சி கொண்டவர்களாகவோ அல்லது செய்யக்கூடாதவைகளில் ஆர்வம் உள்ளவர்களாகவோ இருப்பார்கள்.

குடும்ப வாழ்க்கையில் நியாயமான காரணத்திற்கு சினம் கொள்ளும் அன்பு உள்ளம் கொண்ட பெற்றோர்களிடம் குழந்தைகளும் மகிழ்ச்சியாக இருக்கின்றன. குழந்தைகளை சிறு வயதிலிருந்து ஓரளவு கட்டுப்பாட்டில் வைப்பதாலும், தவறு செய்யும்போது உடனே கண்டிப்பதாலும் சினத்தைத் தவிர்த்துப் பிரச்சினைகளை வெல்லமுடிகிறது. இத்தகைய பராமரிப்பு மனப்பான்மை பெற்றோர் அன்பின் ஒருபகுதியன்றோ? குழந்தைகள் வளர வளர அவர்களுக்கு வாழ் வாங்கு வாழ வழி காட்டும் வகையில் பெற்றோர்கள் சரியான வளர்ப்பு முறைகளைக் கையாளல் வேண்டும்.

கடவுள் என்னை மன்னிப்பாரென்றும், மனிதர்கள் என் பாவத்தைத் தெரிந்துகொள்ள மாட்டார்கள் என்றும் எனக்கு உண்மையாகத் தெரிந்திருந்தால்கூட நான் பாவம் செய்ய வெட்கப்படுவேன் ஏனென்றால், அதில் அவ்வளவு இழிவு ஒட்டிக் கொண்டிருக்கிறது.

— பிளேட்டோ —

ஜெய் சாயிராம்

# பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வியின் முக்கியத்துவம்

செல்வி. ஞானேஸ்வரி திருநாவுக்கரசு

இன்றைய உலகம் பல பிரச்சனைகளால் நிறைந்துள்ளது என்பது யாராலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் அதீத வளர்ச்சியடைந்து மனிதன் தன்னை மட்டுமல்ல முழு உலகையுமே சர்வநாசம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டு நிற்கிறான். விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியினால் உலகம் குறுகிக் கொண்டு போகும் போது மனிதனின் துன்பமும் மனக் குழப்பமும் விரிவடைந்தே செல்லுகின்றது. மன நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

புத்தகக் கல்வியை பூரணப்படுத்தி கல்விக்கூடங்களிலிருந்து வெளியேறும் மாணவர்கள் இவ் உலகில் ஏற்படும் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தத்தளிக்கின்றார்கள் அமைதி என்பதே அவர்கள் மத்தியில் இல்லை. மனிதர்கள் யாவரும் அமைதியை தேடி அலைந்து திரிகின்றார்கள். இந்நிலை ஏற்படுவதற்கு காரணம் கல்வி முறையில் ஏறபட்ட குறைபாடே என அறிஞர்களால் ஆராய்ந்தறியப்பட்டது.

வேறுபாடு காணமுடியா விஞ்ஞானம்
ஒழுக்கமற்ற மனித இருப்பு
நன்றியில்லாத நட்பு
சுருதியில்லா இசை
அறமும் நீதியுமற்ற ஒரு சமூகம்
ஆகியவை மக்களுக்கு நன்மை தரா
பாபா

இவற்றுக்கெல்லாம் விடிவு காணும் முறையில் அமைந்ததே பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வியாகும்.

கல்வியின் விளைவு ஒழுக்கம்
அறிவின் முதிர்ச்சி அமைதி
— பாபா —

பாரதப் போரின் அவலங்களின் மத்தியில் கீதை உபதேசிக்கப்பட்டது போன்று இன்றையசமூக அவலங்களின் மத்தியில் மனித விழுமிய மேம்பாட்டுக்கான கல்வி பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவினால் அருளப்பட்டது. மனித மேம்பாட்டுக்கான விழுமியங்களாவன சத்தியம் தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்பனவாகும் இவ் ஐந்து விழுமியங்களும் மனித வாழ்க்கைக்கு தேவையான பஞ்சாமிர்தமாகும்.

இன்று நம் சமூக வாழ்வுக்கு விஞ்ஞான தொழில் நுட்ப அறிவோடு மனித மேம்பாட்டு விழுமியங்களும் இணைந்த அறிவு அவசியமாகும். உப்பில்லா பண்டங்கள் எவ்வாறோ அவ்வாறே மனித மேம்பாட்டு விழுமியங்கள் இல்லா கல்வியுமாகும் சிறுவயதிலே எதனையும் பதிய வைத்தல் மிகவும் இலகுவானதாகும். ஆகவே மனித மேம்பாட்டு கல்வியை 5-6 வயது சிறுவர்களுக்கே ஆரம்பித்து வைக்கப்படுகின்றது.

சிறார்களின் இதயத்தாமரை மலர்களை மலர வைக்கும் நோக்கத்துடன் பகவானினால் தொடங்கப்பட்டதே மனித மேம்பாட்டுக் கல்வியாகும். சுலோகங்கள் பஜனைகள், கதைகள் சம்பர்ஷணைகள், நாடகங்கள், விளையாட்டுக்கள் மூலம் சிறிது கவர்ச்சிகரமான முறையில் மனித மேம்பாட்டு விழுமியங்களை கற்பித்து அதனை கடைப்பிடிக்க வைக்கும் திட்டமே பாலவிகாஸ் மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டமாகும்.

மனித விழுமியங்கள் தொடர்பான அறிவைப் பெறுவதற்கு அனைவரும் உரிமையுடையவர்கள் எனவும் பணிமனை, தொழிற்சாலை இல்லம் என்ற அனைத்து துறையிலும் உள்ளவர்கள் சத்தியம் தர்மம் சாந்தி பிரேமை அகிம்சை ஆகியவற்றை கட்டாயமாக பின்பற்றுதல் வேண்டும் என பகவான் கூறுகின்றார்.

எந்த ஒரு மனிதனின் இதயம் இரக்கத்தால்
நிரம்பி உள்ளதோ எவனது பேச்சு உண்மையின்
பாற்பட்டதோ எவனது உடல் மனிதசேவைக்காக
பயன்படுத்தப் படுகிறதோ அவன் என்றும் கஷ்டப்
படுவதில்லை
நோய்களினால் அவன் அவதியுறுவதில்லை
— பாபா —

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
ஜெய் சாய்ராம்

# இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள்

கலாநிதி கா குகபாலன்
முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்.

இயற்கை அனர்த்தங்கள் மனிதனுக்கும் அவனது வாழ்வுக்குமிடையிலான தவிர்க்க முடியாத பிடையாகும். கடந்த இரண்டு தசாப்தங்களில் மூன்று மில்லியன் மக்களைக் கொண்றொழித்ததுடன் ஒரு மில்லியன் மக்களைப் பல்வேறு வழிகளில் பாதிப்படையச் செய்துள்ளன. இவ்வனர்த்தங்கள் மனித வாழ்வில் சகிக்க முடியாதுள்ளதுடன் அபிவிருத்தியினால் பெறப்படும் பலன்கள் பல ஆண்டுகளுக்கு பின் தள்ளப்பட்டுச் சென்றுள்ளது. செல்வந்த நாடுகளாயினும் சரி வறிய நாடுகளாயினும் சரி இயற்கை அனர்த்தங்கள் ஆங்காங்கே நிகழ்ந்து வருகின்றன. எனினும் உலகில் நிகழ்கின்ற இயற்கை அனர்த்தங்களில் 95.0 சதவீதமானவை வளர்முக நாடுகளிலேயே நிகழ்வதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. உலகில் 2000 ஆண்டளவில் உலகக் குடித்தொகையில் குறிப்பாக நகரமையங்கள், பட்டினங்கள் கிராமங்கள் போன்றவற்றில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் பிரதேசங்களாக கணிசமான பங்கு மாறக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்து வருகின்றன. மக்கள் பெருமளவு அனர்த்தங்களைச் சுமப்பவர்களாவர். அதே வேளை இயற்கை வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. எனவே அனர்த்தங்கள் மக்கள் மேல் இயற்கையே சுமத்துமாயின் உடனடி உதவிகளும் மீள்மைப்புக்கான செலவுகளும் அதிகரித்துக் கொண்டு செல்ல பொதுவாக பொருளாதார, சமூகப் பாதிப்புகள் பரவலாக ஏற்பட வாய்ப்பளிக்கின்றது எனலாம்.

## இயற்கை அனர்த்தங்கள்

இயற்கை அனர்த்தங்கள் என்றால் மனிதனது செயற்பாடின்றி இயற்கையாகப் புவியில் ஆங்காங்கு காலத்துக்கு காலம் நிகழ்ந்து உயிர் மற்றும் உடைமைகள் பொருளாதார செயற்பாடுகளை அழிக்கும் செயல்முறை என்று கூறலாம் பேர்டம் மற்றும் கற்ஸ் ( Burtom & Kates 1964 ) என்பவர்களது கருத்துப்படி புவிநடுக்கம், வரட்சி, மண்சரிவு, கடலரிப்பு, மூடுபனி, உறைபனி, புயலோடு கூடிய ஆலங்கட்டி, பனிமழை, மின்னல் ( Lightining ) சூறைப்புயல் ( Tornadoes ) அயனச் சூறாவளி, எரிமலை, காடெரிப்பு போன்ற பலவற்றால் ஏற்படும் அனர்த்தங்களே இயற்கை அனர்த்தம் அல்லது நாசம் எனக் கொள்ளலாம் என்பர். அதாவது குறிப்பிட்ட பிரதேசத்தில் குறித்த காலப்பகுதியில் வளங்களை அழிக்கும் செயற்பாடு எனக்கொள்ளலாம். குறித்த சமூகத்தின் செயற்பாட்டினை கடினமான முறையில் அழித்து விடுவதுடன் வளங்களையும் சூழலையும் பாதித்து அவனால் வெளியிலிருந்து உதவிகள் கிடைக்கப்பெறாவிடில் அவன் தொடர்ந்து வாழ முடியாத சூழ்நிலையை உருவாக்குவதில் இயற்கை அனர்த்தங்கள் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது.

உலக நாடுகளாயினும் சரி இலங்கையிலாயினும் சரி ஏதோ ஒரு வகையில் பெருமளவிலோ அன்றில் சிறியளவிலோ இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடின்றி வருத்துகின்றது. இக்கட்டுரையில் உலக நாடுகளிலும் இலங்கையிலும் ஏற்பட்டுள்ள அனர்த்தங்களை ஒழுங்குபடுத்தித் தரப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு I) உலகில் இடத்துக்கு இடம் நிகழ்ந்துவருகின்ற அனர்த்தங்கள் எல்லாம் இலங்கையில் ஏற்படுகின்றன என்றில்லை. அதனால் இலங்கையில் நிகழ்ந்து மக்களைப் பாதித்து வரும் அனர்த்தங்களுக்கே இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. அதாவது நிலச்சரிவு, சூறாவளி, கடலரிப்பு, வெள்ளப்பெருக்கு, வரட்சி, புவிநடுக்கம், கடலழிப்பு போன்றனவே அவையாகும்.

## நிலச்சரிவு

நொய்தலான மலைச்சாரல்களிலிருந்து பல்வேறுபட்ட உள்வெளித் தாக்கங்களின் விளைவாக மண்படையோ அன்றில் அவற்றோடு இணைந்திருந்த கற்பாறைகளோ தமது நிலையிலிருந்து ஈர்ப்புவிசையின் காரணமாக கீழ்நோக்கிச் சொரிவதையே நிலச்சரிவு எனக் கொள்ளப்படும். பொதுவாக உலக நாடுகளில் மலைச்சாரல்களை அண்டிய பகுதிகளில் ஆங்காங்கு

நிகழ்ந்து வரினும் மத்திய அமெரிக்கா, லத்தின், அமெரிக்காவிலேயே அதிகளவில் நிகழ்ந்து வருகின்றது. மேற்படி சரிவினால் மக்கள் பல்வேறு அனந்தங்ளுக்காளாவதுடன் இறப்புக்களையும் தழுவிக் கொள்கின்றனர். லத்தின் அமெரிக்காவில் றான்ஸ் ஈக்குவடோர் எண்ணெய்க் குழாயினையும் அதன் முக்கிய நிலையத்தினையும் தாக்கியதன் விளைவாக அந்நாடு 15 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உடமைகளையும் பல உயிர்களையும் இழக்க வேண்டியேற்பட்டது

இலங்கையில் இயற்கை அனர்ந்தங்களை ஏற்படுத்தக்கூடிய முக்கியமான இயற்கை நாசங்களில் நிலச்சரிவே முக்கியமானதாகும். மத்தியமலை நாட்டுப் பகுதிகளில் காலத்துக்கு காலம் நிலச்சரிவுகள் நிகழ்ந்து பல ஆயிரக்கணக்கான உயிர்களையும் உடமைகளையும் இழந்துள்ள போதிலும் புள்ளி விபரங்கள் சரியான முறையில் பேணி வைக்கப்படவில்லை. ஆனால் அண்மைக் காலங்களில் அரசின் ஆதரவுடன் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ( National Building Research Organisation ) மத்திய மலை நாட்டில் நிலச்சரிவுகள் அதிகமாக நிகழ்ந்து வரும் நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை மாவட்டங்களில் புவியியலாளர்கள், கல்வியியலாளர்கள், பொறியியலாளர்கள், கட்டிட நிர்மானிகள் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் இணைந்து நிலச்சரிவு ஏற்பட்ட, ஏற்படக் கூடிய இடங்களை அடையாளம் கண்டு ஏற்படாமல் தடுப்பதற்கு அல்லது முன்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து வருகின்றனர்,

இலங்கையில் வரலாற்றுக் காலங்களில் மக்கள் சேனைப் பயிர்ச் செய்கையின் பொருட்டு காடுகளை அழித்தமையாலேயே நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் காலப் போக்கில் பின்வரும் காரணிகள் நிலச்சரிவினை ஏற்படுத்துவதற்கு உந்து சக்தியாக இருந்துள்ளன எனப்பலர் அபிப்பிராயப்படுகின்றனர்.

(அ) நில அமைப்பில் காணப்படும் இலகு தன்மை அதாவது பேராசிரியர் கா. குலரத்தினம் அவர்கள் மத்திய மலை நாட்டின் உருவாக்கம் குழம்பிய நிலையில் காணப்பட்டமையால் ஏற்பட்ட தன்மையினால் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பளித்து இருக்கின்றது.

(ஆ) நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி' கேகாலை, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் தென் மேற்கு, வடகிழக்கு பருவக்காற்றுக்கள், உகைப்பு ஆகியவற்றினால் பெரும்பாலும் வருடம் முழுவதும் மழை பெறப்படுகின்றமையால், நிலப்பரப்பு தொடர்ச்சியாக ஈரத்தன்மையை கொண்டதாகவிருப்பதால் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. உலகில் பெரு மழை கிடைக்கப்படுகின்ற இடங்களில் நிலச்சரிவு ஏற்படுகின்றன எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

(இ) ஆங்கிலேயர் வருகையுடன் பெருந்தோட்டப்பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டு காடுகள் மற்றும் தாவரப் போர்வைகள் அழிக்கப்படவே மண்ணரிப்புடன் நிலச்சரிவும் ஏற்பட வழிவகுத்துள்ளது.

(ஈ) கடந்த 150 வருடங்களில் மேற்படி பிரதேசங்களில் குடித்தொகை 10 மடங்குக்கு மேலாக அதிகரித்துள்ளதுடன் அவர்களுக்கான குடியிருப்புக்கள் அமைத்தல், வீதிகள், நீர்த்தேக்கங்கள் அமைத்தல்கட்டுமானத்தை மேற்கொள்ள வெடி வைத்தல், காடுகளைத் தேவையற்ற விதத்தில் துப்பரவு செய்தல் பல சந்தர்ப்பங்களில் சிறிய தாவரப்போர்வைகளை முயல் போன்ற மிருகங்களைப் பிடிப்பதற்காக எரித்தல், கனிப்பொருள் வளங்களை அகழ்ந்தெடுத்தல், துரித மகாவலித்திட்ட அறிமுகம் சாய்வுப்பிரதேசங்களில் புகையிலைச் செய்கையை மேற்கொள்ளல் போன்ற பல்வேறு காரணிகளின் விளைவாக நிலச்சரிவு ஏற்படுவதற்கு பெரும் வாய்ப்பினை கொடுத்துள்ளதெனலாம்.

இலங்கையில் நுவரேலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் அதிகளவில் நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. நுவரேலியா மாவட்டத்தில் அம்பேகமுவ, ஹங்குராகெட, கொத்மலை; நுவரேலியா, வலப்பனை ஆகிய பிரிவுகளிலும் பதுளை மாவட்டத்தில் பதுளை, ஊவாபரணகம ஹலடும்முல வெலிமடை, ஹாலிஎல, பண்டாரவளை, எல்ல, பசறை சொர்ணதோட்டை ஆகிய பிரதேசங்களிலும் அதிகளவில் நிலச்சரிவுகள் ஏற்பட்டுள்ளன ( பின்னிணைப்பு II )

பதுளை, நுவரேலியா மாவட்டங்களில் 1986ம் ஆண்டிற்கு பின்னர் நிகழ்ந்த நிலச்சரிவுகள் முறையே 65, 79 ஆகும். 1930 — 1985 ஆம் ஆண்டுகளிடையில் இலங்கையில் நிகழ்ந்த நிலச்சரிவுகளும் அதனால் ஏற்பட்ட சேதவிபரங்களும் பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ளது. நுவரேலியா மாவட்டத்தில் 1986ம் ஆண்டிற்கு பின்னர் அம்பேகமுவப் பிரிவில் 60·0% மும், ஹங்குராங் கெட்டவில் 15·3% நிலச்சரிவுகள் நிகழ்ந்துள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

நிலச்சரிவின் காரணமாக மக்கள் உயிர் இழப்புகளுடன் பொருளாதாரத் தாக்கங்களும் ஏற்பட்டுள்ளன. பல்வேறு நிலச்சரிவுகளின் புள்ளி விபரங்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமமுண்டு. பொதுவாக முதவீட்டு இழப்பு, உற்பத்தி இழப்பு, கால் நடைகள் இழப்பு, சமூக பொருளாதாரப் பிரச்சனைகள், போக்குவரத்துத்தடை, நீர்த்தேக்கங்கள் உடைப்பு, நீர் மின்சக்திப்பாதிப்பு போன்ற பல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. குறிப்பாக 1986 ஆம் ஆண்டு நிலச்சரிவின் போது 8000 குடும்பங்கள் வீடுகளை விட்டு வெளியேறியதுடன் 1506 குடியிருப்புகள் முற்றாக சேதம் அடைந்துள்ளன. இலங்கை போன்ற நாடுகளில் அனர்த்தங்களினால் அநாதரவானவர்களை

புனர்வாழ்வு நிறுவனங்களூடாக நிவாரண உதவிகளை மேற்கொள்வதால் பெரும் நிதி நெருக்கடி ஏற்பட வாய்ப்புண்டு.

இயற்கை அனர்த்தங்களால் நிலச்சரிவுகள் ஏற்படுவதை பெருமளவுக்கு தவிர்க்க முடியாது. ஆனால் மனித நடவடிக்கைகளால் நிலச்சரிவு ஏற்படாது இருப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வது அவசியமாகின்றது. அண்மைக் காலங்களில் இது சம்பந்தமாக ஆய்வினை மேற்கொள்பவர்கள் எக்காரணிகளால் இவ்வனர்த்தங்கள் ஏற்படுத்துவதற்கு காரணிகளாகவுள்ளன என்பதைக் கண்டறிந்து அப்பிரதேசங்களில் குறித்த காலங்களில் அவதானமாக நடந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகின்றனர். அத்துடன் அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் இத்தகைய அனர்த்தங்களால் எவ்வளவுக்கு குறைந்தளவிலான பாதிப்புடன் நிறுத்துவது என்பதில் அவ்வக்கிராமத்தவர்களின் பங்களிப்பு அதாவது கிராம மட்டத்திலான அமைப்புகள் உருவாக்குவதில் அக்கறை கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது.

## சூறாவளி

மாறன் மண்டலத்தில் தீவிர செங்குத்துச் சலனத்தை ஏற்படுத்த தேவையான அளவில் இயக்கவிசை காணப்படும் பொழுது தாழமுக்க மையத்திலிருந்து முன்னேறத் தொடங்கும் ஒரு அமைப்பே அயனச் சூறாவளியாகும். இது பிரதான இயற்கை நாசசக்தியாகும். பலமான காற்று, கனமான மழை, சமுத்திர அலைகளின் எழுச்சி வெள்ளப் பெருக்கு ஆகியவற்றின் விளைவாக பயிர் அழிவு, குளங்கள் அணைக்கட்டுக்கள் உடைப்பு, குடியிருப்புக்கள் நாசம், பொருளாதார அழிவுகள் உட்பட உயிர்ச் சேதங்களை ஏற்படுத்திவிடும் அனர்த்தமாக அமைந்துள்ளது.

உலகில் சராசரி வருடாந்தம் 30000 மக்களைக் பலி கொண்டு வருவதுடன் 2.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான உடைமைகள் அழிந்து போகின்றன. 70–500 கி. மீ. வேகமாக வீசும் காற்றின் வேகத்திற்கு ஏற்ப அனர்த்தங்களும் வேறுபடும். 1987 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸில் ஏறத்தாழ அரைப் பங்கு வீடுகள் சேதமடைந்ததுடன் 489,000 குடும்பங்களைப் பலத்த பாதிப்புக்குள்ளாக்கியன. அந்நாட்டில் தைபூனில் இருந்து காப்பாற்றக் கூடிய வீடுகள் அமைத்து வரினும் பெருமளவிற்கு வெற்றிபெற்றுள்ளதெனக் கூறமுடியாது 1970 இல் வங்காளவிரிகுடா பிரதேசங்களில் 300 000 மக்கள் சூறாவளி அனர்த்தத்தினால் இறந்துள்ளனர். 1 3 மில்லியன் மக்கள் வீடிழந்தனர். சிட்டாக்கொங் வளிமண்டலத் திணைக்களத்தால் ஏற்கனவே எச்சரிக்கப் பட்டிருந்த போதிலும் மக்கள் அதனை அசட்டை செய்திருந்தமையாலேயே பெருமளவில் உயிரிழப்பு ஏற்பட்டது என்பர். 1985 இல் அதே இடத்தில் ஏற்பட்ட சூறாவளியால் 10000, மக்களே உயிரிழந்தனர். அழிவுக்கான எச்சரிக்கையை கவனத்தில் கொண்டதனால் பலர் உயிர் தப்பினர்.

உலகில் வட அத்திலாந்திக் பகுதிகள், கிழக்கு பசுபிக் பகுதிகளில் உருவாகும் சுழல் காற்றுக்கு ஹரிக்கேன் எனவும், மேற்குப் பசுபிக்கில் தைபூன் எனவும் அவுஸ்திரேலியாவில் வில்லி வில்லி எனவும் வங்காளவிரிகுடாப் பகுதியில் சூறாவளி எனவும் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றன. இத்தகைய அனர்த்தத்தை ஏற்படுத்தக் கூடிய காற்றுக்கள் ஒரு சில மணி நேரத்திலிருந்து ஒரு சில நாட்களுக்குள் பேரழிவினை ஏற்படுத்தி விடுகின்றது. 1988 ஆம் ஆண்டு சீனாவில் வீசிய தைபூனால் 270 மில். டொலர் பெறுமதியான பொருட்சேதத்துடன் 10 மில்லியன் மக்கள் பாதிப்படைந்துள்ளதுடன் 135000 பேர் இடம் பெயர்ந்துள்ளனர் இதேபோலவே ஜமேக்காவில் 125 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள் அழிவுடன் 2 மில்லியன் மக்கள் பாதிப்படைந்து 800 000 மக்களை இடம்பெயர்ந்துள்ளதுடன் 45 மக்களின் உயிரைப் பலிவாங்கியது. இவ்வாறான உலகின் பல பாகங்களில் சுழல் காற்றுக்களின் அனர்த்தங்கள் மக்களின் வாழ்வுக்கு சவாலாக அமைந்துள்ளது.

சூறாவளியால் மட்டுமல்லாது அதன் விளைவாக கடல் அலைகளின் எழுச்சியினால் கடற்கரை சார்ந்த நிலப்பகுதிகளை கடல் நீரின் ஆதிக்கம் சிலசந்தர்ப்பங்களில் கொள்வதால் உயிர், உடைமை இழப்புக்கள் ஏற்பட வாய்ப்புண்டு. வங்காள விரிகுடாக் கடல்களில் எழுச்சி 4—6 மீற்றர்வரை உயர்கின்றது. உதாரணமாக 1977 இல் நிகழ்ந்த சூறாவளியால் ஆந்திரக்கரையோரப்பகுதிகளில் 4—5 மீற்றர் வரை நீர் எழுச்சி பெற்று இராட்சத அலைநிலப்பகுதிக்குள் நுழைந்ததால் 100 000 மக்களை பலிவாங்கியதுடன் மக்கள் குடியிருந்த தீவுகள் நீரில் மூழ்கியது.

வங்களாதேசத்தில் கிழக்காசிய பகுதிகளைப் போல, வருடம் தோறும் பெரியளவிலும் சிறியளவிலும் சூறாவளி தாக்குகின்றது. இலங்கையிலும் அடிக்கடி இவ்வனர்த்தங்களினால் காலத்துக்கு காலம் அழிவுகளை ஏற்படுத்தியுள்ள போதிலும் பேரழிவாக இருக்கவில்லை. எனினும் 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தினூடாக நாட்டினுள் புகுந்த சூறாவளி பெரியளவிலான அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளது. 1800 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையை எதிர்கொண்ட சூறாவளிகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறினும் 1848 ஆம் ஆண்டின் பின்னரே சூறாவளியின் பாதை தொடர்பான குறிப்புகள் கிடைக்கப் பெறுகின்றன.

1848, 1884, 1921, 1931, 1952, 1964, 1978 ஆம் ஆண்டுகளில் இவ்வனர்த்தங்கள் ஏற்பட்டன. 1978 ஆம் ஆண்டு நிகழ்ந்த சூறாவளி நவம்பர் 21 ஆம் திகதி தென்வங்காள விரிகுடாவில் காணப்பட்ட அமுக்க இறக்கம் புயலாக விருத்தியடைந்தது 23 ஆம் திகதி மட்டக்களப்பை தாக்கியது. மட்டக்களப்பில் இருந்து சூறாவளியின் தாக்கம் உள்நாடு செல்லச் செல்ல குறைவடைந்த போதிலும் முன்னெனப்போது

மில்லாத வகையில் பேரழிவை ஏற்படுத்தியது. இச்சூறாவளி 175 மைல் வேகத்தில் வீசியது எனக்கணிப்பிடப்பட்டுள்ளது, மக்கள் வீடுவாசல்களை இழந்தும் பொருள்பண்டங்களை இழந்தும் அரச உதவியினைப் பெற்றிருந்தனர் எனலாம்.

### கடலரிப்பு

உலகில் கடற்கரை சார்ந்த நாடுகளில் கடலரிப்பினால் கணிசமான மக்கள் தமது நிலங்களையும் பொருளாதார வாய்ப்புக்களையும் இழந்து வருகின்றனர். கடலரிப்பின் அளவு நாடுகளுக்கு நாடு வேறுபட்டதாகவிருக்கின்றது சில நாடுகளில் அல்லது பிரதேசங்களில் அரிப்புகளுக்குப் பதிலாக பெருக்கம் (Accretion) ஏற்பட்டு வருகின்றது. கடலரிப்பினை ஒரு புற்று நோய் என்று விமர்சிப்பர் வெள்ளம், வரட்சி, எரிமலை, புவிநடுக்கம், சூறாவளி போன்றன உடனடியாக மக்களையும் அவர்கள் தம் வாழ்வாதாரங்களையும் பாதித்து வருகின்றது. ஆனால் கடலரிப்பு படிப்படியாக சிறியளவில் ஏற்பட்டு வருவதாகும் வரலாற்றில் தமிழ்நாட்டில் காவிரிப்பூம்பட்டினத்தை கடல்கொண்டு போனது என அறிகின்றோம்.

இலங்கையில் பருவக்காற்றுக்களின் செயற்பாட்டினால் கடற்கரையோரங்கள் அரிக்கப்பட்டு வருகின்றன. தென்மேற்குப் பருவக்காற்று தனதுமிகவுயர் சக்தியை கற்பிட்டிக்கும் பொத்துவிலுக்குமிடையிலான பகுதிகளில் வழங்கிவருகின்றது வடகீழ்பருவக்காற்று வங்காள விரிகுடாவிலிருந்து வரையறுக்கப்பட்ட அளவில் வீசுகின்றது, இதனால் கடற்கரைப் பகுதிகளுக்கு குறைந்தளவு சக்தியையே வழங்குகின்றது. இதனது தாக்கத்தினை வடக்கு, கிழக்கு கடற்கரைகளில் பிரதானமாக உணரப்பட்டு வருகின்றது. பொதுவாக தென்மேல் பருவக்காற்றினாலேயே கடலரிப்பு ஏற்பட்டு உள்ளது. கற்பிட்டியிலிருந்து யால தேசிய பூங்கா வரையிலான 685 கி. மீ கடற்கரைப் பிராந்தியத்தில் ஏறத்தாழ 175000 – 285000 சதுர மீற்றர்கள் வரையிலான கடற்கரைநிலம் கடலரிப்பால் இழக்கப்படுகின்றன. அதேபோல களனி ஆற்றுவாயிலிருந்து தலவில (கல்பிட்டி) வரையிலான பிரதேசம் 137 கி மீ. தூரமுடையது. இப்பிரதேசத்தில் 145 000 சதுர மீற்றர்வரை வருடாந்தம் இழந்து வருவதைக் காணலாம்.

ஆறுகளினாலும் கடலலைகளினாலும் நிலம் பெருக்கமடைதல் இடையிடையே காணப்படுகின்ற போதிலும் ஒப்பீட்டு ரீதியில் கடலரிப்பே அதிகமாகவிருக்கின்றது எனக் கொள்ள வேண்டும். கடற்கரையோர அரிப்புக்கு இயற்கைச் செயன்முறையே பெருமளவிற்கு காரணமாயிருக்கிற போதிலும் மனித நடத்தைகளும் கணிசமான அளவிற்கு பங்கு வகிக்கின்றது எனலாம். அதாவது வெப்பவலய சதுப்புநிலபடர் தாவர வகையை அகற்றல் (Mongrouas) கடற்கரைத் தாவரங்களை வெட்டுதல், ஆற்றுப்படுக்கை, கரையோர வெளியிலிருந்து மணல், பவளப் பாறைகள் அகழ்வு, பொருத்தமற்ற இடங்களில் கடற்றொழில் அமைப்புக்களின் கட்டிடங்கள் கட்டுவதற்கான இடத்தெரிவு போன்ற மனித நடத்தைகளினால் நிலப்பகுதிகளை கடல் கொண்டு செல்லக் காரணங்களாயிருக்கின்றன. உதாரணமாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் மண்கும்பான் பிரதேசத்தில் கட்டிடத் தேவைகளுக்காக கடற்கரையிலிருந்து சுமார் 50 அடி தூரத்தில் கடல் மட்டத்திலும் கீழ் மணல் அகழப்பட்டதனால் எதிர்காலத்தில் அப்பகுதி கடலோடு சங்கமமாகின்ற நிலை ஏற்பட வாய்ப்புண்டு. மண்கும்பான் பள்ளிவாசலில் கடற்கரையிலிருந்து 50 யார் தூரத்தில் கடலில் செங்கட்டியினால் கட்டப்பட்ட கிணற்றுக்கட்டுகாணப்படுகின்றதை நோக்கும்போது ஏற்கனவே அப்பகுதி நிலமாகவிருந்திருக்க வேண்டும் எனத் தெரியவருகின்றது. காங்கேசன்துறைப் பகுதியில் சீமெந்துத் தொழிற்சாலைக்கு சுண்ணக்கல் அகழல் விரைவாக இடம்பெற்று வந்தமையால் கடற்கரையிலிருந்து 25 மீற்றருக்கு அப்பாலுள்ள நிலப்பகுதிகள் கடல் மட்டத்திற்கு இணையாகவோ அன்றில் கடல் மட்டத்திலும் தாழ்ந்து காணப்படுகின்றது. எனவே அப்பிரதேசங்களில் சுண்ணாக்கல்லினை அகழ்தலில் மிகுந்த அவதானம் இருத்தல் வேண்டும்.

### வெள்ளப் பெருக்கு

அதிகரித்த மழை வீழ்ச்சியாலோ அன்றில் கடல் வற்றுப்பெருக்கின் காரணமாகவோ புவிநடுக்கம், நிலச்சரிவினாலோ அணைக்கட்டுக்கள் உடைவதனாலோ வெள்ளப் பெருக்கு ஏற்படலாம், இதனைப் பொதுவாக அயன, அயனஅயல் நாடுகளில் காணமுடிகிறது. உலகில் 1980 — 1985 ஆம் ஆண்டுகளிடையில் 185 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 லட்சம் மக்கள் வீடுகளை இழந்துள்ளனர். ஏறத்தாழ 30,000 மக்கள் தம்முயிரைப் போக்கியுள்ளனர்.

வங்காள தேசத்தில் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு பல்வேறு அனர்த்தங்களை ஏற்படுத்தி வருகின்றன. 1954 ஆம் ஆண்டு தொட்டு சராசரி 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. கங்கை, பிரமபுத்திரா பள்ளத்தாக்கில் பெரியளவிலான வெள்ளப்பெருக்கு ஏற்படுவது சாதாரண நிகழ்வாகும், பல நாடுகளூடாக இவ்வாறுகள் பாய்ந்து ஓடி வருவதனால் இமாலயப் பிரதேசத்தில் வருடா வருடம் நிகழும் காடழிப்பினால் மண்ணரிப்பு ஏற்பட அவை எல்லாம், வங்காளதேச ஆற்றுக் கழிமுகப் பகுதிகளில் வண்டலாய் படிகின்றது. இதனால் ஒவ்வொரு வருடமும் 2.4 மில்லியன் தொன் மண் அடைசல்கள் வந்தடைகின்றன, இவற்றை உரிய முறையில் அகற்றப்படாததனாலேயே வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்பளிக்கின்றது. அத்துடன் இவ்வாறுகளூடாக வரும் நீரில் 10.0 சதவீதமானவையே வங்காளதேசத்தில் விழும் மழையிலிருந்து ஆகும். ஏனையவை இந்தியா, நேபாளம், திபெத், பூட்டான் நாடுகளிலிருந்து வருவதாகும்.

தொடர்ச்சியான வெள்ளப்பெருக்கு ஏற்படுவதனால் இந்நாட்டின் நீர்வள சபையானது வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதில் நிதி மற்றும் முகாமைத்துவம் போதாமையால் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றன. இங்கு சராசரி ஒரு நாளுக்கு 25 பேர்வரை உயிரழிந்தும், 12,000 பேர் வரை நோய்வாய்ப்பட்டும் வருகின்றனர். குறிப்பாக கடந்த 10 ஆண்டுகளில் 350,000 மக்கள் உயிரிழந்துள்ளனர். 1991 ஆம் ஆண்டு சீனாவில் 18 மாநிலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 1270 மக்கள் கொல்லப்பட்டதுடன் 48 மில்லியன் மக்கள் பல்வேறு வழிகளால் பாதிக்கப்பட்டனர். இதில் இரண்டு மாநிலங்களில் ஏற்பட்ட அழிவு 3000 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 200 மில்லியன் ஹெக்டேயர் விளை நிலம் பாதிக்கப்பட்டது.

இலங்கையில் காலத்துக்குக் காலம் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு அனர்த்தங்களை உருவாக்கியுள்ளது. நாட்டின் பொருளாதார மற்றும் சமூக வாழ்வினையும், உயிர் உடைமைகளையும் பெருமளவிற்கு பாதித்து வருகின்றது. 1891, 1957, 1963 ஆம் ஆண்டுகளில் பெரிய வெள்ளப் பெருக்கினை நாடு சந்தித்துள்ளது, பொதுவாக மத்திய மலைநாடு, தென்மேற்கு பிரதேசங்கள் இரண்டு பருவக்காலங்களிலும் பெருமளவிற்கு மழை கிடைக்கப்பெறுகின்றமையால் நீரின் கொள்ளளவு அதிகரிக்கப்படவே வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. மத்திய மலை நாட்டில் பாரிய அணைக்கட்டுக்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுமானால் வெள்ளப்பெருக்கினையும் மண்சரிவினையும் இப்போதுள்ளதையவிட அதிகமாகச் சந்திக்க வேண்டி வரும் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ( பின்னிணைப்பு IV, V )

இலங்கையில் அதிகளவு வெள்ளப்பெருக்கு களனிக்கங்கை, காலுகங்கை, மகாவலிகங்கை வடிநிலங்களிலேயே ஏற்படுகின்றன. சென்ற ஆண்டு வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணத்திலும் குறிப்பாக பொலனறுவை மாவட்டத்தில் கடும் மழை காரணமாகவும் மகாவலிகங்கை பெருக்கெடுத்ததன் விளைவாகவும் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. குறித்த சில பகுதிகளில் நீரானது 5 மீற்றர்வரை உயர்ந்து காணப்பட்டது. இவ்வனர்த்தத்தினால் இறப்புக்கள் குறைவான போதிலும் உடமைகள், கால் நடைகள், குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளதுடன் நீர் மாசடைதல், வடிகால் அமைப்புக்கள் தூர்ந்துபோதல், நோய்கள் பரவுதல் போன்ற பல விளைவுகளைச் சந்தித்தனர்.

## வரட்சி

வரலாற்றுக் காலங்களில் உலகில் அயன, அயனஅயல் பிரதேசங்களில் கடும் வரட்சி ஏற்பட்டு உயிர் இழப்புக்கள் உட்பட பலஅனர்த்தங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. மெசப்பத்தோமியாவில் கடும் வரட்சி ஏற்பட்டு பல்லாயிரக்கணக்கானவர்கள் உயிர் இழந்ததாக வரலாறு கூறுகின்றது. வரட்சி ஏற்படுமிடத்து சகல தேவைகளுக்குமான நீர்ப்பற்றாக்குறை உருவாகி, பொருளாதார ரீதியில் பலவீனமடையச் செய்வதுடன் குடிநீர் வசதியின்றி இறப்பினையோ அன்றில இடப்பெயர்வினையோ ஏற்படுத்துவதைக் காணலாம். உதாரணமாக ஆங்கிலேயர் ஆட்சிகாலத்தில் தமிழ் நாட்டில் வரட்சிக் காலங்களில் மக்கள் தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த மத்தியமலை நாட்டுப் பகுதிக்கு இடப்பெயர்வதையும் வரட்சிநீங்க மீண்டும் தமது பிரதேசங்களுக்கு மீண்டுள்ளதையும் அறியமுடிகிறது. வரலாற்றுக் காலங்களிலும் இத்தகைய நிகழ்வுகள் ஏற்பட்டதாக வரலாற்று அறிஞர்கள் தெரிவிக்கின்றனர். இலங்கையில் வரண்ட வலயத்தில் விவசாயத் தேவையினைத் கருத்திற் கொண்டு வரட்சியில் இருந்து விடுபட குளங்கள், கால்வாய்கள் நிர்மாணித்து வெற்றிகண்டனர்.

இலங்கையை ஈரவலயம் வரண்ட வலையம், அதிவரள்வலையம் என மூன்று கால நிலைப்பிரதேசங்களாக வகைப்படுத்தலாம். குறிப்பாக வரண்டவலயமும், அதிவரள் வலயமும் வரட்சியினால் பாதிக்கப்படும் பிரதேசங்களாகவுள்ளன. மக்களுக்கு அன்றாடம் தேவைப்படும் நீர் கிடைக்கப்பெறாமல் அவதிப்படுவதை அனுபவரீதியாக அறிந்துகொள்ள முடிகின்றது குறிப்பாக மன்னார் பிரதேசம், தீவுப்பகுதிகள், வடமராட்சியின் சிலபகுதிகள், அராலிப் பிரதேசங்களில் அதிகவரட்சியினாலும் மக்களின் பாவனை அதிகரித்திருப்பதனாலும் வருடத்தில் மார்ச் தொட்டு ஒக்டோபர் வரை நீர்ப்பிரச்சினையை மக்கள் எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக வடமராட்சியின் நிர்வாக எல்லைக்குள் அமையும் கப்பூது கிராமத்திலிருந்து தமது குடிநீர்த்தேவைக்காக மேற்குறித்த காலங்களில் 8 கிலோ மீற்றர் தூரம்சென்று ஆவரங்கால் மேற்குப் பகுதிகளில் நீரைப் பெற்று வருகின்றனர். வரண்ட வலயத்தில் முக்கியமான பிரச்சினையாக விவசாயத்தில் வரட்சித்தன்மை பற்றியதேயாகும். மேற்படி வரட்சியினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டிருப்பதை சகலரும் ஏற்றுக் கொள்வர்.

பொதுவாக இலங்கையில் குறிப்பாக வரண்ட பிரதேசங்களில் வரட்சி பற்றி திட்டமிடலாளர்கள், நிர்வாகிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் புலமை சார்ந்தோர் பெருமளவிற்கு அக்கறை கொண்டவர்களாக இருக்கவில்லை. மேற்குறிப்பிட்டவர்கள் வரட்சி நிலைமையை எவ்வாறு மாற்றி அமைத்து ஏழை விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

## புவிநடுக்கம்

உலகின் வெள்ளப்பெருக்குக்கு அடுத்தாக புவிநடுக்கத்தால் அனர்த்தங்கள் அதிகமாக விருப்பது

டன் உடமைகள் பெருமளவிற்கு சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் வருவதை அண்மைக்காலங்களில் பெரிதும் காணமுடிகிறது. பெரும்பாலான புவிநடுக்கங்கள் பசுபிக் வளையப் (Pacific Rim) பகுதிகளிலேயே அதிக அளவில் நாசத்தை உண்டுபண்ணியுள்ளது. கடந்த 10ஆண்டுகளில் சீனா, மெக்சிக்கோ, இந்தியா ஆகிய நாடுகளில் நிகழ்ந்த புவிநடுக்கங்கள் உயிர்களையும் உடமைகளையும் குறிப்பாக கட்டடங்கள், எண்ணெய்க் குழாய்கள், நீர்க் குழாய்கள், அணைக்கட்டுக்கள் போன்ற பலவற்றைத் தகர்த்து மக்கள் வாழமுடியாத பிரதேசமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மகாராஷ்திரா மானிலத்தின் சில்லாரி, ஒஸ்மணபாத், லாட்டுர் கிராமங்களில் 137 வினாடிகளில் நிகழ்ந்த புவிநடுக்கத்தினால் 10000 மக்களுக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டும் 30000 மக்கள் பாதிக்கப்பட்டும் உள்ளனர்.

இலங்கையைப் பொறுத்தவரை புவிநடுக்கம் என்று எதுவும் நிகழவில்லை என்ற போதிலும் நிகழ்வதற்கான சாத்தியக்கூறுகளைக் தட்டிக்கழிக்க முடியாது. மகராஷ்திரா புவிநடுக்கம் நிகழ்வதற்கு முன்னர் ஒரு வருடகாலமாகவே அங்கு சிறு நடுக்கங்கள் ஏற்பட்டதை அப்பிரதேசத்திலிருந்து தப்பிய மக்கள் கூறுகின்றனர். இத்தகைய சிறு நடுக்கங்கள் ஏற்படும் போது சிறுபிள்ளைகள் அந்த ஆட்டத்திற்கு ஏற்ப தாமும் நடையை மாற்றி கொள்ளத் தெரிந்திருந்தனர் என்கின்றனர்.

இலங்கையில் சென்ற ஆண்டு தீயத்தலாவப் பகுதியில் சிறு நடுக்கம் ஏற்பட்டுள்ளது தெரிந்த விடயமே. அதேவேளை திருகோணமலையிலிருந்து தீயத்தலாவ வரையுள்ள பகுதிகளில் வெந்நீர் ஊற்றுக்கள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அதுமட்டுமல்லாது இலங்கையும் டெக்கான் மேட்டு நிலமும் ஒரு காலத்தில் ஒன்றாகவிருந்து பிளவுபட்டதுடன் ஓரினப்பாறைகளைக் கொண்டிருக்கின்றன. எனவே இலங்கையில் புவிநடுக்கம் நிகழாதுவிடும் எனக் கூறுவதற்கில்லை.

## காடுகளும் இயற்கை அனர்த்தங்களும்

அயன, அயன அயல் பிரதேசங்களில் காலத்துக்கு காலம் காடுகளில் மனிதசெயற்பாடின்றி தீப்பற்றிக் கொள்கின்றன. இதனால் காடுகள் தீயில் எரிந்து நாசமாகின்றன. பெறுமதி மிக்க காடுகள் எரிந்து வீடுவதால் அவ்வவ் நாடுகள் பெறுமதி மிக்க மரங்கள், உயிரினங்களை இழக்க வேண்டியுள்ளது. கடந்த ஆண்டில் அவுஸ்திரேலியாவில் ஏற்பட்ட பெரும் காட்டுத் தீயினை அணைப்பதில் அரசு மிகவும் கஷ்டத்துக்குள்ளானது.

காடுகள் மனிதனது மிகப்பெறுமதி மிக்க இயற்கை வளமாகும். உணவு, விலங்குணவு அரிமரம், விலங்குகள் போன்ற முதற் பொருட்களையும் பசை, ரெசின், லேட்டெக்ஸ், சாயங்கள், மருந்துவகைகள் போன்ற பொருட்களையும் தருகின்றன. 1969ல் உலகில் வெட்டப்பட்ட மரங்களில் 42·0% விறகுத் தேவைக்காகவும் 37·0% கட்டிடப் பொருட்களுக்காகவும் 4·0% ஆதாரக் கம்பத்திற்காகவும் 11·0% கடதாசிக்கூழ் உற்பத்திக்காகவும் 6 0% ஏனைய தேவைகளுக்காகவும் வெட்டப்படுகின்றது.

இலங்கையில் 1900 ஆம் ஆண்டில் மொத்த நிலப்பரப்பில் 70·0% காடுகளாகவிருந்து 1953 இல் 44 0%வும் 1980 இல் 25·0%மாகவும் குறைவடைந்து சென்றுள்ளது. இவை பெரும்பாலும் மனித செயற்பாட்டினால் ஏற்பட்டதேயொழிய இயற்கை அனர்த்தங்களினால் ஏற்பட்டதல்ல. இருந்த போதிலும் காடுகள் அழிக்கப்படுவதனால் வேறு இயற்கை அனர்த்தங்கள் ஏற்பட வழி வகுக்கின்றன. அதாவது காடுகளுக்கே தனித்துவமான தாவர விலங்குத் தொகுதிகள் உள. அழகு, பொழுதுபோக்கு மட்டுமல்லாது இலகுவாகப் பயிரிடப்படும் பயிர்களைத் தாக்கும் நோய்களையும் கிருமிகளையும் எதிர்த்துப் போராடவேண்டி அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவசியம்.

அத்துடன் இன்று உலகில் பல காட்டு விலங்கினங்கள் அருகிச் செல்கின்றன. அதேபோல இலங்கையிலும் யானை, சிங்கம் போன்ற விலங்கினங்களும் பறவையினங்களும் காடுகளை அழிப்பதால் உணவுப் பற்றாக்குறை ஏற்படவே இறந்துவிடுகின்றன அத்துடன் செறிவான மழைவீழ்ச்சியினைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

## ஏனைய அனர்த்தங்கள்

எரிமலைக்குகை, மூடுபனி, உறைபனி, ஆலங்கட்டி மழை, பனிமழை, மின்னல் போன்ற அனர்த்தங்களினால் பல்வேறு நாடுகளில் மக்கள் உயிர், உடமைகள் இழப்பினைச் சந்தித்து வருகின்றனர். குறிப்பாக இடைவெப்ப வலய நாடுகளில் காலத்துக்குக் காலம் பனி உறைதல் செயற்பாட்டினால் உயிரிழப்புகள் உடமைகள் சேதமடைதல் ஏற்படுவதுடன் அன்றாட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் இலங்கை வெப்ப வலயத்தில் காணப்படுவதனால் பனி உறைதல், மூடுபனி, பனிமழை போன்றன ஏற்படுவதில்லை. மின்னலினால் மிகக் குறைவானவர்களே பாதிக்கப்படுகின்றனர்.

## முடிவுரை

இயற்கை அனர்த்தங்கள் மனிதனின் வாழ்வுக்கு சவாலாக அமைகின்றன அவர்கள் எதிர்பாராத வகையில் பாதிக்கப்படுகின்றனர். பல்லாண்டுகளாகப் படிப்படியாகச் சேகரித்து வைத்திருந்த பொருள்கள் மற்றும் உயிர்கள் குறுகிய காலத்தில் அழிக்கப்படுகின்றன. இயற்கை அனர்த்தங்களைக் கட்டுப்படுத்துவது சுலபமான காரியமல்ல. ஆனால் வளர்ந்துவரும் விஞ்ஞானம் அனர்த்த நிகழ்வுகளை முன்கூட்டியே அறிந்து கொள்ளக் கூடியளவிற்கு வளர்ச்சியைக் காணும் பட்சத்தில் பல்வேறு இழப்புக்களைக் குறைப்பதற்கு வாய்ப்புண்டு.

பின்னிணைப்பு I

# அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களின் மதிப்பீட்டு எண்ணிக்கை 1980 - 90

| அனர்த்தங்களின் வகை | ஆபிரிக்கா | வட தென் அமெரிக்கா | ஆசியா | ஐரோப்பா | அவுஸ்திரேலியா பசுபிக் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 1. வரட்சி | 134,618 | 30,297 | 787,237 | 0 | 71 | 295,223 |
| 2. வெள்ளம் | 7,124 | 22,682 | 493,766 | 839 | 227 | 524,638 |
| 3. காற்றுப்புயல்கள் | 3,600 | 4,906 | 139,594 | 871 | 1,415 | 150,336 |
| 4. புவிநடுக்கங்கள் | 828 | 1,969 | 23,793 | 1,808 | 12 | 28,410 |
| 5. நிலச்சரிவுகள் | 10 | 3,110 | 17 | 16 | 1 | 3,154 |
| 6. எரிமலைகள் | 9 | 58 | 528 | 0 | 25 | 620 |
| 7. காட்டுத்தீ | 26 | 216 | 354 | 3 | 13 | 612 |
| 8. புவிநடுக்க கடல் பெருக்குகள் | 0 | 0 | 1 | 0 | 0 | 1 |
| மொத்தம் | 146,215 | 63,238 | 1,445,290 | 3,537 | 1,764 | 1,660,044 |

**Source :** Centre for research on the epidemiology of disasters Brussels — 1992

முதலில் 'சேவை' பின்பு 'தன்னலம்' என்ற மனப் பான்மை அனைவரிடமும் ஏற்பட வேண்டும். அப்போது தான் நல்ல சமுதாயம் உருவாகும்.

— டாக்டர் எஸ்- ராதாகிருஸ்ணன் —

# 1986 ஆம் ஆண்டின்பின்

## நுவரேலியா, பதுளை மாவட்டத்தில் நிகழ்ந்த நிலச்சரிவுகள்

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | | நிலச்சரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **நுவரேலியா மாவட்டம்** | | |
| அம்பகமுவ | | 51 |
| ஹங்குரன்கெட | | 11 |
| கொத்மல | | 03 |
| நுவரெலியா | | 02 |
| வலப்பனை | | 12 |
| | மொத்தம் | 79 |
| **பதுளை மாவட்டம்** | | |
| பதுளை | | 11 |
| பண்டாரவெல | | 02 |
| எல்ல | | 02 |
| ஹல்டும்முல | | 05 |
| ஹாலிஎல | | 11 |
| கந்தகெடிய | | 01 |
| மிகஹகியுல | | 02 |
| ஹப்புத்தளை | | 03 |
| பசறை | | 06 |
| சொரனதோட்டை | | 06 |
| ஊவாபறணகம | | 10 |
| வெளிமடை | | 06 |
| மகியங்கனை | | — |
| றிடிமலியட்ட | | — |
| | மொத்தம் | 65 |

## நிலச்சரிவுகள் 1930 — 1985

| வருடம் | மாவட்டம் | பெரியது/சிறியது | இறப்புகள் | வீடுகள் இழப்பு |
|---|---|---|---|---|
| 1930 | கேகாலை | பெரியது | தெரியாது | தெரியாது |
| 1947 | கேகாலை | பெரியது | 40 | தெரியாது |
| 1947 | கேகாலை | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1952 | நுவரெலியா | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1957 | கேகாலை | பெரியது | 05 | 15 |
| 1964 | நுவரெலியா | சிறியது | 17 குடும்பங்கள் | பாதிக்கப்பட்டது |
| 1970 | நுவரெலியா | பெரியது | 19 | தெரியாது |
| 1973 | நுவரெலியா | பெரியது | 13 | தெரியாது |
| 1978 | கேகாலை | பெரியது | 03 | 10 |
| 1979 | இரத்தினபுரி | பெரியது | 05 | 10 |
| 1979 | களுத்துறை | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1981 | கேகாலை | பெரியது | 02 | 20 |
| 1981 | கேகாலை | பெரியது | தெரியாது | 30 |
| 1982 | கேகாலை | பெரியது | 02 | 03 |
| 1982 | கண்டி | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1982 | இரத்தினபுரி | பெரியது | 08 | 15 |
| 1982 | மாத்தளை | பெரியது | 23 | தெரியாது |
| 1983 | கேகாலை | சிறியது | தெரியாது | 15 |
| 1984 | களுத்துறை | பெரியது | 42 | தெரியாது |
| 1984 | பதுளை | சிறியது | தெரியாது | 02 |
| 1984 | பதுளை | சிறியது | தெரியாது | 21 |
| 1984 | இரத்தினபுரி | சிறியது | தெரியாது | 21 |
| 1984 | இரத்தினபுரி | சிறியது | 02 | 05 |
| 1984 | இரத்தினபுரி | (40 சிறிய நிலச்சரிவுகள் பதியப்பட்டுள்ளது) | | |
| 1985 | நுவரெலியா | சிறியது | 05 | தெரியாது |
| 1985 | நுவரெலியா | பெரியது | தெரியாது | 40 |
| 1985 | களுத்துறை | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1985 | கேகாலை | பெரியது | 10 | 03 |
| 1985 | கண்டி | சிறியது | தெரியாது | தெரியாது |
| 1985 | கண்டி | பெரியது | 04 | 10 |
| 1985 | இரத்தினபுரி | பெரியது | தெரியாது | 46 |

## இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெள்ளப் பெருக்கின் ஆகக் கூடிய எண்ணிக்கை

| ஆறுகள் | நிலையம் | நீர்வருடம் | ஆகக்கூடிய நீர் வெளியேற்றம் (கியூபிக் மீற்றரில்) |
|---|---|---|---|
| களுகங்கை | புட்டுப்பவுல | 1946 / 47 | 2547 |
| களனி கங்கை | கெலன்கோஸ் | 1966 / 67 | 2794 |
| கிரிந்தி ஓயா | லுணுகம்வெஹர | 1966 / 67 | 1354 |
| மஹா ஓயா | படல்கம | 1976 / 77 | 1982 |
| மகாவலிகங்கை | ரன்தெனிகல | 1955 / 56 | 1642 |
| மல்வத்து ஓயா | கப்பச்சி | 1948 / 49 | 2733 |
| மாணிக்க கங்கை | கதிர்காமம் | 1957 / 58 | 1365 |
| நில்வள கங்கை | போப்பகொட | 1943 / 44 | 1692 |
| குட ஓயா | குட ஓயா | 1978 / 79 | 1852 |
| யான் ஓயா | பங்குறுகஸ்வெவ | 1957 / 58 | 6031 |

Source: Navaratne, 1985

மண்பாண்டம் கீழே விழுந்து விட்டால் உடைந்து
நொறுங்கி விடும். ஆனால் செப்புக்குடம் கீழே விழுந்
தால் உடையாது. மேன் மக்கள் செப்புக்குடம் போன்
றவர்கள். கீழ் மக்கள் மண்பாண்டம் போன்றவர்கள்.

— பெரியோர் வாக்கு —

# Reminiscences ......

**Mrs. Selvadevi Devadas**
Old Student & Now Retired Teacher

Being one of the early students and one who has been a member of both the clerical and tutorial staff I feel, I have witnessed closely the growth of Vadamaradchy Hindu Girls' College — Our Alma mater.

I bow to her while she is celebrating her 50th year and I am proud to say that she is still very young in spirits. When I pause to reflect over her rapid growth and her achievements, I am reminded of the founder fathers and their benevolent acts, the committee of Management, the Principals, teachers and pupils of the past who have dedicated their services to her.

True to the fact that buildings do not make a school the standard of teaching and learning within the cadjan sheds, was remarkably high. The medium of instruction then was English and the teachers did their utmost to promote flnency in speech too.

With the increase in the number on roll, the need for finding accomodation was very urgent. Permanent buildings were put up — most of them being donations and a few financed by the Department of Education. In this context, I recall an incident that happened one afternoon in the sixties. A cadjan shed— a semi permanent structure that housed about five classes caught fire all of a sudden. It was believed that a crow had perched on the cadjan roof with a smouldering lunch wrapper from a nearby heap of burning rubbish. There was a big hue and cry and while all those who mustered round the spot were functioning as a fire brigade, the shed got completely burnt It should be said that the incident was a blessing in disguise. It evoked a spirit of compassion in the minds of the officials of the Department who later financed two permanent blocks of classrooms.

In course of time activities were given prior importance. They became part of the school curriculum with the provision of an Activity period every week. Religious Bajans were held during the first period every Friday. A concert was organised at the end of each term to promote Music, dancing and dramatic activities Special mention has to be made of late Miss. Charavanamuttu the then Principal who had thus revised the time table. Also she introduced practical subjects like Home Science, Needle work and Music to higher classes, Accordingly she divided the G. C. E. Classes into three divisions namely Science, Arts and Practical. Gardening too was taught in the lower Forms. Vegetable and Flower gardens were seen adorning the school premises.

Miss. Charavanamuttu started a fee levying vocational class registered under the Handicraft Co-operative Society to serve as a finishing school for school leavers. She felt the necessity of bringing the parents and teachers into close contact in in order to help the child to live — Education is said to be life itself With this end in view she formed a Mother's Union. The school Development Society has taken its place now. In short Miss. Charavanamuttu put into practice all the rich experience she had as an inspectress of schools. Under her the school marched ahead with pride and glory.

In those days, all parents wished that their children should join Vada Hindu. The unique charaeteristic of the school in not refusing admission to any, even to the very backward child, has to be apprceiated. Let me quote Miss. Charavanamuttu "I find it hard to say "No" to those seeking admission. Which sehool can I recommend to them? Can we deny a Hindu Girls' education in the only Hindu Girls' School in Vadamaradchy." The same policy has been adopted by the Principals who succeeded her. It should be said that Miss Charavanamuttu had beeen the moulder of her successors.

The school grew tremendously and was at the height of its glory when there was a sudden set back. At the end of the year 1960, the Government decided to take over the schools and the Managment opted to run it as a non-fee levying private school resulting in the displacement of the principal and staff.. Most of the children too left to join other schools. All that was built up in the past was undone. However, later the school was handed over to the Government in May 1962.

The return of the displaced Principal and staff marked the beginning of rehabilitation. The untiring efforts of Miss. Charavanamuttu—the displaced Principal and her successors have helped the school to regain her lost prestige.

It's a pity that the Department has selected a couple of schools where admission is done by entrance examinations. The cream is selected while the rest are left in the lurch. It is true that the said schools produce better results in the Public examinatione not to mention the failures.

Some parents have a craze to admit their childrcn in these schools little realising that Vadamaradchy Hindu Cirls' College too has produced outstanding results and that girls of our college have performed excellehtly well at District level competitions and even Island level competitions. They have completely forgotten the aims of our founders. It is worth mentioning that education does not mean mere passing of examinations. It is really the enrichment of Personality and building of character.

To conclude I am proud to mention that the school has kept up her standards, traditions and her stature amidst all the shelling and bombing. ❋

# சாரணிய இயக்கமும் இன்றைய மாணாக்கரும்

திரு. பாலகிருஷ்ணன் இரகுநாதன்,
அதிபர்,
யா / புலோலி மெதடிஸ்த மிஷன்
தமிழ்க் கலவன் பாடசாலை புலோலி.

இன்றைய மாணவர்களே நாளைய தலைமுறையினராவர். இவர்களே நாட்டின் முதுகெலும்பு போலவும், சில்லின் அச்சாணி போலவும் இருந்து எதிர்காலத்தில் நாட்டை ஆளப்போகின்றவர்கள் ஆவார். எனவே இவர்களுக்கு வழங்கப்படும் கல்வியின் தலையாய நோக்கமானது அவர்களை நற்பிரஜைகள் ஆக்குவதேயாகும். கல்வி என்பது பாடவிதான செயற்பாடுகளோடு, இணைபாடவிதான செயற்பாடுகளையும் உள்ளடக்கியதொன்றாகும். இணைபாடவிதான செயற்பாட்டிலே சாரணியமும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்றதெனின் அது மிகையாகாது. இவ்வகையில் இன்றைய மாணாக்கர்களுக்கு "சாரணியம்" இன்றியமையாததொன்றாகவே இருக்கின்றது.

சாரணியம் என்பது கல்வி தொடர்பான ஓர் இயக்கம் ஆகும். இளம்சிறார்களைத் தான் வாழும் சமூகத்திற்கு உபயோகம் உள்ளவர்களாகவும், தனது சமயத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளை எந்நேரத்திலும் செய்ய ஆயத்தமாய் இருக்கச் செய்வதும் போன்ற இன்னோரன்ன முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதே சாரணியம். சிறார்களைச் சிறந்த நற்பிரஜைகள் ஆக்குவது என்ற சாரணியகத்தின் குறிக்கோள், கல்வியின் நோக்கத்துடன் ஒத்தியைபுடையதாகக் காணப்படுவதில் இருந்து கல்வியும் சாரணியமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து இருப்பதைக் காணக்கூடியதாய் உள்ளது.

கல்வியானது மாணாக்கரின் உடல், உள, சமூக, மனவெழுச்சி வளர்ச்சிகளை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடியதாய் அமைதல் வேண்டும் என்பது கல்வியலாளர்களின் கருத்தாகும். இவ்வகையிலேயே சாரணிய இயக்கத்தின் தந்தையாகி பேடன்பவல் பிரபுவும் அதனை அமைத்துள்ளார். சிறார்களின் வயதுக்கு ஏற்ப அவர்களை குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம், குமரப் பருவம் என வகைப் படுத்துகின்றோம். அவர்களது பருவங்களுக்கு ஏற்ற உடல், உள, மனவெழுச்சி, சமூக முதிர்ச்சிக்கு ஏற்ப சாரணியமும் குருளைச் சாரணியர், கனிஷ்ட சாரணியர், சிரேஷ்ட சாரணியர், திரிசாரணியர் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இன்றைய மாணாக்கர் காலத்தின் கோலத்திற்கு ஏற்பவும், விஞ்ஞான நாகரிக வளர்ச்சிக்கு ஏற்பவும் வேறுபட்ட குண இயல்புகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களது சகபாடி வெகுசனத் தொடர்பு சாதனங்களும் அவர்களது குழுக்களும் ஆளுமையைத் தீர்மானிப்பதில் பிரதான அங்கம் வகிக்கின்றன. எனவே இவர்களைச் சமுதாயத்திற்கு ஏற்றவர்களாகவும், கூடி வாழும் இயல்பினர்கள் உடையவர்களாகவும் இச்சாரணியத்தின் மூலம் ஆக்க முடியும்.

ஆரம்பக் கல்வியிலிருந்து, பல்கலைக்கழகக் கல்வி வரையும் அவர்களது பாடவிதான செயற்பாட்டுடன் இணைபாடவிதானச் செயற்பாடாக சாரணியத்தைச் சேர்க்க முடியும். விளையாட்டே சிறுவர்களின் கற்றல் முறையாகும். இவ்வகையில் 6 தொடக்கம் 11 வயது வரையிலான ஆரம்பக்கல்வி மாணாக்கர் விளையாட்டில் ஆர்வம் உடையோராய் உள்ளனர். மொன்றி சூரி முறை, கிண்டர் காடின் முறை என்பன இவர்களுக்கு ஏற்ற கல்வி முறைகளே ஆகும். இவர்கள் விளையாட்டில் விருப்பம் உடையவர்களாகவும், கதை, பாட்டு, நடனம் என்பனவற்றில் ஆர்வம் உள்ளவர்களாகவும், கைவினை, நடிப்பு எதையும் அறிதல் போன்றவற்றில் ஆர்வம் உள்ளவர்களாகவும் இருப்பர். இவர்களுக்கு குருளைச் சாரணியத்தில் பயிற்சி கொடுப்பதன்மூலம் மேற்கூறப்பட்ட இவர்களது ஆற்றல்களை நல்வழிப்படுத்தமுடியும்.

11 — 15 வயதினரான இடைநிலைக் கல்வி மாணாக்கர் குழுச்செயற்பாடு, ஆக்க வேலையில் விருப்பு தலைமை தாங்குதல், தலைவரைப்பின்பற்றுதல் போன்ற பண்புடையோராய்க் காணப்படுவர். இவர்களுக்குக் கனிஸ்ட சாரணியப் பயிற்சி கொடுப்

பதன்மூலம் மனிதன் ஓர் ''சமூகப் பிராணி'' அவனால் தனித்து வாழ முடியாது என்ற சமூகமானுடவியலாளர்களின் கருத்துப்படி அவனை இன, மத, மொழி பேதமின்றி யாவரும் ஓர் தாய் மக்கள் என்ற அடிப்படையில் கூடிவாழும் பண்பினை உருவாக்க முடியும்.

15 — 18 வயதினரான உயர்நிலைக் கல்வி கற்போர் குமரப்பருவத்தில் இருப்பர். இவர்கள் சுயநலம் தனித்துவம், தலைமை உணர்ச்சி, பாலுணர்ச்சி, பொறுப்புணர்ச்சி என்பன மிகுதியாக உடையவர்களாகவும், தீரச் செயல் புரிவதில் விருப்புடையவர்களாகவும் இருப்பார்கள். ''மக்டுகல்'' எனும் உளவியலாளர் குறிப்பிட்டது போன்று மனிதனிடத்திலே காணப்படும் இத்தகைய இயல்பூக்கங்களை நன்நெறிப்படுத்துவதில் சாரணிய இயக்கம் பிரதான இடம் வகிக்கின்றது. சாரணிய விதிகள், பயிற்சிகள சாரணியப் பாசறை என்பன அவர்களின் (குமரப்பருவத்தினரின்) ஊக்கங்களைச் சிறந்த முறையில் வழிப்படுத்துகின்றன. எனவே இவர்களுக்குரிய சிரேஷ்ட சாரணியப் பயிற்சி இவ்வயதினரின் தேவைகளைச் சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்றது.

18 - 24 வயதை உடைய பருவத்தினருக்குரியது திரிசாரணியம் ஆகும். இவர்கள் சமுதாயத்திலிருந்து மதிப்பையும் கணிப்பையும் எதிர்பார்ப்பவர்களாகவும் குறிப்பிட்ட இலட்சியத்தை அல்லது குறிக்கோளை அடையத் துடிப்பவர்களாகவும் இருப்பர்' எனவே ஆரம்பத்திலிருந்தே சாரணியத்திற்குரிய பயிற்சிகளைப் பெற்று இறுதியில் திரிசாரணம் ஆகுவதன்மூலம் அவன் எதிர்காலத்தில் சிறந்த முழுமனிதன் ஆவதற்குரிய சகல அடிப்படைத்திறன்களையும் பெற்றுக் கொள்கின்றான்.

''பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானினும் நனிசிறந்தனவே'' என்பது வள்ளுவன் வாக்கு ஆனால் தற்கால இளைஞர்கள் ''அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை'' "திரை கடலோடியும் திரவியம் தேடு'' போன்ற முதுமொழிகளுக்கு அமைய நாம் பிறந்து வளர்ந்து கல்விகற்ற நாட்டுக்குச் சேவை செய்யாது வெளிநாடு தேடிச் செல்கின்றனர். ஆனால் சாரணியப் பயிற்சி பெறுவதன்மூலம் அவர்கள் சமய, சமூக, தேசப்பற்று உடையவர்கள் ஆக்கப்படுவதுடன் ஏனையோருக்கு எந்நேரத்திலும் சேவை செய்வதற்குத் தயாராகவும் இருக்கின்றனர். எனவே சாரணியம் தேசப்பற்றையும் நாட்டுப்பற்றையும் வளர்க்கும் தூண்டுகோலாகவும் அமைகின்றது.

சாரணிய நிகழ்ச்சி நிரலிலே அணிப்பரிசோதனை, இறைவணக்கம், கொடி வணக்கம், தேசியகீதம், கொடி இறக்கம் போன்ற நிகழ்வுகள் உள்ளடக்கப்படுவதால் சிறார்கள் சிறுவயதிலிருந்தே தலைமைத்துவம் தாங்கி வைபவம் ஒன்றை நடாத்துதல், தலைமைக்குக் கீழ்ப்படிதல், தேசியவிழா ஒன்றை நடாத்துதல் போன்ற பல அனுபவங்களை பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் பாசறை வாழ்க்கையில் ஈடுபடுவதால் கூட்டுச் செயற்பாடுகள் மூலம் எதையும் சாதிக்கக்கூடிய தகைமையைப் பெற்றுக்கொள்கின்றனர்.

சிறார்களுக்கு இடையே தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இவை வயது, பால் என்பவற்றிற்கு ஏற்ப வேறுபாடு காணப்படலாம். எனவே தான் ஒரு ஆசிரியனுக்கு மாணவனை அறி உன்னை அறி பாடத்தை அறி என்று கூறப்படுகின்றது ''ஜோனுக்கு இலத்தீன் கற்பிக்கும் ஆசிரியர்'' இலத்தீனைவிட ஜேனைப்பற்றியே அதிகம் அறிந்திருக்க வேண்டும். அவர்களுக்கு ஏற்றவாறு பொதுவான செயற்றிட்டங்கள் வகுக்கப்படல் அவசியம் அவ்வாறாயின் மட்டுமே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் வெற்றிகரமானதொன்றாக அமைய முடியும்.

சிறார்களின் குணவியல்புகள் வீட்டுச்சூழல் (பெற்றோர்) பொருளாதாரநிலை, பரம்பரை, கல்வி வசதி, பொழுதுபோக்கு வசதி போன்ற பல்வேறு காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. இவர்கள் சாரணிய இயக்கத்தில் அங்கத்தவர்கள் ஆவதன்மூலம் சகிப்புத்தன்மை, பரஸ்பர உதவி, எதையும் தாங்கும் இதயம், விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு போன்ற இன்னோரன்ன பண்புகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதனால் குற்றவாளிகளாகக் கருதப்படுவோர் குறைவடைகின்றனர், யாவருடனும் கூட்டுறவு அடிப்படையில் ஒன்று சேர்வதனால் தகாத பண்புகள் சில தவிர்க்கப்பட்டு சிறந்த ஆளுமைப் பண்புக் கூறுகள் விருத்தி அடைகின்றன.

தற்கால சமூகத்திலே வளர்முக நாடுகளைப் பொறுத்தவரையில் சிக்கனம் என்பது மிகமிக முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக உள்ளது. சாரணர் விதியிலே ''சாரணன் சிக்கனமானவன்'' எனும் வாசகமும் ஒன்றாகும் இதனால் பிள்ளைகள் சிறுவயதிலேயே குறைந்த செலவில் நிறைவும திருப்தியும் அடைபவர்கள் ஆகின்றனர். எத்தகைய பின்தங்கிய பொருளாதார நிலையிலும் வறுமையிற் செம்மையாக வாழப்பயிற்றப்படுகின்றனர். இவ்வாறு ஒவ்வொருவரும் வாழ்வதால் அந்நாடு பொருளாதாரத்தில் சுபீட்சம் உள்ள நாடாகத் திகழும்.

சமயம் என்பது மக்களை இவ்வாறு வாழ வேண்டும் என நெறிப்படுத்தும் சாதனமாகும். சாரணன் ஒருவன் ஏதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்தவனாகவும் இருக்கவேண்டியது அவசியம். இதனால் அவன் இறைபக்தி உடையவனாக வளர்வதுடன் பஞ்சமாபாதகங்களைத் தவிர்த்தும் ஒழுகுகிறான். இவை ஒரு நாட்டிலே தவிர்க்கப்படுமாயின் அந்நாட்டிலே நேர்மை, அகிம்சை என்பன சிறந்தோங்கி வளரும். சாரணர்கள் ஏனையோருக்கு எடுத்துக் காட்டுபவர்களாக வாழ்வதால் இடித்துரைக்காமலே மற்றையவர்கள் விரைவில் அவர்களாய் பின்பற்றுவர்.

மனிதனைப் பொறுத்தவரையில் அவனுக்குத் தான் வாழும் சூழலோடு பொருந்தி வாழக்கூடியதாக இருத்தல் அவசியம். அத்துடன் சூழலைத் தனது தேவைக்கேற்ப மேம்பட மாற்றி அமைக்கும் தன்மையும் அவனுக்கு இருத்தல் அவசியம். இவ்வகையில் வாழ்க்கையானது ஒரு சூழு எச்சமயத்தில் உள்ளதோ அச்சமூகத்தோடு ஒன்றியதாக இருக்க வேண்டும் எங்கு சாரணியம் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதை அச்சமூகத்தின் வளர்ச்சியைக் கொண்டு அறியக்கூடியதாக இருத்தல் அவசியம்.

சுருங்கக் கூறின் மானிட மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவு பங்கினைச் சாரணிய இயக்கம் வகிக்கின்றது எனலாம். எனவே சகலபாடசாலைகளினதும் இணைபாடவிதனச் செயல்பாட்டில் 'சாரணியம் சேர்க்கப்படல் வேண்டும். ஆசிரியர்கள் யாவரும் இதில் அங்கத்துவம் வகித்து முன்னோடிகளாகத் திகழ்ந்து மாணாக்கரை ஊக்குவிக்கவேண்டும். எந் நாட்டிற்கும் கொள்கைக்கும் எல்லோருக்கும் எப் பொழுதும் உயர்சேவை செய்யலென்று என்னை அர்ப்பணிக்கிறேன்'' என மாணக்கர் யாவரும் உறுதி உரை எடுத்தல் வேண்டும். அக்கால மன்னர் ''குளம் தொட்டு வளம் பெருக்கியது'' போன்று இக்காலத்தின் தேவைக்கு சாரணியத்தைத் தேசியமட்டத்தின் பரவலாக்கிக் கல்வி மூலம் பெறும் பயனை உச்சப் பயன் உள்ளதாக்கி மானுடப் பிறப்பின் நோக்கத்தை இனிதே நிறைவேற்றி உய்தல் மூலம் சாரணியம் உலகிற்கு ஓர்விடிவெள்ளியாகத் திகழும் என்பது ''வெள்ளிடை மலைபோலத்'' தெட்டத்தெளிவாகத் புலனாகின்றது.

கற்களாலும் சுண்ணாம்பாலும் கட்டப்பட்ட சிறைகளைக் காட்டிலும் கொடுமையான சிறை மனிதனின் சுய மரியாதையை மறுத்து இழிவு படுத்தி வைத்திருக்கும் மனச்சிறை.

— ரவீந்திரநாத்தாகூர் —



மாணவ தலைவர்கள்



1983ல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களமும் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் சேர்ந்து நடத்திய மகாவலி அறிவும் தெரிவும் போட்டியில் தெரிவாகி மகாவலி சுற்றுலா சென்ற மாணவியர்



1977ம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற அகில இலங்கை வலைப்பந்தாட்டப்போட்டியில் முதலிடம் பெற்ற மாணவியர்

# DECENTRALISATION OF ADMINISTRATION AS A PRELUDE TO NATIONAL UNITY

**M. Nadarajasundaram** M. A.
Head, Management Studies
University of Jaffna

1. Sri Lanka - Communally Plural Nation

## 1. Background

Sri Lanka gained independence nearly 40 years ago. It has faced the hardships and strains of its plural society. The country experienced a painfully slow economic growth as against a growing population with rising expectations, admist summering nationalism and tensions between divisive political and social elites. In short, Sri Lanka has inherently all the difficulties of a developing and communally plural nation. The country's population lived in harmony withou communal awareness and hatred in early days National unity is an important and a key element as well in order to achieve steady economic growth Conversely communal disharmony will lead to the inevitable collapse of the economy. Therefore its was of paramount importance for the successive governments to have laid a strong foundation to protect and foster national unity. This could have been ensured only through power sharing at the ship of state. In what form and to what extent power sharing could be provided for in the political structure of the country is the most vexed question in the country today.

## 2. Ethnic - Composition

Sri Lanka had an estimated population of 15.6 million people in 1988, comprising 74.0% Sinhalese, 12.6% Sri Lankan Tamils; 7.4% Sri Lankan Moors, and 5.6% Tamils of Indian origin and 0.26% Burghers. The Colombo district has 11.43% of the total population of which 77.80% are Sinhalese, 9.0% Tamils and 8.0% Muslims. Kandy district 7.5% of which 75.0% are Sinhalese, 10% Muslims, 9% Indian Tamils and 4% Ceylon Tamils. Trincomalee district 1.85% of which the percentages of the Sinhalese, Muslims and Sri Lankan Tamils are somewhat equal. Batticaloa district 2.23% of which 70.8% are Sri Lankan Tamils, 23.9% Muslims and 3.0% Sinhalese Matara District 4.33% of which 94.5% are Sinhalese, 2.25% Muslims and 2.16% Indian Tamils. These shows that the communal distribution pattern vary from district to district.

In all southern districts more than 90.0% are Sinhalese where as in the districts in the North and Batticaloa district in the East the Sri Lankan Tamils accounted for more than 75.0%, Heavy concentration of Muslims is found in Amparai district with 42.0% along with Sinhalese 37.65% and Indian Tamils 20.14%. Further, in Trincomalee, Mannar and Batticaloa districts the Muslims average about 25.0% of the population in each district. The Indian Tamils comprise 42.0% of the population in Nuwara Eliya district. Apart from this, the Indian Tamils are scattered all over the Island. The average density of population is 255 person per square kilometers as estimated in 1988 The density is higher towards the southern

sector and lower towards the central and dry zone. A relatively high degree of density of population is also observed in the district of Jaffna located in the northern most part of the Island.

## 3. Ethno - Regionalism

The communal pluralism can also be analysed in the pattern of ethno regionalism in Sri Lanka The basis for ethno regionalism is incidence spatial contiguity of homogeneous ethnic clusters, i. e. a continuity of a particular race in that region. Sri Lanka. has 25 admi nistrative districts within 9 provinces. The pattern of population destribution in the districts can be taken for detail analysis by dividing the ethnic population into clusters. If more than 50.0 % of the population of a single ethnic group lives in a district it can be a majority ethnic population cluster. Likewise we can identify five levels of majority ethnic population clusters ranging from 50.0 % — 90.0 %. Thus the clustering is measured in terms of the numerical dominance of one ethnic group within a selected group. If we take the 90 % limit Sinhalese dominant eight districts, while Sri Lankan Tamils in one District. At 80 % — 90 % range the Sinhalese command four districts i. e. Puttalam, Kegalle, Kalutara and Ratnapura, while there are no Sri Lankan Tamil dominant districts in this category. In the third category of 70% — 80% two districts namely Mullaitivu and Batticaloa go to Sri Lankan Tamils and three districts namely Colombo, Matale and Kandy go to the Sinhalese.

At the fourth level 60% — 70% there is one Sinhalese domi ant in Badulla district and one T a m i l dominant district i. e. Vavunia. There is one Sri Lankan Tamil dominant District namely Mannar and no Sinhalese dominant district in the last category of 50% — 60%.

Generally 95.7% of the total Sinhalese population is geographically concentrated in the two top levels of ethnic clusters. They are dominant in sixteen of the twenty five districts of Sri Lanka. The north and eastern provinces together hold 72.6% of the total Sri Lanka Tamil population. The four districts of the northern province and Batticaloa districts in the eastern province account for 63.9% of the total Sri Lanka Tamil population 27.4 % of the Tamils lives outside the north and east. Neither the Moors nor Indian Tamils have sufficiently large population concentration exeeeding 50 % of the total population in any specific district. Hence there are no major ethnic clusters o either the Moors or Indian Tamils. 30.0% of the Moors lives in the eastern province while the rest are scattered throughout the Island. The Indian Tamils who were orginally brough to the Island by the British colonial rulers' to work as labourers in the plantations are concentrated mainly in the central highlands of Sri Lanka.

From the above analysis it is quiet evident the major ethnic clusters of the Sinhalese have spatial contiguity. The Sri Lankan Tamil dominant clusters from a contineous zone among the four districts of northern province. However, Batticaloa district in the Eastern province which is the other Sri Lankan Tamil dominant district does not have a contiguity with the northern provinces It is cut off from the north the Trinoomalee district in the eastern province. The districts of Trincomalee and Amparai are populated almost equally by the Sinhalese, Sri Lankan Tamils and Muslims. It is quiet evident that the country has different races with their respective cultures aud religions. It is also apparent that the Sinhalese are in majority among the other races and spread out in all parts of the Island. That these races must live in harmony is a since of nation to achieve speedy progress in the development of the economy in order to preserve both unity and development in the country all races should come under one indentity as Sri Lankans, like in India, they call themseives Indians.

## 4. National Unity and Territorial Integrity

In a plural society like in Sri Lanka Unity among the different races is important for the country's economic development. National unity will enhance the country's image in the rest of the world If amity can prevail in a country the chances of getting more and more help from richer countries will improve. But unity among races cannot be ensured by laws and constitution alone. Our own history since independence is the best proof of this. Despite 30 years of highly centralised unitary government we are today in the midst of a civil war and the nation is divided and disintergrating. Therefore it is necessary to develop constitute conventions political practices and institutional arrangements that will help and foster national unity. The centralised political and economic approach resulted is not only mal-administration but also unequal and lop-sided development within the country as resource development was not equitable. Therefore, frustration set in, resulting in a serious racial crises within the same society where common golas for development leading to interatial unity were disrupted. The Government has recognised this fact and taking speedy action in order to foster national unity and territorial integrity.

The importance of national unity is now gaining ground in the other parts of the world too. The countries that were divided during the World War II are trying to unite and come under one Government Germany has already moved towards unity and Korea and Vietnam are at the threshold of the unification process. There are clear indications that division and disunity will never help to achieve national goals. National unity will give more strength more power and more moral support to the legislators. If we are strong and united the other countries will not unnecessarily will get involved in the internal affairs of the country. The disunity among races will help other countries to get involved for their own benefits. This can be stopped only by strengthening ourselves and bring all the races under one umbrella. The national unity could be brought in, if we all think, as mentioned earlier, we are Sri Lankans. To quote .......... A people is always a community with narrow boundaries, But nation as a rule encompasses a whole array of different peoples and groups of peoples who have by more or less violent means been pressed into the frame of a common state.

( Rudolph Rocker in " Nationalism and Culture " 1937 )

## 2. Power Sharing : Delegation, Devolution and Autonomy

### 2. I. Historical Background

The classical models of despotism contained a measure of power sharing Therefore, the practice of power sharing in political systems is by no means a recent phenomenon. In Sri Lanka there are two arguments put forward to explain the nature of power sharing in early days. Dr. Michael Roberts has put forward the argument that power both political, social and economic inspired by the Asoken ideal was highly centralised and that even in practice there was very little power sharing until the reforms of the 20 th Century by British. However, Prof. K. M de Silva argues otherway that unification, centralisation, lack of power sharing in practice is only recent phenomenon in the perspective of Sri Lankan History and is really a prudent of British Administrative Policy.

Power sharing as a democratic right is in inherent aspect of political democracy. This is of recent origin. It was historically linked to the on going debate, during post world war II on (a) the right of self-determination

of peoples (b) general ideas of '' people's participation '' and '' grass root democracy '' which one both part of '' development studies lingo '' of the third world. Therefore, power sharing was no longer regarded as only a convenient administrative tool dictated by the realities of power, but was increasingly seen as a collective right of certain groups. The power sharing in modern democracy should come through the Constitutions of the respective countries.

The Sri Lankan Constitution is shown as power sharing within a unitary state. The sovereign power is absolute in one entity, but this power is shared among political institutions. The institutions among which this power is shared as specifically stated in the Constitution are :-

a) The Presidency — Its base of support being '' the people '' as a Collective Constituency.

b) The Legislative — Its base of support being '' the people '' as different Constituencies.

c) The Judiciary — Its base being the written text of the Constitution.

எமது மன்றம் மாதம் ஒருமுறை புதன் கிழமைகளில் கூட்டப்பட்டு மனைப்பொருளியல் ஆசிரியர்களால் கருத்தரங்குகளும், செயல்முறை வகுப்புகளும் நடாத்தப்படுகின்றன அதில் மாணவர்கள் புதிய விடயங்களை அறிந்து தாமும் பங்களிப்புச் செய்து தமது விசேட ஆற்றல்களை வெளிப்படுத்தக்கூடியதாக உள்ளது பாடசாலை மட்டத்திலான தையல் போட்டிகள் ஆண்டு 3 இலிருந்து ஆண்டு 8 வரை வகுப்பு ரீதியாக நடைபெற்று வருகிறது. அத்துடன் சிறந்த மனையாள் போட்டியும் ஆண்டு 10 ஆண்டு 11 மாணவர்களுக்கு வகுப்பு ரீதியாக நடைபெறுகிறது. கொத்தணி மட்டத்தில் நடைபெற்ற தையல் போட்டிகள் சிறந்த மனையாள் போட்டிகளில் எமது கல்லூரி மாணவர்கள் கூடிய புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பெற்றனர். கோட்ட மட்டத்திலும் பரிசில்களைப் பெற்று மாவட்ட மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டனர் சென்ற வருட இறுதியில் மாவட்டத்திலும் இரு மாணவிகள் பரிசில்களைப் பெற்றனர். பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசளிக்கும் வைபவம் 10-11-1993 அன்று வெகு விமரிசையாக நடைபெற்றது

எமது பாடசாலையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகள். பிரிவுபசார வைபவங்கள் ஏனைய விழாக்களின் போதும் எமது மன்ற உறுப்பினர்கள் மண்டப அலங்காரம். விருந்தினரை வரவேற்றல், உபசரித்தல் போன்ற விடயங்களில் பெரும்பங்கு ஆற்றுகின்றனர்.

# விஞ்ஞான மன்ற அறிக்கை

செல்வி. மேனகா. சின்னையா
செயலாளர்

| | | |
|---|---|---|
| காப்பாளர் | :- | திருமதி லோ. குமாரசுவாமி (அதிபர்) |
| உப காப்பாளர் | :- | திருமதி க. மகேந்திரன் |
| மன்ற ஆலோசகர்கள் | :- | திருமதி சு. முகுந்தன் |
| | | திருமதி ச. சிவப்பிரகாசம் |
| தலைவர் | :- | செல்வி வாணி பாலேந்திரன் |
| செயலாளர் | :- | செல்வி மேனகா சின்னையா |

எமது கல்லூரி பொன் விழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் நான்கு தசாப்தங்களை நிறைவு செய்துள்ள எமது மன்ற அறிக்கையைச் சமாப்பிப்பதில் பெருமையும் மகிழ்ச்சியுமடைகின்றேன்.

எமது மன்றம் 1954ம் ஆண்டு அமரர் செல்வி. சரவணமுத்து அதிபராகவும் திருமதி க. இரத்தினசாமி சிரேஷ்டவிஞ்ஞான ஆசிரியராகவும் விளங்கிய காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்விருவரும் அளித்த ஊக்கத்தினாலும் ஆதரவினாலும் எம் மன்றம் குழந்தைவளரும் வேகத்தில் வளர்ந்தது

ஐந்துவருடங்களை பெருமைப் படத்தக்க வகையில் நிறைவு செய்த எமதுமன்றம் 1960 ஆண்டு தனியார் பாடசாலையாக இயங்கிய பொழுது பெரும் தொகையான மாணவர்கள் வேறு பாடசாலைக்குச் சென்றதால் மந்த நிலையை அடைந்து இருப்பினும் பாடசாலையை அரசாங்கம் பெறுப்பேற்றதும் திரும்பவும் மன்றம் முழுமுச்சுடன் செயற்படத் தொடங்கியது.

வருடந்தோறும் கல்விச்சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளல், மன்றத்தின் சிறப்பம்சமாக இருந்து வந்தது. நுவரெலியா, பேராதனைப் பூங்கா, தெகிவளை மிருகக்காட்சிச்சாலை போன்ற இடங்களையெல்லாம் மன்றத்தினர் சென்று பார்த்து பயனடைந்தனர். மன்றத்தினர் அகில இலங்கைச் சுற்றுலாக்களை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது. 1983ம் ஆண்டிற்கு பின் சுற்றுலாக்கள் குடா நாட்டிற்குள் மட்டுப்படுத்தப்பட்டது இதற்குப்பின் சுற்றுலா நடைபெறும் நிலை இல்லாதிருந்தது.

குடாநாட்டில் நடைபெற்ற கண்காட்சிகளில் எம்மன்றத்தினர் வெகு ஆர்வத்துடன் பங்குபற்றினர். 1983ல் வடமராட்சி கால்நடை வளப்போர் சங்கம் கால்நடை அபிவிருத்தி திணைக்களத்துடன் நெல்லியடி மகாவித்தியா

யாலத்தில் நடாத்திய கால்நடை, விவசாய விஞ்ஞான, தொழில் நுட்ப, கண் காட்சியில் எம்மன்றத்தினர் விலங்கியலிலும், இரசாயனத்திலும் முதலிடங்களைப் பெற்று ரொக்கப் பரிசையும் சான்றிதழ்களையும் பெற்றனர்.

தொண்டமனாறு வெளிக் களத்தினர் நடாத்திய கருத்தரங்குகளிலும் பாசறைகளிலும் எம்மன்றத்தினர் தவறாது பங்குபற்றிச் சான்றிதழ்களைப் பெற்றனர்.

சென்ற ஆண்டு இலங்கை விஞ்ஞான முன்னேற்றக் கழகம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் ''அன்றாட வாழ்வில் இரசாயனம்'' என்னும் கட்டுரைக்கு எமது மன்றத்தலைவலி செல்வி வாணி பாலேந்திரன் அகில இலங்கை ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றதையிட்டு மன்றம் பெருமை கொள்கின்றது

ரொட்டரக் கழகம் சென்ற வருடம் நடாத்திய பொது அறிவுப் போட்டியிலும் எமது மன்றத்தினர் பங்குபற்றி வடமராட்சிக்குரிய கேடயத்தை பெற்றனர்.

எமது மன்றம் யாழ் விஞ்ஞானக்கழகம் வருடந்தோறும் நடாத்தும் குறுவினா விடை போட்டியிலும் பேச்சுப்போட்டியிலும் தவறாது பங்கு கொள்கிறது. 1993ம் ஆண்டு எமது மன்ற அங்கத்தவர் செல்வி வாசுகி சின்னையா பேச்சுப்போட்டியில 2ம் இடத்தைப் பெற்றார்.

அண்மையில் எமதுகல்லூரிக்கு கிடைத்த விஞ்ஞான உபகரணங்களால் உறங்கும் நிலையிலிருந்த ஆய்வுகூடங்கள் இயங்கு நிலை எய்தியதையிட்டு மன்றத்தினர் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றனர்.

இச்சந்தர்ப்பத்தில் மன்றத்திற்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து வந்த முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கட்கும் இன்றைய அதிபர், ஆசிரியர்கட்கும் இதயபூர்வமான நன்றி கூறுவதுடன் இம்மன்றம் மேன்மேலும் ஓங்கிவளர இறைவனை வேண்டுகிறேன்.

# கூட்டுறவுச் சங்க அறிக்கை

ஜெ. பரமகுரு
செயலாளர்

| | | |
|---|---|---|
| பொறுப்பாளர் | :- | திருமதி. லோ. குமாரசாமி (அதிபர்) |
| தலைவர் | :- | திருமதி க. மகேந்திரன் |
| பொருளாளர் | :- | செல்வி ஞா. திருநாவுக்கரசு |
| செயலாளர் | :- | செல்வி ஜெ. பரமகுரு |

எமது கல்லூரியில் பொன்விழாக் காலத்தில் இவ்வறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். கல்லூரியின் மாணவர், ஆசிரியர் நலன் புரி அமைப்புகளில் எமது சங்கம் மகத்தான பணி ஆற்றிவருகின்றது. சங்கத்தின் மூலம் மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை உபகரணங்கள், தேநீர், சிற்றுண்டி உணவு வகைகள் வழங்கப்படுகின்றன இவை நியாய விலையில் மாணவரின் நலன்கருதி வழங்கப்படுகின்றன. முன்பு ஒருங்கிணைந்த எமது சங்கம் சேவைநலன் கருதி தேநீர், சிற்றுண்டிப் பிரிவுகளைத் தனியாக்கியது. எமது சங்கத்தின் லாபப்பணத்திலிருந்து ஆண்டுதோறும் பத்தில் ஒரு பங்கு க. பொ. த சாதாரண தர பரீட்சையில் முதன்மையாகத் தேறும் மாணவிக்குப் பரிசாக வழங்கப்படுகின்றது. கடந்த ஒருசில வருடங்களில் நாட்டின் கலவரநிலைகளால் எமது சங்கம் சிறிது பாதிக்கப்பட்டிருந்தாலும் தற்போது சுறுசுறுப்புடன் துரிதமாகச் சேவையாற்றி வருகின்றது எமது சங்கத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் உதவும் அதிபர், உபஅதிபர், ஆசிரியப் பெருந்தகைகள், மாணவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

# வசந்தம் ஒரு வகுப்பறை

உலகம் அழகிய பள்ளிக்கூடம்
பாடம் படிக்கத் தயங்காதே!
ஆறாம் அறிவை தேடா மனிதா
விழித்துக் கொண்டே உறங்காதே!

சோலையில் மலரும் மொட்டுக்களெல்லாம்
சொல்லிக் கொடுத்து மலர்வதில்லை!
மலர்கள் உனக்கு பாடம் சொல்லும்
மனிதா! நீ ஏன் மதிப்பதில்லை?

நீலவானின் நீலம் எதையோ
சொல்லிக் கொடுக்கத் துடிக்கிறது!!
மனிதர் நெஞ்சின் களங்கம் தானே
பௌர்ணமி நிலவில் படிகிறது!

அழகின் சிரிப்பில் அர்த்தம் உண்டு
அறிந்து கொள்வீர் மனிதர்களே!
புரிந்து கொண்டு வாழ்ந்தால் போதும்
புவியில் நீங்கள் புனிதர்களே!

தயாளினி கந்தசாமி
95' விஞ்ஞானம்



பவானி முருகையா 1990 க. பொ. த (உயர்) பரீட்சையில் வணிகப்பிரிவில் 4 A பெற்றவர். இவர் 1986 சைவபரிபாலன சபையின் அகில இலங்கை சமயப் பரீட்சையில் (ஆண்டு 9) தங்கப்பதக்கம் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பருத்தித்துறைக்கோட்டத்தில்1994 உடற்பயிற்சிப்போட்டியில் முதலிடம் பெற்ற 17 வயதிற்கு உட்பட்ட குழு



பருத்தித்துறைக்கோட்டத்தில்1994 உடற்பயிற்சிப்போட்டியில் முதலிடம் பெற்ற 15 வயதிற்கு உட்பட்ட குழு



றோட்ரக்ட் கழகம் நடத்திய "பொது அறிவு"வினாடி வினாப்போட்டியில் வடமராட்சிக் கோட்டத்தில் முதலிடம் பெற்ற குழு (1993)

சிறுகதை

# வேற்றுமையில் ஒற்றுமை

**வா**னம் நிர்மலமாக காட்சி அளிக்கிறது. சந்திரன் தனது கிரணங்களைப் பூமித் தாயின் மீது அள்ளி வீசுவதைச் சேகர் உற்று நோக்குகிறான்.

அவனுக்கு வயது மூவெட்டே இருக்கும். அந்த 24 வயது இடைவெளியில் அவன் தனது ஊரிலே நடந்தேறிய நிகழ்வுகளை மறந்திருப்பது இது போன்ற இயற்கை அன்னையின் கொடைகளை ரசிக்கும் போது மட்டுமே. அவ்விடத்திலேயே இன்றும் தனது எண்ணச் சிறகை கட்டுப்படுத்தி இயற்கையில் லயித்துக் கொண்டிருந்தான். ஆம் பூமி எவ்வளவு அழகானது அதன் அழகினை மெருகூட்ட ஆகாயத்தாடகத்தில் மலர்ந்த நட்சத்திரங்கள், அதன் நடுவே அமுதினைப் பொழியும் தண்மதி, மெல்ல வீசும் தென்றல், இயற்கையே சுகமானது தான்.

உவகையுடன் நோக்கிய அவனது கண்களை திடீரென இருள் கவ்வுகிறது. மேகக்கூட்டங்களில் கருமேகங்கள் சந்திரனைப் பற்றுகின்றன. அவனது சிந்தனை தமது துன்பாயியல் நாடகத்தினை இதய அரங்கில் மீண்டுமொரு முறை அரங்கேற்றுகிறது.

அவனுக்கு அப்போது பன்னிரு வயதென்பதை அன்றைய புதுவருடம் ஞாபகமூட்டுகிறது ஆம் அவன் ஓர் வருடப்பிறப்பன்றே பிறந்திருந்தான். இந்த பன்னிரண்டாம் வருடவாழ்வில் அவ்வூரின் குணாதிசயங்களை நன்கு அறிந்திருந்தான். சாதி, சமயம் என்ற பழமை வாய்ந்த சிந்தனையில் ஊறிப் போயிருந்த அந்தப் ''பூஞ்சோலை'' என்னும் கிராமத்தின் மீது அவனுக்கே வெறுப்பு சில வேளை வருவதுண்டு.

அவன் மட்டுமல்ல அவனது குடும்பமே அவ்வூர் பாடசாலையின் ஆசிரியர்கள், கௌரவமான குடும்பம் தந்தையோ ஓர் ஒழுக்க சீலர் என்பதால் அவ்வூர் மக்கள் நன்மை, தீமை என்றால் அவரை நாடுவது வழக்கம்.

இந்த மேன்மை நிலையை அவர்களுக்கு மக்கள் கொடுப்பதை வாத்தியாரின் மேல் பொறாமை கொண்ட குள்ள உள்ளத்தவன் பீற்றர் கண்டு பொறாமை கொள்கின்றான். முன்பொருநாள் கந்தப்பு வாத்தியார் அவனது சில சமூக சீர்கேட்டை வெளிப்படையாக கேட்டு விட்டதன் வெளிப்பாடே அது. இத்தனைக்கும் வாத்தியார் ஓர் இந்துவாகவும் அந்த கபடதாரியான பீற்றர் கிறீஸ்தவனாக இருப்பதுவும், பூஞ்சோலை ''கிராமசபை'' தலைவர் தேர்தலில் போட்டியிட்டு, பீற்றர் மண் கவ்வியதற்கும், அவனால் தூவப்பட்ட சில மதரீதியான வேற்றுமைப்பிரச்சாரங்களாலும் ஊரிற்சில தப்பான அபிப்பிராயங்களும் விதண்டா வாதங்களும் பரவ ஆரம்பித்திருந்தன. தொடர்ந்தும் அவ்வூரில் கிராம சபைத் தலைவராக இந்துக்களே வருவதாகவும் அவர்களுக்கு சமதொகையான கிறீஸ்தவ மக்களால் அப்பதவியில் இருக்க முடியாமல் போனதற்கும், அதனால் தவறான கருத்துக்கள் விதைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அவ்வூர் இந்து இளைஞன் ஒருவன் கிறீஸ்தவப் பெண்ணை மணம் முடித்த சம்பவத்தைப் பீற்றர் சாதகமாகப் பயன்படுத்தித் தன்னைத் தேர்தலில் தோற்கடித்த பூஞ்சோலைக் கிராமத்தில் மதப் பிரச்சனையில் இதைக் கிளப்பி விடுகிறான். தனது திட்டத்தை நடைமுறைப்படுத்தசில அடியாட்களையும் அமர்த்திசில இந்துக்களின்வீட்டிற்குத்தீ வைக்கிறான். இதற்கு இந்துக்களின் கடும் எதிர்ப்பானது அவர்களது பாணியிலேயே அமையப் பெரும் மதக் கலவரம் மூழ்கின்றது இக்காலத்தில் கந்தப்பு வாத்தியார் சமரசம் செய்ய முற்பட்ட வேளையில் தருணம் பார்த்திருந்த பீற்றரால் கந்தப்பு வாத்தியாரும் தாக்கப்படுகின்றார். அதில் அவரது உயிர் பிரிகிறது. பதிலுக்கு கிறீஸ்தவரது சில பாகங்கள் மண்ணில் வெட்டி வீழ்த்தப்படுகிறது. ஊர் இரண்டுபடுகிறது.

இலங்கை அரசின் கூலிப்படைகளின் அட்டூழியங்கள் நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன. அவற்றில் குடியேற்றம் என்ற போர்வையில் திட்டமிட்ட தமிழர் பிரதேச அபகரிப்புக்கு எல்லைப்புற கிராமங்கள் உட்படுவது மிகவும் அதிகரித்திருந்தது. பூஞ்சோலையும் ஓர் எல்லைப்புற கிராமம் ஆகையால் அக்கிராமத்திலும் அதன் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்தவாறு இருப்பதை மதவேற்றுமையில் சிக்குண்ட அந்த ஊரால் தடுக்க முடியவில்லை.

ஒரு தசாப்தத்திற்கு மேலாக வேற்றுமைப்பட்டிருக்கும் ஊரை அபகரிப்பதை இலகுவான காரியமாகக் கொண்டு அரசு செயற்படுவதை அவ்வூர் இளைஞர்கள் உணராமலில்லை. தமது வேற்றுமைகளை மறந்து தம் ஊரைக் காப்பாற்றும் எண்ணம் இருந்தாலும் முதலில் யார் சமாதான முயற்சியில் ஈடுபடுவதென்பதை கௌரவப் பிரச்சினை தடுக்கிறது. காலம் சுழல்கிறது. இளைஞர்கள் ஆபத்தை உணர்கின்றனர். தமது வேற்றுமைகளை மறந்து ஊரைக்காக்க விளைகின்றனர். இதன் நிமித்தம் தமது விளக்கங்களை வயோதிபர்களுக்கு எடுத்து விளக்குகின்றனர். பலகாலம் வேறுபட்டுக் காணப்பட்ட மக்களால் மதரீதியான ஒற்றுமையைக் காண உடனடியாக முடியாவிட்டாலும் தமிழர் என்ற ரீதியில் தமது ஊரைக்காக்க உறுதி பூணுகின்றனர். அந்த ஒற்றுமையின் பலத்தினால் ஊர் காக்கப்படுகிறது. இதற்காக அயராது உழைத்த சேகர் மனம் இன்புறுகிறது.

**பே. விஜிதா**
**ஆண்டு 10 B**

> நீ சொல்வதைக் காது கொடுத்து கேட்காதவரிடம் நீ எதுவும் சொல்லவேண்டாம். உன் அநீதியை எதிர்பார்ப்பவரிடம் நீ எதுவும் சொல்ல வேண்டாம். நீ அறிவாளியாகவோ விஷய ஞான முள்ளவனாகவோ இருப்பினும்கூட நீ ஏதுமறியாதவனாக நடந்துகொள்.
>
> — திருங்கமகரி – சங்கராசாரியார் —

# அன்றாட வாழ்வில் இரசாயனம்

*ஸ்ரீலங்கா விஞ்ஞான முன்னேற்றக் கழகம் நடாத்திய கட்டுரைப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 2 வது இடத்தைப் பெற்ற கட்டுரை.*

கப்பும் கிளைகளுமாக விழுதுகளோடும், மரம் கொள்ளா இலைகளோடும், கனிகளைத் தாங்கி வானளாவ வளர்ந்து நிற்கின்றது ஆலமரம், இதைப் போலத்தான் இன்றைய விஞ்ஞான மரமும் தழைத்தோங்கி வளர்ந்துள்ளது. அதற்கு ஆணிவேராகவும், அதைத்தாங்கும் விழுதுகளாகவும், அதற்கு வேண்டிய உணவைத் தயாரிக்கும் இலைகளாகவும், அதன் பரம்பலுக்கும், நிலைபேற்றிற்கும் அவசியமான கனிகளாகவும் பௌதிகம், இரசாயனம், உயிர் விஞ்ஞானம், கணிதம் என்பன இலங்குகின்றன. இதில் ஒன்றேனும் இல்லாவிடில் விஞ்ஞான மரம் சாய்ந்து விடும் என்பதில் ஐயமேதுமில்லை.

கருவாகி சிசுவாகி உருவாகிய இரசாயனக் குழந்தை மெல்ல மெல்லத் தவழ்ந்தும், மழலையில் மிழற்றியும், தளர் நடை நடந்து இந்த நூற்றாண்டில் பேரன்பு கொண்ட பெண்ணாக மலர்ந்தாள். பெண்மையின் சிறப்புத் தாய்மையன்றோ! இந்த இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் அவள் வியக்கத்தக்களவு வளர்ந்து தன் மானிடக் குழந்தைகளைப் போஷிக்கும் அன்னையாகவே மாறிவிட்டாள். அன்பும், கருணையும் கொண்டாலும் கண்டிப்பும் தாய்மையின் இலக்கணம்தானே. இரசாயன அன்னையும் அன்பு செலுத்துவாள். கருணை பொழிவாள், ஊக்கமளிப்பாள், ஆனால் அவள் கண்டிப்பையும் சில சமயங்களில் காட்டுவாள்.

ஒரு மனிதன் உயிர் வாழ மிக மிக அடிப்படைத் தேவைகள் காற்று, நீர். உணவு இதையடுத்து உடை, உறையுள் என்பனவும் இன்றியமையாதவை. ஆனால் இன்றைய மனிதன் உண்பதையும், உறங்குவதையும் மாத்திரம் தொழிலாகக் கொண்ட வெறும் ஜடமல்லவே. சிந்திக்கவும் முயற்சி செய்யவும் சாதனைகள் புரியவும் கூடிய பகுத்தறிவைக் கொண்ட உயர்ந்த இறைவனின் படைப்பன்றோ! பண்பாட்டையும், நாகரீகத்தையும் கொண்ட இன்றைய மனிதனுக்கு கல்வி, போக்குவரத்து, தொலைத் தொடர்பு, சுகாதாரம், பொழுது போக்கு என்பனவும் அவசியமான அடிப்படைத் தேவைகள் என்பது அறிஞர் ஏற்றுக் கொண்ட முடிவு. தன் மானிடக் குழந்தைகளின் இந்த அடிப்படைத் தேவைகளையெல்லாம் முன் னின்று கவனிக்கிறாள் இரசாயனம் என்னும் அன்னை.

இரசாயனம் என்றால் என்ன? சடப்பொருட்கள் அவற்றிலேற்படுத்தப்படும் மாற்றங்கள் என்பதுவே இக்கேள்விக்குரிய மிக எளிமையான தெளிவான விடையாகும். ஒரு மனிதனின் அன்றாட வாழ்வில் அவனுக்குரிய தேவைகளையெல்லாம் நிறைவேற்ற நிச்சயம் இரசாயனம் அவனுக்கு உதவ வேண்டும். என்பதில் யாதுமொரு சந்தேகமுமில்லை.

மனிதனின் முதற் தேவையான காற்று, நீர் உட்பட பலவற்றிற்கு அடிப்படை இரசாயனம். இங்கு இந்தக் கட்டுரையின் தலைப்பில் பல ஆழமான கருத்துக்கள் புதைந்துள்ளன. '' அன்றாட வாழ்வில் '' இந்த சொற்றொடருக்கு இரு பொருள்களை வருவிக்கலாம். அன்றாட வாழ்க்கைக்கு இரசாயனத்தின் துணையைக்கூறுவது ஒரு பொருள். அன்றாட வாழ்வின் அடிப்படை இரசாயனம் என்பது இன்னொரு பொருள். தவிர இந்த இரசாயனம் என்பதும் இரசாயனப் பொருட்களைச் சுட்டி நிற்பதோடு மாத்திரம் நிற்காது இரசாயன மாற்றங்கள் என்பதையும் உணர்த்திப் போகிறது.

அந்த வகையிலே நாம் எடுத்து நோக்கினால் அன்றாட வாழ்வையே நடத்த மனிதனை உயிரோடு வைத்திருக்க முதற்கண் காற்றும், நீரும் அவசியம். நைதரசன், காபனீரொட்சைடு, ஒட்சிசன் இன்னும் ஒரு சில வாயுக்களின் கலவைதானே வளி. ஐதரசன், ஒட்சிசன் இரண்டும் இணைந்த நீர் என்னும் தண்டவாளங்கள் தானே மனித புகைவண்டியை இழுத்துச் செல்ல உதவுகின்றன.

உணவை எடுத்தால் அதில் இரசாயனம் இரு பங்குகளை வகிக்கின்றது. ஒன்று உணவாகவே பயன்படுதல். இன்னொன்று உணவுத் தயாரிப்பிற்கு வழி வகுத்தல். முன்னது இரசாயனப் பொருட்களாலும் பின்னது இரசாயன மாற்றங்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. ''உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' இது நம்மிடையே பொதுவாக வழக்கிலுள்ள ஒரு பழந்தொடர். ஆம் இந்த சோடியம் குளோரைட் தான் நம் உணவு குப்பைக்குச் செல்வதா அன்றி வயிற்றினுள் செல்வதா என்று தீர்மானிக்கும் நீதிபதி.

பரபரப்பாக இயங்கும், விலைவாசியான இந்த உலகத்திலே பணத்தையும், நேரத்தையும் மிச்சப் படுத்த வழிவகை தேடி விழிக்கிறார்கள்

மக்கள். இதற்கு இரசாயனம் கைகொடுக்கிறது. சில காலங்களில் மிகவும் மலிவாகக் கிடைக்கும் உணவுப் பண்டங்களைப் பக்குவப்படுத்தி இல்லாத காலங்களில் பயன்படுத்த உதவுகிறது. உதாரணமாக சில பழவகைகளை பழப்பாகாக மாற்றவும் பழ இரசமாக மாற்றவும் பென்சோயிக்கமிலம், சித்திரிக்கமிலம் என்பன உதவுகின்றன. இன்னும் உப்பு சேர்ப்பதன் மூலம் நுண்ணங்கிகள் கொல்லப்படுவதுடன், அவற்றிற்குத் தேவையான நீரும் புறப்பிரசாரணம் காரணமாக வெளியேறுகின்றது. இதனால் உணவு பழுதடையாது பேணப்படுகின்றது இன்றைய மக்களுக்கு மிகவும் வரப்பிரசாதமான சாதனம் குளிர்சாதனப் பெட்டி. அங்கு குளோரோ புளோரோ காபன் (CFC) தான் அடிப்படை. பாலைவனத்திலும் பனிக் கட்டிகள் உருவாகும் அற்புத ஜாலமது.

ஆதி மனிதனின் பிரதான தொழில் உண்பதும், உறங்குவதும். ஆனால் அதிலிருந்து அவன் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறினான். கிடைத்த காய், கனிகளை உண்டவன் பின்னர் விருப்பமானவற்றைத் தேடி உண்டான். வேட்டையாடிப் பச்சை மாமிசத்தை உண்டவன் வாட்டிய மாமிசத்தைப் புசித்தான் ஆம் இரண்டு சடப்பொருட்களான கருங்கல்லை உரச என்ன அற்புதம்! அக்கினித் தேவனல்லவா காட்சி கொடுத்தார். மனித வளர்ச்சியில் முக்கிய மைல் கல் தீயின் பயன்பாடு. இன்று எதற்கும் தீ ஒரு அத்தியாவசியமான சக்தி முதல் சல்பர் போன்ற இரசாயனப் பொருள்களில் உருவானவைதானே இன்றைய தீப் பெட்டிகள். இப்படி மனிதனின் அன்றாட வாழ் வினையே ஒரு சீராகக்கொண்டு செல்வதில் இரசாயனம் தவிர்க்க முடியாத பல பங்கை வகிக்கிறது. அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது என்பது வெள்ளிடைமலை.

அடுத்தபடியாக அன்றாட வாழ்வில் மிக முக்கிய இடத்தை வகிப்பது உடைகள். சும்மாவா சொன்னார்கள் ஆள்பாதி ஆடைபாதி என்று. ஆடை இல்லாத மனிதன் அரை மனிதன் அன்றோ! பருத்தி பட்டு, கம்பளி என்பன நமக்கு இயற்கையாகவே கிடைக்கும் நார்கள் ஆனால் இன்று இவற்றோடு போட்டியிட்டு செயற்கை நார்களும் முன்னணியில் விளங்குகின்றன. உதாரணமாக நைலோன், பொலியெஸ்டர் என்பன இன்று எம்மிடையே மிகப்பிரபலமானவை. இவை எல்லாம் எவ்வாறு உருவாகின்றன தெரியுமா? வேறு என்ன? அதுவும் நம் இரசாயனத்தின் கைங்கரியம்தான்.

இன்று நம்மிடையே மிகப் பிரபலமான துணி நைலோன் துணிகளாகும். தைலமான 1-6 - இரு அமைனோ ஹெக்சேனை வெப்பமேற்றிய வண்ணம் திண்ம அடிப்பிக் கமிலத்தை கரையச் செய்து நிரம்பலாக்கத் தோன்றும் தடித்த பாகு குளிரூட்டிய நுண்துளை கொண்ட குழாய்களினூடு அமுக்கத்தைச் செலுத்த நைலோன் தயார்.

பீனையின் எதிலின் கிளைக்கோலை வெப்ப மேற்றிய வண்ணம் திண்ம ரெறிந்தெலிக்கமிலத்தை கரையச் செய்து நிரம்பலாக்கி அதை மேலும் பல படிகளினூடு நகர்த்திப் பெறப்படுவது ரெறிலீன்நார். இன்னும் துணிகளை அழகூட்டும் முறையான சாயமிடலிலும் இரசாயனப் பொருள்கள் தானே நமக்குக் கை கொடுக்கின்றன.

"காணி நிலம் வேண்டும் பராசக்தி காணி நிலம் வேண்டும்"

ஆம் மண்ணின் சிறப்பை பாரதியே அறிந்து பாடிய கவியன்றோ! உணவு கொடுத்து உடை கொடுத்து வளர்த்த இரசாயன அன்னை தகிக்கும் வெய்யிலிலிருந்தும் கொட்டும் மழையிலிருந்தும் காக்காமல் விடுவாளா என்ன? இன்றைய வீடுகளின் பெரும்பாலனவற்றில் அடிப்படை சீமெந்து. இதை உருவாக்குவதில்தான் எத்தனை எத்தனை இரசாயனத் தத்துவங்கள். அதை விபரிப்பதனால் அதுவே ஒரு தனிக் கட்டுரைக்கு வழிவகுக்கும்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்."

கல்வியைப் பற்றி அன்று பெருமையுடன் இரண்டு வரிகளில் பாடினார் பாரெல்லாம் போற்றும் திருவள்ளுவர். கல்வியை வளர்க்க இன்று பலவழிகளில் இரசாயனம் உதவுகிறது. மாணவர்கள் பயன்படுத்தும் தாள்கள், பேனைகள், பென்சில்கள் என்று ஒவ்வொன்றிலுமே விஞ்ஞான நங்கை நடம்புரிகின்றாள். நிற்க நேரமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய இயந்திர வாழ்க்கையில் மிக முக்கியமான இடத்தைப் பிடித்துள்ளவை போக்குவரத்துச் சாதனங்கள் தாம். ஜிவ்வென்று பல ஆயிரம் அடிகளுக்கு மேல் பறக்கும் விமானங்களும், சர்ரென்று சாலையில் வழுக்கும் மோட்டார் வண்டிகளும், விர்ரென்று நீரைக் கிழித்துப் பறக்கும் கப்பல்களும் ஓடுவது எதில்? அதுவும் விஞ்ஞானம் தந்த வெகுமதிதானே!

என்னதான் பரபரப்பான உலகாக இருந்தாலும் ஓய்விற்கும் நேரத்தை ஒதுக்காத மனிதர்களே இல்லையெனலாம். ஓடியாடி உழைத்துச் சோர்ந்திருக்கும் தன் குழந்தைகளின் களைப்பை நீக்க வேண்டியது தாயின் கடமையல்லவா? சின்னச் சின்ன பொருட்களிலிருந்து அதில் குறிப்பிட்ட இரசாயன மாற்றத்தை உருவாக்க ஒளியும் வந்தது, ஒலியும் வந்தது. வைக்கோலில் ஏற்பட்ட இரசாயன மாற்றத்தின் விளைவு நாலு திக்கும் செய்தி தாங்கும் பத்திரிகை உருவானது. அப்பாடி இவள்தான் தன் குழந்தைகளில் எவ்வளவு அக்கறையுள்ளவள். நாம் எங்கு எந்தக் காரியத்தைச் செய்யும்போதும் இரசாயனத்தின் உதவி மிகவும் இன்றியமையாதது. ஒரு தாய் எல்லா நேரமும் தன் குழந்தைகளை நேரடியாகப் பராமரிப்பதில்லை. சமயங்களில் நம் மனங்களினுள்ளேயே அவள் இருந்து வழிநடத்துவாள். அப்படிப்பட்டதுதான் இந்த இரசாயனமும்.

ஒரு நாட்டிற்கு மிக முக்கியமானவை அந்த நாட்டின் வளங்கள்தாம். ஒவ்வொரு தனிமனிதனும் முன்னேற நாடு முன்னேறும். அந்த மனிதன் முன்னேற அடிப்படை அந் நாட்டின் வளங்கள் தாம். அந்த வகையில் இலங்கையின் வளங்களில் இன்று கணிசமான பங்கினை வகிப்பவை இரத்தினக் கற்கள். ஒவ்வொரு காபன் அணுக்களும் வேறு 4 காபன் அணுக்களுடன் பிணைய நான்முகி கலப்பிற்குரிய படைச்சாலகமே வைரம் என்ற பெயரைப் பெறுகிறது. பல படைகள் சேர்ந்து வலிமையாகப் பிணைந்து உறுதியான விலைமதிப்பற்ற இரத்தினக்கல் கிடைக்கின்றது. ஒவ்வொரு நாட்டு மக்களும் வைரத்தைப் போல ஒருவருக்கொருவர் இறுக்கமாக அன்போடு இருந்தால் நீங்கள் விலைமதிப்பற்ற ஒரு சுபீட்சமான வாழ்க்கை பெறலாம் என்று அது சொல்லாமல் சொல்கிறது போலும்.

ஓர் இரசாயன மாற்றத்தின் விளைவில்தான் மின்சாரமும் நமக்குக் கிடைக்கிறது. இலத்திரன்களின் பாய்ச்சலே மின்னோட்டம் எனப்படுகிறது. இந்த இருபதாம் நூற்றாண்டில் மின்சாரத்தின் பயன் சொல்லிமாள முடியாது, இதைத் தனியே இலத்திரனின் விளைவு என்று சொல்லிவிட முடியாது. இங்கு பௌதிகமும் சேர்ந்தே நமக்குத் துணை புரிகிறது. குழந்தைக்குத் தந்தையும் வேண்டுமல்லவா? மின்சாரத்தின் பயனை சுருக்கமாகக் கூறுவதெனின் மின்சாரம் இன்றேல் இன்றைய உலகில்லை எனலாம்,

அன்றிலிருந்து இன்று வரை பொன்னை மனிதன் விட்டுவைக்கவில்லை. இன்றுங்கூட அழகிய ஜொலிக்கும் தங்க நகைகளைக் கண்டு மயங்காதவர்கள் மிகவும் அபூர்வம். இதுவும் இரசாயனத்தின் பரிசுதானே! தங்கம், வெள்ளி என்பவற்றின் பெறுமதி இன்று நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே செல்கிறது. நாட்டின் பொருளாதாரத்தில் இவை முக்கிய பங்கை வகிக்கின்றது.

இன்றைய நவீன மருத்துவத்துறையின் கண்களெனவே இரசாயனத்தைக் கூறலாம். இரசாயன நுட்பங்களும் இரசாயனப் பொருட்களும் தானே இன்றைய குளிகைகளுக்கெல்லாம் அடிப்படை. நாம் பாவிக்கும் மருந்துகளிற்கெல்லாம் மூலம் இரசாயனம் தான். தன் மானிடக் குழந்தையின் நோய் தீர்க்கவும் முன் வந்தது இரசாயனம்.

அடிப்படை இரசாயனம், பௌதிக இரசாயனம், அசேதன இரசாயனம். சேதன இரசாயனம், கரு இரசாயனம் என்று இரசாயனத்தில் பல பிரிவுகள் இருப்பது நமக்கெல்லாம் தெரிந்த விடயம் தானே! ஆனால் இன்றைய உலகில் மிக முக்கிய இடத்தை எடுத்து உலகையே ஆட்டி வைப்பது கரு இரசாயனம் தான்.

ஆதிகால மனிதன் தன் வாழ்க்கையைச் சூழலோடு ஒட்டி அதன் பிரகாரம் வாழ்ந்தான். கடும் குளிர்ப்பிரதேசம், பாலை வனங்கள், அதிக வெப்பப் பிரதேசம் போன்றவற்றில் இயன்றளவு தம் வாழிடங்களை அமைக்காது வாழ்ந்தான், ஆனால் காலம் செல்லச் செல்ல நிலைமை மாறியது. வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறுமல்லவா ஆம் ஏறியது. சூழலுக்கு அடங்கி வாழ்ந்த மனிதன் இன்று அதை அடக்க முயல்கிறான். வெற்றியும் பெறுகிறான். இதற்கெல்லாம் கை கொடுத்தது விஞ்ஞானம் என்றால் அதில் பொய் ஏதும் இல்லையே! அதிலும் கரு இரசாயனம் இன்று நமக்குத் தரும் பயன்களோ பலப்பல. இன்று கதிர்த்தொழிற்பாட்டுச் சமதானிகளின் பயன்கள் மிக அதிகம். குறிப்பாக மருத்துவ துறையை எடுத்து நோக்கினால் $^{29}_{11}$Na குருதிப் பாச்சலில் ஏற்படும் தடையைக் கண்டுபிடிக்க உதவுகிறது. $^{131}_{53}$I கண்டக் கழலை நோய் சிகிச்சைக்கு 60 CO புற்று நோய்ச் சிகிச்சைகளிலும் பயன்படுகின்றன. புற்றுநோய் என்றாலே மரணம் என்று கதிகலங்கிய மனிதனுக்கு இன்று அதையே வெல்லும் தருணம் வந்துவிட்டது. வள்ளுவர் சும்மாவா பாடினார் ''நோய் நாடி நோய் முதல் நாடி'' என்று.

விவசாயத்திலும் கதிர்த் தொழிற்பாட்டுச் சமதானிகள் பயன்படுகின்றன. உதாரணமாக 32 P ஐக் கூறலாம். பசளைவகை, உரவகையென்றும் பலவழிகளில் உதவுகிறது.

கைத்தொழில் துறையை எடுத்தால் 60CO நீர்த்தொட்டிகளின் மட்டங்களை அறியவும் $^{137}_{55}$CS உலோகத் தகடுகளைத் தயாரித்து அவற்றின் தடிப்புக்களைக் கட்டுப்படுத்தவும் பயன் படும். இன்னும் பாரிய எண்ணைக்குழாய்களில் அடைப்பு கசிவு ஏற்படும் இடங்களைக் கண்டறிய உதவுகிறது.

இவ்வாறு பற்பல வழிகளில் கதிர்த்தொழிற்பாட்டுச் சமதானிகள் நமக்கு உதவிய பொழுதும் இன்று மனித குலத்தையே அச்சுறுத்திக் கொண்டிருப்பதும் இந்தக் கரு இரசாயனம்தான்.

ஆம் இன்றைய உலகில் போர்களுக்கே பஞ்சமில்லை. எங்கு திரும்பினாலும் போர், போர் போர் முரசம்தான். அன்பு பண்பு என்ற அருங்குணங்களெல்லாம் ஓடிமறைய கொள்ளைகளும், கொலைகளும் தான் இன்று தலைவிரித்தாடுகின்றன. அகிம்சை என்று கூறிய காந்தியையும், அன்பைப் போதித்த புத்தரையும், ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு என்ற இயேசு பிரானையும் இன்றைய உலகம் மறந்து போனது வியப்புத்தான். இன்று பல நாட்டு மக்களின் அன்றாட வாழ்வில் குண்டுகளும் துப்பாக்கிகளும் ஒரு சாதாரண விடய

மாறித்தான் போய்விட்டது. அன்பின் பிடியில் பிணைந்து நின்ற உலகம் இன்று மெல்ல மெல்ல இல்லை இல்லை வேகமாகவே துப்பாக்கிக் கலாச்சாரத்தினுள் அமிழ்கிறது.

அன்று ஹிரோஷிமா, நாகசாக்கியில் போட்ட அணுகுண்டு எத்தனை உயிர்களைப் பறித்தது. இன்றும் ஜப்பானில் இத்தனை வருடங்கள் கழிந்தும் வலது குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. அணுகுண்டின் பேயாட்டத்தைக் கண்களால் கண்டு இன்னும் நாம் மாறவில்லையே.

எத்தனையோ வழிகளில் நமக்குதவிய இரசாயனம் இப்பொழுது கோபம் கொள்கிறது. அன்பையும் சகோதரத்துவத்தையும் நீங்கள் மறந்தால் உங்களையே அழித்துவிடுவேன் என்று கோபத்தோடு மனித மழலைகளைக் கண்டிக்கிறாள் இரசாயன அன்னை. தவறு செய்தால் கண்டிப்பவள்தானே சிறந்த அன்னை. அன்பும், பண்பும், நற்குணமும் மேலோங்கினால் குண்டுகளும், துவக்குகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்தானே!

இவ்வாறு இரசாயனம் பல வழிகளில் மனிதனின் அன்றாட வாழ்விற்கு அத்தியாவசியமாகிறது. மொத்தத்தில் எடுத்து நோக்கினால் சில தீமையின் மத்தியில் பல நன்மைகளை மனிதனுக்கு விளைவிக்கிறது என்பதில் ஐயமேதுமில்லை. எனினும் அன்றாட வாழ்வில் இரசாயனத்தின் பங்குபற்றி சில பக்கங்களில் விபரிப்பதென்பது முடியாத காரியம். சுருங்கக்கூறின் இரசாயனம் இன்றி மனிதனில்லை. ஏன் இவ்வுலகே யில்லை.

வாணி பாலேந்திரன்
ஆண்டு 13 விஞ்ஞானம்

காகிதத்தில் பேனா வைத்து நீங்கள் எழுதத் தொடங்குமுன் பெண் என்பவளை உங்கள் சொந்தத் தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே வரட்சியால் வாடிக்கிடந்த வையகத்திற்கு வானத்திலிருந்து வண்ணமழை பொழிவது போல உங்கள் எழுத்துக் கோலிலிருந்தும் தூய்மையான இலக்கியம் பொழியும்.

— மகாத்மா காந்தி —

# பெண்களின் மனவலிமை

பண்டைத் தமிழ்ப் பெண்களின் பண்பாடு, தமிழ் இலக்கியங்களுள் தனிச் சிறப்புற்று விளங்கும் சங்க இலக்கியங்களிலே பல்கிப் பரந்து மலிந்து கிடக்கின்றது. அக்காலப் பெண்களின் கற்பையும் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நாற்குணங்களில் பொதிந்துள்ள பண்பாடுகள் பலவற்றுள் ஒவ்வொன்றையும் போதிய சான்றுகள் மூலம் சங்க இலக்கியச் செய்யுள்கள் புலப்படுத்துவனவாய் உள்ளன.

பண்பாடு சான்ற அப்பெண் அணங்குகள் ஒவ்வொருத்தியும் தன் வாழ்நாளிலும் தன் கணவன் நீண்ட வாழ்நாள் பெறவேண்டும் எனவும் எண்ணுகிறாள். தன் தேக சுகத்திலும் தன் கணவன் தேக சுகம் பெற்று வாழ்வதையே பெரிதும் விரும்புகிறாள். தன் கணவனது புகழுக்கும் கௌரவத்திற்கும் மாசு வராமல் ஒழுகுகின்றாள்.

உலகின் மிக்க வலிமை யாரிடத்தில் உண்டு? இந்த வினாவிற்குப் பல விடைகள் காணலாம். பாரதம் படித்தவன் திரௌபதையை நினைக்கின்றான் காந்தாரியும் கண்முன் தோன்றுகிறாள். இராமாயணம் கற்றவன் சீதையையும் சுமித்திரையையும் கருதுகின்றான். சிலப்பதிகாரம் கற்றவன் கண்ணகியினதும் மாதவியினதும் பெயரை உச்சரிக்கின்றான். இவர்களுடன் சகுந்தலை, தமயந்தி, மனோன்மணி போன்றோரையும் எடுத்துக்காட்டலாம்.

இவ்விடைகள் எவ்வலிமையைக் கருதி எழுந்தன? எல்லா வலிமையிலும் சிறந்த வலிமை ஒன்று உண்டல்லவா! அஃது எது? மனவலிமை தான் மனவலிமை தேக வலிமையிலும் குறைந்ததா? இல்லவே இல்லை.

காம இச்சையை அடக்கும் மனவலிமை உடைய துறவி வலிமையில் குறைந்தவனா? ஐம்புல ஆசைகளையும் அடக்கி ஆளும் திறமை சிறந்த வலிமை அன்றோ? எழுந்த கோபத்தை அடக்குவதற்கு எவ்வளவு மனவலிமை வேண்டும். தமிழ் இலக்கியங்கள் இவை பலவற்றையும் வலிமை, வல்லமை, ஆற்றல் என்று தான் சாற்றுகின்றன. வள்ளுவரைக் கேட்போம் வாருங்கள் ''வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை'' என்ற ஒரு குறளின் இறுதிப் பாகத்தைக் கூறுகிறார். அறிவில்லாதவர்கள், அறிவு குறைந்தவர்கள் அறியாமையால் செய்கின்ற குற்றத்தைப் பொறுக்கின்றவன் சகிக்கின்றவன் எவனோ அவனே பலசாலி; யாவருக்குள்ளும் பலசாலி என்கின்றார் அவர்.

ஏன் அப்படிச் சொல்கிறீர்கள் வயிற்றின் கொடுமையால் ஒரு பிடி சோற்றிற்காக அலைந்து கொண்டிருக்கின்ற பிச்சைக்காரனுடைய அனுபவத்தைக் கேட்டால் அவன் என்ன விடை கூறுவான் என நினைக்கிறீர்கள்? வயிற்றில் இருந்த பசியை அடக்கிக் கொண்டிருப்பதற்குப் பெரிய வலிமை வேண்டும் என்பான் அவன். வள்ளுவர் வாய்மொழியான ''ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்'' என்ற குறளின் முன் பகுதியையும் தனது விடைக்கு ஆதாரமாக எடுத்து வாதிப்பான். வரையாது வாரி வழங்கும் வள்ளல் ஒருவனிடத்தில் அவ் வினாவை எழுப்பினால் அவன் என்ன விடை கூறுவான்? ''இல்லோர்க்கு இல்லென்றியைவது கரத்தல்'' அதாவது என்னிடம் பொருள் இல்லை, உண்பதற்கு ஏதாவது தா; உடுப்பதற்கு ஒன்று கொடு என்று இரப்பவன் ஒருவன் வந்து இரக்கும் போது தன்னிடம் உள்ள பொருளை உணவை வைத்துக் கொண்டு தர இயலாது என்னிடத்தில் இல்லை என்று சொல்வதற்கு பெரிய வலிமை வேண்டும் என்கிறான் அவன். இவ்வாறெல்லாம் பண்டைத் தமிழ்ச் சான்றோர் மனவலிமையைப் பெரிதாகக் கூறிச்செல்வதை நாம் காண்கின்றோம்.

தற்காலத்தில் நாட்டையே பல பெண்கள் ஆளுகிறார்கள். யுத்த விமானங்களையும் பெண்கள் ஓட்டி உலக சாதனை புரிகின்றனர். நாட்டைக் காக்கும் பணிகளிலும் பெண்களே பெரிதும் ஈடுபடுகின்றனர். யாவற்றிற்கும் சான்றாக இருப்பது எது? பெண்களின் மனோவலிமை, இதை எவராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆணுக்கு சரிநிகர் பெண் என்ற நிலை மாறி ஆணிலும் உயர்ந்தவள் பெண் என்பதற்கு எடுத்துக் காட்டாக இந்திய உபகண்டத்தை ஆண்ட இந்திரா காந்தியையும், இலங்கையை ஆண்ட சிறிமாவோ பண்டாரநாயக்காவையும் கூறலாம். இவர்கள் நாட்டை ஆள்வதற்குத் துணை நின்ற கருவி யாதெனில் மனவலிமையே. ஆகவே பெண்கள் மனவலிமை படைத்தவர்களே இதுவே உண்மை.

சி. கலைச்செல்வி
ஆண்டு 10 A

# சமயக் கல்வி

சமயமும் கல்வியும் பின்னிப் பிணைந்த ஒன்றாக அன்று தொட்டு இன்றுவரை நிலவி வருவதைக் கண்கூடாகக் காணக் கூடியதாக இருக்கிறது. முதற்கண் கல்வியை நாம் எடுத்து நோக்குவோமானால் முற்காலக் கல்வி முறைகள் இந்துக்கோயில்களிலும், புத்தகோயில்களிலும். கிறீஸ்தவ கோயில்களிலுமே ஆரம்பமாகி இருப்பதாக வரலாறு எடுத்துக்கூறுகிறது. மற்றும் பிராமணர், பிக்குமார், கிறீஸ்தவகுருமார் போன்றோரே ஆதியில் கல்வியைக்கற்கக் கூடியதாகவும் அவர்கள் மூலமாகவே அரசர்கள், சூத்திரர்கள் போன்றோர் கல்வியைக் கற்றுவந்துள்ளார்கள் என்பதையும் அறியக்கூடியதாக இருக்கிறது. இவற்றை நாம் சற்று நோக்குவோமானால் கல்வியின் வளர்ச்சிக்குச் சமயம் அடித்தளமாக வந்துள்ளது எனலாம். சமயம் கல்வியின் பிறப்பிடம் என்ற கேள்வியை ஆராய்ந்தால் அக்கால மக்கள் சமய நம்பிக்கை கொண்டவர்களாகவும் ஒரு பரம்பொருளுக்குப் பயந்த மக்களாகவும், கீழ்ப் படிந்த மக்களாகவும் காணப்பட்டார்கள்.

நாகரீகம் வளர்ச்சி அடைந்த மக்கள் சமயத்தின் ஊடாகக் கல்வியைப் புகட்டுவது இலகுவான முறை என்பதை நன்கு உணர்ந்திருந்தார்கள். உதாரணமாக “உனக்கு சக்தி இல்லாவிட்டால் சிவனே என்று இருந்துவிடு” என்பது மக்கள் பேச்சு வழக்கில் பயன் படுத்தும் ஓர் வாக்கியமாகும். சிவன் என்பது ஒரு சடப்பொருள் அதில் இருந்துதான் சக்தி தோன்றியது. அச்சக்தியை இயக்குகின்றவரே சிவனாகும். இவற்றில் இருந்து நாம் கருதுவது என்ன ? சமயத்திற்கும் கல்விக்கும் நெருங்கிய தொடர்பைக் காட்டுவதாகக் கருதமுடிகிறது.

சமுதாயத்தை நாம் எடுத்து நோக்குவோமானால் சிலுவை யுத்தத்தின் பின் ஏற்பட்ட மாற்றத்திற்கும் முன்பு இருந்த கொள்கைகளுக்கும் உள்ள முரண்பாடு என்ன? சிலுவை யுத்தம் நடப்பதற்குக் காரணமே சமயம். சமயத்திற்கும் அரசியலுக்கும் நெருங்கிய தொடர்பைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இன்றைய நாகரீகம் அடைந்து வரும் சமுதாயத்தில் கல்வியில் சமயத்தைப் புறக்கணித்து வருவதால்தான் உலகத்திலே கொலை, களவு, போட்டி, பொறாமை, நாட்டுக்கு நாடு யுத்தம், போன்றவை இடம்பெறுவதற்கு காரணமாக அமைகின்றன. சமயத்தில் பற்றும், உயிர்களில் இரக்கமும் கொண்ட மக்கள் சமுதாயம் உருவாகினால் தான் இந்நிலை மாறுபடும். மக்களிடையே ஒற்றுமை சமாதானமும் நிலைபெறமுடியும்.

பாடசாலைகளிலே நவராத்திரி விழா, சிவராத்திரிவிழா, குருபூசை போன்றன என் கொண்டாடப்படுகிறது என்று உற்றுநோக்குவோமானால் சமயத்திற்கே முதலிடம் கொடுத்து மாணவர்களுக்கு பயபக்தியை ஏற்படுத்தி அவர்களை நல்வழிப் படுத்துவதன் மூலம் தான் பிற்காலத்தில் தலைசிறந்த சமூகத்தை உருவாக்கமுடியும் அல்லாவிட்டால் நாட்டில் கொலை களவு. வழிப்பறி. கற்பழிப்பு. சட்டவிரோதச் செயல்கள் நிறைந்த சமுதாயத்தையே உருவாக்க முடியும். ஆகவே நாம் சமயத்துடன் இணைந்த கல்வியையே புகட்ட வேண்டும் சமயத்தை வேறாக்கி கல்வியைக் கற்பிக்க முயலுவோமானால் எமது வருங்கால சமுதாயத்திற்கு தீங்கு செய்தவராக கருதமுடிகிறது என்பதே எனதுகருத்தாகும். ❋

தாரணி செல்வராஜா
ஆண்டு 8 B

# யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளங்கள்

இந்து சமுத்திரத்தின் நித்திலம் எனப் புகழ் பெறும் இலங்கைத் தீவின் வட பகுதியிலே புகழ் பெற்று விளங்குவது யாழ்ப்பாணக் குடாநாடு. ''எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்'' என்பது போல இலங்கைத் தீவின் சிரசாக யாழ்ப்பாணக் குடா நாடு விளங்குகிறது. கிழக்கே வங்கக் கடலினாலும், வடக்கே பாக்கு நீரிணையினாலும், தென் மேற்கே ஆனையிறவுக் கடனீரேரியினாலும் சூழப்பட்டு தெற்கில் ஒரு சிறு நிலப் பகுதியினால் ஏனைய பகுதிகளோடு இணைக்கப்பட்டதொரு நாடாக விளங்குவதால் யாழ்ப்பாணக் குடாநாடு என அழைக்கப் டுகிறது.

''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்றார் ஔவைப்பாட்டி. அவ்வாறான ஆறுகள் இல்லாத போதும் அருங்கொடையாக வழங்கப்பட்டிருக்கும் தரைக்கீழ் நீரைச் சிறப்பாகக் கொண்டிருப்பதனால் ஆறுகள் பாயும் ஏனைய பிரதேசங்களைக் காட்டிலும் நீர் வளத்தில் தனக்கெனத் தனியான ஒரு சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகிறது யாழ்ப்பாணக் குடாநாடு என்று கூறும் போது எம்மாற் பெருமிதம் அடையாமல் இருக்க முடியாது.

தட்டையான சமநிலத்தை தனது தரைத் தோற்ற அமைப்பாக கொண்டிருக்கும் யாழ்ப்பாண அன்னை, அதிலும் தனித்துவமான வளங்களைக் கொண்டிருப்பது மேலும் சிறப்பினை விளக்கி நிற்கின்றது. கட்டிடத் தொழிலுக்கு அவசியமான மூலப் பொருளான சீமெந்து உற்பத்திக்கான முக்கிய மூலவளமான சுண்ணக் கற்பாறைகள் வெளியரும்பிக் காணப்படும் பிரதான பிரதேசமாக யாழ்ப்பாணக் குடா நாடு விளங்குகின்றது. இதன் பலனாகக் காங்கேசன் துறையிலே பாரிய சீமெந்துத் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டிருப்பது அதன் சிறப்பை மேலும் வலியுறுத்தி நிற்கின்றது.

மண் வளத்திலும் தனக்கெனத் தனியான இடத்தை யாழ்ப்பாணக் குடாநாடு பெற்றிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. வளமான செம்மண்ணை வலிகாமப் பகுதியும் மணல் மண்ணை, தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி பகுதிகளும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது வடமராட்சியில் ஒரு சில பகுதிகள் தவிந்த ஏனைய பகுதிகளில் செம்மண் காணப்படுகில்றது. தமக்குக் கிடைத்துள்ள நீர் வளத்தையும் மண் வளத்தையும் பயன்படுத்தி யாழ்ப்பாணத்து விவசாயிகள் வருடம் முழுவதும் விவசாயத்தில் ஈடுபடுவதன் மூலம் பெரும் வருமானம் பெற்று வருகின்றனர். வெண்காயம், மிளகாய், புகையிலை போன்ற பயிர்களை முக்கியமாகப் பயிரிடும் யாழ்ப்பாணத்து விவசாயிகள் இன்று மலைநாட்டுப் பயிர்களையும் முக்கியமாக கரட், பீற்றூட், உருளைக்கிழங்கு ஆகியவற்றையும் பயிரிடுவதில் வெற்றி கண்டுள்ளமை யாழ்ப்பாணக் குடா நாட்டின் மனித வளத்தின் சிறப்பையும் விளக்கி நிற்கின்றது.

இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகள் பெற்றிராத ஒரு வளத்தை யாழ்ப்பாணக்குடா நாடு பெற்றிருப்பது அதன் தனித்துவத்தை வலியுறுத்தி நிற்கின்றது அந்த வளம் தான் பனை வளம் ஆகும். பண்டைக் காலம் முதல் யாழ்ப்பாணக் குடா நாட்டு மக்களின் வாழ்க்கையில் பிரதான பங்களிப்பை கொடுத்து வந்த பனை வளம் அண்மைக் காலம் முதல் குடா நாட்டு மக்களின் தேவைகளை ஈடு செய்கின்ற முக்கியமான வளமாக விளங்கி வருவது குடா நாட்டிற்குத் தனியான சிறப்பினைக் கொடுக்கின்றது. உணவுப் பொருள்க்ள் முதல் உறையுளுக்குத் தேவையான பலதரப்பட்ட பொருள்களையும் விறகுத் தேவையையும் ஈடு செய்யும் இவ்வளம் யாழ்ப்பாணக் குடா நாட்டிற்கு இயற்கை அன்னையால் கொடுக்கப்பட்ட தனியான ஒரு சிறப்பு வளமாக இருப்பது பெருமைப்பட வேண்டியதே.

இரசாயனக் கைத்தொழிலுக்கு அவசியமான மூல வளமான உப்பு வளமும் யாழ்ப்பாண அன்னையின் அரும்பெரும் வளமாகும். அண்மைக் கால நெருக்கடிகளினால் ஆனையிறவு உப்பு வளம் பயன்படுத்த முடியாததாய் உள்ள போதிலும் வல்லை வெளியிலும் வண்ணாத்தி பால வெளியிலும் விளைகின்ற உப்பு யாழ்ப்பாண அன்னையின் மக்களின் தேவைகளை ஈடு செய்வதில் வெற்றியைக் கொடுத்துள்ளது.

கடல் வளத்தில் இலங்கைத் தீவு சிறப்பானஒரு இடத்தை உலக நாடுகளில் பெறுகிறது. அதற்குள்ளும் யாழ்ப்பாணக் குடா நாடு இலங்கைத்தீவின் ஏனைய பகுதிகள் எல்லாவற்றையும்விடத் தனக்கெனத் தனித்துவமான கடல் வளத்தினைக் கொண்டுள்ளது. இலங்கையைச் சுற்றி மீன் வளங்கொண்ட கண்ட மேடைப் பகுதி காணப்பட்டாலும் யாழ்ப்பாணக் குடா நாட்டிலே பருத்தித்துறை பேதுறு முனையில் இருந்து பரந்து விரிந்து காணப்படும் பேதுறு கண்ட மேடை அமைந்திருப்பது கடல் வளத்தின் சிறப்புக்குக் காரணமாகின்றது. இக்கண்ட மேடைப் பகுதியில் இருந்து பெருமளவான மீன் வளத்தைப் பெறக்கூடியதாய் இருப்பது யாழ்ப்பாணக் குடா நாட்டின் வளத்துக்கு மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

யாழ்ப்பாணக் குடா நாட்டின் மனித வளமும் தன்னிகரில்லாத ஒரு வளமாகவே காணப்படுகின்றது. கலவித்துறையில் தனித்துவமான மூளை வளத்தைக் கொண்டுள்ள மக்களில் ஒரு பகுதியினர் யாழ்ப்பாணக் குடா நாட்டின் கல்வி வளத்திற்கு வளமூட்டி நிற்கின்றனர். பகலென்றோ இரவென்றோ மழையென்றோ, வெயிலென்றோ பாராது நெற்றி வியர்வை சிந்தி நிதம் உழைக்கும் விவசாயியும் யாழ்ப்பாணக் குடா நாட்டின் மனித வளத்தை மேலும் மேம்படுத்துகிறான். இதே போன்று கடற்றொழிலாளர்களும் ஏனைய தொழிலாளர்களும் மனித வளத்தை மேன் மேலும் மெருகூட்டி நிற்கின்றனர்.

எனவே முழுமையான நோக்கில் யாழ்ப்பாண அன்னை ஆற்று வளம், மலை வளம் ஆகியவற்றைப் பெற்றிராத போதிலும் பெற்றிருக்கின்ற வளங்கள் யாவும் அவற்றை எல்லாம் ஈடு செய்யத்தக்க வகையில் அமைந்திருப்பதனால் தனக்கெனத் தனியான ஒரு சிறப்பிடத்தை பெற்றிருப்பது யாழ்ப்பாண மக்களாகிய எம்மால் ஒருபோதும் பெருமைப் படாமல் இருக்க முடியாதது ஒன்றாகும்.

மைதிலி மார்க்கண்டு
ஆண்டு 7 B

# எம் தெய்வம்

சத்திய சாயி நம் தெய்வம்
நித்தமும் அவனைப் பணிந்திடுவோம்
எத்துணை துன்பம் வந்தாலும்
சத்தியமாய் எமைக் காத்திடுவான்

அன்னையின் பாதம் பணிந்திடுவோம்
பானையில் பிடியரிசி சேர்த்திடுவோம்
தன்னலம் இல்லாச் சேவையில்
என்னையும் சுவாமி சேர்த்திடுவார்

எழில் முருகானந்தன்
ஆண்டு 3 C

# கல்வியின் சிறப்பு

கல்வியை விடச் சிறந்த செல்வம் உலகில் வேறில்லை. கல்வி நீராலோ நெருப்பாலோ அழியாது. திருடரால் திருடப்படமாட்டாது. கொடுக்கக் கொடுக்கக் குறையாது. மறாக மற்றவர்களுக்குக் கற்பிக்குந்தோறும் வளர்ந்து கொண்டிருக்கும். அரசனுக்கு அவனது நாட்டிலேதான் மதிப்புண்டு கல்வி கற்றவர்களுக்கு அவர்கள் செல்லும் நாடுகளில் எல்லாம் சிறப்புண்டு. அதனால் ஒவ்வொருவரும் கல்வியைக் கருத்துடன் கற்றல் வேண்டும்.

கல்வியைக் கருத்துடன் கற்கும் போது அறிவு வளர்பிறைபோல வளரும். அறிவுடையவர் தமது கண்ணாற் காணமுடியாத தூர தேசங்களில் நடப்பதையும் காண்பர். கண்ணாற் பார்க்க முடியாத இறந்தகால நிகழ்ச்சிகளையும் பார்ப்பர். அதனால் அறிவைத்தருகின்ற கல்வியே ஒருவருக்கு உண்மையான கண். ''எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்'' எண்ணும் எழுத்தும் கல்வியைக் குறிக்கின்றன.

உண்மையான கண்ணான கல்வியை இளமை தொடக்கம் கற்றல் வேண்டும் இளமையிற் கற்கும் கல்வி மனத்திலே நன்கு பதியும் கல்லிலே எழுதப்பட்ட எழுத்துப் போல அழியாது. ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' இவ்வாறு நாம் கல்வி கற்றால் பிற்காலத்தில் நாம் நல்வாழ்வு. வாழலாம் ஆசிரியராக, மருத்துவராக, பொறியியலாளராக வரலாம். வேறுபல உத்தியோகம் பார்க்கலாம் எந்தத்தொழில் 'செய்தாலும் திருந்தமாகச் செய்து நற்பயன் பெறலாம். எனவே ''இளமையிற் கல்.''

இ. ஜெயமாலினி
ஆண்டு 4 A

> தற்போதய கல்வி முறை கற்றவர்க்கும் கல்லாதவர்க்கும் ஒரு பெரும் அகழியை அமைத்துள்ளது.
>
> — ராஜேந்திர பிரசாத் —

# ஏணி

சின்னச் சின்ன ஏணி சிறந்த ஆசான் ஏணி
மெல்ல மெல்ல ஏற்றி உயர வைக்கும் ஏணி
வண்ணவண்ணப் படங்கள் வடிவான உருக்கள்
பார்த்துப் பார்த்துப் பாலர் நல்ல பயன் பெறுவோம்

கைகொடுத்து எம்மைத் தூக்கிவிடும் ஏணி
சின்னச் சின்னக் கதைகள் சிறந்த நல்ல உரைகள்
மெது மெதுவாய்த் தந்து உயர்த்தி வைப்பார் எம்மை
அன்பு கொண்ட நாம் அவர் சேவை என்றும் மறவோம்

அறிவு என்னும் விளக்காய் ஒளி தந்த ஏணி
அவரிடமே நாங்கள் பண்பு பல பயின்றோம்
பாரிடத்தில் உயர்ந்த கலைகள் பல கற்றோம்
நிறைந்த குடம் ஆசான் ஏணி என்றும் மறவோம்

ஜனனீதா கணேசலிங்கம்
ஆண்டு 6 C

# காலைக் காட்சி

**அ**திகாலையில் கீழ் வானம் சிவந்தது. சேவல் கூவியது. காகங்கள் கரைந்தன. அம்மன் கோவில் மணி ஓசை ஒலித்தது. சூரியன் மெல்ல மெல்ல மேலே வந்துகொண்டிருந்தான். சூரியன் வரும்பொழுது செம்பொற் குடம் போலக் காட்சியளித்தான். சூரியனின் வரவைக்கண்டு பூக்கள் மலர்ந்தன. உழவர்கள் வயற்கரைக்குச் சென்று கொண்டிருந்தனர். கடற் தொழிலாளர் மீன் பிடித்துக் கொண்டு கரையை நோக்கி வந்து கொண்டிருந்தனர். புத்திஜீவிகள் தத்தம் வேலைகளைச் சுறுசுறுப்பாகச் செய்து கொண்டிருந்தனர். உறங்கியிருந்த பூமி, உயிர் பெறத் தொடங்கியது.

சாமந்தி
ஆண்டு 4 C

# எமது கல்லூரியில் இசைக்கலை

உலகம் எப்போது தோன்றியதோ அன்றே எமது இசையும் தோன்றியது என்றே கூறலாம். இதற்கு எவ்வளவோ ஆதாரங்களை நாங்கள் காணக் கூடியதாக இருக்கின்றன. இசைக்கலை இறைவன் மூலமாகவே வெளிவந்துள்ளது என்பதற்கு ''சாம வேதம்'' ஓர் எடுத்துக்காட்டாகும். ''இறைவனே இசைவடிவினன்.'' கலைமகள் இசையின் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். அந்தத்தெய்வத்தின் கையில் வீணை இருப்பது எமக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது. அத்தோடு கண்ணபிரான் கையில் புல்லாங்குழலும், சிவபெருமான் கையில் டமருகமும் (உடுக்கு) இருப்பது இசை உலகிற்கு ஒரு பெரிய சான்றாகும். இதனை பாண்டியமன்னர் காலத்தில் முதற்சங்கத்தினால் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழும் சிறப்புற வளர்க்கப் பட்டன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. வேதங்களிற் கூட இசைக்கு ஒலிக்கு முதலிடம் அளிக்கப் பட்டுள்ளது. இசைக்கலையில் மயங்காதார் இவ்வுலகில் யாருளர். படையையும் நடுங்கச் செய்யும் பாம்பைக் கூட இசைக்கலையினால் மயக்க முடியும். இறைவன் ''சாமகானப்பிரியன்'' என்று கூறப்படுகிறார். இதிகாச காலத்தில் இராவணன் இசைக் கலையில் நாட்டமுள்ளவனாகக் கூறப்படுகின்றது. இவ்வாறு இந்துமதத்தோடு அதன் நாகரீகத்தோடு ஒன்றிணைந்த இசைக்கலை எமது கல்லூரியிலும் சிறப்புப்பெற்று விளங்குகிறது.

உலகத்தில் மிக்க மேன்மையான இசைக்கலையைத் தெய்வீகக்கலையென்று கூறுகின்றார்கள். பண்டிதர்கள், பெரியோர்கள், பாமரர்கள், சிறுவர்கள், முதலியவர்களுக்கும் ஏன் மிருகங்கள் தாவரங்களுக்கும் இன்பத்தைத்தரக்கூடிய இந்த மேன்மையான இசைக் கலை கல்லூரியின் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வந்திருந்த போதிலும் கட்டாய பாடமாக இதைக்கொண்டு வராத படியால் கல்லூரியில் எட்டாம் வகுப்பு வரைப்பொதுப்பாடமாகக் கற்பிக்கப் பட்டது. ஒன்பதாம் வகுப்பில் மாணவர்கள் அழகியற் பாடங்கட்குப் பிரிக்கப்படும் போது இந்தப் பாடத்தைச் சிறுபகுதியினரே தேர்ந்தெடுத்துக் கற்றார்கள். அத்தோடு இதன் பயன்பாடு கல்லூரியில் நடைபெறும் விழாக்கள், கொண்டாட்டங்களில் தான் மாணவர்கள் உணரக்கூடியதாகவிருந்தது. 1972-ம ஆண்டிலேயே கல்விச்சீர்திருத்தத்தில் இசைக்கலையைக் கட்டாய பாடமாகக் கொண்டு வரப்பட்டது. 1981ம் ஆண்டுக்கல்வி வெள்ளையறிக்கையில் அழகியற் பாடங்களுக்காக நடைமுறைத் தமிழ் அல்லது நடைமுறைச் சிங்களம் கற்கலாம் எனக் கூறப்பட்ட போதும் 1972ம் ஆண்டு நடைமுறையே இன்றும் கூடிய செல்வாக்குப் பெறுகின்றது. எனினும் கல்லூரியில் படிப்படியாக முன்னேற்றமடைந்த இந்த இசைப் பாடம் தற்போது உயர்தரவகுப்பிற்கும் ஒரு பாடமாகக் கொண்டு வரப்பட்டு பல்கலைக்கழகம் வரை மாணவர்கள் கற்கும் வாய்ப்பு வளர்ந்துவிட்டது.

எமது கல்லூரி இந்துக்கல்லூரி என்ற வகையில் கல்லூரியின் ஆரம்ப காலத்திலிருந்தே இசையும் இணைந்து வளர்ந்து வளம் பெற்று வருகிறது. கல்லூரி தொடங்கும் போதும், முடியும் போதும் தேவார இசையுடன் ஆரம்பித்து அதனுடன் முடிவடையும் மரபு இன்றும் எமது கல்லூரியிலிருந்து வருகிறது. இதனோடு கல்லூரிக்கெனத் தனியான கல்லூரிக்கீதமும் எமது மாணவியர்களால் இசைக்கப் படுகின்றது. முக்கிய விழாக்களிலும், கொண்டாட்டங்களிலும் இசை தனியிடம் வகிக்கின்றது. வெள்ளிக் கிழமை, தைப்பொங்கல், சிவராத்திரி, நவராத்திரி போன்ற சமய விழாக்களின் போது பண்ணிசை, பிரார்த்தனையில் தோத்திரப்பாடல்கள் என்பன முக்கிய இடத்தைப்பெறுகின்றன. இதனோடு சமகாலப் பாடல்கள், சினிமா, எழுச்சிப்பாடல்களும் விழாக்களில் பெரும் பங்கு கொண்டுள்ளன. 1988 ம் ஆண்டிலிருந்து மேற்கத்திய (பாண்ட்) குழு வாத்திய இசை கல்லூரியில் அறிமுகஞ் செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து கல்லூரி இசை வரலாற்றில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது விளையாட்டுப் போட்டி அணிவகுப்புக்களின் போதும், பரிசளிப்புவிழா, தமிழ்த்தின விழா போன்ற கொண்டாட்டங்களின் போதும் ஆங்கிலத் தின விழா பிரியாவிடை வைபவங்களிலும், பிரமுகர்களை வரவேற்று உபசரிக்கும் போதும், இக்குழு வாத்திய இசை நிகழ்ச்சிகளைச் சிறப்பிக்கப் பெரிதும் உதவி வருகின்றது.

எங்கள் கல்லூரியானது பெண்கள் கல்லூரியாக அமைந்த காரணத்தால் இசைவளம் பெருகுவதற்கான வாய்ப்பு இசைவாகவே அமைந்துள்ளது. பெண்கள் இயல்பில் இனிமையான குரல்வளத்தைப் பெற்றிருப்பதும் இசைக்கலையை வளர்க்கப் பொருத்தமானதே இதனால் பெண்பிள்ளைகள் தேவார தோத்

திரப் பாடல்களை இசையுடன் பாடப் பயிற்சி அளிக்கப்படுகிறது. குரல்வளம் இல்லாதவரும் நாளாந்த தேவார, பண்ணிசைப் பாடல்களை நன்கு அறிந்தவர்களாக இருப்பதற்கு நிறைய வாய்ப்புக்களை எமது கல்லூரி இசைத்துறை வழங்கி வந்துள்ளது. இசைக்கலை வரலாற்றில் வீணை, வயலின், மிருதங்கம், ஆர்மோனியம், ஆர்கன், மெலோடிக்கா அக்கோடியன் போன்ற இசைக்கருவிளை மீட்டும் ஆற்றல் பெற்ற மாணவிகளும் உருவாக்கப்பட்டுள்ளனர். மேற்கத்திய இசைத்துறையில் மெலோடிக்கா, ட்ரம்ஸ், ஆர்கன், சிம்பல் போன்ற இசைக்கருவிகளும் மீட்டப்பயன்படுத்தப்படுகின்றது. வாய்ப்பாட்டு இசையைப் பொறுத்த வரை ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பயிலுகின்றனர், வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சையை நோக்கமாகக்கொண்டு, பாடசாலையில் ஒரு பாடமாகவும், சுயவிருப்பின் பேரிலும் இசைக்கலை மாணவிகளிடையே நாட்டம் மிகுமொரு கலையாக இன்று எமது கல்லூரியில் வளர்ச்சி பெற்றுத் திகழ்கிறது. இதனோடு வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சை, கல்வித்திணைக்களத்தினால் ஆண்டுதோறும் குறித்த பாடத்திட்டத்திற்கமைவாக ஒழுங்குற நடாத்தப்படுகிறது. எமது கல்லூரியிலிருந்து இருநூற்றிற்கு மேற்மட்ட மாணவர் பரீட்சைக்குத் தோற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். 1992ம் ஆண்டிலிருந்து இசை க. பொ. த உயர்தர வகுப்பில் கற்பிக்கப்படும் ஒரு பாடமாகத் திகழ்வதுடன் இப்பாடத்தை அதிக மாணவிகள் விரும்பிக் கற்கின்றார்கள். இசைத்துறையில் உயர்கற்கை வாய்ப்புக்களும் இதற்கு ஒரு காரணமாகும். இராமநாதன் நுன்கலைக் கல்லூரி, மட்டக்களப்பு இசைக் கல்லூரி போன்றவற்றில் உயர்பட்டப்படிப்பு வாய்ப்பு இசைக்கு ஏற்படுத்தப்பட்ட காரணத்தினால் இன்று எமது கல்லூரியிலும் உயர்தர மாணவியின் கற்கைப் பாடநெறிகளுள் சங்கீதப் பாடமும் இணைந்து விட்டது. இதற்கு மாணவரின் இசையார்வமும் எமது தற்போதைய இசையாசிரியை செல்வி. இந்திராணி தம்பையாவின் ஊக்கமும் ஆதரவும் ஒத்துழைப்புமே காரணமாகும்.

இசைக்கலையை எமது கல்லூரி இவ்வாறு வளம்படுத்திச் செல்வதினால் ஒரு வளமான இந்து சமுதாயத்தைக் கட்டிக்காப்பதில் தனக்கெனத் தனியிடத்தைப் பெறுகின்றது என்றே கூறவேண்டும். மாணவர்களிடையே இன்றைய நிலையில் மனவெழுச்சி வளர்ச்சி பிள்ளைகளின் வளர்ச்சியுடன் மாறுபட்டுச் செல்லும் போக்கினை நாம் அவதானிக்க முடியும். இந்நிலையில் இசைக்கலையில் ஈடுபாடுடைய மாணவியரை இத்துறையிற் செலுத்துவதன் மூலம் அவர்களின் உள்ளார்ந்த இசையாற்றலையே வெளிக்கொண்டு வருவதற்கும் அவர்களின் ஆன்மீக நாட்டத்தை மேம்படுத்துவதற்கும் இசைத்துறை பெரும் வாய்ப்பளிக்கின்றது. செவிக்கு இன்பந் தரக்கூடிய இக்கலையைக் கல்லூரி மாணவர்கள் கற்பதனால் நற்பண்புகளான ஒழுக்கம், அமைதி, பொறுமை, பணிவு, சமயத்துறையில் ஈடுபாடு, இரசனை போன்றவை வளர்கின்றன. இதனால் இந்துக் கலாசாரம் எமது கல்லூரி மூலமாகப் பேணப்பட முடிகின்றது.

இசைக்கலையை ஒரு பாரம்பரியக்கலை இனிமையான கலை என்பதனை எடுத்து விஞ்ஞான ரீதியில் நோக்கும் போது அது எமக்குப் பயன்தரும் கலையாய் விளங்குகின்றது. இசையை ஒழுங்குறக் கற்பதனால் சுவாசப்பைகள் விரிவடைந்து சுவாச உறுப்புக்கள் பலமடைந்து இதயத்தைப் பலப்படுத்திச் சரிவர இயங்கச் செய்கின்றது. குரல்வளை விரிந்து குரல் வளையிலுள்ள அசுத்தங்கள் வெளியகற்றப்படுகின்றன. இசைத்துக் கொண்டே இருப்பதனால் மனிதன் இயல்பாகவுள்ள கவலைகளை மறக்கின்றான். இந்த வகையில் விஞ்ஞான ரீதியிலும் உடலியல் மேம்பாட்டிற்கு இசை உதவுகின்றது

எமது கல்லூரியில் இசைத்துறை வளர்ச்சி பெற்று வருகின்றது எனினும் இங்கு இசைவளங்கள் சரிவரக் கிடைப்பதில்லை. வீணை, வயலின், மிருதங்கம் போன்ற பாரம்பரிய இசைக்கருவிகள் ஒன்று தானும் இல்லை. இது ஒரு பெருங்குறைபாடாகும். அனேக மாணவரிற்கு இக்கருவிகளை விரும்பிக்கற்கும் விருப்பு இருப்பினும் வாய்ப்பு இல்லாதிருப்பது கவனத்திற்குரியதாகும். எமது கல்லூரிக்கெனத் தேவார, பண்ணிசை ஓதும் குழுவொன்று காலாகாலமாக இருந்து வருகின்றது. பக்திப்பாடல், பஜனை போன்றவற்றிற்கு இது உதவி வருகின்றது. இக்குழு இசை ஆசிரியரின் கண்காணிப்பில் பயிற்றுவிக்கப்பட்டதாயுள்ளது. கோயில்கள், கல்லூரியின் விசேட கலை நிகழ்ச்சிகள், பிரார்த்தனைகள் என்பவற்றில் இக்குழு பங்காற்றி வருகின்றது. இதனோடு நடனம், நாடகம் போன்ற கலைகளிற்கும், கலை நிகழ்ச்சிகளிற்கும் கல்லூரியின் இசைத்துறையே தனது முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கி அக்கலைகளையும் வளர்ச்சி பெற ஆதரவு நல்குகின்றது

எமது கல்லூரியின் கீதம் செல்வி. சு. சரவணமுத்து அவர்கள் அதிபராக இருந்த காலத்திலே வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கமலா பெரியதம்பிப்பிள்ளையினால் ( நாகமுத்து ) இயற்றப்பட்டு கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற திருமதி. சு. முத்துத்தம்பியவர்களால் இசையமைக்கப்பட்டு, பல நெடுங்காலங்களாக இசை இலக்கணங்களுடன் இன்றும் இசைக்கப்பட்டு வருகின்றது. நான் அறிந்த வகையில் மிக நீண்ட காலமாக இக் கல்லூரிக்கீதம் சிறப்பு நிகழ்ச்சிகளின் போது மாணவியரால் இசைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கவொரு அம்சமாகும். நாடளாவிய வகையில் எம் கல்லூரியின் இசைக்கலை பிரசித்தி பெற்றமைக்கு 1990 ம் ஆண்டில் ஆசிரியை செல்வி கோமதி. வேலுப்பிள்ளையினால் தயாரிக்கப்பட்டு ரூபவாகினியில் ,, கோசலை மைந்தன் ,, என்னும் தலையங்கத்தில் ஒளிபரப்பப்பட்ட வில்லிசை

நிகழ்ச்சி சான்றாகின்றது. எமது கல்லூரிச்சின்னத்திலும் இசைபிரதான இடம் பெற்றிருப்பது ஒரு முக்கிய அம்சமாகும். நடராஜத்திருவுருவத்திலுள்ள உடுக்கும் மழுவும் இதன் சின்னத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இறைவனின் திருக்கரத்தில் உடுக்கேந்திய திருக்கரம் ஐந்தொழில்களில் படைத்தலைக் குறிக்கின்றது. இது போல எமது கல்லூரியும் நல்ல இந்துப் பண்பாட்டுடன் கூடிய இந்து மகளிரைப் படைக்கும் என்று கருதுவது சாலப்பொருத்த முடையதாகும்.

இந்துமதத்தில் இசை எத்தகைய மேன்மையுடையதாய் விளங்குகின்றதோ அத்தகைய மேன்மையை இந்துக்கல்லூரியாகிய எமது கல்லூரியும் கொண்டு விளங்குகின்றது. இசையைத் தனித்து விட்டு எமது கல்லூரியின் வரலாற்றை, வளர்ச்சியை மதிப்பிடுவது என்பது இயலாததொன்றாகும். இந்த வகையில் எல்லாக்கலைகளிற்கும் இருப்பிடமான இசைக்கலை எமது கல்லூரியில் என்றென்றும் வாழ வேண்டுமென்று அதன் மூலம் எமது கல்லூரியும் இங்கு வாழ் இந்துக்களும் சீர்பெற்றோங்க வேண்டுமென்றும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகிறேன்

சகிலா துரைராஜா
94' கலைப்பிரிவு

# பூலோக கற்பகதரு

தேவலோகத்தில் அரியதொரு மரம் உண்டு. அதன் பெயர் கற்பகதரு. அந்த மரம் யார் எதை விரும்பினாலும் அதைக்கொடுக்குமாம் அதேபோன்று பூலோகத்திலும் அரியதொரு மரம் உண்டு. அதன் பெயர் பனை. அதனால் அதனை பூலோக கற்பகதரு எனக் கூறுவார்கள்.

பனை தன் அடி தொடக்கம் முடிவரை பல நூறு பயன்களைத் தருகின்றது. பனையின குருத்தோலைகள் சித்திர வேலைப்பாடுடையன, பல பொருட்களைச் செய்யப் பயன்படுகின்றது பச்சைஓலை வேலியடைக்கவும், வீடுவேயவும், மாடுகளுக்கு தீனியாகவும் பயன்படுகின்றது. காவோலைகளும் வீணாவதில்லை விறகாகின்றன. ஓலையின் மட்டை வேலியடைக்கவும் விறகிற்கும் பயன்படுகின்றது. பனையின் இளம்பிஞ்சு நுங்கு எனப்படும். நுங்கு மிகவும் சுவையான பானம். நுங்கு முற்றிப் பனம்பழம் ஆகின்றது. பனம் பழமே பனையின் பிரதானம் எனலாம். பனம் பழத்தை கறந்து வடிகட்டி உணவாக உட்கொள்ளலாம் பனம்பழத்தின் சாற்றைக் கறந்து பாயிலே தடவி காயவிட்டுப் பனாட்டு செய்வார். ஆவணி மாதத்தில் பனங்கொட்டைகளை பாத்திகளில் இட்டு மண்ணால் மூடி விடுவார்கள். தை அல்லது மாசி மாதத்தில் கிழங்கை கிண்டி எடுப்பார்கள். கிழங்கை அவித்து சாப்பிடுவார்கள். கிழங்கை இடித்து மாவாக்கி ஒடியல்மா செய்வார்கள். ஒடியல் மாவிலிருந்து ஒடியற் கூழ், பிட்டு என்பன செயவார்கள். இவை புரதச்சத்து மிகுந்த உணவுகள். இவையெல்லாம் பனம்பழம் எமக்குத்தரும் பரிசில்கள்.

பனம்பாளையைச்சீவிக் கள்ளும். பதநீரும் இறக்குகிறார்கள். பதநீரிலிருந்து பனங்கட்டியும் பனஞ்சீனியும் செய்வார்கள். பனையைத்தறித்துச் துலாச் செய்வார்கள். சீவிய மிச்சத்துண்டுகளும் வீணாவதில்லை. விறகாகின்றன. இவ்வளவு பயனைத்தரும் பனையைப் 'பூலோக கற்பகதரு' என்று கூறுவதில் எவ்வித மாற்றமும் இல்லை. பனை வரண்ட பிரதேசங்களில் நன்றாக வளரும். இலங்கையின் வடக்குமாகாணங்களில் பனை அதிகமாக உள்ளது பனையிலிருந்து நவீன பொருட்கள் பல செய்யலாம் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன இதற்கு நன்றிக்கடனாகப் பனையை அழியவிடாது பேணிப்பாதுகாத்தல் எமது கடமையாகும். பனையின் பயன் கருதி நட்டாயிரம் பட்டாயிரம் என்பர்.

பூரணி ஞானஸ்கந்தன்
ஆண்டு 6 A

# விளையாட்டின் மகிமை

'' திடகாத்திரமான உடலில்தான்
திடகாத்திரமான உள்ளம் உண்டு ''

திடகாத்திரமான உடலுக்கு உடற்பயிற்சி அவசியம் இதன் மூலம் ஒருவரை உடலில் உள்ளத்தில் உயரிய ஒழுக்கத்தில், ஆன்மீகத்தில் வலிமை பெற்றவராக உருவாக்க முடியும். விளையாட்டு வீரன் ஒருவனால் நேர்மையுடன் நிற்கவும், தைரியமாக இருக்கவும், சற்றும் பிறழாத நீதிமானாகவும், தோல்வி கண்ட இடத்து துவளாமல் வாழவும் முடிகின்றது.

தன்னிடமுள்ள தீயகுணங்களையும், சோம்பேறித்தனத்தையும் விளையாட்டின் மூலமே விரட்டி விடும் திறன் விளையாட்டு வீரனுக்குரிய தனிப் பெரும் பண்பாகும். விளையாட்டுக்கள் யாவற்றிலும் தலை சிறந்த வெற்றியாக மிளிர்வடைவது இதுவல்லவா?

மகாகவி பாரதியார் கூட விளையாட்டு மகிமையை உணர்ந்து

'' ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா ''

என்று பாடியுள்ளார்.

விளையாட்டின் மூலம் குறிப்பிட்ட நேரத்தில் பல திறன்களை ஒரு வீரனால் பெற்றுக்கொள்ள முடிகின்றது. நேரத்தின் பெறுமதியை அறிந்து விளையாடுவதன் மூலம் நாம் வாழ்க்கையின் ஒவ்வோர் கணத்தையும் பொன்னான நேரமாக உருவாக்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெறமுடிகின்றது. குறிப்பிட்ட ஓர் நேர எல்லைக்குள் ஓர் வேலையை செம்மையாகவும், திறமையாகவும் ஆற்றுந்திறன் ஓர் விளையாட்டு வீரனிடம் உருவாகின்றமையால் எந்த ஓர் அதிசயமும் இல்லை.

தினமும் உடற்பயிற்சி செய்பவனை எந்நோயும் அணுகமாட்டா விளையாட்டின் மூலம் உடல் மட்டுமல்ல உள்ளமும் புத்துணர்ச்சி பெற்றுத் திகழ்கின்றது. விளையாட்டின் மூலம் நாம் பெறும் ஆனந்தம் உள்ளத்திலே உள் அமைதியை ஏற்படுத்தி சிந்தனா சக்தியை வளர்க்கின்றது. இதன் மூலம் குருதிச் சுற்றோட்டம் சீராக நடைபெறுவதுடன், மூளையை சுறுசுறுப்பாக இயங்கச் செய்கின்றது. இதனால் விளையாட்டின் மூலம் மாணவர்களுக்கு கல்வியிலும் பெருக்கமும், விருப்பும்ஏற்படுகின்றது. விளையாட்டானது நாம் கல்வியிலே மேம்படுவதற்கு ஓர் வழிகாட்டியாகத் தோற்றமளிக்கின்றது. கல்வியிலே மேம்பட்டுத் திகழ்வோரில் பெரும்பாலானோர் விளையாட்டிலும் திறமையுடையவராகக் காணப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

இவ்விளையாட்டுக்கள் யாவும் இரண்டு வகைப்படும் அவையாவன உள்ளக விளையாட்டு, வெளியக விளையாட்டு என்பனவாம். உள்ளக விளையாட்டுக்களான சதுரங்கம் ஆடல், கரம் விளையாடல், மேசைப்பந்து என்பனவாம். இவ்வுள்ளக விளையாட்டுக்கள் மனிதனின் உளரீதியான உறுப்புக்களினை வலிமையடையச் செய்வதாகும். மனிதனின் சிந்தனையை ஒரு நிலைப்படுத்தி சிந்தனா சக்தியை வளர்ப்பதற்கு ஆதாரமாக விளங்குபவை இவ்வுள்ளக விளையாட்டுக்களாகும்.

வெளியக விளையாட்டுக்களாவன வலைப் பந்தாட்டம், கரப்பந்தாட்டம், பூப்பந்தாட்டம், துடுப்பெடுத்தாட்டம் என்பனவாகும் இவ்விளையாட்டுக்கள் மைதானத்திலே இடம் பெறுவதுடன் விளையாட்டு வீரன் ஒருவனின் வெளிஉறுப்புக்களினை வன்மை பெறச்செய்கின்றது. இவ்வெளியக விளையாட்டுக்கள் குழுக்குழுவாகவே விளையாடப்படும்.

விளையாட்டு வீரன் ஒருவன் விளையாட்டுக்கள் மூலம் பல வேற்றுநாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதன்மூலம் அவன் உலகியல் விடயங்கள் பலவற்றை அறிந்து கொள்ள முடிகின்றது. மேலும் வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு இன மக்களோடு விளையாடும்போது இனவேற்றுமையற்ற ஓர் ஒற்றுமைப் பண்பு ஏற்படுகின்றது. இதன்மூலம் ஒரு விளையாட்டு வீரனானவன் எதிர்கால வாழ்க்கையிலே சமூகத்துடன் கூடிவாழும் ஓர் உளப்பாங்கினை அடைந்துவிட முடிகின்றது விளையாட்டின் மூலம் விளையாட்டுவீரன் ஒருவன் அதனால் ஏற்பட்ட ஆர்வத்தின் உந்துதலினால் வானொலி, தொலைக்காட்சி போன்றவற்றின் மூலமும் விளையாட்டு பற்றிய பூரண அறிவைப்பெற்றுக் கொள்கின்றான்.

வாழ்க்கைக்கு மிகவேண்டிய பெரும் பொக்கிஷம் சகிப்புத்தன்மை ஒன்றேயாகும் இச்சகிப்புத் தன்மையின்மையால் மனிதன் அனுபவிக்கும் வேதனை அளப்பரியது. இச்சகிப்புத்தன்மையை நாம் பெற்றுக் கொள்வதற்கு மூலாதாரமாக விளங்குவது இவ் விளையாட்டேயாகும்.

சுவாமி விவேகானந்தர் இளைஞர்களை விழித்துப் பின்வருமாறு கூறுகின்றார்.

''நீங்கள் நன்றாக விளையாடுங்கள்
இவ்விளையாட்டின்மூலம் சுலபமாகப்
பேரின்பத்தை யடையலாம் ''

இவ்வுடற் பாவனை மூலம் ஒருவன் தன்னைத் தானே வெளிப்படுத்தி அனுபவரீதியான அறிவினை பெற்றுக்கொள்ள முடிகின்றது. இதனையே தத்துவ ஞானியான சோக்கிரற்றீஸ்

''உன்னையே நீ அறிவாய்'' என்கின்றார்.

உடற்பயிற்சியின் மூலம் ஆரோக்கியமான உடலைப்பெறுவது மட்டுமல்லாமல் கட்டமைப்பான அழகான வாளிப்பான உடலைப்பெற்று இம்மைப் பயனை மட்டுமல்லாது முக்தியின்பமாகிய மறுமைப் பயனையும் நாம் அடையலாம்.

''உனக்கு இறைவன் தந்தது பெரும் பொக்கிஷமாகிய இவ்வுடல் இதை ஆரோக்கியமாகப் பேணி மற்றவர்களுக்கு உதவ வேண்டியது உன் கடமை'' என்கிறார், பாபா.

செல்வி. சுகந்தி ஈஸ்வரிநாதன்
95' கலைப்பிரிவு

விஞ்ஞானத்தின் புனிதமான கடமை
உண்மையை நாடுவதாகும்

— சரோஜினிதேவிநாயிடு —

# பெண்ணினம் அன்றும் இன்றும்

பெண்குலம் காக்கும் கல்லூரித்தாயே
பெண்நிலை தேடும் நினைவினில் நீயே கோபுரம்
பொன்விழாக் காணும் புகழ் மேன்மேலும் வளர
பொன்னடி தாழ்ந்து வணங்குவேனம்மா

நன்று நடத்த விரும்பும் நல் ஆசிரியர் குழாமே பெண்வாழ
என்றும் அருள்செய்யும் முறைமையினால் முன்வைத்தீர் எனையும்
கவிபாடமுன்னர் மனமார வாழ்த்தியுமைக் கரம்கூப்புகின்றேன்
பிழைகளெல்லாம் பொறுத்திடுவீர் கவிதை கானம் பாடுகிறேன்

அன்றைய பெண்கள் அறிஞர் அவையிலே
அன்றைய கால அறிவுச்சுடராய் அமர்ந்திருந்தனரே
ஆராய்ந்தனர் தமிழை அடக்கினர் எதிரியை ஆயினும்
அவர்கள் விரல்விட்டெண்ணும் தொகையினர் காண்

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்று
ஔவை அருள வில்லை ஆரோ அருளினான்
அந்நியனாம் மொகலாயன் ஆட்சியிலே
ஆரணங்கை ஆண்கள் அற்பமாய் மதித்தனர்

அவர்நலம் கவினுறு காட்சியாய் மட்டும் கண்டனர்
அவர்திறம் அறிவுடைப் பண்டமாய் அறிய முயலவில்லை
அவர்க்கொரு அரண் என அகத்திலே இருத்தினர்
அன்போடு காத்தபோதும் அடிமை இயந்திரமாய் நோக்கினரே

ஆனாலும் பெண்ணின் திறன்கள் இலக்கியம் பேசும்
அவைஎன்றும் மறைக்கப்பட்டாலும் மறுக்கமுடியாதவை
அருந்தமிழை ஆய்ந்த ஔவை பொன்முடி காக்கைபாடினி
அவையினில் பேர்பெற்று ஓங்கினர் அந்நாள்

வெற்றிகள் கொடுத்த வீரத்தாயராய் விளங்கினர்
வேலேந்திப் போரிட்ட வீரராணி யான்சி நம்குலமே
மனைத்தக்க மாண்புடையளாகி வளத்தக்க வாழ்ந்து
உலைவைக்க வழியிலாத நிலையிலும் முலையூட்டி மகிழ்ந்தனள்

சிலரினில் கண்ட திறன்மிகு சாதனை கொண்டது அக்காலம்
பலரினில் காணும் பாரதி கனவு மலர்ந்தது இக்காலம்
கல்வியில் சிறந்து கலைகள் வளர்த்த பெண்குலம்
தங்கியிருக்கும் நிலைதனை மாற்றித் தாங்கிநிற்கும் தாய்க்குலம்

இன்று நம்பெண்ணில் தாயும் அவளே தந்தையும் அவளே
இன்று எமது தரணி ஆளும் மங்கையுமவளே
எங்கு திரும்பினும் பெண்குலம் நடத்தும்
திறன்மிகு ஆட்சி இல்லையேல் புவியில்லை

கல்விக்களம் கண்டு கற்றதன் படிநின்று
எச்சம் தனை வளர்க்கும் சீலம் காண்கிறோம்
சாந்துணையும் கல்வியால் தனை வளர்த்து
சமுகத்திற்குக் கைகொடுக்கும் கரமே பெண்ணினம்

உயர் கல்வி வளர்க்கும் பொன் விழாக் கல்லூரி
உரம் கொண்ட விளைநிலமாய் வாய்த்ததெம் புண்ணியம்
பட்டங்கள் ஆண்டும் சட்டங்கள் செய்தும் புதுமைகண்டபெண்
புகும்வாழ்வு சிறந்தது புதுமலர்வு கண்டது

கலாசாரம் பண்பாடு கட்டிவளர்த்த பெண்கல்வி
வைத்தியராய் பொறியிய லாளராய் தாமுயர்ந்தபோதும்
பெண்மைக் குணமெதுவும் குன்றா மணிவிளக்காய்
இன்றெம் வாழ்விற்கு வித்திடும் பெண்குலம்

காலத்தின் போக்கிற்குப் பதில்கொடுக்கும் வகையிலே
எடுக்கின்றார் துவக்கினை எங்கள் பெண்குலம்
ஓட்டுகின்றார் வாகனங்கள் ஏக்கம் ஏதும் இன்றியே
எங்கள் மரபு ஒழித்திருந்து அடிமையான காலம்போய்
இன்றெமக்கு விடிவளிக்க விழித்தெழுந்த பெண்ணினமே

வீராங்கனை என்று வீரனுக்கு எதிர்ப்பாலாய்
கூறியதன் காரணம் வீரத்தோடு இருந்தமையே
நிமிர்ந்து நடக்க நேரேபார்க்க நிமிர்ந்த ஞானத்தோடு
பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்
பாரதி கூறிய புதுமைப்பெண்ணே இக்காலப்பெண்

மெல்லியள் என்று பெண்களைச் சொல்லி வைத்தது இலக்கியம்
இலக்கியத்தை வென்றுமே இலட்சியம் படைக்குது பெண்ணினம்
மலர்க்கரம் யாவுமே மரத்துப் போய்விட்டது
மலர் கொய்த கரம்யாவும் சிரம் கொய்யப்போகுது
அன்றைய நாளைப்போல் ஒருநாளை பிறக்காதோ

அன்றைய நம்பெண்கள் இன்றைக்கும் வாராரோ
பெண்களெல்லாம் இப்புவியின் கண்களெனக் கண்டோம்
அக்கண்ணே கலங்கி நின்றால் நமதுநிலை இயம்பலாமோ
பெண்கலெல்லாம் பரம்பரையில் ஒருவரென எண்ணிடுவீர்
பெண்களெல்லாம் பேயல்ல பெருமை மிகு தெய்வங்களே

தாமரைச்செல்வி பாலசுந்தரம்
ஆண்டு 13 கலைப்பிரிவு

நாக்கு கொடிய மிருகம்;
ஒரு முறை அவிழ்த்து விட்டால்
கட்டுவது கடினம்

— அரிஸ்டாடில் —

# ராடார்

வேறு உபகரணங்களின் உதவியின்றி இருளிலோ தொலைவிலோ உள்ள கண்களுக்கு புலப்படாத ஒரு பொருளைக் கண்டு கொள்வதற்காகவே வானொலி அலைகளை உபயோகப்படுத்தும் ஒரு இலத்திரனியல் உபகரணமே '' ராடார் ''. குறிப்பாக பொருளின் நிலையம் இடப்பெயர்வு, வேகம், பெயர்வின் திசை என்பவற்றைத் தீர்மானிக்க வல்லது. Radio detecting and ranging என்பதன் சுருக்கமே ராடார் என்பதாகும். அதாவது தொலைவில் உள்ள ஒரு பொருளை வானொலி அலைகள் மூலம் கண்டுபிடித்தல் என்பதாகும்.


## அடிப்படை எண்ணக் கருக்கள்
( Basic Concepts )

வானொலி ஊடு கடத்தல் உணர்கொம்பிலிருந்து வானொலி அலைகள் கதிர் வீசப்படும்போது ஓர் குறித்த பெரும் பொருள் குறுக்கிடின் சக்தியின் பகுதி பொருளில்பட்டு பெறுதற் கருவிக்கு (Receiver) மீளத்தெறிப்புறுகிறது. இத் தெறிப்பே தெறிப்புற்ற அலை எனப்படுகிறது. தெறிப்பினை ஏற்படுத்தும் பொருள் இலக்கு ( Target ) எனப்படுகிறது. துணியப்பட்ட இலக்கிலிருந்து பெறப்படும் எதிரொலிகள் '' இலக்கின் சமிக்ஞைகள் '' ( Target Signal ) அல்லது '' சாதாரண சமிக்ஞைகள் '' எனப்படுகிறது.

ஓர் இலக்கின் தூரமானது வானொலிக் கடத்துனியிலிருந்து வானொலி அலை இலக்கிற்கும் பின் பெறுதற் கருவிக்கும் தெறிப்படுகையில் எடுக்கும் நேரத்தைக் கொண்டு கணிக்கப்படுகிறது. வானொலி அலை ஒளி அலையைப்போல் ஓர் குறித்த வேகத்தில் பெயர்கின்றமையால் இது சாத்தியமாகின்றது ஏறத்தாழ ஒரு மைக்றோ செக்கனிற்கு 300 மீற்றர் அதாவது 1000 அடிகள் செல்கிறது.

## துடிப்பின் மட்டிசைத்தல்
( Pulse modulation )

தொடர்ச்சியாக ஒரு வானொலிக் கடத்துனி இயங்கினால் தெறிக்கப்பட்ட சமிக்ஞைகள் தொடர்ச்சியாகக் கிடைக்கும். அந்நேரம் சமிக்ஞையின் ஒரு குறித்த பகுதியை ஒரு பிரத்தியேக வானொலி சமிக்ஞையுடன் இணைக்க முடியாததாகிறது. ஆகையால் சமிக்ஞைகள் பெயரிடப்படவேண்டியுள்ளது. துடிப்புத் திருத்த முனைவின் ஒருவகை ராடார் சமிக்ஞைகளை தாழ்வான, உச்சமான சக்தி துடிப்புக்களாக வெளிவிடப்படும் முறையாகும். இங்கு தாழ்வான துடிப்புக்களாக எதிரொலிகள் மீள்கின்றன. துடிப்பினை ஏற்கையில் வானொலி ஊடு கடத்தி இயங்காது நடைமுறைப்படுத்தலால் ஏற்படும் சமிக்ஞை கடத்தப்பட்ட பிரத்தியேக துடிப்புடன் இணைக்கப்பட முடியும். இங்ஙனம் துடிப்பின் மட்டிசைத்தலுடன் அமைக்கப்பட்ட ராடார் '' துடிப்பு ராடார் '' எனப்படும். இதுவே முதல் பாவிக்கப்பட்டதும் இன்று வரை உபயோகத்திலுள்ள வகையுமாகும். துடிப்பு ராடார் ஊடுகடத்தியும் பெறுதற்கருவியும் வேறு வேறு நேரங்களில் தொழிற்படுவதால் ஒரே சமிக்ஞை உணர்கருவி 2 ற்கும் பதிலாக பாவனை செய்யமுடியும். ஓர் உணர் கருவியை தாழ்வான துடிப்புக் கடத்தலின் போது இணைக்கப்பட்டு பெறுதற் கருவிக்கு துடிப்புக்களின் இடைவேளையின்போது தொடுக்கப்படுகிறது. '' டியூப்ளெக்ஸ் '' ( Duplex ) என்ற உபகரணத்தால் இது நிறைவு செய்யப்படுகிறது.



றாடார் கருவி ஒன்றின் அடிப்படைச் சுற்று காண்பிக்கப்பட்டுள்ளது. வானொலி அதிர்வெண்ணின் சக்தி, வானொலி ஊடுகடத்தியிலிருந்து உணர் கருவிக்கு கடத்தலின்போது ஊட்டப்படுகிறது. துடிப்புக் கடத்தப்பட்டபின் எதிரொலியைத் துப்பறிய உணர் கருவி பெறுதர்கருவியுடன் ( வாங்கியுடன் ) பொருத்தப்பட்டுள்ளது. துப்புத்துலக்கப்பட்ட எதிரொலி சமிக்ஞையானது குறிகாட்டி ( indicator ) இடம் ஊட்டப்படுகிறது. இது ஒருவகை தொலைக்காட்சிக் கருவி போன்ற கதோட்டுக் கதிர்குழாய் ( Cathode Raytube ) ஆகும். கடத்தலுற்ற துடிப்பிற்கும் ஏற்கப்பட்ட எதிரலைக்குமிடையிலான நேரத்தை இயக்குநனர் அமைப்பதற்கு இது உதவுகின்றது.

## றாடார் அதிர்வுகள்

ஒரு றாடார் ஊடுகடத்தி குறித்த அதிர்வெண்ணில் வானொலி அலைகளாகப் பாயவிடும்போது ஒரு விநாடிக்கு ஹேட்ஸ் ஆகவோ சுழற்சிகளாகவோ அளக்கப்படுகின்றன. இது '' காவுகை மீடிறன் '' எனப்படும். அனேக றாடார் இலத்திரக் காந்தப் புலத்தில் மைக்றோ வரிசையிலேயே இயங்குவன. அஃதாவது ஒரு செக்கனிற்கு 1,000,000 — 35,000,000,000 சுழற்சிகள்.

2-ம் உலகமகா யுத்தத்தின் போது பாதுகாப்பிற்காக றாடார் அதிர்வெண்கள் குறியீட்டினால் குறிக்கப்பட்டன. 100000 மெகாஹேட்ஸ் X வரிசை எனவும் 3000 மெகாஹேட்ஸ் S வரிசை எனவும் 1000 மெகாஹேட்ஸ் L வரிசை எனவும் 6000 மெகாஹேட்ஸ் C வரிசை எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இருந்தும் இவ் வரிசைகள் தெளிவாக்கப்படவில்லை.

உ-ம்: ஆக 2000 மெகாஹேட்ஸ் உயர் L வரிசை அல்லது தாழ்வு S வரிசை எனப்பட்டது.

## றாடார் வளர்ச்சி

இதன் அடிப்படைக் கொள்கைகள் வளர்ச்சியுறும் மின்காந்த அலைகளின் ( Elcetro magneatic waves ) தன்மையால் அறியப்பட்டுள்ளது

## வரலாறு

1904-ம் ஆண்டு காலப்பகுதியில் ஜேர்மன் பொறியியலாளர் கிறிஸ்டின் கல்ஸ்மேயர் என்பவருக்கு றாடார் அமைவிற்கான முதல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. கப்பலில் இருந்துவரும் வானொலி அலைகளை அறிந்து இனங்காண்பதற்கான ஆய்விலிருந்து அவரது அமைவு பயனளித்தது. எனினும் ஜேர்மன் கடற்படை இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது அமைவு ஒரு மைலுக்கு அப்பாலான தூரங்கட்கு தொழில்நுட்ப வரைவுகள் காரணமாக பயனளிக்கவில்லை. எனினும் '' மைக்கேல் பரடே '' என்ற ஆங்கிலேயப் பொறியியலாளரின் மூலமாக வானொலி அலைகளை அறிந்து, மின்காந்த வரைவிலக்கணத்தை '' ஜேம்ஸ்கிளார்க் மக்ஸ்வெல் '' ன் நுண்கணித ஆய்வுகள் மூலமாகவும் அறிந்தார். பின் 1886-ம் ஆண்டு ஜேர்மனிப் பொறியியலாளர் '' ஹயிர்றிச்சேட்ஸ் " என்பவர் மக்ஸ்வெலின் கொள்கைகளைப் பரீட்சித்து, வானொலி அலைகளை நிரூபித்து வெற்றி கண்டார். ஒளி அலைகளைப் போலவே வானொலி அலைகளும் திண்மங்களால் தெறிப்புறும் என்பதையும் நிரூபித்தார்.

## உலக மகாயுத்தம் 2ற்கு முன்னைய வளர்ச்சி

பெரிய பிரித்தானியா. பிரான்ஸ், ஜேர்மனி, ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் 1930-ம் ஆண்டில் றாடார் ஆய்வுகளும் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டன. முதல் றாடார் செயன்முறைப் பிரயோகம் ஐக்கிய அமெரிக்காவில் 1930 ல் விமானம் ஒன்று வானொலி ஊடு கடத்திக்கும் வாங்கிக்கும் இடையில் குறுக்கிடும் யாதொரு கணத்திலும் திசையறிகருவியில் சமிக்ஞை அதிகரித்ததை கவனித்ததிலிருந்து ஆரம்பமானது.

## உலக மகாயுத்தம் 2இன் போது ஏற்பட்ட வளர்ச்சிகள்

மைக்றோ அலைவலையத்திற்கட்பட்ட றாடார் கற்றைகளை ஒடுக்குவதுதான் உயர்ந்த அதிர்வெண் ஊடுகடத்தியை உபயோகிக்க சாத்தியமானதென ஆய்வாளர் முடிவெடுத்தனர். 1939-ல் மைக்றோ அலை வாங்கியில் உபயோகிப்பதற்காக ( Klyston ) கிளிஸ்ரன் மைக்றோ அலை சமிக்ஞை வகையான கருவி பாவனைக்கு உட்படுத்தப்பட்டது. அதன் வலு வெளிப்பாடு ஊடுகடத்தியின் பாவனைக்குட்படுத்துவதற்கு வெகு குறைவாகவிருந்தது. ஆனாலும் பாவனைக்குட்பட்டது.

## உலக மாகாயுத்தம் 2 ல் அதன் பிரயோகங்கள்

விமான எச்சரிக்கைக்கு றாடார் பிரயோகமாக இருந்தது. தரையிலிருந்தே எதிரி விமானங்களை இனங்கண்டு, பதிலுக்கு போரிட தம் போர் விமானங்களைத் தயார்படுத்த பேருதவியானது. பிரித்தானியரின் றாடார், போர் புரியவரும் விமானங்களை மட்டுமன்றி எக்கண்டத்தில் ஜேர்மன் விமானங்கள் தென்படினும் இனங்காட்டக் கூடியது எனவே யுத்த தந்திரமாக குண்டு விமானங்கள் எதிர்வரும்போது இவை வானிலிடப்படுகின்றன. றாடார் குறிகாட்டியில் ( Indicator ) தம் சண்டை விமானங்களையும் எதிரி விமானங்களையும் பகல்நேரப் படையெடுப்பின் போது ஒன்றாகவே பார்வையிடக்கூடியது. தளத்திலிருந்தே தம் சண்டை விமானங்களை நெறிப்படுத்தற்கான தொழில்நுட்பத்தை விருத்தி செய்திருந்தார்கள். இதனால் விமானச் சாரதி எதிரியைக் கண்டு இடைமறிக்க இயலுமானதாயிற்று. இதனைத் தளக்கட்டுப்பாட்டு இடைமறிப்பு எனப்படும். இத் தொழில்நுட்பம் பகலில் சாத்தியமானதுபோல் இரவில் சாத்தியமாகவில்லை.

### உலக மகாயுத்தம் 2இன் பின்னான வளர்ச்சி

1945-ல் யுத்த முடிவின்பின் இராணுவ ரீதியான றாடார் ஆய்வுகள் குறைந்தன. ஆயினும் இவை விஞ்ஞானிகளால் பரீட்சிக்கப்பட்டன. 1946-ல் புதிய அமைப்பு மூலம் சந்திரனிலிருந்து றாடார் சமிக்ஞைகள் இனம் காணப்பட்டன. செய்முறைப் பிரச்சனைகளைக் கொண்டிருப்பினும் வான்வெளி றாடார், கல்விக்கு ஆரம்பவித்திட்டது. 1958-ல் புதனிலிருந்தும் 1969-ல் சூரியனிலிருந்தும் றாடார் சமிக்ஞைகள் தெறிபட்டு எதிரொலி இனங்காணப்பட்டது. றாடார் வான்வெளி ஆய்வில் வளர்ச்சியடைந்த தொழில்நுட்ப முறைகளால் சில வருடங்களின்பின் மனிதராலாக்கப்பட்ட விண்வெளிக் கிரகங்கள் செல்லும் வழியைக் கண்டுபிடித்தல், பெறுமதி வாய்ந்ததாக கருதப்பட்டு வருகின்றது

செல்வி. சுகந்தி நந்தகோபால்
ஆண்டு 13, உயிரியல்

காகிதத்தில் பேனா வைத்து நீங்கள் எழுதத் தொடங்கு முன் பெண் என்பவளை உங்கள் சொந்தத் தாயாக நினைத்துக் கொள்ளுங்கள். உடனே வறட்சியால் வாடிக் கிடந்த வையகத்திற்கு வானத்திலிருந்து வண்ண மழை பொழிவது போல உங்கள் எழுத்துக் கோலிலிருந்து தூய்மையான இலக்கியம் பொழியும்.

— மகாத்மாகாந்தி —

# Oh Moony!

Oh ! Moony ! how beautiful
you are today !
Very round and fat
Bright and shiny
We are glad to see you
Aren't you happy to see us ?

Every night you change yourself
In shape and size
Small and big, then big and small
One day (or two) you are nowhere
In your face, fair and round today
I see a granny looking down here
What story is she telling us ?

**Kathirgamini Indrarajah**
Year 7 C

# MY TOWN

The name of my Town is Point - Pedro. It's near the Sea. There are four thousand families here. The main occupateon of the people is fishing. Some are farmers, some are traders and some are government Servants.

There are many buildings, There are banks many govevrnment offices and Schools.

All provisions and goods are found in the shops. People need not go out to buy things.

There is a beautiful beach, Now we see many Ships at the jetty. Some are passenger Ships, some are cargo ships. My Town is now famous.

**Markandu Mayooran**
Year 5 A

# Why I want to be a Teacher

For a girl of my bent of mind teaching appears to be the best vocation. Many say that teachers are born and not made. There is now a general feeling that a teacher is poorly paid and that a teacher goes unhonoured and unsung.

I have many valid reasons why I want to be a teacher. I like to advance and widen my Knowledge. I like children. I want to be an innocent child myself all the time I will amuse the children and get amused by them I will learn to be kind, gentle and sympathetie These genuine qualities will make me loved by the children and I shall for ever live in their hearts

A devoted teacher is a maker of men and women. He or she is part and parcel of established efficient schools and colleges. The teacher sows the seed for the upliftment of a literate and powerful community The teacher is the backbone and top root of the community. When the main Root is harmed the Tree of Community with all its branches withers and dies. The Almighty God himself is a Great Teacher, who imparts learning to all his creatures in very subtle manner. The Creator is a Teacher of Teachers, Teaching is positively a vocation and not a profession Hence I want to be a humble teacher of humble children.

**Pathmapiriya Gopalakirshnan**
**Year 10 B**

# ROAD SAFETY

*School Children are the largest number of road users in the world. Every year thousands of people die in road accidents. Hardly a day passes without any accident in some part of the world or Island. Unfortunately a considerable number af the victims are school children. Therefore it is very necessary to teach the children about road safety measures. It is easier to teach them young but they should be taught correctly.*

*Children travel to and from their school in various ways. Mostly in rural areas the children walk to school. But now the most comman mode of transport for school children is the bicycle. Large number of children travel by buses and trains too. The children should be taught to look after themselves on the roads. They must travel safely and at the some time they must allow others to make use of the highway.*

*It is necessary for every child to know about the highway code and the road signs, Most boys and girls take to the road on their bicycles without knowing anything about the rules of the htghway. While riding they should always keep to the left. While walking it is safe to walk on the right hand side of the road facing the on coming vehicles, If there is a pavement we should use it and pedestrian crossings are the safest places to cross the roads*

*Before we cross we must make sure whether the road is clear. Then we must cross the road quickly. It is dangerous far more than two people to walk abreast. We shouldn't play on or near the street*

Those who travel by bicycle should keep their bicycles in good condition A regular check of the brakes is very necessary. Children who travel to schooi by buses and trains should avoid foot board travelling. They may be thrown off the vehicles at dangerous bends. Finally when you take to the road always be cautious alert and courteous,

**Kavitha Gangatharan**
Year 10 'B'

# An incident I can never forget

I remember it was Sunday morning during the last vacation. After one week of continuous rain there was bright sunshine that day. So after break fast my cousin Ranga and I went to wash our clothes at the well. As we don't have electricty our tank is not filled always. However we enjoyed talking and laughing while washing the clothes.

Suddenly the wellsweep came down with a bang! The rope had given way. I was shocked and shattered. It took a few seconds for me to realise what happened. My cousin was not to be seen She had been drawing water. I was so terrified and couidnt even shout Hoping against hope I looked in to the well. My cousin was floating on the water splashing her feet and hands. It was like a bird fluttering its wings "Help!! Help!! " I shouted "Ranga has fallen into the well" But no one heard me. I ran to my mother and told her what happened.

Just then, my uncle who came to see us, rushed to the well. We followed him. He put one foot on the step in side and dived into the well. The next moment he was carrying my cousin on his shoulder A big bucket was lowered into the well and my cousin got into it. She held on to the rope and she was slowly and safely brought out of the well.

But I couldn't understand how her hair wasn't wet. She had not gone under the water at all!

**Sobana Balachandran**
Year 9 C

# A trip to the sea beach

*Though we had a short vacation I enjoyed it very much. My cousin Raji stayed with us during the vacation. Raji was anxious to make a trip to the seabeach. With my father's permission we got everything ready. Mother prepared our lunch packets. We took beach balls bathing suits, towels and spades. We left around seven in the morning on bicycle. Father also accompanied us.*

*When we reached the Point Pedro sea shore we saw the labourers loading and unloading the cargo from the ship. There were a lot of lorries halted at the jetty. The I. C. R. C. ambulance and vehicles were waiting for the patients who had come form colombo after treatment. The men, women and children came there to receive their relatives who had travelled by ship.*

*Then father chose a place where there was clean sand, and we started digging the sand with our spades, throwing beach balls at each other, collecting beautiful shells and generally having a grand time.*

*After we had a cup of tea my father took us to the shallow water and we tried our best to swim. I was a little frightened to swim but we were very much thrilled to be in the water. After the sea bath we enjoyed our lunch. Mather had not prepared such a fine lunch before.*

*But for my bad luck it started to rain with thunder and lightning. This was a sad ending to what we had thought to be a lovely day. We ran for shelter and waited. We decided to go home and reluctantly returned home Even though this was a bit disappointing it was a wonderful and enjoyable day.*

**Nalayini Ariaratnam**
Year 8 B

# Importance of Teachers

Ignorance is a disease, It must be cured, if man, collectively and individually, is to realise his dignity. It is in this field that the services of a qualified teacher need to be requisitioned. This well - intentioned service finds no parallel anywhere on the earth. The solemn duty of imparting knowledge to dispel darkness and doubt, is heavy holy burden that rests solely on the shoulders of a teacher whose importance in society is paramount and dynamic. A teacher, in th true sense of the term, beyond any shadow of doubt, is next to God, and deserves to be respected and honoured with piery and veneration. " Either a Healer or a Teacher be " counselled a sage of Ancient Greece to the youth of his times.

A teacher sacrifices his life for the enlightenment and betterment of the society. A mother's sacrifice, it is correctly spoken of, is primarily directed towards the good of her children, whereas a teacher's sacrifice with no expectation of any return, is directed towards the mental upliftment and physical well - bling of all children under her care and comfort irrespective of caste or creed. A teacher knows every child, every student, his ability, his state of health, his anxieties and every thing that concerns the progress of a youngster. It is the teacher's decication that enraptures. This type of service can verily and easily be described as self - less

One finds inspiration in the observation of a Chinese Philosopher that "Teacher is like a ladder" whereby be portrays that the educational progress of a child, step by step, rung by rung is watched and ably assisted by a well - meaning teacher with keen self - less interest. The reward for such noble service finds its healthy impact on the mind of the teacher when the child comes out with intellectual brilliance in the varied selected fields as Doctors, Engineers, Accountants and many more. In fact, the teacher feels doubly blessed.

It is no exaggeration to say that the teacher's service is almost divine. A nation can never march forward in any sphere, any where, at any time without a teacher says an American Educationist which pronouncement certainly merits deep gratitude. Teachers are the back - bone of be society aud their importance cannot be over - emphasised.

**Miss. Vasuki Chinniah**
**Old Student**

**" To be born a lady is an accident**
**But to die a lady, an achievement "**

# வட இந்து மகளிர் கல்லூரி வாழ்த்து

வாழிய வடஇந்துக் கல்வித் தாயே
வாழிய இந்துநீ வளர்த்திடு பணிதனையே
வாழிய ஈழமும் உன்னால் வளர்பிறைபோலவே
வாழிய வடஇந்து வாழிய வாழியவே.

புலோலியில் பூத்தெடுத்த சைவப் பெரியோர்
புலமையில் பொலிவுடன் மலர்ந்தெழுந்தாயே
நலமிகுநேரம் நல் ஆனியின் அனுசத்தில்
நன்மைகள் பொலிந்திட நலமாய் உதித்தாயே.

கார்த்திகேசப்பா திண்ணையில் உதித்த
கன்னியே இன்றுநீ அறுபத்துநான்காய
கலைகளில் சிறந்தாய் கடலெனப் பரந்தாய்
கற்பக தருவாய்த் தான் காண்கின்றாய்.

சைவமும் தமிழும் சகலகலையும் தத்துவமும்
ஐயமறவே ஆரியம் விஞ்ஞானம் ஆங்கிலமும்
உய்வழி காட்டிடப் பயில்கவெனப் பாவையரை
செல்வழி இதுவென உம்மிடம் தனைச் சேர்ந்தனரே.

கொட்டில்கள் மாற்றிக் கோயிலாய் வெற்றிக்
கொடி தவழ் மாடம் ஆய்கூடம் எனப்பல
நிறுவிய செல்வி சரவண முத்துநீள் வானில்புன்
முறுவல் பூத்து உமக்கு ஆசிகள் பற்பல கூறிடுவரே

கஷ்டங்கள் நஷ்டங்கள் கண்டுநீ தளராய்
கல்மலை என நின்றாய் கச்சிதமாய்
காவியம் படைத்தாய் காலனை வெல்வாய்
கன்னியாய் என்றும் நீ திகழ்ந்திடுவாயே

அனைத்திலங்காபுரி வலைப் பந்தாட்டத்தில்
அனைத்துத் தமிழ் சைவப் பேச்சில் எழுத்தில்
அனைத்துத் தமிழ்க்கலைப் போட்டியில் முன்னின்று
பொற்பதக்கம் பல பொலிவுறச் சூடிநின்றாயே

அனைத்து உயர்தர 'ஜிசிஈ' தேர்வினில்
அணிநடை பயின்று அறிஞரும் போற்றும்
அனைத்து மாநகரக் கல்லூரியோடு சமனாய்
மணியெனத் திகழ்கிறாய் மங்காத்தீபமே

புன்னகை உடனே பொன்விழா அயர்ந்து
நன்மை கொள் சைவத்தின் பண்பொடு மிளிர்கிறாய்
அன்புமலர் தூவி அறிவுத்திறம் போற்றி
அன்னையே உம்மை ஆர்வமுடன் வாழ்த்துகிறேனே

உன்புகழை நான் பாட என்பாடல் போதாது
என்றாலும் உன்னோடு நாற்பத்து ஆண்டு
வாழ்ந்துவிட்டேன் ஆகையினால் என்வாழ்வில்
உன்னை நான் போற்றிப் பாடாது இருப்பேனா?

திருமதி. தெ. செல்வராஜா
( ஓய்வுபெற்ற ஆசிரியர் )

# அந்த நாள் இனி வருமோ

அன்னையே உலகமென நினைத்திருந்த பருவமதில்
ஆரம்பக்கல்வி கற்க அழைத்துவந்த வேளையதில்
அருவியெனக் கண்ணீர்சோரக் கலங்கிய கோலமதில்
அன்புக்கரம் நீட்டியது வடஇந்து மகளிரே

துள்ளித் திரிகின்ற புள்ளி மானெனவே
பாடசாலை முழுவதுமே சுழன்றுநின்ற வேளையதில்
பள்ளிப்படிப்பில் மனம் செல்ல மறுத்துவிட
அள்ளியணைத்து அன்புமொழி பலகூறி
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என்றே
பிஞ்சுமனதிற் பதியவைத்து முன்னேற வைத்த
ஆசிரியர் பசுமைக்கோலம் நினைவிலே நிழலாடும்
அந்தநாள் நினைவுகளும் நெஞ்சோடு உறவாடும்

புள்ளிச் சட்டையோடு பறந்துவரும் சிட்டுக்கள்நாம்
அழகிய பாடல்களும் அபிநயத்தோடு ஆடல்களும்
பயிற்றுவித்து ஆடவைத்து மகிழவைத்த ஆசிரியை
அன்புமுகம் நினைக்கையிலே அனலாகும் நெஞ்சமிங்கே
ஆரம்பக்கல்வி தந்த நினைவினிலே
கனவுகள் பலசுமந்து இடைநிலைக்கு வந்தபோது
கம்பீரமாய் நின்ற பெரியபள்ளி சேர்ந்தோம்
அங்குதான் அதிபரை நேருக்குநேர் சந்தித்தோம்

அன்பில் அன்னைதான் கண்டிப்பில் அதிபர்தான்
அறிவியலைக் கணிதத்தைப் புகட்டுவதில் நிகரில்லை
ஆனாலும் அடியின்வலி தாங்காது துடித்தோம்நாம்
அதிபர்அடி விலையறிந்தேன் ஆசிரியர் ஆனபின்னே
பண்ணோடு பாடல்களைப் பழகியநாள் நினைக்கின்றேன்
பழகுதமிழ் இன்பத்தைச் சுவைத்தநிலை மீட்கின்றேன்
பண்புதரும் சமயவிழாக் கொண்டாட்டம் நினைக்கின்றேன்
பாடசாலை மாணவியாய் மாறும்நாள் இனிவருமோ

பேச்சுப் போட்டியென்ன பண்ணிசைப் போட்டியென்ன
அறிவியற் போட்டிபல கவின்கலைப் போட்டிபல
விளையாட்டுப் போட்டியிலும் ஆர்வமுடன் பங்கேற்று
பம்பரமாய் சுழன்றுநின்ற பருவமது இனிவருமோ
உயர்கல்வி கற்றபோது அறிவியலைத் தேர்ந்தெடுத்து
செய்முறைகள் பலசெய்து பெற்றபல அநுபவங்கள்
சுற்றுலாச் சென்றுநாம் சேகரித்த தகவல்கள்
விஞ்ஞானம் போதிக்க வித்திட்டுக் கொண்டதே

ஆடலும் பாடலும் அறிவியற் கல்வியும்
ஆர்வமொடும் ஆசையோடும் நாம்பயின்ற நாட்களதை
ஆசிரியர் பணிதன்னில் அவரன்பே துணையாக
உயர்ந்தநிலை மறக்கவில்லை அந்தநாள் இனிவருமோ
வெள்ளைச் சீருடையில் வெண்புறாக்கள் போன்று
கிள்ளை மொழியோடு அன்பும் அடக்கமுமாய்
கற்பித்த ஆசானைத் தெய்வமெனப் போற்றிய
மாணவர் குழாம்தன்னை எப்பிறப்பில் இனிக்காண்போம்

உள்ளம் ஊசலாட மீண்டும் நினைக்கின்றேன்
உண்மையில் இனிஒருநாள் வருமோ இந்தநிலை
அடுத்தபிறவி ஒன்று எனக்கிங்கே இருக்குமெனில்
மாணவியாய் மீண்டும் வாழ்ந்திடவே இறைஞ்சுகின்றேன்.

திருமதி. இலக்குமிதேவி கந்தசாமி ( பழையமாணவி )
ஆசிரியை
யா/ பரு. சித்திவிநாயகர் வித்தியாலயம்



அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள்

★ அதிபர்

★ ஆசிரியர்கள்

★ ஊழியர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி | லோ. குமாரசுவாமி | B. A (Lond) Dip - in - Ed. அதிபர் தரம் I |
| திருமதி | க. மகேந்திரன் | B. Sc (Mad) Dip - in - Ed. பிரதி அதிபர் |
| திருமதி | ச. இந்திரராஜா | விசேட பயிற்சி விஞ்ஞானம், மேலதிக பிரதி அதிபர் II |
| செல்வி | அ. கனகரட்ணம் | B. A (Cey) Dip - in - Ed. பிரிவுத் தலைவர், அதிபர் தரம் II |
| திருமதி | இ. ஆறுமுகம் | B. Sc (Mad) Dip - in Ed. பிரிவுத் தலைவர் |
| திருமதி | இ. தர்மராஜா | B. A (Lond) Dip - in - Ed. பிரிவுத் தலைவர் |
| செல்வி | மா. சிவகடாட்சம் | B. Sc Hons (Cey) Dip - in - Ed. பிரிவுத் தலைவர் |
| திரு. | V. S சித்திரவடிவேல் | B. A Hons (Cey) Dip - in Ed சிரேஸ்ட விரிவுரையாளர், தொலைக்கல்வி |
| திருமதி | இ. மண்டலேஸ்வரன் | விசேட பயிற்சி தமிழ் |
| திருமதி | யோ. மாணிக்கவாசகர் | விசேட பயிற்சி தமிழ் |
| திருமதி | இ. செல்வராஜா | விசேட பயிற்சி தமிழ் |
| திருமதி | பொ. இரத்தினசோதி | விசேட பயிற்சி தமிழ் |
| திருமதி | ம. விநாயகம்பிள்ளை | விசேட பயிற்சி ஆங்கிலம் |
| திருமதி | தி. கணபதிப்பிள்ளை | விசேட பயிற்சி ஆங்கிலம் |
| திரு | செ. ஜெயவீரசிங்கம் | விசேட பயிற்சி கணிதம் |
| திருமதி | செ. தியாகராஜா | விசேட பயிற்சி தமிழ் |
| திருமதி | ச. சிவப்பிரகாசம் | விசேட பயிற்சி விஞ்ஞானம் |
| திருமதி | சா. ஞானப்பிரகாசம் | B. Sc H. Sc (Mad) |
| திருமதி | அ. சாந்தகுமார் | விசேட பயிற்சி மனையியல் |
| திருமதி | ம. இராஜரட்ணம் | B. A (Cey) Dip - in - Ed. |
| திருமதி | செ. பாலேந்திரன் | B. Com (Cey) Dip - in - Ed. |
| செல்வி | இ. தம்பையா | சங்கீத டிப்ளோமா |
| திருமதி | ச. கணேசலிங்கம் | B. Dev (Cey) Dip - in - Ed. |
| திருமதி | லோ. இராஜசேகரம் | விசேட பயிற்சி ஆங்கிலம் |
| திரு | நா. யோகராஜா | B. Com (Cey) Dip - in - Ed. |
| திருமதி | ப. ஸ்ரீநாதன் | B. A (Cey) |
| செல்வி | ப. இராமநாதன் | B. A (Cey) |
| திருமதி | வி. சிவகுமாரன் | B. A (Cey) |
| செல்வி | ஞா. திருநாவுக்கரசு | விசேட பயிற்சி கணிதம் |
| திருமதி | இ. திருநாவுக்கரசு | B. Sc (Cey) |
| திருமதி | செ. ஜெகநாதன் | B. A Hons (Cey) Dip - in - Ed. |
| செல்வி | சு. சிவப்பிரகாசம் | B. A Hons (Cey) Dip - in - Ed. |
| திருமதி | இ. விவேகானந்தன் | B. A (Cey) |
| திருமதி | ஞா. அரியரட்ணம் | விசேட பயிற்சி கணித விஞ்ஞானம் |
| திருமதி | ந. செந்திவேல் | விசேட பயிற்சி ஆரம்பக் கல்வி |
| திரு | K. தவயோகநாதன் | B. Sc (Cey) |
| திருமதி | சி. கனகசபை | விசேட பயிற்சி கணிதம் |
| திருமதி | அ. லேனாட்றோயிஸ் | B. A (Cey) |
| திரு | S. நந்தகுமார் | B. Com Hons (Cey) |
| செல்வி | சு. சிவபாதம் | விசேட பயிற்சி கணிதம் |

| | |
|---|---|
| செல்வி ஜீ. பீதாம்பரம் | விசேட பயிற்சி விஞ்ஞானம் |
| செல்வி ஜெ. பரமகுரு | B. A ( Cey ) |
| திருமதி சு முகுந்தன் | B. Sc. Hons ( Cey ) |
| செல்வி த. பொன்னம்பலம் | B. Sc. ( Cey ) |
| திருமதி ச நாகராஜா | B. A ( Cey ) |
| செல்வி க. சுப்பிரமணியம் | B, A ( Cey ) |
| திருமதி த. மோகனராஜ் | பயிலுநர் ஆசிரியர் |
| செல்வி வ. தில்லைநடராஜா | பயிலுநர் ஆசிரியர் |
| செல்வி ப. கந்தையா | பயிலுநர் ஆசிரியர் |
| செல்வி ந இராஜேந்திரா | பயிலுநர் ஆசிரியர் |
| செல்வி கி. குலசிங்கம் | பயிலுநர் ஆசிரியர் |
| திருமதி ச பஞ்சகிருஷ்ணன் | பயிலுநர் ஆசிரியர் |
| திருமதி சா. ஜெகதீசன் | ஆங்கில உதவி ஆசிரியர் |
| செல்வி கீ. சந்திரசேகரம் | தொண்டர் ஆசிரியர் |
| செல்வி க. வேலாயுதம் | தொண்டர் ஆசிரியர் |
| செல்வி ப. கணபதிப்பிள்ளை | தொண்டர் ஆசிரியர் ( விளையாட்டு ) |
| செல்வி மீ பேரின்பநாயகம் | தொண்டர் ஆசிரியர் ( நடனம் ) |
| திருமதி கந்தசாமி | ஓய்வுபெற்ற சித்திர விரிவுரையாளர், தொண்டர் ஆசிரியர். |
| திருமதி ச. அரியராஜா | ஆய்வுகூட உதவியாளர் |
| திருமதி வ. செல்வராஜா | எழுதுவினைஞர் |
| செல்வி சி சோமசுந்தரம் | நூலகர் ( தொண்டர் சேவை ) |
| திரு இ. செல்வரட்ணம் | அலுவலக ஊழியர் |
| திரு K முத்துவேல் | காவலாளர் |
| திரு ஆ. தாமோதரம் | சுகாதாரத் தொழிலாளி |
| திரு A. இராஜேந்திரம் | காவலாளர் (சமயோசிதம் ) |
| திரு S. சேதுலிங்கம் | காவலாளர் ( சமயோசிதம் ) |

# கலையரசி
# செல்வி க. சரவணமுத்து ஓர் சகாப்தம்

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வனப்பான வரலாறு பற்றியும் சிறப்பான வளர்ச்சி பற்றியும் குறிப்பிடும்போது, பொன் விழாக்காணும் ஒப்பற்ற இக் கல்லூரிக்கு பெருமையினையும் புகழினையும் சேர்த்த முன்னாள் அதிபர் அமரத்துவம் எய்திவிட்ட சாதனைக்கரசி செல்வி. கனகம்மா சரவணமுத்து அவர்களைப்பற்றி குறிப்பிடாமல் இருப்பது பூரணத்துவம் அற்றது என நான் உணர்கின்றேன்.

கம்பீரம் என்ற சொல்லுக்கு தமிழ் அகராதியில் பல அர்த்தங்கள் உண்டு. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் கம்பீரம் என்றால் அதற்குப் பொருள் செல்வி சரவணமுத்து என்றே நான் நினைக்கின்றேன்.

கம்பீரம் மட்டுமா அந்த அன்புடைத் தலைவியிடம் இருந்தது ? இல்லை கம்பீரத்துடன் கூடிய அழகு அந்த அழகுக்கே அத்திவாரமாக அமைந்த கனிவு —... அந்தக் கனிவுடன் கூடிய பெருமை சேர் கருணை —... அந்தக் கருணையுடன் கூடிய இறுக்கமான கண்டிப்பு —... அந்தக் கண்டிப்பிலும் ஒருவித இரக்கம் இவை எல்லாம் அந்த அன்புத் தலைவியிடம், இணையற்ற அதிபரிடம் மெய்ச்சுதற்குரிய பண்புகளாக இருந்தன என்பது வெளிப்படை.

கடமையிலே ஒரு இறுக்கம். நெஞ்சினிலே ஒரு இரக்கம் அற்புதமான அந்த அன்புத் தலைவியிடம் இருந்ததைக் கண்டு நான் வியந்திருக்கின்றேன். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு அவரது தாரக மந்திரமாக இருந்தது. பாரதி கண்ட புதுமைப் பெண்களை உருவாக்க முற்பட்ட அதே வேளையிலும் இந்துமத தத்துவங்களையும் கலாச்சார மேம்பாட்டினையும் உணர்ந்த வழிநெறி வழுவாத பெண்களை உருவாக்குவதில் அவர் அயராது பாடுபட்டார்.

இந்துமதம் என்கின்ற மகாநதியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் ஒரு துளியாக ஆவது கலந்துவிட வேண்டுமென்பதில் அவர் கண்ணுங் கருத்துமாக இருந்தார். நேரத்தை அவர் பொன்னெனப் போற்றினார். அவர் யாழ் இந்துக் கல்லூரியில் இளம் ஆசிரியையாக கல்வி கற்பித்த காலத்தில் அங்குள்ள மாணவர்கள் அவரை " Miss Accuracy " என அழைத்தார்கள். இதிலிருந்தே அவருடைய நேரம் தவறாமையைப் பற்றிப் புரிந்து கொள்ளலாம்.

1913-ம் ஆண்டிலே இவர் அரியாலையில் பிறந்தார். தந்தையார் பெயர் திரு. சரவணமுத்து, தாயார் பெயர் அன்னம்மா. தமது ஆரம்பக் கல்வியை அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையில் கற்றார். இடைநிலைக் கல்வியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் கற்றார். இலண்டன் மற்றிக்குலேசன் பட்ட இடைநிலைப் பரீட்சையிலும் சித்தி பெற்றார். அதன் பின் சிறிது காலம் யாழ் இந்துக் கல்லூரியில் கடமையாற்றினார்.

அதன் பின் தமிழ்நாடு சென்று விஞ்ஞானப் பட்டதாரியாக பரீட்சையில் சிறப்புறத் தேறி நாடு திரும்பினார். மட்டக்களப்பு, அழுத்கம ஆகிய இடங்களிலுள்ள ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் விரிவுரையாளராக கடமையாற்றினார். முற்போக்கு சிந்தனைகளும், உயரிய திறமையும் கொண்ட இவரை பாடசாலைப் பரிசோதகர் பதவி தேடிநாடி வந்தது. அவராற்றிய அரும்பணி அவ்வேளை சிறப்புற்று விளங்கியதால் அன்னாரின் புகழ் ஓங்கியது.

கடமையில் கருத்துடனும் கண்டிப்புடனும் செயற்பட்ட காரணத்தினால் அவர் பல இன்னல்களைச் சந்திக்க நேர்ந்தது. அவ்வேளைகளில் அவர் ஒரு வீராங்கனையாக இடர்களையும், இன்னல்களையும் எதிர்கொண்டு வெற்றிவாகை சூடினார். இது அவரது சாதுரியம் மட்டுமல்ல திறமையினதும் துணிவினதும் சிறப்பு எனக் கொள்ளலாம்.

1952-ம் ஆண்டு செல்வி சரவணமுத்து அவர்கள் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டார். 1960 வரையில் அவர் அதிபராகக் கடமையாற்றினார்:

1960-ல் பாடசாலை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படாத காரணத்தினால் அவர் இப் பாடசாலையைவிட்டு பிரிந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மீண்டும் பாடசாலை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டபோது அதன் அதிபராகத் திரும்ப நியமனம் பெற்றார். ஆனால் சிறிது காலமே அதிபராகக் கடமையாற்றினார். அவர் இங்கு

கடமையாற்றிய காலத்தில் இலங்கையின் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்றாக உருவாக்கினார். அகில இலங்கை ரீதியில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் பல வெற்றிகளை ஈட்ட ஊக்கமும் ஆக்கமும் கொடுத்தார். பல்கலைக் கழகங்களுக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் அதிகளவில் தெரிவு செய்யப்பட்டபோது அளவில்லா ஆனந்தமடைந்தார். விளையாட்டுத்துறையில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி இவரது காலத்தில் பல சாதனைகளை நிகழ்த்திக் காட்டியது. இவற்றையெல்லாம் அடைவதற்கு அவர் பல சோதனைகளைச் சந்திக்கவேண்டி இருந்தது. இவரது காலம் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வரலாற்றுக் குறிப்புகளில் பொன்னெழுத்துகளால் தங்கத் தமிழில் எழுத வேண்டிய மிக உயரிய காலமாகும்.

இவரிடம் கல்விகற்ற மாணவ மாணவிகள் என்றும் இவரை மறந்துவிட முடியாது. அப்பேற்பட்ட இனிய சுபாவம் இவருக்கு. அடிக்கின்ற கைதான் அணைக்கும் என்பதற்கேற்ப கண்டிப்பும், கருணையும் இவரிடம் இருந்தது.

பெண்கள் இந்த நாட்டின் கண்களாக மட்டுமல்ல ஒழுக்கத்தின் தூண்களாகவும் இருக்கவேண்டுமென்பதில் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்."

என்ற வள்ளுவரின் வாக்கினை வழுவாது கடைப்பிடிக்க வேண்டுமென மாணவச் செல்வங்களுக்குப் போதித்தார். அவருடைய கண்டிப்பான தோற்றம் இன்றும் எனது மனக்கண்முன் நிற்கின்றது. கண்டிப்பைக் காட்டிய அதே கண்களிலே கனிவான இரக்கம் இது எப்படிச் சாத்தியமாகின்றது என்று நான் பலமுறை நினைத்ததுண்டு. கலைக்கோயிலின் அரசியிடம் கண்டிப்பும் கருணையும் ஒருங்கே அமைந்திருப்பது புதுமையல்ல என நான் என் மனத்தை தேற்றியதும் உண்டு.'

வடமராட்சியில் இன்று நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் கலைக் கோயிலாகிய இக் கல்லூரியின் வரலாறு நிலைக்கு மட்டும் செல்வி சரவணமுத்துவின் நாமம் இப் பாடசாலையின் ஒவ்வொரு வகுப்பறையிலும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு வேதமாகவும், உயர் கீதமாகவும், இனிய நாதமாகவும் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

வடமராட்சி மக்கள் செய்த நற்பயனே அவர் இக் கல்லூரிக்கு வந்ததெனத் துணிந்து கூறலாம். இந்துமதச் சடங்குகளை மாணவர்கள் பின்பற்ற வேண்டுமென்பதில் அவர் மிகவும் தெளிவாக இருந்தார். பொங்கல் விழா, நவராத்திரி விழா போன்றவற்றை சிறப்புற நடாத்தினார். எமது கல்லூரி சிறப்புற்று விளங்கக் காரணமாக இருந்த அந்த அன்புத் தாயார் 21 - 01 - 92 இல் இறைவனடி சேர்ந்தமையை அறிந்து வட இந்து மகளிர் கல்லூரி கலங்கி நின்றது. அன்னாருக்காக அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய ஒரு நினைவாஞ்சலிக் கூட்டத்தையும் நடாத்தியது.

பெருமை மிக்க இந்த அதிபரின் வரலாறும் வாழ்க்கையும் மகிமை மிக்க எதிர்காலத்திற்கு எமது மாணவச் செல்வங்களை அழைத்துச் செல்ல உதவட்டும்.

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும் எமது அதிபர் செல்வி சரவணமுத்துவும் பிரிக்கப்பட முடியாமல் இணைக்கப்பட்டுள்ள அற்புதக் காட்சியே என் கண்முன்னே நிற்கின்றது.

வளர்க அன்னாரின் புகழ்.

சம்பந்தர் சிவராஜசிங்கம்
(துபாலதிபர்)
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
அபிவிருத்திச் சபை அங்கத்தவர்

யாழ்ப்பாணம், துன்னாலை அல்லையம்பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும்
மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதரும், மதுரைத் தமிழ்ச் சங்க பண்டித வகுப்பு ஆசிரியரும்,
தமிழ்நாடு, ஈழநாடுகளிலுள்ள பிரசித்தி பெற்ற
திருத்தலங்கள், இந்துசமய வளர்ச்சிக் கூட்டங்கள், இந்துக் கல்லூரிகள் ஆகியவையூடாக
சொற்பொழிவுகள், பிரசங்கங்கள் நடாத்தி
இந்து சமயத்தையும், தமிழையும் வளர்த்த பெருமைக்குரியவருமாகிய

காலஞ்சென்ற

# பண்டிதர் தா. முருகேசபிள்ளை

அவர்கள்

# 1945-ம் ஆண்டு

## இக்கல்லூரி நிறைவாண்டு விழாவின் போது பங்குபற்றி

## வாழ்த்திப் பாடிய பாடல்கள்

நேரிசை வெண்பா

ஆயிரத்துத் தொள்ளாயிர நாற்பத்தைந் தாண்டி
லாய பெரியோர் பலர்கூடி - நேயமுடன்
வைத்தசைவ மங்கையர்க்கு வாழ்க்கை தருங்கல்லூரி
நித்தமுற்று வாழ்க நிறைந்து

கட்டளைக் கலித்துறை

மாதாவென வரும் மாதர்கட்காக வகுத்துச் செய்த
வேதா வனைய வித்யாலய மைசைந் பிடியகற்றி
யாதா ரமாக் கலைச் செல்வமுமீய வனாதியிறை
பாதார விந்த மலரைத் துதித்துப் பணிகுவமே.

விருத்தம்

வங்க வளத்தான் மிக்குயர்ந்து வளரும் வடமராட்சியின் முற்
றிங்களிளவே வளர்ந்துயர்ந்து திகழும் மகளிர் கழகமிது
துங்க மிகுந்த சிவப்பேறாய்த் துலங்குங் கலையுமினி தளித்துக்
தெங்கி நிலை கொண்டறிவுரை நீர் சிறக்க வுதவி வாழுகவே.

பிறப்பு
19 - 12 - 1941



இறைபதம்
24 - 03 - 1994

# எமது கல்லூரியின் பொன் விழா ஆண்டான 1994ம் ஆண்டு

## எம்மை விட்டு பிரிந்து சென்ற

எம் அன்புக்குரிய ஆசான்

# திரு. கந்தையா நல்லநாதன்

அவர்களுக்கு எமது அஞ்சலிகள்

நமது கல்லூரியின் நல்லாசான் நல்லநாதன்
நாமத்திற்கேற்ப நற்குணம் படைத்த நம் ஆசான்
நம் மாணவர்க்குப் பௌதீகவியலைப் பண்புறப்
போதித்து பலர் புகழ்ப் பெற்றவர் நம்மாசான்
ஆசிரியர் குழாத்தில் நட்புக்கோர் நல்லாசிரியர்
வித்தைக்கோர் வித்தகம் நிறைந்த ஆசான்
ஆல்போல் தழைத்த அறிவும் அறுகுபோல் உறுதியான
நுண்ணறிவும் பெற்ற நம்மாசான் நம்மை
விட்டு மறைந்து விட்டார் அவர் மரணிக்கவில்லை
அவர் உடல் அழிந்து விட்டது நல்ல உள்ளம்
என்றும் எம்மிடையே வாழ்கின்றது அவர் ஆத்மா சாந்திபெறுக.



அமரராகிவிட்ட ஆசிரியை

# செல்வி. சௌபாக்கியவதி நவரட்ணராஜா

பற்றிய

## ஒரு மாணவியின் உணர்வுகள்

தோற்றம்: 1957 - 12 - 14
மறைவு : 1992 - 06 - 18

### கல்விப் பாதையில் வழிகாட்டிய அன்புத் தோற்றம்

மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகியோரின் மலரடி தினம் தினம் வணங்குதல் வேண்டும். இந்த வகையில் எனது தாய் தந்தையருக்கு அடுத்ததாக என் கல்விக் கண்ணைத் திறந்து, வையத்தில் வாழ் வாங்கு வாழ வழிகாட்டியவர், பெருமதிப்பிற்கும் அன்பிற்குமுரிய முன்னாள் ஆசிரியை செல்வி. ந. சௌபாக்கியவதி ஆவார். அவரைப்பற்றி நீங்காத நினைவுகள் சிலவற்றை நான் எடுத்துக் கூறினால் என் மனம் திருப்தியடைவதுடன் அவர் ஆத்மாவும் சாந்தியடையுமல்லவா?

வடமராட்சி இந்து மகளிர் கல்விக் கோயிலிற் புகுந்து மாணவர்களாகிய எம்மை அன்பென்னும் கயிற்றால் இறுகப் பிணைத்தார் எம்மாசிரியர். அதனால் அவர் கற்பித்த அந்நியமொழியாம் ஆங்கிலமொழி கூடத்தேனாய் இனித்தது. எங்களுயிரே தன்னுயிரெனக் கருதினார். மாணவர்களாகிய எம்மிடம் தாயைப்போல பாசமும், நேசமும் காட்டினார். ஏனைய ஆசிரியர்கள் நாம் செய்யும் பிழைகளுக்காக எம்மைக் கண்டித்தால் மனம் பொறுக்காமல் கொதிக்கும் எம்மினிய ஆசிரியை எம்மைப் பிரிந்து மீளாத்துயில் கொண்டாரே!

புலமைப் பரிசில் பரீட்சையில் என்போன்ற சிறார்கள் புகழுடன் விளங்கிட வேண்டுமென அயராது சேவை செய்து, நாம் பரிசில்கள் பெறும்போது பெற்றதாயினும் பெரிதும் மகிழ்ந்தார். சேவையே தன் இலட்சியமாக கொண்டார். இக்கல்லூரியின் பழைய மாணவியாக விளங்கிய அவர் எமக்குக் கற்பிக்கும் போது நல்லாசானாகவும், பண்பிலே தெய்வமாகவும், பார்வையிலே அன்னையாகவும் விளங்கினார். எங்கிருந்தோ வந்து எம்மையெல்லாம் ஆட்கொண்டார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சொற்களுக்கு இலக்கணம் வகுத்து நின்ற எங்கள் ஆசிரியையைக் கண்ணில்லாக் காலன் கவர்ந்துவிட்டான். பாலர் நாம் சொரிந்த கண்ணீர் நம் ஆசிரியைக்குத் தெரியவில்லை. ஆனாலும் அல்லலுறும் பாலர் நாம் அவரது சேவைகளைப் பாராட்டி நினைவு கூர்ந்து சமாதானமடைவோம். அவரின் ஞாபகார்த்தமாக அன்னாரின் குடும்பத்தவர், பொன்விழா ஆண்டு முதல் வருடா வருடம் ஐந்தாம் ஆண்டு மாணவர் ஒருவருக்கு வழங்கும் ஊக்குவிப்புப் பரிசு, எமது உள்ளங் கவர்ந்த ஆசிரியையின் அரும்பணியை என்றும் நினைவுபடுத்தும்.

இளவரசி இராஜலிங்கம்
ஆண்டு 7 A

★ ★ ★

## நன்றிக்கு வித்தாகும் நல்லவர்கள்

* இப் பொன் விழா மலர் நறுமணம் வீச ஆசிகளை அள்ளித் தந்த அருமைமிகு பெரியவர்களுக்கும்,
* பல ஏற்றமிகு — கருத்தாழம் மிக்க ஆக்கங்களையும் கவினுறு கட்டுரைகளையும் தந்துதவிய யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கும், ஆசிரியர்கட்கும், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் மாணவ ஆக்கங்களை தந்துதவிய மாணவர்கட்கும்,
* மாணவ ஆக்கங்களை ஒப்புநோக்கித் திருத்தங்கள் செய்து உதவிய சகல ஆசிரியர்களுக்கும்,
* எமது கல்லூரித் தாயின் ஆரோக்கியமான வளர்ச்சிக்குத் தன்னலம் பாராது பாடுபடுவதோடு, இம் மலரின் வெளியீட்டுக்கு பல்வேறு வழிகளிலும் ஆக்கமும், ஊக்கமும் தந்த எமது கல்லூரியின் மாண்புமிகு அதிபர் திருமதி லோ. குமாரசுவாமி அவர்கட்கும்,
* எவ்வித தயக்கமுமின்றி தாராளமாக நிதி உதவி செய்த அன்பு உள்ளங்கள் அனைவர்க்கும்,
* பொன்விழாக் கட்டுரைப் போட்டியினை நடாத்த உதவிய அபிவிருத்திச் சபையின் கட்டுரைப் போட்டிக் குழுவினர்க்கும்,
* பொன்விழாப் போட்டிக் கட்டுரைகளினைச் சிரமம் பாராது மதிப்பீடு செய்து தந்த உயர் திரு. மன்னவன் கந்தப்பு அவர்களுக்கும்,
* இம்மலரினைக் கலை மணம் வீசும் சிறப்போடு அச்சிட்டுத் தந்த குமார் அச்சக அதிபர் திரு. ச. காந்திதாசன் அவர்கட்கும், அவர்தம் ஊழியர் அனைவர்க்கும்,
* நிழற் படங்களைக் கலைவண்ணத்துடன் ஆக்கித் தந்த குகன் ஸ்ருடியோ அதிபர் திரு. அ. நாகரத்தினம் அவரது மகன் திரு. நா. குகன் ஆகியோர்க்கும்,
* அட்டைப் படங்களை அழகுற அச்சிட்டுத் தந்த மெய்கண்டான் அச்சகத்தினர்க்கும்,
* கொழும்பில் இருந்து அட்டைப்படங்களையும், வண்ணப்படங்களையும் தயாரித்து இங்கு கொண்டு வந்து தந்து உதவிய ஆசிரியர் திரு ந. யோகராசா அவர்கட்கும்,
* சகல விதத்திலும் எங்களோடு ஒத்துழைத்து இம்மலர் வெளிவருவதற்கான சகல வழிகளிலும் உதவிகள் செய்த அன்பு உள்ளம் கொண்ட அனைவர்க்கும்,

*நன்றிகளை வித்தாக்கி - மகிழ்ச்சியினைக் கொத்தாக்கி - நவில்கின்றோம் நன்றி.*

**— மலர்க்குழுவினர்.**

### பொன் விழாக் கட்டுரைப் போட்டி - 1994 பரிசு பெறுவோர்

பிரிவு I
- முதலாம் இடம்: மஞ்சுளா வல்லிபுரம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
- இரண்டாம் இடம் — பன்னிருமுகம் மணிவண்ணன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
- மூன்றாம் இடம் — தர்மவாணி தர்மகுணம், ஞானசாரியார் கல்லூரி

பிரிவு II
- முதலாம் இடம் — தி. ஜனகன், இமையாணன் மகா வித்தியாலயம்
- இரண்டாம் இடம் — உமா தங்கவேல், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி
- மூன்றாம் இடம் — தாரணி தயாளன், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை

பிரிவு III
- முதலாம் இடம் — அரியரட்ணம் துஷ்யந்தன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி
- இரண்டாம் இடம் — விஜயபாரதி விஜயசிங்கம், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை
- மூன்றாம் இடம் — ஜனனீதா கணேசலிங்கம், வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி

- கட்டுரைப் போட்டிக் குழுவினர்

# இந்து மகள்

அம்மா தாயே அருளின் ஒளியே
அறிவே! அறமே!! ஆனந்தமே!!!
இம்மா நிலமே உள்ள வரையில்
இதயங்கள் வாழ்த்த இனிதே வாழ்க

காலத்தை யாளும் கருணையின் பொருளே
கனியே! கவியே!! காவியமே!!!
நீலத்திற் றோய்ந்த நீள்கடல் போலே
நித்தம் நீத்தம் வாழ்க வளர்க ——-(அம்மா)

வடம ராட்சியில் எழுநின் கோவில்
வரமே! வாழ்வே!! வாய்மையுமே!!!
நடமே யாடும் ஈசனின் பதத்தில
நாளும் பொழுதும் வாழ்க வளர்க ——-(அம்மா)

கலையும் ஓங்கும் காதற் தேவி
கண்தனி! வர்த்தனி!! விஞ்ஞானி!!!
விழையும் புலத்தில் வீழ்ந்த மழையென
வாழ்வாய் ஆனாய் வாழ்க வளர்க ———(அம்மா)

இனிமைத் தமிழின் இன்ப அரங்கின்
இயலே! இசையே!! நாடகமே!!!
பனியைத் தழுவும் பங்கையப் பதத்தில்
சதங்கைகள் குலுங்கிட வாழ்க வளர்க ———(அம்மா)

அகவையில் ஐம்பதை அழகாய் நடந்தாய்
ஆதிமுதலே! பாதநிழலே!! வேதப்புனலே!!!
தகவுடன் வைக்கும் தடங்கள் தன்னில்
தாரணி போற்ற வாழ்க வளர்க —— (அம்மா)

ஆலாய் அறுகாய் அகன்றாய் ஆன்றாய்
ஆதரவே! நீதரவே!! மாதவமே!!!
நாலா திசையும் நின்புகழ் ஓங்க
நாதப் பொருளே வாழ்க வளர்க ———(அம்மா)

இந்து மகளிர் இதயம் ஒலிக்கும்
நாதமே! கீதமே!! வேதமே!!!
முந்தும் பண்பை முழுதும் வழங்கும்
முற்பொருளே நீ வாழ்க வளர்க ——— (அம்மா)

நாளைய வாழ்வின் நன்னெறி வகுக்கும்
நலமே! பலமே!! நாயகியே!!!
காலையின் கதிரே மாலையின் நிலவே
கவிதையின் பொருளே வாழ்க வளர்க———(அம்மா)

நா. யோகராசா

A SPIRITUAL ORGANISATION IN THE NORTH

# Sri Ramakrishna Sarada Sevashrama

## POINT PEDRO.

Aim **The Poor and Needy Children are helped so that they can become Worthy Citizens.**

**Name of Desk Person:**

*Swami Chidrupananda*

"Have faith that you are all, my brave lads, born to do great things! Let not the barks of Puppies frighten you, no, not even the thunderbolts of heaven but Stand up and work!"

- *Swami Vivekananda*

Printed at the cumar Achchakham - Point Pedro.